# சொல்லின் செல்வர்
# ஸ்ரீ காஞ்சி முனிவர்

('மதுரம், மதுரம், மஹா பெரியவாள்' – பகுதி 1)

**ரா. கணபதி**

**திவ்ய வித்யா டிரஸ்ட்**
106/1, ஹபிபுல்லா சாலை,
தி.நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : முனிவரின் 105–வது ஜயந்தி நன்னாள்
(9–6–1998)

© உரிமை ஆசிரியருக்கே.

விலை : ரூ.30.00

அச்சிட்டோர் :

ஸ்ரீசக்ரா பிரிண்டர்ஸ்,
31/1–C, சுந்தரம் தெரு,
சென்னை – 600 007.

முகவுரை

உள்ளே வளவளப்புப் பற்றியும் சொற்செட்டுப் பற்றியும் காண்பீர்கள். ஸ்ரீ மஹா பெரியவாள் தம்மை வளவளாக்காரராகவே வர்ணித்துக் கொள்ளவும் காண்பீர்கள். அதில் எனக்கொரு திருப்தி. 'ஒரு விஷயத்திலாவது அவரது சீடர் என்று சொல்லிக்கொள்ளும் தகுதியை நமக்கு அருளியிருக்கிறாரேஸ!' என்றுதான்!

ஆனால் அவர் உங்களுக்கும்தானே அருளாளர்? அதனால்தான் போலும், உங்கள் திருப்தியை உத்தேசித்து இந்த முகவுரையை மட்டுமாவது நான் நீட்டி வளர்த்தாமல் சுருக்கி எழுதுமாறு செய்து உங்களுக்கு அருள் புரிந்திருக்கிறார்!

முகவுரையில் வரவேண்டிய விஷயங்களில் ஒன்று தவிர மீதமெல்லாம் நூலின் முதலத்தியாயத்தில் வந்து விடுகின்றன. மீதமிருப்பது இதயத்திற்கு மதுரமான 'நன்றி நவிலல்' என்ற ஒன்றுதான்!

"இந்நூல் 'மதுரம், மதுரம், மஹா பெரியவாள்' என்ற பெரிய நூலின் முதற் பகுதி. அப்பெரு நூல் 'கோபுர தரிசனம்' மாத ஏட்டில் தொடராக வெளி வந்து கொண்டிருக்கிறது. இத்தொடரை எழுதத் தூண்டிய அதன் ஆசிரியர் பரந்தாமன் ;

@Page IV

நூலில் காணும் விஷயங்களில் பலவற்றை உதவிய பெரியவாள் அடியார்கள், குறிப்பாக அவரை நெடுங்காலம் நெருங்கிப் பணி புரிந்த ஸ்ரீ பாலு ;

மேலட்டை நிழற் படத்தைச் செப்பம் செய்து உதவிய ஓவியர் மணிகண்டன் ;

முகப்புச் சித்திரமாகவுள்ள நிழற்படத்தை ஒப்பனை செய்து உபகரித்த மணியம்செல்வன் ;

லேஸர் அச்சு அமைப்பாளரான கே.கார்த்திகேயன், மற்றும் அவரது L.K.M.கம்ப்யூட்டர் சகாக்கள் ;

அச்சிட்டுத் தரப் பொறுப்பேற்ற ஸ்ரீசக்ரா பிரிண்டர்ஸைச் சேர்ந்த சகோதரர்கள் ;

நூலைப் பதிப்பிக்கும் திவ்ய வித்யா டிரஸ்டைச் சேர்ந்த உடன்பிறப்புக்கள் ;

டிரஸ்டின் இப்பணிக்கு உதவிய நன்கொடையாளர்கள் ;

– ஆகிய யாவருக்கும் உளமாற நன்றி கூறுகிறேன். அவர்களது யோக–க்ஷேமங்களுக்கு ஸ்ரீசரணர்களைப் பிரார்த்திக்கவும் செய்கிறேன்.

தமது ஜயந்தி நன்னாளில் தம்மைக் குறித்த புனித நினைவு வாசகருக்கு வரும் வண்ணம் அடியேனை எழுதுவித்த அக்'கதா நாயக'ரை நன்றி என்ற பதம் கடந்த ஏதோ ஒன்றின் உணர்வுடன் வணங்கிப் பணிகிறேன்.

உங்களது நன்றிக்கும் அவர் இந்நூலில் விசேஷமாகப் பாத்திரமாகிறார். அதென்ன விசேஷம் என்றால் அவர் இதன் கதாநாயகராக மட்டுமில்லாமல் மிகமிகப் பெரும்பாலும் தாமே நூலாசிரியராகவும் இருக்கிறார்! ஆம்.

@Page V

இதில் மூக்காலே மூணு வீசம் – முக்காலே மூணே முக்கால் வீசமுங்கூட – ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கேதான்! 'தொகுப்பாசிரியன்' என்று வேண்டுமாயின் சொல்லக் கூடிய அளவுக்கே இதில் என் பங்கு. இவ்வாறு உங்களைக் காப்பாற்றி, அதோடு தமது அமுத மதுர வாக்கையும் அள்ளிப் பொழிந்திருப்பதற்காக நீங்களும் அவருக்கு நன்றி கூற வேண்டுந்தானே!

சென்னை – 600 041 ரா.கணபதி
2.6.98

# சொல்லின் செல்வர்
# ஸ்ரீ காஞ்சி முனிவர்

1

மதுரமொழி நல்உமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்கு அரிதோ ?

– அவ்வையாரின் பிள்ளையார் துதி

(இனிய சொல்லும் இன்னியல்பும் கொண்ட உமையன்னையின் பாலனான விநாயகப் பெருமானின் பூம்பாதத்தைப் பழுத்த பக்குவ உணர்வுடன் நினைக்க வல்லோருக்கு அரிதான செயலும் ஒன்றுண்டோ ?)

"அவனைப் பத்தின அத்...தனையுமே மதுரந்தான்!" – பக்தி மது ததும்பும் இதயத்துடன் 'அவ'னுடைய மதுரத்தைச் சுவைக்கும் மதுரக் குரலில் கூறுகிறார் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள்.

அந்த 'அவன் யார் ? அதை அறியவும் அத்தெய்வத்தின் குரலையே கேட்போம். தன்னால் புரிந்துவிடும்.

"அவன் பொறந்ததே மதுரைல. நம்ம பாண்டிய தேசத்து மதுரை இல்லே. இங்கேயும் மதுர மயமாத்தான் அம்பாள் இருக்கா. அவகிட்டேயிருந்துதான் ஸங்கீதம் பொறந்தது....ஆமாம், மாதங்கின்னும் ச்யாமளான்னும் சொல்ற ஸங்கீத தேவதைதான் மீனாக்ஷி ஸங்கீதம்னாலே மதுரந்தானே ? இது தென் மதுரை.

@Page 2

"நான் சொன்னது வட மதுரைன்னு நாம சொல்றது, யு.பி–ல யமுனா தீரத்துல இருக்கறது. எதனாலயோ, அவா 'மdhuரா'ன்னு சொல்லாம, 'மthuரா'ங்கிறா. தெலுங்கா'tha'வை 'dha' ஆக்குவான்னா, இங்கே வடக்கத்திக்காரா 'dha' வை 'tha' பண்ணியிருக்கா. வெள்ளைக்காராளோ அதை Muttra பண்ணிப்பிட்டா. பகவான் அவதாரம் அங்கேதான். ஜெயில்லே அவதாரம்! பரம பதநாதன்ங்கிற மஹா பெருமை படைச்சவன் இப்படி ஜெயில்ல பொறந்ததே அவனோட மதுரத்துனாலேதான் ; அவதாரமா வந்து ஜனங்களோட ஜனமா இருந்து அவாளை உத்தாரணம் பண்ணணுங்கிற குண மாதுர்யத்துனாலதான். அந்த மதுர குணத்துக்குப் 'பரம க்ருபை'ன்னு பேர் ; 'பரங்கருணை'ங்கறது. மதுரையில பொறந்ததுனால "வடமதுரை

மைந்தனை"ன்னே ஆண்டாள் பாடியிருக்கா.

"அங்கே அவன் பொறந்த ஒடனேயே அப்பாக்காரர் வஸுதேவர் கொழந்தையை அங்கேந்து தூக்கிண்டு கோகுலத்துல கொண்டு போய் விட்டுட்டார். மதுரை யமுனையோட மேலக்கரையில இருக்கு. கோகுலம், ப்ருந்தாவனம்–லாம் கீழக்கரை. ஆத்துல அளைஞ்சுண்டே தாண்டிப்போய் வஸுதேவர் கொழந்தையை கோகுலத்துல யசோதைக்குப் பக்கத்துல விட்டுட்டு, அப்பத்தான் அவளுக்குப் பெறந்திருந்த பொண் கொழந்தையைத் தூக்கிக்கிண்டு திரும்ப ஜெயிலுக்குப் போய்ட்டார்.

"இங்கே எல்லாம் திருட்டு மயம்!" என்று பெரிதாக நகைத்தால் காஞ்சி முனிவர்.

"அங்கே ஜெயில் காவலாளிகளுக்குத் தெரியாம திருட்டுத்தனமாத்தான் அவர் வெளில வந்தது. அது மட்டுமில்லே. இங்கே, கோகுலத்துலயும் ப்ரஸவிச்சவளுக்கும் ஸரி, ப்ரஸவம் பாக்க வந்தவா, மத்த மநுஷ்யா மொதலானவாளுக்கும் ஸரி, பொறந்தது பொண்

@Page 3

கொழந்தைன்னோ, அதுக்குப் பதிலா ஒரு பிள்ளைக் கொழந்தையை வஸுதேவர் வெச்சுட்டுப் போனதோ தெரியாது. இங்கேயும் திருட்டுத்தனமாவேதான் வந்து, கார்யத்தை முடிச்சுண்டு திருட்டுத்தனமாகவே பொறப்பட்டுப் போய்ட்டார்.

"க்ருஷ்ணன்'னாலே ஒரே திருடுங்கறோமே, வெண்ணெயும் திருடினான். மனஸையும் திருடினான் – 'நவநீத சோரன்', 'சித்த சோரன்' – என்கிறோமே, அவனுக்கு அந்தத் திருட்டு புத்தி எப்படி வந்ததுன்னா, அவனோட அப்பா அவன் பொறந்தவொடனேயே பண்ணின திருட்டுத்தனந்தான் அவனுக்கும் பிதுரார்ஜிதமா வந்துடுத்துன்னோ தோணறது."

மலர்களை மாலையாகத் தொடுப்பதுபோல, தொடர்ச்சியாகச் சிறு நகைகளைத் தொடரவிட்ட பின் பெரியவாள் தொடர்கிறார். "ஆனா அப்படி நெனக்கிறது ஸரியில்லே. சும்மாக்கா வேடிக்கை பண்ணினேன். வஸுதேவர், பாவம், ஸாது. கொஞ்சங் கூடத் திருட்டுப் புரட்டே தெரியாதவர். அவரைத் திருட்டுத்தனம் பண்ணப் பண்ணினதே அந்தக் கொழந்தைதான்! அது பொறந்த வொடனேயே காவலாள்லாம் மயக்கம் போட்ட மாதிரித் தூங்கிப் போனதுனாலதான் அவர் ஜெயில்லேந்து தப்பிச்சது. ஜெயில் பூட்டு வேறே தானாவே தெறந்துண்டுது! அதே மாதிரிதான்

கோகுலத்துலேயும் எல்லாரும் தூங்கி மயங்கி வழிஞ்சதாலதான் அவர் கார்யத்தை ஸௌகர்யமா முடிக்க முடிஞ்சுது. இதெல்லாம், பாவம், அந்த அப்பாவி மனுஷரா பண்ணினார்? அவருக்குப் பிள்ளையா வந்தானே ஒரு அப்பன், அவன்தான் இத்தனையும் மாயாவித்தனத்துனால பண்ணினது! அதைத்தான் ஆண்டாள் ரஹஸ்ய அழகோட, சொல்லாம சொல்ற பாணியில, "மாயனை"ன்னு

@Page 4

ஆரம்பிச்சு, தொடர்ந்தாப்பல "வட மதுரை மைந்தனை"ன்னு சொல்லியிருக்கா ; "மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை"ன்னு! அதென்ன, 'மன்னு'ன்னா, அதுக்கு 'பஹு (வெகு) காலமா நெலச்சுப் புகழ் பெத்த'ன்னு அர்த்தம், "மன்னு புகழ் கோஸலைதன் மணிவயிறு வாய்த்தவனே!"ன்னு கூடப் பாசுரம் இருக்கு. அது ராமசந்த்ர மூர்த்தியைப் பத்திக் குலசேகரப் பெருமாள் பாடினது.

"ஆண்டாளோட இந்தப் பாட்டுலேயும் க்ருஷ்ண பரமாத்மாவோட தாயாரைப் பத்தி வந்திருக்கு. "தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை"ன்னு. தான் கர்ப்பவாஸம் பண்ணினதால அந்தத் தாயார் வயத்துக்கே ஒரு பரிசுத்தியையும், ப்ரகாசத்தையும் உண்டு பண்ணினான்னு அர்த்தம் ; ரொம்ப அழஹ்ஹா (அழகாக) வார்த்தை விழுந்திருக்கு. அதுக்கு முந்தி, 'ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை'ங்கிறா. 'யதுகுல தீபம்' என்கிறது. ஸாதாரண தீபமில்லே ; அலங்கார தீபம் ; 'அணி விளக்கு'. அப்படி, தானே விளக்காயிருக்கறவன் தாயார் வயத்தை விளக்கினானாம்.

"கச்மலம், அதாவது அழுக்கு, மலம் – 'கசமாலம்'னு பாமர ஜனங்கள் கூடச் சொல்றது – அந்த அழுக்கெல்லாம் வயத்தை விட்டுப் போய் வயறு சுத்தமாகும்படிச் செய்யற எண்ணெயை விளக்கெண்ணெய்ங்கிறோம். விளக்குக்கு விடற எண்ணெயில்லை ; வயத்தை விளக்கி சுத்தம் பண்ற எண்யெய். இது புற அழுக்கு. 'தாயைக் குடல் விளக்கம்'னதோ அவளுடைய அக அழுக்கை ஸ்வாமி கர்ப்பவாஸம் பண்ணினதால போக்கி ஞான ப்ரகாசத்தை உண்டு பண்ணினது. தேவசி ஸ்வபாவமாவே பரிசுத்தைதான். அதனாலதான் அவளோட ஜடரத்துல ஸ்வாமி வாஸம் பண்ணினது. அப்படிப் பண்ணினதால அவளை அதுக்கு மேலேயும் பரம பரிசுத்தை ஆக்கிட்டார்.

@Page 5

"அவளுக்குப் பிள்ளையாய்ப் பொறந்தவனை அவளோட மைந்தன்னு

சொல்லாம பாட்டு ஆரம்பத்துலயே 'வட மதுரை மைந்த'ன்னு சொல்லி ஜன்ம க்ஷேத்ரத்தைப் பெருமைப்படுத்தியிருக்கு. ஜன்மாவைத் தந்த அம்மாவும், ஜன்மபூமியும் ஸ்வர்க்கத்துக்கும் மேலானவைன்னு சொல்றது : "ஜனனீ, ஜன்ம பூமிச்ச ஸ்வர்காதபி கரீயஸீ". இங்கே மொதல்ல தாயைச் சொல்லிட்டு அப்புறம் தாய்நாட்டை – பொறந்த ஊர்னும் வெச்சுக்கலாம் – சொல்லியிருக்கு. ஆண்டாளோ ஊரைச் சொல்லிட்டு அப்புறம் அம்மாவைச் சொல்றா! ஏன்னா, அந்த மதுரைக்கு அப்படியொரு மஹிமை! என்ன மஹிமை–னா, ஜன்மா இல்லாத ஸ்வாமி ஜன்மிச்ச அந்த க்ஷேத்ரம்தான் 'புனரபி ஜனனீ ஜடரே சயனம்'னு திரும்பத் திரும்ப தாய் வயத்துல பொறந்திண்டிருக்கற நமக்கெல்லாம் ஜன்ம விமோசனம் தருகிற மோக்ஷபுரியாயிருக்கு. ஸப்த மோக்ஷபுரின்னு ஏழு இருக்கறதுல மொதல்ல ராமன் பொறந்த அயோத்தி, ரெண்டாவது க்ருஷ்ணன் பொறந்த இந்த வடமதுரை.

"அதோட முக்ய காரணமா எனக்கு என்ன தோண்றதுன்னா, அந்த ஊரோட பேபே அங்கே அவதாரம் பண்ணின ஸ்வாமிக்கு ஸ்வபாவமாயிருந்ததுதான்! க்ருஷ்ணன்னா என்ன ? மதுரந்தான்! தித்திப்புன்னா, தித்திப்பு, அப்படியொரு தித்திப்பு அவன்!"

அந்தத் தித்திப்பை ஓட்டச் சுவைத்துக் களித்த தித்திப்பு பெரியவாளின் குரலில் சொட்டுகிறது.

"அந்த மாதுர்யத்துல என்ன விசேஷம்னா, மதுரமா இல்லாத விஷயங்களாவே அவன் வெளிப்பார்வைக்கு அநேகம் பண்ணினாலும் அதுகளும் பக்த ஹ்ருதயத்துக்குள்ளே மதுரமாவே ஊறரது (ஊறுவது)தான்! ஆண்டாள் மாதிரி, சுகர், லீலா சுகர், மீரா மாதிரி மஹா

@Page 6

பக்தாள்தான்னு இல்லே! நம்ம மாதிரி ஏதோ கொஞ்சம் பத்தின்னு இருக்கறவாளுக்குக்கூட அந்த க்ருஷ்ணன் மட்டும் என்ன பண்ணட்டும், அது மதுரமாத்தான் இருக்கு! 'அந்த மாதுர்யம் தனக்கு இருக்காக்கும் ; ஆகையினால, என்ன அடாவடி, கபடம், திருட்டு–புரட்டு, பொய் வேணாலும் பண்ணுவேன்'னு அவன் நடத்திக் காட்டற மாதிரியே தன்னோட வாழ்க்கை பூராவுலேயும் பண்ணிண்டு போயிருக்கான்.

"என்னமா அவன் ஸம்பந்தப்பட்டா அமதுரங்கூட மதுரமாச்சுன்னா : சக்கரையிலே பல தினுஸு பொம்மை பண்ணியிருக்குன்னு வெச்சுக்கோங்கோ,

மொளகா, பாகக்கா, உப்புக்கட்டி மாதிரில்லாம்கூட அந்தந்தக் கலர் குடுத்துத் தத்ரூபமாப் பண்ணியிருக்குன்னு வெச்சுக் கோங்கோ. அப்ப அந்த மொளகாயும், பாகக்காயும், உப்புக்கட்டியுங்கூட தித்திக்கத்தானே செய்யும்? ஏன்னா மொளகாயும் பாகலும் வெளிவேஷந்தானே? உள்ளுக்குள்ளே அதெல்லாமும் மதுரமயமான சக்கரைதானே? அப்படித்தான் இதுவும்.

"தமிழ்ல நீதி நூல்கள் வரிசையில 'இனியவை நாற்பது', 'இன்னா நாற்பது'ன்னு தலா நாற்பது பாடல்கள் கொண்ட பொஸ்தகங்கள் உண்டு. 'இன்னா'ன்னா இன்னல் தருவது ; தீங்கு. 'இனியவை' நல்லது. நல்லது – கெட்டது என்னென்னன்னு சொல்லிக் கொடுக்கவே இப்படி ரெண்டு பொஸ்தகம். க்ருஷ்ண பரமாத்மா விஷயத்திலேயோ, நாற்பதுக்கு மேலேயும் அவன் ஸம்பந்தப்பட்ட எல்லாமே 'இனியவை'தான். 'இனியவை அனந்தம்'னே அவனைப் பத்திப் பாடிப்பிடலாம்! அந்த 'கன்விக்ஷன்'லதான் அவனும் அந்த அவதாரத்துல 'இன்னாதவை' என்கிற மாதிரி ஏகமாப் பண்ணினதும்! அந்த இன்னா அத்தனையும் வெளி வேஷந்தான் ; உள்ளுக்குள்ளே அதெல்லாமும் இனியதேதான்!

@Page 7

" 'இனிமை' – அதுதான் 'மதுர'த்துக்குத் தமிழ். 'தித்திப்பு'ன்னு பேச்சு மொழியில சொல்றோம். இலக்கிய மொழி 'இனிமை'. செல (சில) வார்த்தைகள் தமிழ்ல அலாதி அழகு ; அர்த்தத்துக்குப் பொருத்தமான சப்தமா அந்த வார்த்தைகள்ல அமைஞ்சிருக்கு. அப்படி ஒண்ணு 'இனிமை'. அதுல வர மூணு எழுத்துல எதுவுமே கடுமையா இல்லாம மெத்துனு இருக்கு.

"இங்கிலீஷ்ல மதுரத்தை 'ஸ்வீட்'ங்கிறா. 'ஸ்வீ'ன்னு இழுத்து சொல்றப்ப மதுரமாயிருந்தாலும் அப்பறம் முடிக்கறச்சே 'ட்'னு ஒரு டகாரம் மொரட்டு சப்தமா ஒக்காந்திருக்கு! ஒத்தர் வேடிக்கையாச் சொன்னாப்பல, 'குழலினிது யாழினிது'ன்னு, சொல்றச்சயே மழ மழன்னு இனிமையா இருக்கறதை 'ட்ரான்ஸ்லேட்' பண்ணி, 'Flute sweet, lute sweet'ன்னு லொட்டு லொட்டுனு சொன்னா.." வாக்கியத்தை முடிக்காமல் பெரியவாள் நய அழகுடன், அபிநய அழகுடன் காதைப் பொத்திக் கொள்கிறார்.

"ஸம்ஸ்க்ருதத்துல 'மதுரம்'னு சொல்றச்சேகூட அந்த 'dhu' கொஞ்சம் கடும் சப்தமாத்தான் இருக்கு. அதைவிட நைஸா 'ஸ்வாது'ன்னும் இன்னொரு வார்த்தை இருக்கு. இங்கே வர 'து' மதுரத்துல வர கெட்டி 'து' இல்லே ; லேசு'து'....".

"ஸ்வாதுவிலிருந்துதான் இங்கிலீஷ் 'ஸ்வீட்' வந்தது அப்ப லேசு 'த'–வே

கடினமான 'ட'–வா மாறிடுத்து.

"இங்க்லீஷ்லயும் எத்தனையோ வார்த்தை ரொம்ப அழகா இருக்குதான். சப்த விசேஷம், அர்த்த விசேஷம், ஒரே விஷயத்துக்குள்ளேயே இருக்கற சின்னச் சின்ன விஷயங்களைக்கூட பிரிச்சுக்காட்ட அதுகளிலே

*ஸம்ஸ்க்ருதத்தில் க, ச, ட, த, ப ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 'கெட்டியாக' இரண்டும், 'லேசாக' இரண்டுமாக நாலு ரகம் உண்டு.

@Page 8

ஒண்ணொண்ணுக்கும் தனிவார்த்தை–ன்னு எல்லாம் அந்த பாஷையிலேயும் நெறய்ய இருக்கு. த்ருஷ்டாந்தமாக 'பனி' என்கிற ஒண்ணை எடுத்துண்டா – moistureனு இருக்கற ஈரக்கசிவே ஜில்னு ஜலத்துளி ஆனா dew. மூடுபனியா இருந்தா fog. மூடுபனி பொகையாட்டம் இருந்தாலோ smoke–ஐயும் fog–ஐயும் கலந்த smog! பனித்துளி கெட்டிப்பட்டா frost. ஜலமாயிருந்து அப்பறம் பனியா உறைஞ்சா ice. நேரா அட்மாஸ்ஃபியர்லேந்தே நீராவி பனிக்கட்டியா ஆனா snow. அந்த ஆவி ஜலமா இறுகி மழையாப் பெய்யறபோதே இறுகிக் கெட்டியானா.... 'ஆலங்கட்டி'ன்னு சொல்றது ; அப்படி ஆனா....hailனு – ஒண்ணுக்குள்ளேயே அநேக shades காட்டற வார்த்தைகள் இருக்கு. 'உணர்ச்சி'ங்கிற ஒரே வார்த்தைல நாம சொல்லிண்டிருக்கறதையே அவா feeling, emotion–னு அழகாப் பாகுபடுத்தி ரெண்டாச் சொல்றா.

"மதுரம் – இனிமைங்கறதுல பேச்சு கொஞ்சம் இழுத்துண்டு போய் அமதுரமா ஏதோ சொன்னேனே தவிர நான் எந்த பாஷையையும், எவரையும் மட்டந்தட்டப் போகலை..."

ஆங்கிலத்தைச் சற்றுப் பரிஹஸித்துவிட்டதற்கு நஷ்ட ஈடாக அதன் சிறப்பையும் எவ்வளவு அழகாகத் தெரிவித்துவிட்டார் பாருங்கள்! அதுதான் அனைத்தையும் தனதாகத் தழுவும் அவரது இதய மதுரம்!

எதையோ பண்ணிச் சிறிது நேரம் தமக்குத் தாமே சிரித்துக் கொண்டிருந்த ஸ்ரீ பெரியவாள் பிறகு அந்த எண்ணத்தைச் சொல்லாக்குகிறார். "இப்ப நான் ஒரு விஷயம் ஸரியாச் சொல்லலைனு கொஞ்சம் 'அபாலஜெடிக்'கா 'ஃபீல்' பண்ணிண்டு, அதை ஸரிப்பண்ணப் பாத்தேனோல்லியோ ? க்ருஷ்ணனா

@Page 9

இருந்தா அப்படிப் பண்ணமாட்டான், அவன் பண்றதுல ஸரி, ஸரியில்லைங்கிற ரெண்டே கிடையாது. அந்த வார்த்தைகளே அவனோட அகராதியில ஏறாது! அவன் பண்ற ஸகலமும் மதுரம், மதுரம்–கிற ஒண்ணுதான். மத்தவா பண்ணினா ஸரியில்லாததெல்லாங்கூட அவன் பண்றப்ப மதுரந்தான்."

ஒரே மலர்ச்சிச் சிரிப்பாகச் சிரித்துக்கொண்டு தொடர்கிறார். "இத்தனைதான்னு இல்லாம அவன் போட்ட வேஷத்திலே ஒண்ணா எப்பவாவது அவன் 'அபாலஜெடிக்' வேஷம் போட்டிருந்தா அதுவுங்கூட மதுரமாத்தான் இருக்கும்!

"இதை நெனச்சுத்தான் பரம பக்தல் ஒத்தர், "மதுராதிபதேரகிலம் மதுரம்" – "மதுராதிபதே: அகிலம் மதுரம்" (மதுரை மன்னனான கண்ணன் குறித்த அனைத்தும் இனிப்பு)னு பாடி வெச்சுட்டுப் போய்ட்டார்.

" 'மதுராஷ்டகம்'னே எட்டு ச்லோகம் கொண்ட ஸ்தோத்ரம் அது. அதுல ஒவ்வொரு ச்லோகத்துக்கும் ஈற்றடி (முடிவான அடி) 'மதுராதிபதேரகிலம் மதுரம்'. பாக்கி மூணடியில ஒவ்வொண்ணிலேயும் ஸ்வாமியோட குணம், ரூபம், கார்யம், அல்லது அவன் ஸம்பந்தப்பட்ட விஷயம்னு ரெண்டு ரெண்டு ஸமாசாரம் சொல்லியிருக்கும். ஒவ்வொண்ணையும் மதுரம்–னு சொல்லியிருக்கும்.

"எக்ஸாம்பிளுக்கு மொத(ல்) ச்லோகம் சொல்றேன். அதுல மொதல் அடி "அதரம் மதுரம், வதனம் மதுரம்", 'ஸ்வாமியோட ஒதடு மதுரமாயிருக்கு ; முகம் மதுரமாயிருக்கு'ன்னு ரெண்டு விஷயம், ரெண்டு மதுரம் சொல்லியிருக்கு.

"ஒதட்டை ஏன் எடுத்தவொடனே சொன்னார்னா மதுரம்னா முக்யமா ஸங்கீதத்தைத்தானே சொல்றது ? மதுர

@Page 10

கானம், மதுர கண்டம், இனிய குரல், sweet voice–னு எந்த பாஷையானாலும் அப்படிச் சொல்றது. முன்னாலே சொன்னேனே, தென் மதுரை மீனாக்ஷிகூட ஸங்கீதத்தின் அதிதேவதைதான்னு! வட மதுரையில் இருக்கற அவளோட ஒடப்பொறந்தானும் கானலோலன்தான். அவ வீணா கான ப்ரியை–னா அவன் வேணுகானலோலன்! குழல், யாழ்ங்கிற மாதிரி, வேணு–வீணாங்கிற வார்த்தைகளே மதுரமா ஒலிக்கிறது. மந்த ஸ்வாமி கையிலேல்லாம் ஆயுதம் இருக்கும். கருணாமூர்த்தியான ராமசந்த்ர மூர்த்தி கையிலகூட தநுஸுதான். க்ருஷ்ணன்தான் பிள்ளாங்குழல்

வெச்சுண்டிருக்கறவன். வேணுகோபாலன், முரளீதரன்—னே அவனுக்குப் பேர். அந்த வேணுவை அவன் ஒதட்டுல வெச்சுத்தானே ஊதரான்? அவனோட திவ்ய சரீரத்துக் குள்ளேயிருந்து வர பவித்ரமான காத்தை அவன் அந்தப் பிள்ளாங்குழல் வழியா வடிக்கறதுனாலதானே அந்த வேணுகானம் அப்படியொரு மதுரமா, கேக்கறவாளையெல்லாம் பித்துப் பிடிச்சவாளாட்டம் மயக்கித்து?

"பரம ப்ரியத்தைக் காட்ட முத்தம் குடுக்கறது. ஸ்வாமி எப்பவும் பிள்ளாங்குழலை ஒதட்டால ஸ்பரிச்சிச்சுண்டு முத்தந்தான் குடுக்கறான்னு அதுகிட்ட கோபிகா ஸ்த்ரீகள்லாம் பொறாமைகூடப் படுவாளாம்!

"பிள்ளாங்குழல் வாசிச்சாதானா? அவன் பேசினாலே ஸங்கீதமாத்தான் பரம மதுரமாயிருக்கும். இன்னொரு ச்லோகத்துல (அஷ்டகத்தின் இரண்டாவது ச்லோகத் தொடக்கம்) அதையும் 'வசனம் மதுரம்'னு சொல்லியிருக்கு.

"ஸாதாரணமா ஞானோபதேசம்னா ஒரே போரா இருக்கும்! ஆனா, க்ருஷ்ணன் பண்றச்சே மட்டும் அதுவுங்கூட மதுர கீதமாகத்தான் இருக்கும்! ஆமாம், 'கீதை'ன்னே அதுக்குப் பேர் சொல்றோமே! கொழந்தையா பிள்ளாங்

@Page 11

குழல் வாசிச்சுண்டு கானம் பண்ணினவன் நன்னா வயஸேறினவிட்டு ஞானம் சொன்னப்ப, அதுவும் கீதமாத்தான் திதிச்சுது!

"இதெல்லாம் ஒதட்டு ஸம்பந்தத்துல வந்ததுதானே? அதனால்தான் 'அதரம் மதுரம்'னு மொதலிடம் குடுத்துச் சொன்னார்.

"இப்படி வரிக்கு ரெண்டு மதுரமா ஒவ்வொரு ச்லோகத்துலயும் ஈற்றடி நீங்கலா மத்த மூணுவரியிலே மொத்தம் ஆறு மதுரம். எட்டு ச்லோகத்திலயும் சேத்து ஆறெட்டு நாப்பத்தெட்டு மதுரத்தைச் சொல்லி அத்புதமா அஷ்டகம் பாடியிருக்கார்.

"பண்ணினவர் வல்லபாச்சார்யார்—ங்கிறவர். பாலக்ருஷ்ணனையே முழு முதல் தெய்வமா வெச்சு 'சுத்தாத்வைதம்'னு 'ஃபிலாஸஃபி' பண்ணினவர். அத்வைதம், வசிஷ்டாத்வைதம் மாதிரி அது ஒரு ஸித்தாந்தம். வடக்கே, குறிப்பா குஜராத் ப்ராந்தியங்கள்ல அதை 'ஃபாலோ' பண்றவா இருக்கா. ஃபிலாஸஃபின்னா வாத—ப்ரதிவாத குஸ்தில்லாம் வரும். அது எப்படியோ போகட்டும். அப்படியில்லாம, யாரானாலும் பக்தி ஸ்தோத்ரம்னா மனஸைத் தொடும். அப்படி எல்லாரும்

ஸந்தோஷப்பட அவர் 'மதுராஷ்டகம்' பாடியிருக்கார். 'மதுரம் அனந்தம்' பாடலாமானாலும் இப்படி நாப்பத்தெட்டு அம்சத்தையாவது அவர் பொறுக்கி எடுத்துப் பாடி வெச்சதே கேக்கக் கேக்க ஆனந்...தமாயிருக்கு."

திருக்கரத்திலிருந்த மதுராஷ்டகத் துண்டுப் பிரசுரத்தில் திருக்கண்ணை ஓட்டியவாறே கூறுகிறார். "பகவானோட 'அதரம்', 'வதனம்', 'நயனம்', 'ஹஸிதம்' – அதாவது சிரிப்பு, அவனோட 'ஹ்ருதயம்', 'கமனம்' – அதாவது நடை, அவனோட வசனம், சரிதம், வஸனம் – அதுதான் அவன் போட்டுண்டிருக்கற பீதாம்பரம் ; அல்லது

@Page 12

'வஸனம்'னா அவர் வாஸம் பண்ற கோகுலம்னும் சொல்லலாம்; இப்படி அடுக்கிண்டே போய் அது ஒண்ணொன்னும் மதுரம்கிறார்.

"இதெல்லாம் மதுரமாயிருக்கிறது விசேஷமில்லை ஸாதாரணமா மதுர லிஸ்டில் வரதுக்கில்லாத சிலதுகூட க்ருஷ்ண ஸம்பந்தத்தாலே மதுரமாயிட்டதையும் அவர் சொல்றதுதான் விசேஷம். இப்படி 'வலிதம்', 'ஹரணம்', 'வமிதம்'ங்கற மாதிரி சிலது சொல்றார். 'வலிதம்'னா வளைச்சுண்டு கோணலா நிக்கறது. அது ஸாதாரணமா மதுரமாயிருக்காது. ஆனா பகவான் பிள்ளாங்குழல் வாசிக்கறதுல இடது பக்கம் சாஞ்ச முகமாவும், கழுத்துக்குக் கீழே இடுப்புவரைக்கும் வலது பக்கமா ஒடிச்சுண்டும், இடுப்புலேந்து கீழே மறுபடி இடது பக்கம் ஒடிச்சுண்டு வலது பாதத்தை இடது பாதத்துக்கு க்ராஸா வெச்சுண்டும் மூணு கோணலா நிக்கறதையே த்ரிபங்கம், த்ரிபங்கம்னு லோகமெல்லாம் பேரழகா மதிச்சுக் கொண்டாடறது."

"கோணல் பேர்வழி!" என்று சிரிக்கிறார். "கோணை பெரிதுடைத்தே"ன்னு ஆழ்வார்கூட சொல்லியிருக்கார். அதுவும் அவன்கிட்ட அழகுதான். அதாவது மதுரந்தான்.

"மதுரம்னா வேறே என்ன ? அழகு, நல்லதுன்னுதான் அர்த்தம். நல்லது மதுரம்.

"ஒரு வேடிக்கை. தித்திப்புப் பிடிக்காதவா பல வேர் இருக்கா. வடக்கேதான் எல்லாரும் தித்திப்பு ப்ரியாள். தக்ஷிணத்துல கார ஸாரமா இருந்தாதான் ரொம்ப பேருக்குப் பிடிக்கும். செல பேர் தித்திப்பு பக்ஷணம் தொடவேமாட்டா. கொஞ்சம் துவர்ப்பு ஜாஸ்தியா இருந்தா பிடிக்கிறவா, கசப்பு பிடிக்கிறவா, புளிப்பு பிடிக்கிறவாளும் உண்டு. ஒரு கல் உப்பு கூடப் போட்டா பிடிச்சவாளும் உண்டு.

ஆனாலும் அவாள்ளாமுங்கூட நல்லவாளைப் பத்திச் சொல்றப்போ அவா காரகுணமா,

@Page 13

கசப்பு குணமா, புளிப்பு குணமா, உப்பு குணமா இருக்கறதாச் சொல்றதில்லே! 'மதுரமான குணம்', 'sweet nature' 'இனிய இயல்பு' இப்படிச் சொல்றதுதான் நம்ம ஊர்ல மட்டுமில்லாம லோகம் பூராவுமே பொது வழக்கே' கோவமா, ஆத்திரமாப் பேசினா, 'ரொம்பக் காரமா பேசிட்டான்'ங்கிறோம். ஆசா பங்கமாப் பேசினா, 'மனசு கசந்து பேசினார்'ங்கிறோம். அலுத்துப் போற மாதிரி பேசினா, 'கேட்டுப் கேட்டுப் புளிச்சுப் போச்சு'ங்கிறோம். தூஷணையாப் பேசினா, 'கரிச்சுக் கொட்டாதே!'ங்கிறோம். கரிப்பு உப்போட குணம். இப்படி ஷட்ரஸங்களை மநுஷ குணங்களுக்கும் ஏத்திச் சொல்றப்ப, மதுரமாயிருக்கிற சாப்பாட்டு தினுஸு பிடிக்காதவா உள்பட எல்லாருமே நல்ல பதமான, ஹிதமான குணத்தை 'மதுரம்'னுதான் சொல்றா!*

"பகவான்கிட்ட எல்லாமே நல்லதுதான். 'அனந்த கல்யாண குணம்'ங்கிறது. அதனால அத்தனையும் மதுரம்'.

"பழுத்....த நிலையோன்னோ?" என்று உள்ரஸிப்புடன் உவகித்துக் கூறுகிறார். "ஸகலத்துக்கும் விரை, வேர் எல்லாமும் அவன்தான் ; முடிஞ்ச முடிவா இருக்கற பழமும் அவன்தான். பழம்னா தன்னால அதுக்கு ஒரு மதுரமும் வந்துடும். வேப்பம் பழமேயானாகூட அது வேப்பங்காயை விட மதுரந்தானே?

" 'ஹரணம்' மதுரம்–ங்கிறார். ஹரணம்னா அபஹரணம்தான் ; ப்ளெய்னா சொன்னா, 'திருட்டு'. கிருஷ்ணனுடைய திருட்டு – வெண்ணெய்த் திருட்டு, 'உள்ளம் கவர் கள்வ'னா அவன் பண்ற திருட்டு – ரெண்டுமே எத்தனை மதுரம்? வெண்ணெயைச் சாப்படறதைவிட இவன்கிட்ட திருட்டுக் குடுக்கறதுதான் மதுரம்! சாப்படறது நாக்குக்குத்

*இவ்விஷயம் பிற்பாடும் ஓரிடத்தில் வரும்.

@Page 14

தான் மதுரம் ; திருட்டுக் குடுக்கறதோ – பெறத்தியார்கிட்ட இல்லே ; இவன்கிட்ட குடுக்கறதோ – ஹ்ருதயத்துக்கே மதுரமாயிருக்கே!

" 'வமிதம் மதுரம்'ங்கறாரே, அது என்ன? 'வமிதம்'தான் vomitனு ஆனது. 'சமனம்' பண்றது 'சாந்தி'–ங்கிற மாதிரி, 'வமனம்' பண்றதுதான் 'வாந்தி'. ஸாதாரணமா வாந்தி பண்றதைப் பார்த்தாலே, நெனச்சாலே நமக்கும் ஓக்காளிக்கும்! ஆனா க்ருஷ்ணன் பண்ணினா? அதுவுங் கூட மதுரந்தான். அதை (நி)ரூபிக்கிறதுக்காவே அவன் அப்படியும் பண்ணுவான் போலேயிருக்கு! இல்லாட்டா, 'வமிதம்'னா 'கொப்புளிக்கறது'ங்கிற அர்த்தமும் எடுத்துக்கலாம். அவன் திருட்டுத்தனமா வாய் நெறய யமுனா தீர்த்தத்தை அடக்கிண்டு எவளோ ஒரு கோபிகா ஸ்த்ரீ மூஞ்சில அதைப் பொக்குனு பீச்சிக் கொப்புளிச்சானானா, அதுதான் அவளுக்கு எத்தனை மதுரமாயிருந்திருக்கும்? அவன் பண்ணின இந்த மாதிரி விஷமமெல்லாம் இன்னிக்கும் படிக்கறச்சே, கேக்கறச்சேயே எப்படித் தேனாத் திதிக்கிறது?....

" 'புக்தம் மதுரம்'னு ரெண்டு எடத்துல வரது. அதுக்கு எடத்தைப் பொறுத்து வெவ்வேறே அர்த்தம் பண்ணிக்கணும். மொதல்ல 'பீதம் மதுரம், புக்தம் மதுரம்'னு வரது. 'பீதம்'னா பானம் பண்றது ; குடிக்கிறது. பாலக்ருஷ்ணன் பாலை ருசிச்...சு..., சீ....ப்பிக் குடிக்கறது மதுரமான காட்சியாதான் இருக்கும். அதோட சேத்து 'புக்தம்'னு போட்டிருக்கறதாலே 'அன்ன–பானம்' என்கிறபடி, இங்கே 'புக்தம்'கிறது சாப்பிடறதைக் குறிக்கும். ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் சாப்பாடு போடற தாதா, தானே சாப்பிடறது ரொம்ப மதுரந்தான்! ரெண்டாவதா 'யுக்தம் மதுரம், புக்தம் மதுரம்'னு வரது. போகம்–யோகம்னு ரெண்டு. போகம், இஹலோக இன்பம், யோகம், ஆத்மலோக இன்பம். 'புக்தம்'னா போகம்

@Page 15

பண்றது ; 'யுக்தம்'னா யோகம் பண்றது. இங்கே அப்படிதான் அர்த்தம் பண்ணிக்கணும். மஹா மாயாவி, பரம ஞானி ரெண்டுமா இருந்த ஸ்வாமி அந்த க்ருஷ்ணாவதார வாழ்க்கை பூராவும் ரெண்டையுமேதான் 'ஸைமல்டேனிய'ஸாப் பண்ணிக்கிண்டிருந்தான்! ஆமாம், அப்படித்தான் பண்ணிக்கிண்டிருந்தான்!" அவதார ரஹஸ்யத்தை அம்பலமாக அறிந்திருந்த அத்புத மலர்ச்சியுடன் கூறுகிறார்.

"இப்படி அநேக மதுரங்கள் சொல்லிண்டு போய் 'தலிதம் மதுரம், பலிதம் மதுரம்'னு அஷ்டகத்தை முடிச்சிருக்கார். 'தலிதம்'னா 'பொளக்கறது'. 'பொளந்து தள்ளிட்டான்!'னு சொல்கிறோமே, அப்படிச் சொல்லும்படியா, தான் பண்ணின ஒவ்வொண்ணையும் எக்ஸ்பெர்டாப் பண்ணினவன் அவன்! நிஜமாவே பால்யத்துல அஸுராளைப் பொளந்தும் தள்ளினான்! பிற்காலத்துல தன் ஸங்கல்ப சக்திக்குக்

கருவி மாத்ரமா இருந்துண்டு அர்ஜுனாதிகள் சத்ரு ஸைன்யங்களைப் பொளந்து தள்ளும்படியும் பண்ணினான். 'காலோஸ்மி' – 'நான் காலனாக்கும்'னு (கீதையில்) சொல்லி அந்த அர்ஜுனனையே நடுங்கப் பண்ணினவனாச்சே! அந்த நடுக்கத்துக்குள்ளேயுங்கூட ஒரு மதுரத்தையும் ஒளிச்சுக் குடுத்திருப்பான்! அவன் காலனா ஸம்ஹாரம் பண்றதும் மதுரம்! ஸம்ஹரிக்கப்படுகிறவனுக்கே, மதுரம்! ஏன்னா அவன் கையால செத்தா மோக்ஷந்தானே! காலனுக்குப் பெண்பால் 'காலி'. 'காளி'ங்கறது அதுதான். 'மதுரகாளி'ன்னே திருவாச்சூர்லே இருக்கா!

"ஓடம்பைப் பொளக்காம, மனஸைப் பொளக்கறதுன்னும் அர்த்தம் பண்ணிக்கலாம். விரஹ தாபத்துல அப்படித்தான் கோபிகா ஸ்த்ரீகளோட மனஸைப் பொளந்தான். கோபிகா ஸ்த்ரீன்னா யாரு? உள்ளன்பு – உள்ளம் பூரா அப்படியே ப்ரேமை ரொம்...பிக் கிடக்கற



உள்ளன்பு இருக்கற அத்தனை பக்தாளுந்தான்! அவாளுக்கு அப்படிப் பொளக்கப்படறதுலேயே – 'தலிதம்'னா 'பொளக்கப்படுவது'தான் ; அப்படி ஆவதிலேயே – உள்ளூர ஒரு மாதுர்யமும் தெரியும்! ஏன்னா, சேந்து இருக்கறதை விடப் பிரிவுலதான் ஒத்தரைப் பத்தின நெனவு ஆழமாயிருக்கும்! க்ருஷ்ணன் நெனவு மதுரந்தானே?

" 'தலித்'த்துக்கு அப்பறம் அதுக்கு நேர் 'ஆப்போஸிட்'டா 'பலிதம்'. இஷ்டப்பட்ட பலனைப் பெறரது (பெறுவது) 'பலிதம்'. அதாவது மனோரதப் பூர்த்தி. பழுத்த பழமான ஸ்வாமிதானே ஸமஸ்த ஜீவராசிகளோட ஸகல கர்மாக்களுக்கும் பலதாதா?

"குறிப்பா, இங்கே தலிதம்–பலிதம்னு வரதை (முறையே) விரஹம்னும், அப்பறம் விரஹத்துல பொளந்துபோன பக்தாள் ஆசை பலிச்சு அவனோட சேர்கிறதுன்னும் வெச்சுக்கணும்.

"அவனோட சேர்க்கிறதுதான் மதுரம்–ங்கிற தத்வம் பழமாகப் பழுத்துவிட்ட பூர்த்தி ஸ்தானம்!

"விருந்து முடிவுல பழம் குடுக்கற மாதிரி, இந்த அஷ்டக விருந்தை இப்படிப் பழம் குடுத்துப் பரம மங்களமா, மதுரமா முடிச்சிருக்கார்."

மதுர மங்களமானதொரு மௌனத்தில் ஸ்ரீசரணர் சிறிது நேரம் மூழ்கியிருக்கிறார். சட்டென எதையோ நினைவுகொண்ட உத்ஸாஹத்துடன் கூறுவார். "கடைசிக்கு முந்தி, 'யஷ்டிர் மதுரா, ஸ்ருஷ்டிர் மதுரா'ன்னு சொல்லியிருக்கார். 'யஷ்டி'ன்னா கழி, குச்சி, 'ஹேய் ஹேய்!'னு மாடு–கன்னு ஓட்டிக்கிண்டு போறச்சே ஸ்வாமி எல்லா எடு (இடை)ப் பிள்ளைகளையும் போலக் கையில குச்சி வெச்சுண்டிருப்பார். ஸாக்ஷாத் ஸ்ரீ வைகுண்டாதிபதி இப்படி வந்தது எத்தனை எளிமை! எத்தனை ஸௌலப்யம்! த்ரிலோக தர்பார் நடத்தறதுக்குச் செங்

@Page 17

கோல் பிடிக்கறவனே மாடு–கன்னுக்குத் தார்க்குச்சி பிடிக்கறான்னா, அந்த எளிமை எவ்வளவு மதுரமா இருக்கு ? அந்தச் சின்னூண்டு பெரப்பங்குச்சி 'யஷ்டி' இருக்கே, அதுவே மதுரமாத்தான் தெரியும். குச்சி மாத்திரமில்லே ; அதனால குத்தப்பட்டா, அதுவுங்கூட மதுரமாத்தான் இருக்கும்!

" 'யஷ்டி'யைச் சொன்ன கையோட 'ஸ்ருஷ்டி'யைச் சொல்றார். எடப் பிள்ளையா எளிமை வேஷம் போட்ட பாலக்ருஷ்ணனே ஒரு ஸந்தர்ப்பத்துல ஸ்ருஷ்டியும் பண்ணினார்னு பாகவதத்துல இருக்கு. அவதார ரஹஸ்யத்தைப் புரிஞ்சுக்காம ஒரு ஸமயம் ப்ரம்மா க்ருஷ்ணரோட மாடு மேச்சுண்டிருந்த மத்த எல்லா எடப் பசங்களையும், அந்த மாடுகளையும் மாயமாத் தூக்கிண்டு போய்ட்டார். 'அப்படியா ஸமாசாரம் ?'னு அப்ப ஸ்வாமி ஒரு கார்யம் பண்ணினார். அவர் மாத்திரம் நெனச்சிருந்தா ப்ரம்மா மாயமாத் தூக்கிண்டு போனாப்பலவே அவரும் அவாளை மறுபடி சொடக்கு போடற நாழில பூலோகத்துக்கு திரும்பக் கொண்டு வந்திருக்கலாம். மாயைக்கு மூலஸ்தானமே அவர்தானே ? 'மாயனை'ன்னு ஆண்டாளும் ஆரம்பிச்சிருக்காளே! ஆனா அவர் பிள்ளை தன் கிட்டேந்து கத்துண்ட துளிப்போர மாயையையே தாமும் காப்பியடிச்சா கௌரதைக் கொறைச்சல்னு வேறே ஒரு மாயை பண்ணினார். ப்ரம்மா தூக்கிண்டு போன அத்தனை எடப் பசங்களுக்கும், மாடு கன்னுகளுக்கும் அச்சா டூப்ளிகேட் காப்பி ஸ்ருஷ்டி பண்ணிட்டார்! இங்கேதான் அவதார க்ருஷ்ணன் ஸ்ருஷ்டியும் பண்ணினது!

"பரிபாலனம்தான் தன்னோட நேர் 'போர்ட்ஃபோலியோ'ன்னு அவதார மூலவர் வெச்சுண்டு, ஸ்ருஷ்டியைப் பிள்ளைகிட்ட குடுத்திருந்தாலும், அவரே ஸ்ருஷ்டியும் பண்ணக்கூடியவர், ஸம்ஹாரமும் பண்ணக் கூடியவர்தான். க்ருஷ்ணாவதாரத்துல இங்கே ஸ்ருஷ்டிக்கற

@Page 18

சக்தியைக் காட்டினார். 'காலோஸ்மி' சொன்னேனே, அதுல தெரிஞ்சுண்டது, அவர் ஸம்ஹாரமும் பண்ணக் கூடியவர்தான் (என்று) சிவனும் அப்படியேதான். ஆனா (மும்மூர்த்திகளில் மீதமுள்ள) ப்ரம்மாவுக்கு ஸ்ருஷ்டி தவிர மத்த க்ருத்யங்கள் வராது. அதனால அவர் தூக்கிண்டு போன கோப பாலாளையும் கோக்களையும் எப்படி வெச்சுண்டு பரிபாலிக்கிறதுன்னு புரியாமத் திண்டாடினார். பிதாவை சோதிச்சதுக்கு தண்டனைன்னு புரிஞ்சுண்டு, தூக்கிண்டு போனவாளையெல்லாம் திரும்ப அழைச்சுண்டு, கொழந்தையா இருக்கற அப்பாகிட்டயே ஓடிவந்து நமஸ்காரம் பண்ணி க்ஷமாபனம் (மன்னிப்பு) கேட்டுக்கிண்டார். கருணாமூர்த்தியான ஸ்வாமியும் க்ஷமிச்சு, தன்னோட டூப்ளிகேட் ஸ்ருஷ்டியைத் தனக்குள்ளேயே வாங்கிண்டு ஒரிஜினல் ஸ்ருஷ்டியை பூலோகத்தில பழையபடி இருக்கவிட்டார்.

"ப்ரம்ம லோகத்துல ப்ரம்மா தவிச்சுட்டுத் திரும்பி வந்த கொஞ்ச நாழிக்குள்ளேயே பூலோகத்துல ஒரு முழு வருஷம் ஓடிப் போயிடுத்து. அந்த ஒரு வருஷமும் க்ருஷ்ண ஸ்ருஷ்டியான பசங்களும் பசுக்களுமே அதுக்கு முந்தின ஒரிஜினல் ஸ்ருஷ்டி மாதிரி ஸகலமும் பண்ணிண்டிருந்தா. அவாவா ஆத்துல, ஊர்ல இருக்கற யாருக்குமே ஒரு வித்யாஸமும் தெரியலை.

"ஆனா, அது வெளியநுபவத்துலதான். உள்ளுக்குள்ளேயோ இப்ப ஸ்ருஷ்டியான பசங்கள் எல்லார்கிட்டவும் அவாவா மாதா–பிதாக்களுக்கு முன்னேயெல்லாம் இல்லாத ஒரு அதீத வாத்ஸல்யம் பெருக்கெடுத்தது ; பசுக்களுக்கும் கன்னுகள் கிட்ட அப்படியே பெருக்கெடுத்தது... வயஸு வந்த எடையர்கள்தான் பெரிய பசுக்களை மேச்சது ; க்ருஷ்ணன் மாதிரிப் பசங்கள் கன்னுகளைத்தான் மேச்சான்னு சொல்வா. (இவ்விஷயம்

@Page 19

இதுவரை) நான் ஸரியா சொல்லலை. (சிரித்து) 'பிழை திருத்தம்' போட்டுடறேன்!

"இப்ப இந்த மாதிரி அதீத வாத்ஸல்யம் பெருகினதுக்கு என்ன காரணம் தெரியுமோ ? அந்த ஸ்ருஷ்டி ப்ரம்மா பண்ணினதில்லையே! மதுரமே ஒரு ஸ்வரூபமான பகவானே பண்ணினதுன்னா ? அந்த மதுரந்தான் வாத்ஸல்யம்கிற மதுரத்தைப் பெருக்கெடுக்க வெச்சது. 'ஸ்ருஷ்டிர் மதுரா'ன்னது அதுதான்.

"அதுக்கு முந்தினதா 'யஷ்டி'யைச் சொன்னதுல ஒரு உள்ளர்த்தம் தோணறது.

மாய மந்த்ரம் பண்றவா மந்தரக் கோல்னு ஒரு யஷ்டிதான் வெச்சுண்டிருப்பா. 'சூ மந்தரகாளி!'ன்னு மாயாஜாலம் பண்றவன் அந்தக் கோலை ஒரு ஆட்டு ஆட்டினா ஒடளே ஜாலவித்தை நடந்துடும்! Magic wandனு வெள்ளைக்காராளும் சொல்றா. க்ருஷ்ணனோட தார்க்குச்சியையே அப்படி அவன் ஒரு சொழட்டுச் சொழட்டித்தான் டூப்ளிகேட் ஸ்ருஷ்டி பண்ணினான்னு காட்டறாப்பல பதப்ரயோகம் விழுந்திருக்கு! ஸ்வாமிக்கு ஸங்கல்பமே போறும். ஆனா எதுக்கும் ஒரு கருவியை லீலையாக் காட்டறதுதான் பகவான் வழக்கம். (உட்சிரிப்புடன்) தன்னோட லீலையைத் தன்னுதா (தன்னுடையதாகக்) காட்டாம கருவியால நடந்த மாதிரிக் காட்டறதும் அவனோட லீலாவிநோதங்களில் ஒண்ணு! அப்படிக் காட்டறப்போ இப்படிப் பண்ணியிருக்கலாம்.

"மொத்தத்துல அந்தப் பெரியவர் சொன்னாப்பல 'மதுராதிபதேரகிலம் மதுரம்'தான்! ஆண்டாள் 'மதுரை மைந்தன்'னா; இவர் மதுரைக்கு அதிபதிங்கறார். கம்ஸனை வதம் பண்ணின பிற்பாடு இந்த டைட்டில் பகவானுக்கு வந்தது. வாஸ்தவத்துல க்ருஷ்ணர் மதுரைல ராஜாவா ஆதிபத்யம் வஹிக்காம, கம்ஸனோட பிதா உக்ரஸேனர்



கிட்டயேதான் அந்தப் பொறுப்புக் குடுத்தார். கொஞ்சம் பிற்காலத்துல தாமே நிர்மாணம் பண்ணிண்ட த்வாரகையிலேகூட அவர் தமையனார் பலராமரோட சேந்தும், அவர் பேரிலேயும்தான் ராஜ்யபாரம் பண்ணினார். ச்ருங்கார சேஷ்டிதங்கள் உள்பட ஸகல லீலா விநோதக்கூத்தும் அடிச்ச ஸ்வாமிக்கு உள்ளூர அப்படியொரு ஸந்யாஸ மனஸு! வைராக்ய மதுரம்! 'யுத்கம் மதுரம்'னு சொன்ன யோகியோட மதுரம்!

"மதுராதிபதிங்கறது இன்னொரு அர்த்தத்துல ரொம்பவுமே பொருந்துந்தான். மதுரம் என்கிற தத்வத்துக்கே அவன்தான் அதிபதி ? அதனால மதுராதிபதி.

"அவனுடைய அந்த மதுரம் லோகமெல்....லாம் பரவணும், நமக்குள்ளேயும் துளிக்கணும்."

ஸ்ரீசரணரின் கைகள் கூம்புகின்றன; கண்களும் கூம்புகின்றன. உள்ளே மதுரமான மதுவை முட்ட முட்டத் தேக்கி வைத்துள்ள ஒரு மலர்கூம்பியிருப்பது போன்ற திவ்யக் காட்சி!

அதைக் கண்ட கண்களிலும் மதுரம் துளிக்கிறது.

சிறிது நேரம் ஒரே அமைதி. தெய்வத்தின் குரல் தெய்விக அமைதியில் லயிப்பதை விட ஒரு மதுரம் உண்டா ?

ஸ்ரீசரணரும் அகிலம் மதுரமானவர்தான்! ஆயின் கண்ணன் 'அடாவடி, கபடம், திருட்டு–புரட்டு, பொய்' எல்லாமும் மதுரமாகவே செய்ததுபோல செய்தவரல்ல. காரணம், ஸ்ரீராமன் போல் தார்மிகமான மனிதனுக்கு ஆதரிசம் காட்டவே வந்த அவதார புருஷர் நம் மஹா பெரியவாள். அப்படிப்பட்ட உத்தமமான மனித வாழ்வின், மனிதப் பாங்கின், மனித ஆற்றலின் ஸகல அம்சங்களிலும்

@Page 21

இண்டு இடுக்கு விடாமல் உட்புகுந்து அவை ஒவ்வொன்றின் ஸாரத்தையும் மதுரத் தேனாக வடித்தவர். "அவரைப் பத்தின அத்…தனையுமே மதுரந்தான்!"

மஹா பெரியவாள் என்ற மஹத்தான கோபுரத்தின் பல நிலைகளில் அதிலுள்ள கணக்கற்ற பதுமைகளாக அந்தப் பல்வேறு அம்சங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றுக்கு இனி எடுத்துக்காட்டுகள் காண்போம். 'கோபுரதரிசன' ஏட்டில் இப்படி ஒரு கோபுர தரிசனத் தொடர்!*

'அதரம் மதுரம்' என்பது மதுராஷ்டகத் தொடக்கம். நமது இத் தொடக்க அத்தியாயம் ஸாக்ஷாத் இத் தொடரின் நாயகரது அதரமானது மதுரம் குறித்தே மொழிந்த, பொழிந்த மதுர தாரையான ஸ்ரீமுகம் போல அமைந்திருப்பது நம் பாக்கியம்!

உவர்க் கடலிலிருந்து எழும் ஆவியே உவர்ப்பிலாத மழையாகி, அம் மழை நதிகள் பலவுமாகி, அந் நதிகள் யாவும் அக் கடலிலேயே வந்து விழுகின்றன. மஹா பெரியவாளோ மதுர மஹா ஸமுத்ரமாக இருந்தவர். அவரிலிருந்து மதுர மதுரமான பல துறை நதிகள் உண்டாகி அவரிடமே ஸங்கமித்தன.

அந் நதிகளில் சிலவற்றில் உத்தரிணி உத்தரிணியளவு ஸாம்பிள் தரவே இத் தொடர். ஆம், நூறு நூறு பக்கங்கள் எழுதினாலும் அந்த மூலத்தின் வீச்சு விஸ்தாரத்தோடு ஒப்பிட உத்தரிணியளவுதான்.

சரி, முதலாவதாக எந்த நதியில் மதுர பானம் செய்விக்கலாம் ?

ஏன் யோசனை! இத்தொடர் சொல்லைக்கொண்டு வடிக்கும் மதுதானே ?

எனவே சொற்பெருக்கு, சொற்பொழிவு என்றெல்லாம் ஆற்றைத் தொடர்புறுத்தியே

*இந்நூல் மேற்படி ஏட்டில் "மதுரம், மதுரம், மஹா பெரியவாள்" என்ற தொடராக வெளியானதன் முதற் பகுதியே.

@Page 22

கூறுவதற்கேற்ப முதலில் அவர் சொல்லின் செல்வராக வசனாம்ருதம் பொழிவதில் பெற்றிருந்த ஆற்றலைச் சிறிது காட்டுவோம்.

'வசனாம்ருதம்' என்பது உபசார வார்த்தையோ, உயர்வு நவிற்சியோ அல்ல. மெய்யாலுமே அம்ருதமான வசனந்தான். ஆம், பலவித ஆற்றல்களின் திரட்சியான மஹாத்மன் சொல்லாற்றலிலும் மன்னனாக விளங்கியவர்தாம்! அதிகார தோரணை கொண்ட மன்னரல்ல! 'அதி'காரம் என்ன, லவலேசமும் காரம் வீசாமல் இனிப்புச் சொட்டும் மதுர மன்னராகத்தான்! 'சொற்பொழிவாளர்' என்போரிடம் காணப்படும் எதுகை, மோனை, மற்ற கவர்ச்சி உத்திகள் எதுவுமின்றி பேச்சு மொழியில் குழந்தைக்கும் புரியுமாறே அவர் பேசிப்போவார். அப்போது அவர் அணிகளால் அழகு படுத்த நினைக்காமலே எதுகை, மோனை இத்தியாதிகளுடம் ஆங்காங்கே மின்னற் கொடி பரப்பும். முன்னதாகவே நுணுக்கமாக திட்டமிட்டு வரையறை செய்து பேசும் சொற்பொழிவாளர்களைச் சேர்ந்தவரல்ல அவர். ஆறும் கடலும் அலைகளை ஜாமெட்ரி பாக்ஸ் வைத்துக் கொண்டா அளவுபடுத்தி வீசுகின்றன? காற்று வீசும் போக்குப் படிதானே வீசுகின்றன? அப்படியும் அலைவரிசை அடித்துப் பரவுவது அழகு மயமாய்த்தானே இருக்கிறது? அதுபோலத்தான் நமது ஸ்ரீசரணரும் சித்தம் போகிற போக்கிலேயே இயல்பாகப் பேசிப்போவார். 'இயல்பாக' என்பதில் கடலளவு அர்த்தமிருக்கிறது. ஆம், தமக்கு ஏதாவது ஒரு விஷயம் சரியாகத் தெரியவில்லை, அல்லது நினைவு வரவில்லை எனில் அதையும் ஒளிக்காமல் வெளியிட்டுச் சொல்லுவார். 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்றபடி அவருக்கும் எங்கேனும் சறுக்கிவிட்டு, பிறகு அவரே அதைத் தெரிந்து கொள்ளும்போது, தாம் முன்னர் தவறாகச் சொல்லியிருப்பதைக் கொஞ்சமும் உள்ளக் கரவின்றி அக் குரவர் பெருமான் சின்னஞ்சிறுவரான நம்மிடம் மனம் திறந்து சொல்வார்!

@Page 23

இவ்வாறெல்லாம் இருப்பினும், ஒருவேளை இவ்வாறெல்லாம் இருப்பதாலேயே மற்ற எவரது அலங்காரச் சொற்பொழிவையும்விட அவரது எளிய உரையே நம் உள்ளத்தை ஆனந்தத்தில் துள்ள வைத்து, அதனுள் ஆழப் பதிந்து அற்புத மாற்றங்களும் விளைவித்துவிடும் அதிசய ஆற்றல் பெற்றிருக்கிறது! அதுதான்

ஸ்வாமீ, ஆத்ம சக்தி என்பது!

'சொல்லின் செல்வன்' என்றே ராமபிரானின் திருவாயால் பெயர்கொண்ட அநுமந்த பகவந்தன் மஹிமை பற்றி ஆற்று அலை வரிசையென அடுக்கடுக்காக வந்த அத்புத சிந்தனைகளைத் தங்கு தடையிலாத சொல்லில் பெருக்கி அவர் விரிவாக உரைத்ததில் தொடங்குவோம்.

மதுரக் கண்ணன் பற்றி மதுர முனிவர் கூறியதிலேயே அவரது சொல்லழகையும் நாம் காணத்தான் செய்தோம். எதைப் பற்றி அவர் சொன்னாலும் அச் சொல் தித்திக்கும் தேமொழியாய்த்தான் இருக்கும். ஏனெனில் இதயத்திலிருந்தே வருவது அச்சொல். அவரது அவ் இதயமோ தீஞ்சுவை ஊற்றான அமுத கும்பமே ஆயிற்றே! சொல்லின் செல்வனைப் பற்றியே அவர் சொல்கிறாரெனும்போது அச்சுவை இறுதி முறுகிய ஒரு கற்கண்டுச் சிகரமாகி இலக்கியமே படைத்துவிடும்தானே ? ஆம், உபந்நியாஸம் என்ற பொது மேடைப் பேச்சாக இன்றி, உடனிருந்த சிலருக்கே சாதாரண உடையாடல் போல அவர் பாட்டுக்கு ஓர் இரா முழுதையும் சிவராத்திரியாக்கி, அப்படியும் முடியாமல் விட்டுப் போனதை அடுத்தநாள் இரவும் நெடு நேரம் சொல்லிப் போனதுதான் இந்த 'ஆஞ்ஜநேய மாஹாத்மியம்'. எனினும் அதுவே சொல்செல்வம், சிந்தனைச் செல்வம் இரண்டாலும் சிறப்புக் கொண்டதோர் உன்னத இலக்கியப் படைப்பாக அமைந்துவிட்டது.

@Page 24

ஒருவர் சொல்லின் செல்வர் என்றாலே அவர் சிந்தனைச் செல்வருமாகத்தான் இருக்கவேண்டும். 'பொருளாழம்' என்று கூறவொண்ணாத வெறும் சொல்–அலங்காரமாகவே அவர் பேசுகிறபோதும் எழுதுகிற போதுங்கூட அவ்வாறு அவர் சொல்லை அலங்காரமாக அமைப்பதற்கு ஒரு சிந்ததனையாற்றல் இருக்க வேண்டுந்தானே ? அநுமன், அந்த அநுமனே எனுமாறு பேராற்றல், பெரும் அடக்கம் என்ற இரண்டும் ஒன்றுகூடிய அதிசய மூர்த்தியாக நின்ற நமது மஹா பெரியவாள் போன்ற மஹா புருஷர்கள் பொருட் சிறப்பு, சொற்சிறப்பு இரண்டும் ஒன்று கூடிய வாசகங்களையே மொழிந்தவர்கள். விநோத விளையாட்டின்பத்திற்காகச் சில சமயங்களில் அவர்கள் சொல்லழகு மட்டுமே காட்டுவதுமுண்டு; பெரும்பாலும் அவற்றில் நகைச் சுவையாகவே மதுரச் சுவை மலரும்.

சுவை மிக்க விருந்தைப் பரிமாறிப் புசித்தின்புறச் செய்யாமல் அதன் சுவையைப் பற்றி இதென்ன அதிகப் பிரஸங்கம் ? இதோ பரிமாறத் தொடங்குகிறோம்.

சொல்லின் செல்வனைப் பற்றி அவர் சொன்னதைச் சொல்லு முன் 'சொல்லை ஏன் செல்வம் என்பது?' என்பது பற்றிச் சொன்னதையே 'அப்பிடைஸ்'ராகக் கொடுத்து அரும்பிக்கிறோம்.

2

நம்மைப் போலவே ஒருவர் ஸ்ரீசரணரைச் சொல்லி செல்வராகக் கூறினார். அவரோடு உரையாடும்போது அவரிடமே கூறினார்.

அடக்கப் பெட்டகமான ஸ்ரீசரணர் ஏற்பாரா?

@Page 25

மறுதலித்துப் பேசலானார்: "சொல்லைச் செல்வம் என்கிறது எப்போது? அதை நிஜமாகவே ஒருத்தர் செல்வம் மாதிரி கையாளுகிற போதுதான்! செல்வத்தை எப்படிக் கையாளுகிறோம்? நாமெல்லாரும் எப்படியோ தாறுமாறாகக் கையாண்டாலும் கையாளலாம்! ஆகையால் நாம் பண்ணுகிறதற்கு 'வால்யூ' இல்லை. எப்படிக் கையாள வேண்டும் என்று நீதி நூல்களில் சொல்லியிருக்கிறது? அதுதான் விஷயம். அதற்குத்தான் 'வால்யூ' பொருள்தனைப் போற்றிவாழ்!' என்றுதானே சொல்லியிருக்கிறது? சிக்கனம் வேண்டும், சிக்கனம் வேண்டும் என்றுதானே நமக்குத் தெரிந்த பெரியவர்கள் சொல்வது? தர்ம கார்யம், ஸத்கார்யம் தவிர மற்ற எல்லாவற்றிலும் கொஞ்சங்கூட வீண், விரயம் பண்ணாமல் கணக்காக, அளவாகத்தான் செலவழிக்க வேண்டும். அதுதான் சாஸ்த்ர வழி.

"இதேமாதிரிதான் சொல்லையும் செல்வமாக பாவித்து சிக்கனமாகவே உபயோகிக்கவேண்டும். ஆனால் அர்த்தமும் தெளிவாகப் புரியணும். பணம், காசு செட்டாகச் செலவழித்தாலும் எப்படி ஜீவனத்துக்கு வேண்டுமான போஷாக்குக் குறையாமலே அப்படிப் பண்ணணுமோ, அந்த மாதிரி அர்த்தம் புரியாத புஷ்டிக் குறைவு ஏற்படாமலே வார்த்தையைச் செட்டாக ப்ரயோஜனப் படுத்தணும்.

"இதற்கு உத்தமமான உதாரணம் திருக்குறள்தான். ஒரு மநுஷ வாழ்க்கை எப்படியிருக்கணும் என்று ஸகல விஷயங்களையும் சின்னச் சின்னக் குறள்களிலே அடக்கி, புறுதகமே கையடக்கமாக 'இத்தனூண்டு' இருக்கிறாற்போல ஆச்சர்யமாக அதைத் திருவள்ளுவர் பண்ணியிருக்கிறார். அதில் 'சொல்வன்மை' என்றே ஒரு அதிகாரம், பத்துக் குறள் உண்டு. 'கொஞ்சம் வார்த்தையாலேயே அபிப்ராயத்தைத் தெரிவிக்க ஸாமர்த்யம் இல்லாத அசடுதான் நிறைய

@Page 26

வார்த்தை போட்டுப் பேசுகிறது' என்றுகூட அதில் ஒரு குறள் உண்டு. **'சில சொல்லல் தேற்றாதவனே (தெரியாதவனே) பல சொல்லல் பண்ணுகிறவன்'** என்று சொல்லியிருப்பார்.

"செல்வம்தான் 'செல்லம்'னும் ஆனது. செல்வத்துக்கு உயிர் இருந்து அதை ரொம்ப ப்ரியமாக, வாஞ்சையாக வைத்துக் கொண்டால் அது 'செல்லம்'! 'செல்....லம்' என்று குழந்தையை எப்படிக் கீழே விடாமல் கெட்டியாக அணைத்துப் பிடித்து வைத்துக் கொள்கிறோம்? அந்த மாதிரி வார்த்தையைச் செல்லமாகக் கட்டி காபந்து பண்ணணும். அதுதான் 'சொற் செல்வம்' அந்தச் 'செல்ல' அருமை தெரிந்து அளவாகப் பேசுகிறவர்தான் 'சொல்லின் செல்வர்'.

"என்னைப் போய் 'என்னமோ' சொல்லி ஸ்தோத்ரம் பண்ணுகிறாயே.....!"

பாருங்கள் அடக்கப்பண்பை! 'சொல்லின் செல்வர் என்று தம்மை அடியார் புகழ்ந்து கூறிய சொற்றொடரை மறுதலிப்பதற்காகக்கூடத் திருப்பிச் சொல்ல இயலாமல், 'என்னமோ' ஆக்கிவிட்ட அடக்கப் பண்பை! பெரியவாளின் அனந்த மதுரங்களில் ஒன்று இவ் அடக்கப் பண்பு.

"...நான் ஒரே 'வள வள'! 'சுருங்கக் கூறி விளங்க வைக்கிற' கலை எனக்கு அடியோடு வராது! 'மௌனம்' என்று உட்கார்ந்து கொண்டால் சில ஸமயம் அது பாட்டுக்கு அப்படியே நீட்டிக் கொண்டு போய்விடுகிறேன்! 'Break பண்ணமாட்டாரா, break பண்ணமாட்டாரா?" என்று நீங்களெல்லாம் தவித்துக் கொண்டு நினைக்கிறீர்கள். Break பண்ணிவிட்டாலோ சேர்த்துவைத்து அஹோராத்ரம்

*குறள் 649 : 'பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சில சொல்லல் தேற்றா தவர்'.

@Page 27

(பகல்-இரவு முழுதும்) பேச ஆரம்பித்துவிடுகிறேன்! 'மௌனமே தேவலை' என்று நினைப்பீர்களோ என்னமோ? ஆனால் மரியாதை ஸ்தானமாயிற்றே! 'மௌனம் போதும்' என்கிற மாதிரி 'பேசினது போதும்' என்று கேட்டுக் கொள்ள முடியுமா?"

ஒரே சிரிப்பாகச் சிரிக்கிறார்.

"செல்வம் மாதிரி சொல்லைப் பொத்திப் பொத்தி வைத்துக் கொண்டு உபயோகப்படுத்துகிறதற்கும் எனக்கும் ரொம்...ப தூரம்! இன்னொரு அர்த்தத்தில் வேணுமானால் நான் சொல்லைக் கையாள்கிறதைச் செல்வத்தோடு சம்பந்தப்படுத்திச் சொல்லலாம். என்ன அர்த்தமென்றால், 'காசு கையில் கொஞ்சங்கூடத் தங்கி நிற்காமல் அதுபாட்டுக்குட்ச செலவழிந்து கொண்டேயிருக்கும், அதாவது நின்ற இடத்தில் நிற்காமல், செல்வோம், செல்வோம்!' என்று ஓடிக் கொண்டேயிருக்கும். அதனால்தான் அதற்குப் பேரே 'செல்வம்' என்று வந்துவிட்டது' என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஆசார்யாள்கூட 'லக்ஷ்மீ–தோய–தரங்க–பங்க–சபலா' என்று, அதாவது, ஸமுத்ரத்தில் அலை நின்ற இடத்தில் நிற்காமல் ஓரே சலனமாக ஓடி ரசிக்கிற மாதிரிதான் செல்வமும் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த அர்த்தத்திலேதான் வார்த்தையைக் கணக்கு வழக்கில்லாமல் செலவழித்துச் செல்வமாக்கிக் கொண்டிருக்கிறேன்!..."

பெரியவாளா 'வள வள'? அவர் எத்தனை விஸ்தாரமாய் சுற்றி வளைத்து பேசினாலும் அத்தனையும் அர்த்தம் செறிந்ததுதான், ஸ்வாரஸ்யம் சொரிவதுதான்! அத்தனையும் 'வள'மை மிக்கது, நம்மை அறிவிலும் இதயத்திலும் 'வளர' வைப்பது என்பதால் வேண்டுமாயின் 'வள வள' எனலாம்!

*'சிவ அபராத க்ஷமாபன ஸ்தோத்ரம்'

@Page 28

அறிவு போதாதவர்களும் மறதி மிக்கவர்களுமான நாமெல்லாருங்கூட விஷயங்களை நன்கு புரிந்து கொண்டு என்றும் மறவாதபடி அறிவில், இதயத்தில் ஆழமாகப் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருணையிலேயே அவர் தமது 'சுருங்கச் சொல்லி விளக்க வைக்கும்' திறனைத் தியாகம் செய்து ஒரே விஷயத்தைப் பல விதங்களில் திரும்பத் திரும்பச் சொல்லி விளக்கியது. புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் மிக்கவர்களிடம் அவர் ரத்னச் சுருக்கமாகக் கூறும் சுடர் வாசகங்கள் உண்டே! வழக்கமான உரையாடல்களிலும் பொது உபந்நியாஸங்களின் போதுங்கூட அவ்வப்போது அப்படிப்பட்ட வாசகங்கள் உதிர்வதுண்டு. ஒரு மின்னல் கண நேரத்தில் ககன மண்டலம் முழுவதையும் காட்டிக் கொடுப்பது போலவாக்கும் ஒருசில வாசகங்களில் வானளவான பொருளைக் காட்டி விடுவார்! அந்த வகையான மதுரத்திற்கும் எடுத்துக்காட்டுகள் இங்கு அளிக்கும் படையலில்

காண்பீர்கள்.

இப்போது 'சொல்லின் செல்வ'னுக்குச் செல்வோம். 'கறந்த பால் கறந்தபடி' அச்சொற் செல்வத்தை, மதுரத்தை ஸ்ரீசரணரின் பேச்சு மொழியமுதாகவே பருகுவோம்.

அடியிலிருந்து, தொடங்குவதுதானே முறை? 'அடி' குறித்து கூறியே அதை அடிகள் ஆரம்பித்தார்.

3

'அடி ஒதவற மாதிரி அண்ணன் தம்பி ஒதவமாட்டா'னு பழமொழி இருக்கோல்லியோ? அதுக்குப் பொதுவா எல்லாரும் பண்ணிக்கற அர்த்தம் (சிரித்தவாறு) எல்லாருக்குமே தெரிஞ்சதுதான்! ஆனா அது ஜனங்கள் எல்லாரையும் 'அடி ஒதை'னு கிளப்பிடவிடற வார்த்தை

@Page 29

யில்லே! ஜனங்களை ஹிம்ஸையில கௌறிவிட்டு ரத்தக்களரியாக்கற வார்த்தையில்லே! எல்லா ஜனங்களையும் உத்தேசிக்காம, கொழந்தைகளை மட்டுமே உத்தேசிச்சுதான் இப்படியொரு வாக்கியம், பழமொழி, உண்டாயிருக்கு.

"பழமொழின்னா பழங்காலத்திலிருந்து வம்ச பரம்பரையா வந்துண்டிருக்கற வாக்யங்கள். அர்த்தமுள்ள நீதி வாக்யங்கள். அது ஒண்ணு, மநுஷ நேச்சர் எப்படியிருக்குன்னு படம் பிடிச்சுக் காட்றதாயிருக்கும். இல்லாட்டா எப்படி இருக்கணும்னு ஆணி அறைஞ்சாப்பல சொல்றதா இருக்கும். எதுவா இருந்தாலும், நீதிங்கறதால ஜீகூஷீஷீஊணீவீஸீ–ஆ இல்லாம, ரஸமா, ஸ்வாரஸ்யமா இருக்கும். அதோட மனஸை வசீகரிக்கற ஸ்வாரஸ்ய ரஸமும் கொண்ட பழம் மாதிரியான மொழி–ன்னும் ஒரு அர்த்தம் சொல்லலாம்!

" 'அடி ஒதவறது மாதிரி'–ன்னு பழமொழி இருக்கே, அது கொழந்தைகளை உத்தேசிச்சு ஏற்பட்ட வாக்யந்தான். அப்படின்னா, கொழந்..தைகளை, பாவம், போட்டு அடிச்சு ஹிம்ஸிக்கணும்னா அர்த்தம்? இப்படியா ஒரு நீதி போதனை? அஸுரநீதிங்கற அநீதியான்னா இருக்கு?..."

ஸ்ரீசரணர் 'கொழந்...தைகளை' என்றதன் குழைவு, 'பாவம்' என்றதன் பரிதாப பாவம்! எல்லாமே மதுரம்! இவை மட்டுந்தானா மதுரம்? நன்றாக அடிபட்டுச் சாய்ந்த

ஒரு குழந்தையின் தாய் வயிறு குமுறிக் கனல்வதுபோல 'இதுவா நீதி? அஸுரநீதியா?' என்று சீறிய 'கார'த்திலுங்கூட மாதுர்யந்தான்!

கணத்தில் குரல் சந்தனமாகத் தணிய, தொடர்கிறார். ரஸப்பிண்ட கவியான பெரியவாள். " அதில்லை அர்த்தம். பொதுக் கொள்கை கொழந்தைகளைப் பரம அன்போடு செல்லமா, கொஞ்சிக் கொஞ்சி வளக்கணும்கிறதுதான். 'மக்கட் செல்வம்'னே சொல்றது. திருவள்ளுவர்

@Page 30

கொழந்தைகள் அருமையைப் பத்தியே ரொம்ப அருமையாப் பத்துக் குறள் பண்ணியிருக்கார். அதுக்கு 'மக்கட் பேறு'–ன்னு தலைப்பு. செல்வத்திலேயே ரொம்ப ஒசந்த, தெய்வ ப்ரஸாதனமான செல்வந்தான் 'பேறு', 'பாக்யம்'னு ஸம்ஸ்ருதத்தில சொல்றது. 'பாக்யம் அடைந்தான்' என்கிறதைப் 'பேறு பெற்றான்' என்கிறது. அப்படிப்பட்ட பாக்யமாக, 'புத்ர பாக்யம்' –னே சொல்கிறதற்கேற்கக் கொழந்தைகளை நடத்தணும்கிறதே பொதுக் கொள்கை. இருந்தாலும் அதுக்காக எப்பப் பார்த்தாலும் செல்லம் குடுக்கறதுன்னே வெச்சுண்டா என்ன ஆகும்? என்ன ஆறது? 'செல்லங் குடுத்துக் குட்டிச் சுவராக்கியாச்சு'ன்னு அடிக்கடி ஒண்ணு கேக்கறமே, அப்படித்தான் ஆகும்! அதுக்காகத்தான்... அடம், பிடிவாதம், சொன்ன பேச்சு கேக்கறதில்லே, படிப்புல கவனமாயிருக்கிறதில்லே, செய்ய வேண்டியதுகளைச் செய்யாம எப்பப் பார்த்தாலும் வெளையாட்டு, சுத்தல் கூச்சல் இத்யாதி இல்லையா? அந்த மாதிரி ஒரு கொழந்தை போகாம இருக்கறதுக்காகத்தான் அந்த கொழந்தையோட நல்லதையே நினைச்சுத்தான், சமயம் ஏற்படறச்சே – அது முக்யம், எப்பவும் இல்லை, அவசியம் நேர்றச்சே (நேருகிற போது) – அதை ரெண்டு தட்டு தட்டணும்னு எடுத்து சொல்லி, இப்படிப் பழமொழியா ஏற்பட்டிருக்கு. இங்க்லீஷ்லயும் இதே அபிப்ராயத்தை 'Spare the rod and spoil the child' னு சொல்றா. (சிரித்து) பெரப்பம்பழ ப்ரஸாதமே தரப்படாது, தண்ட ப்ரயோகமே இல்லை–னா (மேலும் சிரித்து) கொழந்தையும் தண்டமாத்தான் ஆகும்–னு அர்த்தம்! 'குட்டிச்சுவர் ஆக்கிடு' னு நாம சொல்றதைத்தான் 'Spoil the child'னு அவா சொல்றா.

"இதுவுங்கூட அந்தப் பழமொழிக்கு – 'அடி ஒதவற மாதிரி அண்ணன் தம்பி ஒதவமாட்டா' ங்கற வசனத்துக்கு

@Page 31

– மேலோட பாத்துப் பண்ற அர்த்தந்தான்! 'ஸுபர் ஃபீஷியல்'–ங்கிறாளே அது. எல்லா

ஜனங்களையும் அடிதடியில் தூண்டிவிடற பழமொழின்னு பண்ணிக்கிற அர்த்தம் ரொம்ப ஸுபர்ஃபீஷியல். கொழந்தைகளுக்காகச் சொன்னதுங்ககிறது அதைவிட உள்ளே போற அர்த்தம். ஆனா அதுவும் முழு ஆழமும் போய், புரிஞ்சுண்டு பண்ணிக்கற அர்த்தமில்லே!

" 'ஆழ்பொருள்'–னே சொல்கிறது. அப்படி deep-ஆப் போய்ப் பார்த்தா, அந்தப் பழமொழிக்கு அர்த்தம் முழுக்கவே வேறே! ரொம்ப ஒசந்த ஒரு தத்துவத்தைத் தெரிவிக்கறதா அது இருக்கும். ஸித்தர்கள் பாடல்ல வெளியர்த்தத்துக்குக் கொஞ்சங்கூட ஸம்பந்தமில்லாம உள்ளர்த்தம் இருக்கற மாதிரி!

" என்ன அது ?"

சிறிய போது மௌனம் சாதிக்கிறார். அயனான நாடகாசிரியர்தான்! ஸமயத்தில் 'ஸஸ்பென்ஸ்' வைத்து விடுவார்! ச்ரோதாக்களின் ஆவலைத் தூண்டிவிட வேண்டாமா ? பசிக்க வைத்துச் சோறிட்டால்தானே உடலில் நன்றாக ஒட்டும் ? ஆர்வப் பசிக்குப்பின் அறிவுச் சோறு போட்டால்தானே அது நமது மறதி மிக்க மூறையிலும் ஜீர்ணமாகி ஊட்டச் சத்தாகத் தங்கும் ?

சிறிய மௌனத்துக்குப் பிறகு மீளவும் தொடங்குகிறார். ஆனால் நமது பழமொழி ஸஸ்பென்ட் ஆனது ஸஸ்பென்டாகவே இருக்கிறது! ஸித்தர் பாடலில் உதாரணம் காட்டப் போய்விடுகிறார்! ஆனால் நாம் அப்படி வாசகர்களை ஸஸ்பென்ஸில் நீட்டிக்காமல், ஸித்தர் விஷயம் முடிந்தபின் அவர் எடுத்துக் கொண்ட பழமொழி விளக்கத்திற்கே விரைகிறோம்.

ஓ! வாசகர்கள் இப்போது ஸித்தர் பாடலுதாரணம் என்னவோ என்ற ஸஸ்பென்ஸில் 'தொங்க'க் கூடுமோ ? சரி,

@Page 32

பின்னர் எப்போதேனும் வேண்டுமாயின் அதைப் பார்த்துக் கொள்ளலாம்!

" 'அடி ஒதவற' பழமொழிக்குத் தத்வார்த்தம் என்னன்னா, அடி–ங்கறது இங்கே திருவடி, திரு அடி. ஈச்வரனுடைய சரணாவிந்தத்தை சொல்ற வார்த்தை. இங்கே 'அடி'ன்னு சொன்னது கையை வீசிப் 'பளார்'னு போடறதில்லை! Foot-ruleஆல வாத்யார் குடுக்கற 'பூசை'யில்லே!

"இப்ப நான் சொன்னதுல ஒரு வேடிக்கை, ஒரு ச்லேஷை(சிலேடை)! சொன்னவிட்டுத்தான் எனக்கே தெரியறது. Foot-ruleனு ஒரு அடி நீள ஸ்கேலைச் சொல்றோமே, அங்கே 'foot'ங்கறது நீட்டலளவையில் 'அடி'ங்கற பன்னெண்டு இஞ்ச் கொண்ட அளவு கோல். இப்ப எல்லாம் 'டெஸிமல்' ஆயிடுத்து. மீட்டர், ஸென்டி மீட்டர்தான் தெரியுமோ, என்னமோ...? வாத்யார் foot-ruleஆல அடிக்கறார்னா அப்ப அடியாலேயே அடிக்கறார். பாதமும் அடிதான்! ஸம்ஸ்க்ருத 'பாதம்(, தான் க்ரீக்–ல 'படஸ்'னு ஆயி, திரிஞ்சு திரிஞ்சு (சிரித்தவாறு) இந்தியாவுலேந்து இங்க்லான்ட வரை அலைஞ்சு திரிஞ்சு, இங்க்லீஷ்ல foot ஆயிடுத்து!

"பன்னெண்டு இஞ்சு ஒரு அடின்னு வெச்சிருக்காளே, அது மநுஷப் பாத நீளத்தை வெச்சுத்தான்–ங்கறா. ஆனா அத்தனை நீளமா மநுஷாளுக்குப் பாதம் இருக்குமா என்ன? என்னதான் ஒசரம்–பெருமானா இருக்கறவாளானாலும், பத்து இஞ்சுக்குமேலே பாதம் இருக்காதுன்னு நெனைக்கிறேன்."

ஸ்ரீசரணரின் திவ்ய சரணாரவிந்தமோ மகளிரின், அம்பாளின் சரணம் போல் சிறியது. ஆஞ்ஜநேரயரைச் 'சிறிய திருவடி' என்றே சொல்வார்கள். நம்முடைய இந்த ஆஞ்ஜறேயரும் சிறிய திருவடியினர்தான்! திருவடிவே

@Page 33

சிறுத்த அந்தப் பெரியரிலும் பெரியோனுக்குச் சின்னச் சின்ன, மெத்து மெத்துத் திருவடி.

"ஒருவேளை, பூர்வயுகங்களில மநுஷ்யாள் இப்ப இருக்கறதைக் காட்டிலும் ரொம்ப ஒசரமா, பன மர– தென்ன மர ஒசரம் இருந்தாப் புராணங்களில படிக்கறமே, அப்பவே இந்த 'foot' ங்கற வார்த்தி வந்திருக்குமோ? அப்படிச் சொன்னா வெள்ளைகாரா ஒப்புத்துக்க மாட்டா. அவா ஆராய்ச்சிப்படியும் ஆதிகாலத்துல, stone Ageங்கற கற்காலத்துல இருந்த மநுஷா நம்மைவிட ரொம்பப் பெரிய, ஒசரமான சரீரிகளாத்தான் இருந்தா, ஆனாலும், அப்ப பாஷை–ன்னே ஒண்ணு ஏற்படாம, சைகையாலேயும், 'காச்மூச்' சப்தத்தாலேயுமே எண்ணங்களைத் தெரிவிச்சுண்டா–ங்கிறா.... அளவும் நிச்சயமா இருந்திருக்காது. ஆகக்கூடி ஏன் இப்படி (பாதத்திற்கு உள்ள foot என்ற பெயரை அளவையான அடிக்கும் பெயராக) வெச்சிருக்கா–ன்னு எனக்குப் புரியலே. புத்திமான்களாயிருக்கப்பட்டவா ஆலோசிச்சாக் கண்டு பிடிக்கலாம்.."

ஆஞ்சநேயர் போலவே 'புத்தி மதாம் வரிஷ்ட'ரான பெரியவாள் அவர் போலவே அடக்கத்துடன் கூறிய மொழி!

"இஞ்ச்சை நாம் அங்குலம்—கிறோம். 'அங்குலம்'—கிறதுக்கு ஸரியான 'டெஃபனிஷன்'படி, அது 'விதஸ்தி'யில் பன்னிரண்டில் ஒரு பாகம். அதாவது அதுமாதிரி பன்னெண்டு சேர்ந்தா ஒரு 'விதஸ்தி' அந்த விதஸ்தியோட நீளம் என்னன்னும் இருக்கு. அதாவது அது ஒரு 'சாண்' என்கிற நீளம். இங்க்லீஷ்ல அதை span—னு சொல்லுவா. அது ஒம்பது இஞ்ச் நீளந்தான். இப்படி நாம 12 அங்குலத்தை 9 இஞ்சா அளவு படுத்தியிருக்கிறதுதான்



பாதத்தோட sizeகு ஸரியாப் பொருந்தறது. வெள்ளைக் காரா சாண் நீளம்கிறதைத் தப்பாப் புரிஞ்சுகிண்டு ஏதோ கொழறுபடி பண்ணியிருக்கா—ன்னு தோணறது.

"மநுஷ்ய தேஹத்தோட அடியில, அடிப்பாகமாப் பாதம் என்கிற அந்த அவயவம் இருக்கறதாலு 'அடி'—ன்னு பேரு. முடியற இடத்துல இருக்கறது 'முடி'. ஸரியா ஒரு சரீரத்துல நடுப் பாதி எடமா இருக்கற இடுப்புக்கு 'அரை'னு பேரு. 'அரணாக்கயிறு'ங்கறது 'அரைஞாண்கயிறு'தான். 'ஞாண்', 'நாண்' ரெண்டும் ஒண்ணுதான். 'அரை'க்குக் கீழே ஒரு சரீரத்தோட பாதி பாகம் இருக்கு. அது (leg எனும்) ரெண்டு காலாத்தானே இருக்கு ? அரை(1/2)யை ரெண்டால வகுத்தா ? கால் (1/4) தானே ? அதனாலதான் legக்குக் 'கால்'னு பேர் வெச்சிருக்கா....

"அண்ணன்—தம்பியை விட ஒதவியா இருக்கற 'அடி'யைப் பழமொழி சொல்றதே, அந்த அடி பாதந்தான். நம்ம பாதமில்லே. ஸாக்ஷாத் ஸ்வாமியோட பாதம். திருவடி, திருவடின்னே 'திரு' சேத்துச் சொல்ற ஸ்ரீகரமான (உத்தமச் செல்வத்தை அருளுவதான) பாதம். அவனைப் பிடிக்கறதுன்னா அதைப் பிடிச்சுக்கறதுதான் வழி. கெட்டியா, விடறதேயில்லைன்னு அப்படித்தான் மஹா பக்தாள்ளாம் அந்த அடியை பிடிச்சே முடிஞ்ச முடிவான மோக்ஷத்தைப் பிடிச்சா, அப்பர் ஸ்வாமிகள் ஒரு திருத்தாண்டகம் பூராவும் அதன் பெருமையையே கொட்டி உருகி உருகிப் பாடி வெச்சிருக்கார்."

"எந்த ஸ்வாமியாகட்டும், அதனோட திருவடி மஹிமையே அலாதிதான். அம்பாள், காமாக்ஷி – அவளோட திருவடி மஹிமை பத்தியே நூறு ச்லோகம்

'பாதாரவிந்த சதகம்'னு மூகர் கவித்வ சிகரமாக் கொட்டியிருக்கார்.

"எந்த ஸ்வாமினயானாலும் பாதத்துக்குத் தனி விசேஷந்தான்–னாலும் அதிலேயும் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியோட பாதத்துக்குத்தான் உச்சமான விசேஷம் சொல்றது. ஏன்னா, அவரோட தனிப் பெருமையா என்ன சொல்றோம்? 'பதித பாவனன்'கிறதுதானே? **'பதித பாவன ஸீதாராம், பதித பாவன ஸீதாராம்'**னு தானே பஜனை பண்றோம்? அப்படிப் பதிதாளைப் பாவனமாப் பண்றது எது? அவனோட ஸர்வாங்க ஸுந்தர சரீரத்துல, ஸர்வாங்க காருண்ய சரீரத்துல எந்த அவயவம்? அநத ஸௌந்தர்யத்தையும் காருண்யத்தையும் அவனோட சிரஸிலேருந்து அங்கம் அங்கமா வடிச்சுண்டு வந்து அத்தனையையும் ஒண்ணாத் தெரட்டி ரூபம் பண்ணினாப் பல இருக்கற பாதம்தானே? ஸ்ரீராம பாதம்தானே?"

வழக்கத்திற்குச் சற்றே வித்தியாசமாக, ஆவேசமாகப் பேசுகிறார். "அவதார சரீரத்துல அவன் திவ்ய சக்தியை ப்ரகாசிப்பிச்சு மொத மொதலாப் பண்ணின கார்யம் என்ன, லீலை என்ன, அநுக்ரஹம் என்ன? அஹல்யா சாப விமோசனந்தானே? அதைப் பண்ணினது? அந்தப் பாதம்தானே? அவ மஹா உத்தமிதான். ஆனா கிஞ்சித் காலம் (சிறிது நேரம்) தடுமாறிட்டா. கிஞ்சித் காலமானா என்ன? அரை ஸெகன்ட் 'எலெக்ட்ரோக்யூட்' ஆனாலும் ப்ராணனை விடவேண்டியதுதானே? அப்படி அவளோட பாதிவ்ரத்யம் (கற்பு நெறி) பங்கமாயிடுத்து....

"இந்த எடத்துல கம்பர் வால்மீகத்துக்கு வித்தியாஸமாப் பண்ணியிருக்கார். அவ மனஸுகெடவே இல்லைன்னும் அவளுடைய பதியான கௌதமரோட வேஷத்தில வந்த இந்த்ரனை நெஜமாவே பதிதான்னு நெனச்சுண்டுட்டா–ன்னும் அவர் 'நைஸ்' பண்ணி

@Page 36

எழுதியிருக்கார். உத்தமிக்கு, ரிஷிபத்னிக்கு சித்த தோஷம் ஸம்பவிச்சதா சொல்லப்படாது–ங்கற கௌரவ புத்தியிலயே அப்படி எழுதியிருக்கார்...

"இப்ப ஒரு நாப்பது, அம்பது வருஷமா (ஸ்ரீசரணர் இவ்விதம் கூறியது '70களின் முடிவில்) ரொம்ப துரத்ருஷ்ட வசமா, இந்தத் தமிழ்நாட்ல சில பேருக்கு உத்தமமான புராண கதாபாத்ரங்கள், ரிஷிகள், ப்ராம்மண ச்ரேஷ்டாள் மொதலானவாளுக்கு ரொம்பவும் விரஸமா தோஷங்கள் கல்பிச்சு எழுதறது, பேசறது, ட்ராமா போடறது,

ஸினிமா எடுக்கறதுன்னு பண்ணிப் பாத்து ப்ரசாரம் பண்றதுல ஒரு ஆசை வந்திருக்கு. இவா தமிழ், தமிழ்–னு தூக்கி வெச்சும் கொண்டாடிண்டிருக்கா. அந்தத் தமிழிலக்கியத்திலேயே 'கவிச்சக்ரவர்த்தி'ன்னே பேர் பெத்தவர். அவரோட மனோபாவம் எத்தனை ஒசத்தியா இருந்திருக்கு–ன்னு பாக்கறச்சே, அவர் வழியில வந்தவாளுக்கா இன்னிக்கு இத்தனை விபருதமாத் தோணறதுன்னு கூடுதலாவே வேதனையா இருக்கு.

"இன்னொரு விஷயமும் மனஸை ரொம்ப ஸங்கடப்படுத்தறது. மேலே சொன்ன கோஷ்டிக்காராளைச் சேராத வாள்ளயே எழுத்தாளர்கள்–னு இருக்கறதுல செபேர், நல்ல ப்ரஸித்தியோட இருக்கற ரெண்மொத்தர்கூட – ரொம்ப நல்ல கன்யா ஸ்த்ரீகளா, ஸுமங்கலிகளாத் தாங்களே ஸ்ருஷ்டி பண்ணி எழுதற கதாநாயகிகள் 'சட்'னு தவறிப் போய்ட்டா–ன்னு எழுதறதாக் கேள்விப்படறேன். 'பதிதை'ங்கறதை அப்படியே தமிழ் பண்ணி 'விழுந்தவ', 'வழுக்கி விழுந்தவ(ன்னு விஸ்தாரம் பண்றதுலேயே ஒரு அபிருசியோட (சிறப்பாக ருசித்து) எழுதறா–ன்னு கேள்விப் படறேன். 'இந்த தேசத்துல இப்படியா ?ன்னு மனஸ் தாங்கமாட்டேங்கறது ? எல்லாரும் கம்பர், கம்பர்னு

@Page 37

கொண்டாடி விழா எடுக்கறாளே ? இந்த அம்சத்துல ஏன் அவரை முன்னோடியா வெச்சுக்கப்படாது ?...

"கம்பர் மாத்தினதில இப்படி விசேஷம் இருந்தாலும், ஸத்ய வாக்குத் தவிர எதுவும் வராது–ன்னு வரம் பெத்துண்டு உள்ளது உள்ளபடி வால்மீகி மஹர்ஷி எழுதினதை மாத்தியிருக்காரே என்கிறப்போ.. ? பரம பக்தி ஹ்ருதயத்தோட எழுதின கம்பரை ஒண்ணும் சொல்லக் கூடாதுதான். சொல்லாட்டாலும் உள்ளே கொஞ்சம் அரிக்கத்தான் அரிக்கறது...

"அவர் மாத்தினதுல என்ன ஆறதுன்னா, அஹல்யைக்குக் கெட்ட பேர் போய் நல்ல பேர் வந்தாலும், (சுவைத்துச் சொல்கிறார்) ராமசந்த்ர மூர்த்திக்குன்னே இருக்கற க்யாதி விசேஷம் கொறைவு பட்டுதான் போறது! பதித பாவனன்–ங்கிற அந்தக் க்யாதி, மனஸறிஞ்சு தப்பாப் போன ஒரு ஜீவனையுங்கூட அவன் பாவனப் படுத்தமுடியும்னு நிரூபணம் ஆறச்சேதானே கொழுந்து விட்டு எரியறது ? தெரியாத்தனத்தால தப்பிப்போன ஒத்தரை இப்படிக் கடைத்தேத்தறது அவ்வளவு விசேஷமில்லைதானே ?

"அந்த மாதிரி பதித பாவனம் பண்ணினது எது? அவனோட திருவடிதான். அந்தப் பாத ஸ்பர்கத்துலதான் அஹல்யை விமோசனம் பெத்துண்டது...

"ராமனோட அபய ப்ரதிஜ்ஞை தெரிஞ்சிக்கலாம். சரணாகத ரக்ஷணத்துல அவன் ஆவேசமாப் பண்ணின ப்ரதிக்ஞை!
'எவனாகட்டும், ஒரு தடவை, ஒரே ஒரு தடவை, 'நான் ஒன்னவன், ஒன்னைச் சேந்தவன்'னு சொல்லிக் கேட்டுண்டு சரணாகதி பண்ணிட்டா போறும். அவனுக்கு எவராலும், எதனாலும் பயம் – கெடுதி – வராம நான் அபயம் குடுத்து ரக்ஷிக்கிறேன்'னு சபதமே பண்ணின சரணாகத வத்ஸலன் அவன்! அந்த மாதிரி
@Page 38

'சரணாகதி'ன்னு ஒத்தர் வந்து விழறதும் திருவடியிலதானே? அது பண்ற இந்தப் பரமோபகாரம், பெரிசிலெல்லாம் பெரிய ஒதவி எந்த அண்ணா, எந்தத் தம்பி பண்ண முடியும்?

"ஸாதாரணமா ஸஹோதராள்தான் ஸஹாயம் வேணும்னா ஓடினே ஓடி வந்து மனஸாரப் பண்றவா. ஒரே ரத்தமோல்லிலயோ? அது அப்படி இழுத்து வெச்சுப் பண்ணுவிக்கும். அதனால நமக்கு லோகரீதியாத் தெரியறதுல ஒதவி பண்றதுக்கு top ஸஹோதராள்தான். அடி ஒதவற மாதிரி அண்ணன் தம்புயும் மாட்டா–ன்னு அதனாலதான் பழமொழி வந்தது. ஆனா தெய்வ ஸஹாயமே வரபோதோ அதுக்கு முன்னாடி வேறே யார் பண்ற ஸஹாயமும் கொசு மாத்ரந்தான். விதியையே அழிக்கற ஒதவி, நித்யாநந்தமான மோக்ஷபதம் குடுக்கற அந்த ஒதவிக்கு வேறே எந்த ஒதவிதான் ஆயிரத்துல ஒரு அம்சமாவது ஈடாக முடியும்? இந்த ஒதவி அந்த தெய்வத்தோட பாதத்தைப் பிடிச்சாத்தான் கெடைக்கறது அந்தப் பாதமேதான் ஒதவி குடுக்கறது. அப்படி ஒரு 'பவர்' அதுக்கு!

"ராமனை எடுத்துக்கிண்டா, அவன் கதைலதான் அண்ணன்–தம்பின்னு சொன்னது ரொம்ப விசேஷார்த்தத்தோட ப்ரகாசிக்கறது. அது முழுக்க ப்ராத்ரு வாத்ஸல்யம், இல்லாட்டா ஸஹாதராளுக்குள்ளே பரம வைரம்னு இருக்கிற பாத்ரங்களை வெச்சு உருவான இதிஹாஸம்.

"ஸ்ரீராமசந்திர மூர்த்தி எப்பவும் தம்பி லக்ஷ்மண ஸஹிதந்தானே?

"எந்த ஸ்வாமியானாலும் ஸதாவும் அவரோட சக்தியான ஸதியும், ப்ரதம கிங்கரரும் கூட இருக்கறதாவே பூஜிக்கறது, த்யானிக்கறது, ஆலய பிம்பமும் அப்படித்தான். பரமேச்வரன்–னா அம்பாள், நந்தி, மஹாவிஷ்ணு–ன்னா

@Page 39

மஹாலக்ஷ்மி, கருடன் இப்படி கிங்கரல் இல்லாமயும் செலது (சில) உண்டு. ஸந்நியாஸி, ப்ரஹ்மசாரி ஸ்வாமிகளுக்கு ஸதி இருக்காது. 'ஜெனரல் ரூல்' ஸதி, கிங்கராக்ரேஸர் (கிங்கரருள் முதன்மை பெற்றவர்) என்கிறதே. அநேரகமா அந்தக் கிங்கரரே வாஹனமாக இருப்பதுமுண்டு. பக்தாள் கூப்பிட்ட கொரலுக்கு ஓ..டி. வரணும்னே வாஹனத்தைக் கூடவே வெச்சுக்கறது!

"ராமர்தான் ஸதி ஸீதை, ப்ரதம கிங்கரர் ஹநுமார் மாத்திரமில்லாம, எப்பவும் தம்பியையும் கூடவே வெச்சுக்கிண்டிருக்கறவர். **'ஸதா ஜானகீ லக்ஷ்மணோ பேதம்'**னு ஆசார்யாள் 'ராம புஜங்க'த்துல குறிப்பிட்டுச் சொல்லியிருக்கார்.

"வால்மீகி மஹர்ஷி ராம–ராவண யுத்தாரம்பத்துல (போர் தொடக்கத்தில்) விசித்ரமா ஒரு உபமானம் குடுத்திருக்கார்.

"ஸ்ரீராமர் மஹாவிஷ்ணு, அவர்தான் மஹா விஷ்ணு. மத்த மூணு ஸஹோதராளும் விஷ்ணு சம்பந்தப்பட்ட அவதாரங்க்ள். லக்ஷ்மணன் ஆதிசேஷன், பரத–சத்ருக்னர் சங்க–சக்ரங்கள்.. ஆர்டரை மாத்தி பரதன் சக்ரம், சத்ருக்னன் சங்கம்–னு பொதுவா சொல்லிண்டிருக்கோம். ஆனா வால்மீகத்தின்படி அப்படியில்லை. இந்த நாலு பேரும் அவாவா தாயார்மார் ஒரே திவ்ய பாயஸத்தைச் சாப்பிட்டு, அதன் வழியா உத்பதவிச்சவாதானே ? அதனால, அந்த பாயத்துல அந்தத் தாயார்மார்களுக்கு எப்படிப் பங்கு போட்டு தசரதர் குடுத்தாரோ அதே ratioவுல (விகிதத்துல) அந்த நாலு பேருமே மஹாவிஷ்ணுவோட பூர்ண சக்தியலே ஒவ்வொரு பங்கா இருந்தவா–ன்னே

*யுத்த காண்டம் 100.12.

@Page 40

வால்மீகி மஹர்ஷி சொல்லியிருக்கார், தசரதர் பாயஸத்துல பேர்பாதி கௌஸல்யைக்குக் கொடுத்தார். அதுக்கேற்க ஸ்ரீராம ஜனனகட்டத்துல அவரை 'விஷ்ணோரர்த்தம்' – விஷ்ணு சக்தில பாதி பாகம் கொண்டவர்–னு சொல்லியிருக்கு. பாக்கி பாதியிலே பாதி, அதாவது பாயஸத்துல கால் பாகம் ஸுமித்ரைக்கு தசரதர் குடுத்தார். அதலேருந்து உத்பவிச்ச லக்ஷ்மணர் (சிரித்து) 'கால் விஷ்ணு!' இன்னமும் கால்வாசிப் பாணம் பாக்கியிருக்கோல்லியோ ? அதை ரெண்டு அரைக்கால் பாகமாப்

பண்ணி, ஒண்ணைக் கைகேயிக்கும், மத்ததை மறுபடி ஸுமித்ரைக்குமே தசரதர் குடுத்தார். அதனால, அவா ரெண்டு பேரும் தலா 'அரைக்கால் விஷ்ணு'!

"தசரதர் பத்னிகளுக்குப் பாயஸம் கொடுத்த கட்டத்துல வால்மீகி எப்படிச் சொல்லியிருக்காரோ அந்த 'பேஸிஸ்'லயே இப்ப நான் சொன்னது. ஸ்ரீ ராமாவதாரத்தையும் மத்த மூணு ஸஹோதராள் அவதாரத்தையும் அவர் சொல்ற கட்டத்துலயோ, ராமாவதாரம் ஆனவொடனேயே அடுத்ததா பரதாவதாரந்தான் ராமருக்கு புநர்வஸு, பரதன் புஷ்யம், புநர்பூசம்–பூசம்னு நாம சொல்றது. அது மாத்ரமில்லாம பரதன் விஷ்ணுவோட கால் பாகம் – 'ஸாக்ஷாத் விஷ்ணோ சதுர்பாக, ன்னும் சொல்றார். அரைக்கால் பாகம்–னு இல்லே. அதுக்கும் அடுத்த நக்ஷத்ரமான ஆயில்யத்துல லக்ஷ்மண–சத்ருக்னாள் ரெண்டு பேரும் அவதாரம்னு ரெண்டு பேருமா சேந்து விஷ்ணுவோட அரை பாகம், அதாவது ஒவ்வொத்தரும் கால் பாகம்னு சொல்றார்.

1. பால காண்டம் 16
2. பால காண்டம் 18

@Page 41

"இந்த எடத்துல லக்ஷ்மணனுக்கு ஆதிசேஷத்வத்தையும் வால்மீகி 'ஹின்ட்' பண்ணாமயில்லே! லக்ஷ்மணன் ஆயில்ய நக்ஷத்ரத்துல அவதாரம் பண்ணினவர். 'ஆச்லேஷம்'கிறதுதான் 'ஆயில்யம்'னு திரிஞ்சிருக்கு. மஹர்ஷி அந்த அவதாரத்தைச் சொல்றச்சே 'ஆச்லேஷம்'னு சொல்லாம, அதுக்கே இருக்கற இன்னொரு பேரான 'ஸார்ப்பம்'னு சொல்லியிருக்கார். 'ஸார்ப்பம்'னா 'ஸர்ப்ப ஸம்பந்தமானது'. இது ஆதிசேஷ ஸம்பந்தம் காட்டறதுதானே ?...

"இப்படி லக்ஷ்மணரை பாயஸ விநியோகத்தின் போது கால்விஷ்ணுவாக் காட்டற அதே மஹர்ஷி யுத்த காண்டத்துல என்ன விசித்ரம் பண்ணியிருக்கார்னா, லக்ஷ்மண ஸமேதராக ராமர் ராவணனோட யுத்தம் செய் வந்தது இந்த்ரன் விஷ்ணுவோட கூட வந்த மாதிரி இருந்தது – விஷ்ணுநா வாஸவம் யதா – ன்னு சொல்லியிருக்கார். இங்கே விஷ்ணு! ராமர் யாருக்கு comparisonனா இந்த்ரனுக்கு! இந்த்ரனுக்குத்தான் 'வாஸவன்'னு பேர்.

"ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு இந்த்ரனோட அப்பா அம்மாவான கச்யப–அதிதிகளுக்குப் புத்ரரா வாமனாவதாரம் பண்ணினார். அந்த அவதாரம் இந்த்னுக்கு

தேவலோகத்தை மஹாபலி கிட்டேயிருந்து மீட்டுக் குடுக்கவே ஏற்பட்டது. அப்ப, இந்த்ரனுக்கு வயஸிலே ரொம்ப சின்ன தம்பியா மஹாவிஷ்ணு வந்தார். அப்ப வாமன ப்ரம்மசாரி இந்த்ர அண்ணாகிட்ட ஒட்டிக்கிண்டு இருந்தார் போலேயிருக்கு. அதனால, இந்த்ரனோட சேந்தே இருக்கறவர்'ங்கற அர்த்தத்துல அவருக்கு 'உபேந்த்ரன்'னே ஒரு பேர் ஏற்பட்டுடுத்து.

" 'உப–ன்னா 'sub'! முக்யமான ஒண்ணுக்கு அடுத்த ரெண்டாவது ஸ்தானம். (அழகிய முறுவலுடன்) கீழ்

@Page 42

ஸ்தானம்–னு சொல்ல வாய் வரமாட்டேங்கறது! (பகவத் அவதாரத்திடந்தான் ஸ்ரீ சரணருக்கு எத்தனை விநய பக்தி!) கலெட்ர் – ஸப் கலெக்டர்; எடிடர் – ஸப் எடிடர் மாதிரி இந்த்ரன் – உபேந்த்ரன். எந்த அவதாரத்திலேதான் பகவான் த்பிவிக்ரமனா த்ரிலோகமும் வ்யாபிச்ச ப்ரம்மாண்ட சரீரத்தைக் காட்டினானோ, அதிலேயேதான் அப்படிக் காட்டறதுக்கு மொத நிமிஷம் வரை சின்னதுலயும் சின்ன ரூபமா, குள்ளமா, குறள் வடிவாயும் இருந்தான். ரூபத்துலஇப்படி இருந்தது மாத்ரமில்லாம, குணத்துலயும் அடக்கம்னா அப்படியொரு அடக்கம்–னு எந்த இந்த்ரனுக்கு தான்தான் ராஜ்யத்தை மீட்டுத் தந்து தேவராஜாவா ஆக்கினானோ அவனுக்கே 'ஸப்'பா இருந்தான்! அவனாலேதான் அத்தனை பெரிசா ஆகமுடியும்கிற மாதிரி அத்தனை சிறுசாவும் ஆகமுடியும்னு காட்டின அதிசயமான அவதாரம்!"

சொன்னவரும் மஹா பெரிசு–மஹா சிறுசுகளாக இருந்தவர்தாம்!

"அண்ணாஸ்வாமி–ன்னு பேர் வெச்சுக்கறாப்பலேயே 'தம்பி ஸ்வாமி'ன்னும் பேர் உண்டு. 'தம்பிஸ்வாமி'ன்னும் சொல்றது. இங்கே தெலுங்கா ஆட்சி, மத்த துறைகளிலேயும் அவா தொடர்பு ரொம்ப காலமா இருந்திருக்கறதால அநேகத் தெலுங்கு வார்த்தைகளும் தமிழ்ல கலந்துடுத்து – பலது கொஞ்சம் ரூப பேதம், 'உருமாற்றம்' என்பதோடு! தெலுங்குல 'தம்முடு'ன்னா தம்பி அதை நாம 'தம்புடு'ன்னு சொல்றதுண்டு. அவா 'நம்மி'–ங்கறதை நாம 'நம்பி'ங்கறோமோல்லியோ ? அந்த ரீதியில இருக்கலாம். அந்தத் 'தம்புடு' குறுகி 'தம்பு' ஆயி 'தம்புஸ்வாமி'. அப்படிச் சொன்னது மஹா பெரியவனாய் ஓங்கி உலகளந்து அதுல (தாம் அளந்த அவ்வுலகுகளில்) ஒரு உலகை அண்ணாவுக்கு மீட்டுக் குடுத்த ரக்ஷகனாகவும் ஓங்கி ஒசந்து நின்னு,

@Page 43

ஆனாலும் ரூபத்துல குள்ளமா, குணத்துலயும் எளிமையா, சின்...னவனா அந்த அண்ணாவுக்கு 'ஸப்'பா இருந்து காட்டின வாமன மூர்த்தையைத்தானோன்னு தோண்றது.

"இல்லாட்டா, லக்ஷ்மணர்னும் வெச்சுக்கலாம். ராமர் அண்ணாஸ்வாமி, கூடவே இருக்கற லக்ஷ்மணர் தம்பிஸ்வாமி. 'ராமஸ்வாமி' மாதிரியே லக்ஷ்மணஸ்வாமி' –ன்னும் பேர்கூட வெச்சுக்கறானே! ஆர்க்காட்டு முதலியார் அண்ணா–தம்பிகள் (ஏ. ராமஸ்வாமி முதலியார் – ஏ.லக்ஷ்மணஸ்வாமி முதலியார்) 'ஃபேமஸா' இல்லையா ?

"பூர்வாவதாரத்துக்கே திரும்பலாம்.

"அந்த வாமத் தம்பி என்ன ஒதவி பண்ணி அண்ணாவுக்கு தேவராஜ்யத்தை மீட்டுத் தந்தார் ? அவரோட அடி – திருவடியே – தான் மூணு அடி அளந்து, அந்த மீட்சியைப் பண்ணிடுத்து! தம்பியோட ஒதவி அந்தத் தம்பியுடைய அடியினாலேயே – அடிபண்ணின கார்யத்தாலயே – கெடச்சுது!

"ராமாயணத்துல லக்ஷ்மணரை ஒசத்திக் காட்டணும்னே அதை இங்கே வால்மீகி ஞாபகப்படுத்தி அவர் விஷ்ணு, ராமர் இந்த்ரன்னு கம்பேர் பண்ணியிருக்கார். ஏன்னா..

" ராம–ராவண யுத்தத்துக்கு செத்த (சற்று) முந்திதான் லக்ஷ்மணர் ராவணகுமாரனான இந்த்ரஜித்தை ஜயிச்சிருந்தார். மேகநாதன்னு இயற்பெயர் இருந்த ராவணகுமாரன் இந்த்ரனையே ஜயிச்சுதான் இந்த்ரஜித்னு பேர் பெத்தான். பூர்வத்துல மஹாபலி இந்த்ரனை ஜயிச்சான். அந்த மஹாபலியை வாமனர் ஜயிச்சார். ஆனாலும் அது சாதுர்யத்துனால ஜயிச்சதே தவிரச் சண்டை போட்டு இல்லே. லக்ஷ்மணர்தான் இந்த்ரனை ஜயிச்ச ஒரு மஹாவீரனோட அதைவிட வீரமா நேருக்கு

@Page 44

நேர் யுத்தம் செஞ்சு ஜயிச்சவர். அதுவும் பரம அடக்கத்தோட, "எங்கண்ணா ராமன் தர்மாத்மா, ஸ்த்யஸந்தன் – னா, ஆண்மையிலே ஈடில்லாதவரா இருக்கிறவர்னா ஹேபாணமே! நீ ராவணகுமாரனை வதம் பண்ணு"–ன்னு சொல்லி அம்பு விட்டே ஜயிச்சார் – ப்ரஸித்தமான ச்லோகமாக சொல்றது". அந்த மஹாவீர்யம், மஹாவிநயம் ரெண்டுக்காகவும் அவரையே இங்கே மஹாவிஷ்ணுவாக்கி, ஸாக்ஷாத் ராமனை

இந்த்ரனாக்கினா அது அந்த ராமருக்கே ப்ரீதியா இருக்கும்னுதான் வால்மீகி அப்படிப் பண்ணினார்.

"ராமரோட கூடவே சில்ப-சித்ரங்கள்ல இருக்கற மூணு பேர்ல ஸீதையை ராமர் கல்யாணம் பண்ணிண்டு ஸீதா ஸமேதரானது அவருக்குப் பதினாறு வயஸான அப்பறந்தான். ஹநுமத் ஸமேதரானதோ அதுக்கும் ரொம்பக் காலம் பிற்பாடு. லக்ஷ்மணர்தான் ஸ்ரீராமர் அவதரிச்சதுக்கு மூணாம் நாளே, அதாவது ஸ்ரீராம நவமிக்கு மறுநாளுக்கு மறுநாளே, அன்னிக்கு ஏகாதசியா இருந்திருக்கும், அப்ப பொறந்து, அன்னியிலேந்து ஆயுஸ்பர்யந்தம் 'ஸதா'ன்னா ஸதாவே ராமரோட இணை பிரியாம இருந்தவர். அவாளுக்குள்ளே பரஸ்பர ப்ராத்ரு வாத்ஸல்யம் அளவே சொல்லிமுடியாது! 'விண்டா விள்ளமாட்டா'ன்னுவாளே, அப்படி! அதே மாதிரி பரத–சத்ருக்னாள்! லக்ஷ்மண–சத்ருக்னாள்தான் ஒரே தாயார் வயத்துல ஒண்ணாப் பொறந்த ரெட்டைக் கொழந்தைகள். ஆனா லக்ஷ்மணர் மாத்தாந்தாய் (மாற்றாந்தாய்) புத்ரரான ராமர்கிட்ட மனமாத்தமே இல்லாம, (சிரித்து) 'மாற்றறியாத செழும் **பசும் பொன்**

*தர்மாத்மா ஸத்யஸந்தச்ச ராமோ தாசரதிர் யதி|
பௌருஷே சாப்ரதித்வந்த சரைனம் ஜஹி ராவணிம்||

(யுத்த கா.91.73)

@Page 45

**மாதிரி'** யான பரிசுத்த ப்ரேமை வெச்சிருந்தார். அதுக்கு ஈடா அவர் கிட்ட ராமரும்! அதே மாதிரி மாத்தாந்தாய் புத்ராளான பரத–சத்ருக்னாள்! இப்படி ரெண்டு ஜோடியாப் பிரிச்சாலும் நாலு பேருக்கிடையிலேயுமே பரஸ்பரம் நிரம்ப ப்ராத்ரு வாத்ஸல்யம்! ராம–பரத பரஸ்பர வாத்ஸல்யம் ரா–லக்ஷ்மண வாத்ஸல்யத்துக்கு மாத்துக்கூட கொறச்சல் இல்லே. உத்தர காண்டத்துல ராமர் சத்ருக்னனை அனுப்பி வெச்சே லவணாஸுர வதம் பண்ணுவிக்கிறார். அங்கே வெளியாகற பரஸ்பர ப்ராத்ருவாத்ஸல்யமும் இதுக்கெல்லாம் கொறச்சல் இல்லே.

"ஆனதுனால, அண்ணன்–தம்பி ஒத்தருக்கொத்தவர் ஒதவிண்டதுக்கு ராமாயணத்துக்கு ஸமதையா இன்னொரு கதை காட்ட முடியாது...

"நேர்மாறா வாலி–ஸுக்ருவாளும், ராவண–விபீஷணாளும்! அவாள்ளயும் தம்பிமார்களாயிருந்த ரெண்டு பேரையும் ராமர் தனக்கே தம்பிகளா ஸ்வீகரிச்சுண்டுட்டார்! குஹன் வேறே ஒரு தம்பி! அந்த அண்ணாக்காரர் தம்பி மயமா சேத்துண்டு போனார்!

"அண்ணாஸாமி, அண்ணாதுரை—ன்னெல்லாம் பேர் வைக்கறோமே, அது பிள்ளையார்தான்—னு மொதல்ல நெனைச்சுக்கிண்டிருந்தேன். பார்வதீ—பரமேச்வராளோட ஜ்யேஷ்ட புத்ரர், அவருக்கு அப்பறந்தான் ஸகல ஜீவராசிகளையும் அவா பெத்தது, அதனால அவரே எல்லாருகும் அண்ணாஸ்வாமி—ன்னு! அப்பறந்தான் ஐயங்கார்களும் அப்படிப் பேர் வெச்சுக்கறதை கவனிச்சவிட்டு, "பிள்ளையார் இல்லே/ ஊர் ஊராப் போய், பேர் பேரா, 'ஹீனஜாதி'ங்கற ஒரு வேடன், ம்ருக ஜாதியான ஒரு கொரங்கு, ஒரு ராக்ஷஸன்—னு பல பேரைத் 'தம்பி பண்ணிண்ட' ராமர்தான் அண்ணாஸ்வாமி, அண்ணாதுரை—ன்னு புரிஞ்சுண்டேன். அந்த ஏழு பேருக்குள்ளே அப்பேர்ப்பட்ட ஒதவி, ஒத்தாசை/ ஒத்தருக்காக மத்தவர் உசிரையே குடுப்பார்!

@Page 46

"அப்படி அண்ணன்—தம்பி அபாரமா, அமோகமா ஒதவிண்ட ராமாயணத்துலயும் அவாளைவிட ஒதவியா ஒஸ்தி (உயர்த்தி) ஸ்தானம் பெத்துண்ட ஒண்ணு உண்டு!

"அது என்ன—ன்னா 'அடி'தான்!

"புதிர் மாதிரிப் போடறேன்! ஆனாலும் ஒங்க எல்லாருக்குமே தெரிஞ்ச கதைதான். கொஞ்சம் ஆலோசிச்சுப் பாத்தேள்—னா புரிஞ்சுண்டுடுவேள்."

அன்று பெரியவாளின் உரையாடலைக் கேட்டவர்களை அவர் ஆலோசனை செய்து பார்க்கச் சொன்னார். ஆனால் இன்று நமது வாசகரைப் பொறுத்த மட்டில் ஆலோசிக்க எதுவுமில்லை என்றே தோன்றக் கூடும். ஏனெனில் நூல் தொடக்கத்திலிருந்து – தலைப்பிலிருந்தே – இது அநுமன் தொடர்பான அருளுரை என நாம் காட்டிவிட்டதால் பெரியவாள் சொல்லும் அந்த அடி அவ்அநுமன் சம்பந்தப்பட்டதாகத்தானிருக்கவேண்டும் என்று ஆலோசிக்காமலே நம் வாசகர் முடிவு செய்துவிடுவார். அடிக்கும் அநுமனுக்கும் என்ன சம்பந்தம், எப்படிச் சம்பந்தம் என்றே அவர் யோசிக்க வேண்டியதாயிருக்கும்!

ஆயின், ஸ்ரீ மஹா பெரியவாள் தெள்ளத் தெளிந்த வெட்ட வெளிச்சமாக இருந்துகொண்டே அவரைப் பற்றி எதுவும் தீர்மானமாகச் சொல்லமுடியாமல் unpredictable-ஆகவும் இருந்தவராச்சே! எனவே, அநுமன் பற்றிய வாசகரின் prediction குறித்து அந்தக் கிழவனார் என்ன சொல்வாரோ, பார்ப்போம்!

நல்ல வேளையாக, அன்று அவரது ச்ரோதாக்களாக உடனிருந்த அடியார்களை அவர் அதிகம் 'ஆலோசனை

@Page 47

செய்ய' வைத்துச் சோதிக்காமல் கருணையுடன் தொடர்ந்தார் :

"தர்ம சங்கடம்—னா நெஜமாவே தர்ம சங்கடமா ராமர், பரதன் ரெண்டு பேரும் தவிச்ச ஸந்தர்ப்பம் அது.

"அண்ணாவைக் காட்டுலேந்து அயோத்திக்கு அழைச்சுண்டு போய் அவரையே ஆளப் பண்ணணும்னு ஒரே தீர்மானமா பரதன் சித்ரகூடத்துக்கு வந்தாயிடுத்து."

பார்த்தீர்களா ? கிழவனார் அநுமத் தொடர்பே இருப்பதற்கில்லாத அயோத்யா காண்டத்தில்தான் பிரவேசித்திருக்கிறார்!

"அண்ணாகிட்ட அவனுக்கு இருந்த பரம ப்ரியம் மட்டும் அதுக்குக் காரணமில்லை. 'தமையன், பிதாவோட ஜ்யேஷ்ட புத்ரன் இருக்க எளைய பிள்ளை ராஜ்யாதிகாரம் பெற்றதா (பெறுகிறதா) ? அது தர்மமேயில்லையே!'—ன்னு தர்ம சாஸ்த்ர ரீதிலேயும் பரதனுக்குத் தான் ஆட்சி பண்ணறதுங்கிறது ஏற்கவேயில்லை. தினுஸு தினுஸாத் தன் பாயின்டைச் சொல்லி ராமரைக் கூப்பிடறான்.

"அவன் அவர்தான் திரும்பி ஊருக்கு வந்து ஆளணும்னு அப்படிப் பிடிவாதம் பண்ணினா, அந்த அண்ணாக்காரரோ அவனைவிடப் பிடிவாதமா, அப்பா உத்தரவு பண்ணியாச்சு/ அந்தப் படி பதிநாலு வருஷம் வனவாஸம்தான்0 அது முடிஞ்சுதான் திரும்பறது/ அது வரைக்கும் அப்பா ஆக்ஞைப்படி பரதன்தான் ஆட்சி பண்ணணும்னு ஒரே தீர்மானமா இருந்துண்டு, தன்னோட பாயின்டை தினுஸு தினுஸா வலியுறுத்திச் சொல்றார். இங்கேயும் தம்பி கிட்ட ப்ரியத்தால மட்டுமில்லே/ பிதா ஆக்ஞை—னா அது என்னவானாலும் அதைப் பரிபாலனம் பண்றதுதான் புத்ரனோட 'ட்யூடி'ங்கிற தர்ம சாத்ர பிதிக்காகவும் அத்தனை உறுதியா அண்ணாக்காரர் இருந்தார். பித்ருவாக்ய பரிபாலனம்—கிற பெரிய தர்மம்!

@Page 48

(பூர்வ காலத்தில் கைகேயிக்கு) வரம் குடுத்துட்டோமே–ங்கற வாக் ஸ்த்யத்தை ரக்ஷிக்கறதுக்காக உசிரையே குடுத்த பிதாவை அஸத்யக்காரராப் பண்ணி, அவர் இபப்ப் பெத்திருக்கிற தேவலோக ஸ்தானத்துலேந்து அவரை நரகத்துக்குத் தள்ளி, அப்படிப் பண்ணறதாலே தங்களையும் மஹாபாபிகளாம ரக்ஷிச்சுக்கற தர்மம்!

"பொதுவான ராஜதர்மப்படி ஜ்யேஷ்ட புத்ரனுக்கே ராஜ்யாதிகாரம் - Primogeniture ங்கிறதையே பரதன் பிடிச்சுண்டிருந்தான். அப்பா ஏதோ ஸந்தர்ப வசத்துல என்னவோ வரத்தைக் குடுத்து, வேறே வழியில்லாம சிக்கிண்டு சொல்லிட்டுப் போயிட்டார். அதுக்கு 'வால்யூ' இல்லை–னு அவனுக்கு அபிப்ராயம். வாஸ்தவத்துல அது தன்னோட அம்மாக்காரி பண்ணின அகார்யந்தான் (செய்யத்தகாத செயல்தான்) அப்பா 'ஹெல்ப் லெஸ்ஸா'த்தான் மாட்டிக்கிண்டு அதுக்குத் தலையை ஆட்டும்படியாச்சு/ மென்னு முழுங்கிக்கிண்டுதான், அவளுக்குத் தந்திருந்த வரத்தைக் காப்பாத்தணும்கிற வாக்ஸத்யத்துக்காக நெறவேத்தினார்–னு அவனுக்குத் த்ருடமா எண்ணம் இருந்தது. ராமருக்கானா, 'அப்படியே இருந்தாலும், அப்பா அந்த மாதிரித் தலையை ஆட்டாமயிருந்தா பூர்வத்துல கைகேயிக்கு வரம்–னு வாக்கு தத்தம் பண்ணினதை முறிச்ச பாபந்தானே அவருக்கு ஸம்பவிச்சிருக்கும்? அதுக்கு எடம் தரப்படாது–ன்னுதானே அவர் தலையை ஆட்டினார்? இப்போ அதை மாத்தினா அவரோட ஸ்த்யவாக் பரிபாலனத்துக்கு பங்கம் பண்ணி அவரைப் பாபத்துல தள்ற பாபம் தனக்கு, பரதனுக்கு ரெண்டு பேருக்குமே ஏற்படும்'னு! பரதன் பொது தர்மத்தைப் பிடிச்சுண்டிருந்தா, ராமரோ அதைவிட கெட்டியா, பொது தர்மத்துக்கு வித்யாஸமா ஆபத்துக்கால தர்மம்னு ஒண்ணை சாஸ்த்ரமே விதிக்கறதாலே,

@Page 49

ப்ரத்யேகமா தர்மஸங்கடமான அந்த ஒரு ஸந்தர்பத்துல, ஸங்கடத்தைத் தீத்துக்கிறதுக்காக அப்பா எடுத்த முடிவு தான் அவருக்கும் தர்மம், அதைப் பின்பத்தறதுதான் தனக்கும் தர்மம், பரதனுக்கும் தர்மம்னு ஒரே பிடியாப் பிடிச்சுண்டிருந்தார். பரதன் ஆளணும்னு அப்பா முடிவு பண்ணினார், முடிவு பண்ணும்படியாச்சுன்னா, அதும்படி (அதன்படி) பண்றதுதான் அவனுக்கு ஏற்பட்ட புத்ர தர்மம்/ தானும் அப்பா ஆக்ஞைப்படியே வனவாஸம் பண்ணி தர்ம ரக்ஷணம் பண்றதுக்கு அவன் விடறதுதான் ந்யாயம்–னு பாறாங்கல்லாட்டாமா நின்னார்.

"இப்படி தர்மம், த்யாகம், பித்ருவாத்ஸல்யம், ப்ராத்ரு வாத்ஸல்யம்–ங்கிற ஓசந்த கொள்கைகளுக்காகவே அவா ரெண்டு பேரும் நேரெதிரா ரெண்டு வித உறுதியிலே நிக்கறச்சே ரிஷிகணங்கள்–லாம் பாத்தா (பார்த்தார்கள்). பூர்வ காலத்துல மநுஷ்ய

லோகத்துல இருந்து ரிஷிகளா ஆயி சிரஞ்ஜீவியா இருக்கறவா, தேவரிஷிகள்னே தேவஜாதில பொறந்த நாரதர் மாதிரியானவா, இன்னம் ஸித்த புருஷாள்ளாம் மறைஞ்சுண்டிருந்து பார்த்தா. "இப்பேர்ப்பட்ட தர்மிஷ்டாளான பிள்ளைகளைப் பெத்த அப்பான்னா அப்பா!" ன்னு ஆச்சரியப்பட்டுக்கிண்டா. 'இந்த ப்ரத்யேக ஸந்தர்பத்துக்குன்னு நிர்பந்தமா ஏற்பட்டுட்ட தர்மந்தான் வாஸ்தவத்துலேயே ரக்ஷிக்கப்பட வேண்டியது, பரதன் சொல்ற பொது தர்மம் இல்லே'ன்னு ராமர் நெனக்கிறதே ஸரின்னு அவாளுக்கு அபிப்ராயமாயிருந்தது. தான்–ங்கிறதைத் தபோக்னியிலே பஸ்மமாக்கிட்ட மஹா ரிஷிகளோட அபிப்ராயம்னா அதுதான் தர்மம்/ அதுதான் ஸத்யம்.

"அது ஒரு பக்கம் இருக்கட்டும். அவதார கார்யம் பகவான் 'ப்ளான்'படி நடந்தாகணுமே, அதுவும் அவாளுக்குத் தெரியுமானதுனாலேயும் ராமர் சொல்றபடி

@Page 50

தான் ஆகணும்னு நெனச்சா. ராவண வதந்தான் அந்தக் கார்யம். அதுக்காக வனவாஸம், ஸீதாபஹரணம் மொதலானது நடக்கணும்னு பகவத் ஸங்கல்பம் ஆனபடியால, ராமர் அயோத்திக்குத் திரும்பாம காட்டுலயேதான் வாஸம் பண்ணணும்னு அவா கண்டுண்டா. ஆகையினாலே, இப்படியே இவா ரெண்டு பேரும் ரெண்டு 'வ்யூ'வைப் பிடிச்சுண்டு tag-of-war இழுத்துக்கிண்டில்லாம, பரதன் கிட்ட ராமர் வாக்குக்குப் படிஞ்சு போகும்படியா தாங்களே எடுத்துச் சொல்லிட வேண்டியதுதான்னு நெனச்சா. ஆனாலும் தவிர்க்கவே முடியாமப் போனாலொழிய, அவதார ரஹஸ்யத்தை அந்த அவதாரத்துக்கேகூட பஹிரங்கப்படுத்தறது அநுசிதந்தான். எப்படி ஒண்ணை பகவான் ரஹஸ்யம்–னு வெச்சிருக்கானோ அப்ப அதுல குறிக்கிடறது உசிதமில்லைதானே?–ங்கிறதால அந்த விஷயத்தைச் சொல்லாமலே, தர்மங்கிற 'பேஸிஸ்'லயே பரதனுக்கு எடுத்துச் சொல்லி அவன் மனஸை மாத்துவோம்னு முடிவு பண்ணி, அது மட்டும் மறைவா யிருந்தவா வெளிப்பட்டு வந்தா, பரதன்கிட்ட, "அப்பா கொழந்தே! ஒங்களோட ஓசந்த இக்ஷ்வாகு வம்சத்துக்கேத்த குலக் கொழுந்தா, தேடிண்டு வந்த ராஜ்யம் வேண்டாம்னு திரஸ்காரம் பண்ணிட்டு நீ இருக்கறதுல எங்களுக்கு ரொம்ப ஸந்தோஷந்தான். ஆனாலும் நீ ஒன் பிதவோட க்ஷேமத்தையும் கவனிக்கணும்பா. ஒன் மாதாகிட்ட அவர் வாக்கால பட்டுருந்த கடனைத் தீத்து தர்மிஷ்டரா நின்னதாலதான் இப்ப ஸ்வர்கத்துக்கு வந்து சேந்திருக்கார். அதை உத்தேசிச்சு நீ அண்ணா சொல்றதைத்தான் ஏத்துக்கிண்டு செய்யணும்"னு சொன்னா. ஒடனே நம்ம கார்யமாச்சுன்னு மேல் லோகத்துக்குப் போய்ட்டா.

"அதுக்கப்பறம் பரதனால ஒண்ணும் பண்ணிக்க் முடியலை. தானும் தமையனுமாவே வியவஹாரத்தைத் தீத்துக்கறதுன்னு இல்லாம ரொம்ப மேல் 'லெவ'லுக்குப்

@Page 51

போய், தீர்ப்பு வந்துடுச்சு—ங்கறதுக்கு அப்பறம் அந்தப்படி, அதாவது தமையனும் சொன்னபடிதான் பண்ணணும்னு ஆயிடுத்து. மூலத்துல ராம—பரதாள் ஸாஷாத் பகவானும், அவரோட அம்சபாகமுமானதால ரிஷிகணங்களை அவாளுக்கு மேல் லெவர்னு சொல்ல முடியாதுன்னாலும் நடைமுறையில அவா மனுஷ்யாளா அப்பா, அவரோட வரம், அவரோட ராஜ்ய பரிபாலனம்னுதான் ட்ராமா போட்டு வியவஹரிச்சுண்டிருந்ததால, மஹா பெரியவாளா, தர்ம மூர்த்திகளாவே இருந்த ரிஷிகள் சொல்லுக்கு மறு சொல் இல்லைனு பரதன் கட்டுப்படும்படியா ஆச்சு. ஆனாலும், தன் உசிருக்கு உசிரான அண்ணா உசிரோட இருக்கார். அதோட ராஜதர்மம் நன்னாத் தெரிஞ்சுண்டு அதை நிர்வாஹத்திலே காட்டற சக்தி—ஸாமர்த்யம் உள்ளவராவும், அதே ஸமயத்திலே அத்தனை ஜனங்களுக்கும் பரம ப்ரியராக. — இன்னிக்கும் **"லோகபிராமம் ஸ்ரீராமம்"** — ங்கிறோமே! அப்படி — இருக்கார்/ ராஜாவுக்கு வேண்டிய வீர பௌருஷாதிகள்—லேயும் ஒசந்து நிக்கறார்—ங்கிறபோது, அப்படி அவர் ஸிம்ஹமா இருக்கச்சே எலிக்குஞ்சாட்டம் தான் போய் அயோத்யா ஸாம்ராஸ்யாதிபதின்னு ஸிம்ஹாஸனத்துல ஒக்காரறதாவது—'ன்னு அவனுக்கு மனஸு கொஞ்சங்கூட ஒத்துக்கலை. மனஸு ஒத்துக்காட்டாலும், அண்ணாவும் சொல்லி ரிஷிகளும் அதையே ஆமோதிச்சுட்டாளேங்கறதால, தன் மனஸைப் பிடிவாதமா அதை ஒத்துக்கும்படிப் பண்ணிக்கிண்டு அண்ணா கிட்ட அழுதுண்டே சொன்னான்/ "இக்ஷ்வாகு வம்சத்தோட வாக்ஸத்ய தர்மத்தைப் பாலிக்கறதுக்காக எங்கம்மா (வரம்) கேட்டுண்டாப்பலயே பண்ணிக்கோ!" — அப்படின்னு! மனஸைக் கெட்டிப்படுத்திண்டுதான் அவன் ரிஷிகள் ஆக்ஞைக்கு ஒத்துண்டானானாலும், அப்பவும் 'நீ வனவாஸம் பண்ணு'னு சொல்ல வாய் வராம, அந்த

@Page 52

வனவாஸம் அப்பா மனப்பூர்வமா போட்ட உத்தரவும் இல்லைங்கறதால, அத்தனை துக்கக் கலக்கத்திலேயும் புத்தி கலங்காம பாகுபாடு பண்ணி 'அம்மா கேட்டுக்கிண்டபடி செய்ய சொன்னதா'தான் வால்மீகி எழுதியிருக்கார்!"

இங்கும் சரி, பிற்பாடு பல இடங்களிலும் சரி, வால்மீகி ராமாயண மூலத்தை ஒப்பிட்டுப் பார்த்தோமாயின் ஸ்ரீசரணாள் எத்தனை ஆழமாகவும், அதி நுணுக்கமாகவும் அதனை அறிந்து நினைவில் பதிந்து வைத்திருக்திருக்கிறாரென்று

விஸ்மயமுறுவோம். வேதம், தர்ம சாஸ்திரம், அத்வைதம் முதலான தத்வ ஸித்தாந்தங்கள், மந்திர சாஸ்திரம், வழிபாட்டுமுறைகளைக் கூறும் சைவ–வைஷ்ணவ–சாக்தாதி ஆகமங்கள், தோத்திர நூல்கள் ஆகியவற்றில் அவர் அபார ஞானம் பெற்றவரென்றே மிகப் பெரும்பாலோர் அறிவரேயன்றி இதிஹாஸ–புராணங்களிலும் காவ்ய–நாடகாதிகளிலுங்கூட அவருக்கு அதற்குச் சமமான புலமை இருந்தது என்பதை அறியமாட்டார்கள். ஏனெனில் இதனை அவர் எதனாலே அவ்வளவு கெட்டியாக உள்ளே அடைத்து வைத்துக் கொண்டிருந்தார். வெகு அபூர்வமாக எப்போதேனும் சில சமயம் ராமாயண, மஹாபாரத, பாகவதாதி இதிஹாஸ, புராணங்களிலும் அவர் சில கட்டங்களைத் துணுக்கும், இணுக்கும் விடாமல் விவரிப்பார், அல்லது அவற்றில் சில 'புள்ளிவிவரங்கள்' விவரமாகவே தெரிவிப்பார். உதாரணமாக ஒரு தினம் பஞ்சபாண்டவர்களில் ஒவ்வொருவருக்கும் எத்தனை குழந்தைகள் எனக் கூறி அவ்வளவு குழந்தைகளின் பெயர்களையும் சொன்னாராம். இப்படி பல, நூலாசிரியன் கேள்விப்பட்டிருக்கிறான். தனன்கு இத்தகைய விருந்தை மாந்தும் பேறு கிட்டுமா என ஏங்கியுமிருக்கிறான். கடைசியில ஓர் இரவு முழுதும், அடுத்த இரவில் வெகு நேரமும் அப் பேறு கிட்டியது. அப்போதுதான் இந்த

@Page 53

'ஹநுமத் ப்ரபாவம்' என்ற ப்ரவாஹம் அவரிடமிருந்து பெருகியது!

"இந்த மாதிரி ஸூக்ஷ்மங்கள்ளாந்தான் ராமாயணத்தோட அழகு. அது பாராயணார்ஹமான (பாராயணம் செய்வதற்குரியதான) பக்தி க்ரந்தமா இருக்கிறதோட, உத்தமோத்தமமான காவ்யம், literary நீறீணீஃஉவீநீனும் ரஸிகாள்–லாம் ரஸிச்சு ஸந்தோஷிக்கிறபடி இருக்கறதால ரெட்டிப்பு அழகு, பெருமை! வால்மீகி மாத்திரமில்லை/ கம்பர், துளஸிதாஸ், (மலையாள ராமாயணம் எழுதிய) எழுத்தச்சன், (வங்காளி ராமாயணம் எழுதிய) க்ருத்திவாஸ்–னு ப்ராந்திய பாஷைகளில பல பேர் பண்ணியிருக்கற ராமாயணங்கள்–லாமும் பக்திக்கு பக்தி, லிட்ரெசருக்கு லிட்ரெசர்–னும் இருக்கு. அதுக்கும் அந்த ராமசந்திரமூர்த்தியோட மஹிமைதான் காரணம்....

"பரதனை விட்டுட்டு எங்கேயோ போய்ட்டேனே!... "அம்மா(வரம் கேட்டுண்டாப்பலயே நீ பண்ணு. ஆனா நான் ஸிம்ஹாஸனாதிபதியா ஒக்காந்து தர்பார் பண்ணனும்னு ஆக்கிடாதே..'ன்னே அவன் முடிவிலேயும் சொல்றான்! அப்பா ஆஜ்ஞையில ராமன் தன்னோட 'பார்ட்'டை பூர்ணமா நெவேத்திக்கட்டும், ஆனா அப்பா தனக்குக் குடுத்தாரே அந்தப் 'பார்ட்'டையும் தான் பண்ணத்தான் வேணும்னு அவர் பண்ணிடப்படாதுன்னு பார்ட், மூத்தவனுக்கு வனவாஸியா, எளையவனுக்கு

ராஜாவா ரெண்டு பாட்டுமே மனஸுக்கு ஏற்காமதான் குடுத்தார்னாலும் மூத்தவருக்கு அந்த வனவாஸமே ரொம்ப மனஸுக்கும் பிடிச்சுப் போயிருந்தாப்பல எளையவனுக்கு ராஜ்யாதிகாரம் பிடிக்கலையே!

" அதனால அப்படிச் சொல்லிட்டு, 'எனக்கு ராஜாவாகணும்னு கொஞ்சங்கூட இல்லே. அதுக்கான

@Page 54

சக்தி–ஸாமர்த்யங்களும் எனக்குக் கெடையாது. ஜனங்கள், விவஸாயி மழை வராதா, வராதான்னு பாத்துண்டிருக்காப்பல நீ ராஜா ஆவயா, ஆவயான்னே எதிர்பாத்துண்டு இருக்கா. ஆனதுனால ஒனக்கு ப்ரதிநிதியா யாரையாவது நீயே ராஜா ஸ்தானத்துல நியமிச்சு அவர்கிட்டப் பொறுப்பைக் குடு. நீயே நியமிச்ச ஒன் ப்ரதிநிதி–ங்கிறதால ஒன் சக்தியே அவருக்குள்ளே பூந்துண்டு சக்தி–ஸாமர்த்யம் குடுத்து அவர் நன்னா ஆளப் பண்ணும்படியா செய்யும்"னு கண்ணும் கண்ணீருமா வேண்டிண்டான்.

"அந்த கட்டத்துலதான் அந்த அண்ணன்–தம்பி ரெண்டு பேருக்கும் மேக்கொண்டு (மேற்கொண்டு) என்ன பண்றதுன்னு தெரியாம தர்ம ஸங்கடா ஆச்சு..."

இதையடுத்து ராம–பரதர்களின் சிந்தனையாக ஸ்ரீசரணர் கூறுபவை எந்த ராமாயணத்திலும் இல்லாததெனத் தெரிகிறது. அந்த மூல பாத்திரங்களின் உயிர் மூலத்திலேயே தோய்ந்து உள்ளபடி காணக்கூடிய தெய்வ புருஷர் சிந்தனைச் செல்வராக வனைந்த காவியக் கோலமே அது!

" 'கொழந்தை இப்படி துடிச்சுக்கிண்டு கேக்கறானே! பரம ப்ரியமா, பரம த்யாகமா இப்படி ஒருத்தன் ப்ரார்த்திச்சுக்கறச்சே மநுஷ்யாபிமானமே இல்லாம அதைப் பொறக்கணிச்சா அது மட்டும் தர்மமா ? அப்படிப் பண்ணினா ப்ராணனையே விட்டுடுவான் போலன்னா இருக்கு ? அப்ப அந்த
ஜவஹத்திப் பாபம் தனன்கு வந்து சேராதா ? அதுக்காக, அவன் சொல்றபடி நான் ப்ரதிநிதி நியமிக்கறேன்–னா, எனக்கு இப்ப ராஜாவா 'அதாரிடி' இருக்குன்னும் அதனாலதான் அந்த 'அதாரிடி'யால அதையே இன்னொருத்தருக்கு delegate பண்றேன்–னும்னா ஆயிடும் ? அது அடியோட தப்பாச்சே! நான் ராஜா

@Page 55

இல்லையே! வனவாஸின்னா ? ராஜ ப்ரதிநிதியை நியமிக்கற 'அதாரிடி' ராஜ்ய

ப்ரஷ்டனா வனத்துக்கு வெரட்டப்பட்டவனுக்கு ஏது? பிடிச்சுதோ, பிடிக்கலியோ அப்படித்தானே அப்பா உத்தரவு போட்டார்?

" 'யாராவது ப்ரதிநிதி வை'ங்கறானே! இவனை விட எனக்கு ப்ரதிநிதி யாரு? ப்ரதிநிதியில்லே, என் ப்ரதியேன்னா இவன்! நான் நியமனம்–னு பண்ணித்தான் அப்படி ஆகணும்னும் இல்லே. அப்பா உத்தரவே அவனைத்தானே நியமனம் பண்ணியிருக்கு? ஆனாலும் ஒரு நாளும் ஸிம்ஹாஸனம் ஏறப்படாது, அது பாபம்னு தவிச்சுண்டிருக்கிறவன் கிட்ட அதைச் சொன்னா மேவாது. அது புண்ணைக் கௌறித்தான்விடும். மநுஷ்யாபிமான தர்மத்தை உத்தேசிச்சு எப்படியாவது இவனையும் த்ருப்தி பண்ணணும்/ பித்ரு வாக்ய பரிபாலனம்–கிற மஹா தர்மத்தையும் அதுக்காக விடப்படாது. என்ன செய்யலாம்?"னு ராமர் ஒரே யோசனையா நின்னுட்டார். இப்படி அவருக்கு நெஜமாவே தர்மஸங்கடம்!

"பரதனுக்கும் அந்த மஹாதர்மம் தெரியாம இல்லேதான். அதை அண்ணா விடவே மாட்டார்னும் இப்ப அவனுக்கு நன்னாவே நிச்சயமாயிடுத்து. 'அவர் ஆள முடியாதுதான்னு முடிவா ஆயிட்டபோது, நானும் ஆளமாட்டேன்–னு இருந்தா ராஜா இல்லாம தேசம் அராஜகத்துல போய், மஹா பெரிய குலதனம் வீணாகற பாபம் எனக்கு ஸம்பவிச்சுடுமேங்கிற கவலையிலேயும்தான் நான் ஆளணும்னு அண்ணா சொல்றார். அதை ஜ்யேஷ்ட ப்ராதா போடற ஆஜ்ஞையாவே எடுத்துண்டு பரிபாலிக்க வேண்டிய தர்மம் தனக்கு இருக்கு'ன்னும் பரதன் புரிஞ்சுண்டான். ஆகக்கூடி, அண்ணாவோட உறுதியான standம், ரிஷிகணம் சொன்னதும் அவனுக்குள்ளே கொஞ்சம் கொஞ்சமா ஒறஞ்சுடுத்து. (உறைந்து விட்டது)

@Page 56

ஆனாக்கூட அப்பவும், அண்ணாவுக்கு ராஜ்யாதிகாரத்துல அடியோட ஸம்பந்தமில்லேங்கறதையோ, தானே முழுக்க ராஜாங்கறதையோ அவனாலே ஏத்துக்கவும் முடியலை தான். அதனாலதான் அவரையே ஒரு ப்ரதிநிதியை நியமிச்சு ராஜ்யத்தைக் காப்பாத்தச் சொன்னான்.

" ' தான் மஹாபாபி/ ஏன்னா ராஜவாப் பட்டாபிஷேகம் பண்ணிண்டிருக்க வேண்டியவனைத் தன்னைக் காரணமா வெச்சுத்தானே காட்டுக்கு வெரட்டி ஜடாமுடியும், மரவுரியுமா நிறுத்தி வெச்சிருக்கு? இந்தப் பாபிக்குள்ளே அந்தப் பவித்ர புருஷனோட சக்தி எறங்கி அவனோட ப்ரதிநிதியாப் பண்ணாது/ அத்தனை பாக்யத்துக்கு இவன் லாயக்கில்லை. அதோட அவர் ப்ரதிநிதி வெக்கறதுன்னா, வெக்கற அதிகாரம் தர்ம சாஸ்திரப்படி, அவர் இப்ப ராஜான்னு அதிகாரபூர்வமா

பிதாகிட்டேருந்து ஸ்தானம் பெத்துருந்தாதானே முடியும்?… பரதனுக்கு அந்தப் பாயின்டும் தோணாமயில்லே. ராமர் பன்னிப் பன்னி தர்மம், தர்மம்னு அது ஒண்ணையே எடுத்துச் சொன்னதுல அவனுக்கும் அதுல ஒரு முழிப்பு வந்துதான் இருந்தது. ஆனதுனால, பின்னாடி ராக்ஷஸ மாரீசன் வாயால 'ராமோ விக்ரஹவான் தர்ம:'–ங்கிறது மாரீச வசனந்தான். மாரீசன் கிட்ட அவன் மாயமானா வேஷம் போட்டுண்டு போகணும்னு ராவணன் சொல்றச்சே, அவனுக்கு மாரீசன் ஹிதோபதேசம் பண்ணுகிற எடத்துலதான் (அந்த வசனம்) வரது…. தர்ம விக்ரஹமான அண்ணா அவரோட வாயால, அவரோட கார்யமா தன்னை ப்ரதிநிதியா ஒருநாளும் நியமனம் பண்ணமாட்டார்னும் புரிஞ்சுது. அதுக்காக தான் முடிசூட்டிண்டு ஸிம்ஹாஸனத்துல ஒக்காந்து மஹிமை கொண்டாடிக்

@Page 57

கறதும் தன்னால ஒரு நாளும் முடியாதுன்னும் வெச்சுட்டான். சாஸ்திரப்படி ராஜ பதவிக்குப் பூர்ண உரிமை உள்ளவனும் ஒரு பாபமும் பண்ணாதவனுமான ஒரு உத்தம சீலன் காட்டுல ஜடா முடியோட திரியறச்சே, அந்த உரிமை இல்லாம, பதவி வஹிக்கிறதுக்கான தகுதியும் இல்லாத ஒத்தன் அப்படிப் பண்ணினா அது எப்படிப் பாபமா இல்லாமப் போகும்? அதர்மமா இல்லாமப் போகும்?–னு பரதனுக்குத் தீர்மானமான எண்ணம். இப்படி ரெண்டு தினுஸான தர்மத்துக்கு நடுவுல மாட்டிண்டு பரதனும் தர்ம ஸங்கடப்பட்டான்.

"அந்த ரெண்டு பேர் எண்ணமுமே உத்க்ருஷ்டமானவை (உயர்ந்தவை)தான். ஆனாலும் எண்ணம் ஒசந்ததாவே இருக்கட்டும். இப்ப, கால தாமஸமில்லாம, அயோத்யா ஸிம்ஹாசனம் காலியா இல்லாதபடி கார்யம்–னா நடக்கணும்? என்ன பண்ணலாம்? பண்றது என்ன?ன்னு தெரியாமதான் அண்ணாவும் ஒரே விசாரமா யோசிச்சுண்டிருக்கறதா பரதனுக்குப் புரிஞ்சுது. 'தானும் கொழம்பிண்டே நின்னா? ஏதாவது முடிவு வரணும். வந்தேயாகணும்'–னு நெனச்சான்.

"அந்த மாதிரி அவன் அந்தரங்கபூர்வமா ஒரு 'ஸொல்யூஷன்' கெடைக்கணும்னு உள்ளுக்குள்ளே முட்டி மோதிண்ட தாபத்தோட சக்தியிலே – ஸரியாச் சொன்னா, அந்த ந்யாயமான தாபத்தை சமனம் பண்ணத்தான் வேணும்னு ஈச்வரனே அவனோட புத்தியைத் தூண்டிவிட்டதுல–'சடார்'னு அவனுக்கே 'ஸொல்யூஷன்' தோணவும் தோணிடத்து.."

அந்தச் 'சடாரை' ஸ்ரீசரணர் மொழிந்த அழுத்தமுண்டே! 'ஸொல்யூஷன்' கிடைத்தவுடன் பரதனே பெற்றிருக்கக் கூடிய உற்சாகத்தோடாக்கும் கூறினார்! அந்த

உணர்வு வேகத்திலேயே தொடர்ந்து கூறுவார்.

@Page 58

"பட பட படன்னு அவனுக்கு அபிப்ராயத்துக்கு மேலே அபிப்ராயமாத் தோணிண்டே போச்சு. அவன் அயோத்திலேந்து வரச்சே அண்ணா தன் ப்ராத்தனையை ஏத்துண்டு கூட வந்துடுவார்னு எதிர்பார்த்து, அப்ப அவர் போட்டுக்கறதுக்காக ஸ்வர்ணாலங்காரம் பண்ணின ஜோடிப் பாதுகை எடுத்துண்டு வந்திருக்கான் – **'பாதுகே ஹேமபூஷிதே'**ன்னே ராமாயணத்துல இருக்கு. இப்ப அவனுக்கு என்ன தோணித்துன்னா, Stoke of genius–ங்கறாளே, அப்படி 'ஸ்ட்ரைக்' ஆன எண்ணமா ஈசுவரனே தூண்டிவிட்டதுலே என்ன தோணித்துன்னா 'அந்தப் பாதுகை மேலே அண்ணாவை ஒரு நிமிஷம் ஏறி நிக்கச் சொல்லுவோம். அவருக்கு இப்ப நம்ம கிட்ட மனஸு ஒரே குழைவா குழைஞ்சு இருக்கறதால நிச்சயமா மறுக்கமாட்டார். அவரே அதை வனவாஸ காலம் பூரா போட்டுக்கணும்னா அதைத்தான் வனவாஸ தர்மத்துக்கு விரோதம்னு ஒத்துக்கமாட்டார். அந்தச் சரணாம்புஜத்துல முள்ளும் கல்லும் தைக்கறாப்பல வெறும் காலாத்தான் ஸஞ்சாரம் பண்ணுவார்'....

"பாகவதத்துல ஸ்ரீராமசரித்ரம் ரொம்ப ஸம்க்ஷிப்தமா (சுரக்கமாக) வரது. அத்தனை சுருக்கத்துலயும் அதைப் பூர்த்தி பண்ற எடத்துல அவர் பரமபதத்துக்குத் திரும்பினதைச் சொல்றப்போ, 'தன்னையே ஸ்மரிச்சுண்டிருக்கிறவாளோட ஹ்ருதயத்துல தன் பாதத்தை வெச்சுட்டுப் பொறப்படார்'னு அழகா முடிச்சிருக்கு. அப்படின்னா அந்தப் பாதமே அவர் போற பதம், பரம பதம்/ அதனோட நித்ய ஸாந்நித்யத்தை அந்த பக்தாள் ஹ்ருதயத்துல உண்டாக்கிட்டுப் போனார்னு தாத்பர்யம். அங்கே அந்தப் பாதத்துக்கு அடை மொழியா 'தண்டகாரண்ய முள்ளு ஆழமாக் கீறின துளிர்மாதிரியான பாதம்'னு சொல்லியிருக்கு. **'தண்டக–கண்டகம்'**னு எதுகையா, 'கண்டகம்'னா முள்ளு.

@Page 59

தொடர்ந்து மஹா பெரியவாள் ஒரு மஹா ஸத்தியத்தைக் கூறினார். "தெய்வத்துக்கும், மஹான்களுக்கும் பாதமே அவாளோட ப்ரதிநிதி/ பூர்ணமான ப்ரதிநிதி. அந்தப் பாதத்துல போட்டுக்கற பாதுகை அந்தப் பாதத்துக்குப் பூர்ணமான ப்ரதிநிதி. பாதத்துக்கு அது முழுக்க ஸமதையே–ங்கிற அளவுக்கு ப்ரதிநிதி. அதனால அதுவே அந்த தெய்வம், அல்லது மஹான். அதனாலதான் பாதுகா ப்ரதிஷ்டை–ன்னு எங்கே பார்த்தாலும் நடந்துண்டேயிருக்கு..."

இப்படிக் கூறிய ஸ்ரீசரணரே – 'ஸ்ரீசரணர்' என்றாலும் 'ஸ்ரீபாதர்'தான்! – பகவத்பாதர் எனப்படும் ஆதிசங்கரர் இமயம் முதல் குமரிவரை தமது பாதம் பதித்தே இந்நாடு முழுதையும் பிற மதங்களிலிருந்து மீட்டு வேத தர்மத்தை மீண்டும் பதிவித்தார் என்பதை ஸதாவும் போற்றிச் சொல்லி, இமயம் முதல் குமரி வரை பல புண்ய க்ஷேத்ரங்களில் அவரது பாதுகாப்ரதிஷ்டை செய்வித்திருக்கிறார்.

"அந்தப் பாதுகா மஹத்வம், ப்ரதிநிதித்வம் பரதனுக்கு இப்பச் சடார்னு நெனவுல வந்துடுத்து. 'அண்ணா நாம கொண்டு வந்திருக்கற இந்தப் பாதுகை மேலே மனஸார ஒரு க்ஷணம் ஏறி நின்னுட்டாகூடப் போறும், அதுல அவரோட சக்திவிலாஸம் தன்னியற்கையா எறங்கி ப்ரதிஷ்டை ஆயிடும். கல்லாக் கெடந்த அஹல்யை மேலே க்ஷணகால அது இந்த மாதிரி பட்டுத்தானே அதுக்கு ஜீவசைதன்யம் உண்டாயி, மறுபடி அஹல்யையா ஆனது? ஏற்கெனவே 'அஹல்யை'னு ஒரு ஜீவாத்மா இருந்ததாலே கல்லான தசையில அவரோட பாத ஸ்பர்சம் ஏற்பட்டதால அஹல்யைங்கிற அந்த ஜீவனாவே அவரோட சைதன்யம் அங்கே ஆச்சு.. அவரோட சைதன்யம்னா என்ன? பரப்ரஹ்மத்துடைய, ப்ரப்ரஹ்மமேயான ஏக சைதன்யந்தான்! அப்படிச் சேதன ஜீவனாயில்லாம அசேதனமாவே

@Page 60

எப்பவும் இருந்திருக்கற பாதுகை மேலே அவர் பாத ஸ்பர்சம் பட்டா அதுல அவரோட சைதன்ய சக்தி ஸாக்ஷாத் அவருடையதாவேதான் ப்ரதிஷ்டையாகும். இதுல இன்னொரு பெரிய ஸௌகர்யம், மநுஷ்யரா இருக்கற எவரையும் அவர் வாய்விட்டுத் தன் ப்ரதிநிதி–ன்னு சொல்லி நியமிக்கமாட்டார்/ அந்த அதிகாரம் அவருக்கு இல்லாததாலே! இப்ப இந்தப் பாதுகையோ, அவர் சொல்லணும்கிறதே இல்லே/ **தன்னால** அவரோட சக்தி விலாஸம் அதுக்குள்ளே பரவி அவருக்கு ப்ரதிநிதி ஆயிடும். ஆனாலுங்கூட அது வாயைத் தெறந்து உத்தரவு போட்டு ஆட்சி பண்ணும், ஜனங்களுக்குத் தீர்ப்புச் சொல்லும், யுத்தம்–கித்தம் வந்தா சண்டைக்குப் போகும்னு எதிர் பாக்கறதுக்கு இல்லே! அந்த மாதிரி அது வ்யக்தமா, (அதாவது) ஊருலகத்துக்கு வெளிப்படத் தெரியற மாதிரி ப்ரதிநிதித்வம் காட்ட அண்ணா விடமாட்டார். ஏன்னா, அப்படியெல்லாம் நடந்தா அவரே அதை அப்படி நியமிச்சார்னுதானே வெளிலோகத்துகுத் தோணும்? வாஸ்தவத்துலேயோ இங்கே நியமனம் இல்லை, நியமிக்காமலே தன்னியற்கையா அவரோட ப்ரதிநிதியா ஆயிட்டதுதானே? அது யாருக்கும் தெரியவும் வேண்டாம். ஏன்னா தெரிஞ்சாலும் ரொம்பப் பேர் புரிஞ்சுக்கமாட்டா..."

ரத்னச் சுருக்கமாகப் பேச அறியா 'வளவளா' ஆசாமியாத் தம்மைச் சொல்லிக் கொண்ட ஸ்ரீசரணர் இங்கே சொல்லின் செல்வராக ஒரு ரத்தினமான கருத்தை அல்லவா சுருங்கச் சொல்லிவிட்டார்? 'தெரிந்து கொள்வார்கள்/ ஆனால் புரிந்து கொள்ளமாட்டார்கள்'? நாம் ஒரு நூதனமான மெஷினைப் பார்க்கிறோம். அதன் வெளிப் பரிமாணங்களையும், அது மெஷின் என்பதையும் **தெரிந்து** கொள்கிறோம். ஆனால் அது என்ன. எப்படிச் செயல்படுகிறது என்று **புரிந்து** கொள்கிறோமா என்ன?

@Page 61

" 'தப்பாப் புரிஞ்சுப்பா, அண்ணாவேதான் அதை ப்ரதிநிதியா நியமிச்சிருக்கார்னு! அதனால யாருக்கும் விஷயம் தெரியவேண்டாம். 'ஸிம்ஹாஸனத்துல அந்தப் பாதுகையை ஆரோஹணம் பண்ணிடுவோம். சத்ர–சாமர மரியாதைகள்ளாமும் அதுக்கேன்னு வெச்சுடுவோம். அது பாட்டுக்கு அண்ணாவோட சக்தியைப் பரப்பிண்டு இருக்கும்' இப்பல்லாம் (இப்போதெல்லாம்) 'வைப்ரேஷன்'னு ஒண்ணு சொல்றாளே, அந்த மாதிரி 'வைப்ரேட்' பண்ணிண்டு இருக்கும்... ஸூக்ஷ்மமா அதுவே இப்படி கார்யமும் பண்ணாதப்போ, ஒரு ஆள்தானே கார்ய ரீதியிலே பரிபாலனம் பண்றதா லோகத்துக்குக் காட்டணும்? அந்தக் கார்யத்துக்கு யாரைப் போடறதுன்னா, இங்கே நாமும் கொஞ்சம் மனஸை மாத்திண்டு விட்டுக்குடுத்துத்தான் ஆகணும். என்னோட ஆசைப்படி, என்னோட பிரார்த்தனைக்காக அண்ணா பாதுகைமேலே ஆரோஹணிச்சு, அதைத் தன்னோட ப்ரதிநிதியாத் தரார்–னா – நிச்சயமாத் தருவார்/ மறுக்கறதுக்கு அவரோட் கருணை மனஸால முடியாது/ அப்பத் தரார்னா–னா – அப்ப நாமும் அவரோட ஆசைப்படி ஆஜ்ஞைப்படி, பேருக்காவது, (சிரித்தவாறு கூறுகிறார்) உளஉளாக்கட்டையாவாவது, அந்த ஸ்தூல ஆஸாமியா ஸிம்ஹாஸனத்துக்குக் கீழே ஒக்காந்துக்க வேண்டியதுதான். ஒக்காந்துண்டு, அதுல நெஜ ராஜாவா இருக்கற பாதுகைக்குக் கொடை பிடிச்சுண்டு, சாமரம் போட்டுண்டு முடிஞ்ச மட்டும் ஏதோ கொஞ்சம் த்ருப்தியா இருக்க வேண்டியதுதான். இந்த மந்த புத்தி, (சிரித்து) மந்தி புத்திக்காரன் ஆட்சி பண்றதாவே வெளில லோகம் நெனக்கற மாதிரி நடந்துட்டுப் போகட்டும். நம்ம மூலமாவே ஏதோ ஒரு தினுஸா அந்தப் பாதுகா சக்தியே

@Page 62

நிர்வாஹத்தை எப்படிப் பண்ணணுமோ அப்படி நடத்திக் குடுத்துடும்'–னு பரதன் முடிவு பண்ணிட்டான்.

"எல்லா ப்ராப்ள'த்துக்கும் 'ஸொல்யூஷன்' பரதன் ஆளணும்னு தசரதர் சொன்னபடி பித்ரு வாக்ய பரிபாலனம், அவர் மனஸில்லாம சொன்ன அதையே மனஸாரச் சொன்ன ப்ராத்ரு வாக்யி பரிபாலனம் ரெண்டையும் அவன் பண்ணினதா ஆச்சு. அதே ஸமயத்துல, தமையன் இருக்கத் தான் சத்ர–சாமர–ஸிம் ஹாஸனாதிகளோட தர்பார் நடத்தறதாவது–ன்னு எளையவனுக்கான 'ஜெனரல்' தர்மப்படி அவன் நெனைச்சதையும் நிறைவேத்தி பொதுவான லோக தர்மப்படி நடந்ததாவும் ஆச்சு. அதே மாதிரி, ராமரை எடுத்துண்டா, அவரும் அவர் இஷ்டப்படியே வனவாஸம் பண்ணி பித்ருவாக்ய பரிபாலன் தர்மத்தைப் பண்ணவும் முடிஞ்சுது/ மநுஷ்யாபிமான தர்மம், காருண்ய தர்மம்–கிறதன்படி பரதனுக்கு அவன் இஷ்டப்பட்ட தன்னோட ப்ரதிநிதியாப் பாதுகையைத் தரவும் இந்த ஸொல்யூஷன் எடம் தரது....

"லோகாபவாதம் (உலகத்தின் அபவாதம்), நடத்தையிலே ஸந்தேஹம்னா அந்த மாதிரி ஸ்வல்பம் இருந்தாக்கூட அபிமானமோ கருணையோ காட்டாம ராஜதர்மப்படி தான் ராமர் கண்டிப்பா நடப்பார். பரம பாவனி, ஸாக்ஷாத் ஸீதை விஷயமாவே திரும்பத் திரும்ப அப்படித்தானே பண்ணினார்? ஆனா, **இங்கே** அந்த மாதிரி ஒண்ணும் இல்லாததால, தயையும் அநுதாபமும் கூடின 'ஆந்ருசம்ஸை'–ங்கிற தர்மத்தைப் பண்ண எடம் இருந்ததால, அவரோட குணவிசேஷம் தெரிஞ்ச தம்பிக்கு 'ஹோப்' இருந்தது/ த்ருடமாவே இருந்தது.

"அண்ணா போட்டுண்டு, தன் கூட அயோத்திக்கு வரதுக்காக பரதன் ஆசை ஆசையாப் பண்ணியெடுத்துண்டு வந்திருந்த ஸ்வர்ணாலங்க்ருதமான

@Page 63

பாதுகையை, இப்ப அதுவே அண்ணா ஆகணும்கிற எண்ணத்தோட பரதன் அவருக்கு ஸமர்ப்பணம் பண்ணினான். மனஸு உருகி, 'அண்ணா! இது மேலே செத்த (சிறிது) ஏறி நின்னு, இதை ஒன் அநுக்ரஹ ப்ரஸாதமாக்கிக் குடு. இதுகிட்டயே ராஜ்யாதிகாரத்தை ஒப்பிச்சுடுவேன். இதுவே ஸமஸ்த ஜனங்களோட யோக–க்ஷேமத்தையும் செஞ்சுடும்'னு சொன்னான். **'ஸர்வ லோகஸ்ய யோக க்ஷேமம் விதாஸ்யத:'**ன்னு ராமாயணத்துல இருக்கு."

"பிற்பாடு க்ருஷ்ணாவதாரத்துல ஸ்வாமி 'யோகக்ஷேமம் வஹாம்யஹம்' சொன்னது ப்ரஸித்தம்.(சிரித்தவாறு) அந்த ப்ரஸித்தத்தை க்ருஷ்ண வசனமாத் தெரிஞ்சுக்காதவா கூட L.I.C. Mottoன்னாவது. தெரிஞ்சுண்டிருப்பா!...... அப்படின்னா

என்னன்னு கேட்டா: 'யோகம்'னா ஜீவனம் நடத்தறதுக்கு வேண்டிய த்ரவ்யம் – பணம், பண்டம் – முதலானதுகளை ஒத்தருக்குச் சேத்துக்குடுக்கறது. 'க்ஷேமம்'னா அந்த ஸொத்து–ஸ்வதந்திரங்கள் கொறையாமக் காப்பாத்திக் குடுக்கறது. தன்னையே ஸதாவும் நினைச்சுண்டு பக்தி பண்ணிண்டிருக்கிறவாளுக்கே தான் அப்படி யோக–க்ஷேமத்தை நடத்திக் குடுப்பேன்–னு க்ருஷ்ண வசனம். பரத வசனமோ, அப்படியெல்லாம் ரொம்ப ஒசந்த பக்தாளை மாத்திரம் பிரிச்சு யோக–க்ஷேமம் பண்ணாம ஸர்வ லோகத்துக்குமே ராம பாதுகை யோக க்ஷேமம் பண்ணும்னு சொல்றது!

"ராமசந்த்ரமூர்த்தியும் அவன் நினைச்சாப்பலவே மனஸுருகி அவன் கேட்டுண்ட மாதிரியே பண்ணினார். தன்னோட திவ்ய சரணாவிந்தத்தை அந்தப் பாதுகை மேலே கொஞ்ச நாழி வெச்சுட்டு அதை அவனுக்கு பரமாநுக்ரஹத்தோட குடுத்தார்.

*அயோத்யா காண்டம் 112.21.

@Page 64

"ராமரைத் திரும்ப அழைச்சுண்டு போறபோது அவர் போட்டுக்கறதுக்காகப் பாதுகை கொண்டு வந்த மாதிரியே அவரை ராஜ மரியாதையோட ஏத்தி அழைச்சுண்டு போகணும்னு பரதன் பட்டத்து யானையையும் கொண்டு வந்திருந்தான். அந்த ஒரு யானை என்ன ? அயோத்யா ஜனங்கள் ஸகலமான பேரும், நால்வகை ஸைன்யத்துல ரத–கஜ–துரக பதாதின்னு யானைப் படை உள்படி எல்லாமே அவன்கூட வந்திருக்கத்தான் செஞ்சன.

"அண்ணாவோட பரம புண்யமான பாத ஸ்பர்சத்தைப் பெத்த அந்தப் பாதுகையைப் பெத்துக்கிண்டு ஓரளவுக்கு நெஞ்சு ஆறி, அதுவேதான் ராஜான்னு அதை அந்தப் பட்டத்து யானை மேலே ஏத்தி வெச்சு மரியாதை பண்ணி அயோத்திக்கு ஸபரிவாரம் (உடன் வந்த எல்லாப் பரிவாரத்துடன்) பரதன் திரும்பினான்.

"ஆனா அவன் அயோத்தியிலேயே இருந்துண்டு இல்லே. தாயார்மார்களையும், மத்த குடிபடைகளையும், தர்மம், அவனுக்குள்ளே அந்தப் பாதுகா ஸாந்நித்யத்துல ஏற்பட்டுட்டதாலேயே (இதுவும் எந்த ராமாயணத்திலும் இல்லை; ஸ்ரீசரணரே கூறியதுதான்!) அயோத்திக்குப் போனான். ஆனாலும் அவனுக்கு அங்கே ராமனில்லாத – சூன்யத்தை ஸஹிச்சுக்க முடியலை. அதனால.. சித்ரகூடத்துல

படபடன்னு அவனுக்கு 'ஐடியா' தோண்றச்சே, ராமர் அரண்யத்துக்குப் போன மாதிரி தானும் அங்கே போய் அவரோடேயே வஸிக்க முடியாதுன்னும் தோணிடுத்து. ஏன் முடியாதுன்னா, பாதுகை ஸிம்ஹாஸனாரூடமா ஆட்சி பண்ற எடத்துலேயே தான் அவனும் உப்புக்குச் சப்பாணி ராஜா மாதிரி மனஸார அந்தப் பாதுகைக்கு ராஜ மரியாதை, கைங்கர்யம்

@Page 65

பண்ணிண்டு இருந்தாகணும். காட்டுல அந்த மாதிரி ராஜப் பிரதிநிதியை ஸிம்ஹாஸனம் போட்டு வைக்கறது அநுசிதம். சாஸ்த்ரம் எடம் குடுக்காது. அதனால பாதுகையும் அதோடேயே தன்னைப் பிணைச்சுண்டுட்ட தானும் நாட்டுலதான் இருந்தாகணும்னு புரிஞ்சுடுத்து. ஆனாலும் அவனுக்கு அயோத்யா பட்டணவாஸம் செய்யவும் மனஸ் இல்லாததால, பக்கத்துல நந்திக்ராமம்னு இருக்கற க்ராமத்துல பாதுகையை ப்ரதிஷ்டை பண்ணி, தானும் இருக்கணும்னு ஐடியா தீர்மானமா வந்துடுத்து. பாதுகையைக் கொண்டு 'ப்ராப்ள'த்தை 'ஸால்வ்' பண்ணணும்னு அவனுக்குத் தோணினபோதே வந்த அநேக 'ஐடியா'வுல ஒண்ணுதான் இதுவும். பாதுகை பெத்துக்கற போதே இதை ராமர் கிட்டயும் அவன் தெரிவிச்சு அவரோட ஸம்மதத்தை வாங்கிண்டுட்டான்.

"அப்பறம் அந்தப்படியே நந்திக்ராமம் போய் ஸகல ராஜாலங்காரத்தையும் (ராஜ அலங்காரத்தையும்) பாதுகைக்கே பண்ணி, தானும் ராமராட்டமே (ராமர் போலவே) ஜடாமுடி தரிச்சுக்கிண்டு அதன் பக்கத்துலே இருந்து பணிவிடை பண்ணிக்கிண்டு பதிநாலு வருஷத்தையும் 'ராமா, ராமா!'ன்னு கழிச்சான்.

"பொதுவா ராம பாதுகை–னாலே போறும், அது ஒத்தரை பக்தியா பணிவிடை பண்ணத்தான் வைக்கும். அதோட, நன்றிங்கறதையும் எவ்வளவு செலுத்தினாலும் போறாதுங்கற அளவுக்கு **ஒதவி**யும் பண்ணின **இந்த**ப் பாதுகைக்கு பக்தியே ரூபமான பரதன் பணிவிடை பண்ணக் கேப்பானேன் ?

"இங்கேதான் ராமாயணத்துல, 'அடி ஒதவற மாதிரி அண்ணன்–தம்பி ஒதவ மாட்டா'ங்கறது ப்ரூவ் ஆச்சு!

"ராம பரதாளைப் போல பரஸ்பரம் ஒதவி பண்ணிக் கொள்ளக் கூடியவா அபூர்வத்திலேயும் அபூர்வந்தான்.

@Page 66

அப்படியிருந்தும் அன்னிக்கு அந்தச் சித்ரகூடத்துல ராமரும் பரதனுக்கு ஓதவி பண்ண முடியலை; பரதனும் ராமருக்கு ஓதவி பண்ண முடியலை. 'என்ன ஓதவி?'ன்னா பெரிய்ய ஓதவி! தர்மமே ரெண்டு தினுஸாத் தெரிஞ்சு, அதுல அவாவா மனஸூப்படி அவாவா தர்மத்துல நிக்கறதுக்கு மத்தவாளும் 'ஆஹா'ன்னு ஸம்மதம் சொல்ற ஓதவிதான்! அதை பரதன் பண்ணியிருந்தா அவர் பாட்டுக்கு ஸந்தோஷமா வனவாஸம் பண்ணியிருப்பார். அதுக்கு முடியாம, அவருக்கு அதுவரை இருந்த ஸந்தோஷத்தையும் கெடுத்து, அழற தன்னோட அவரையும் அநுதாபத்துல அழவெச்சு, அதோட 'நாம தானே கொழந்தை இப்படி அழறதுக்குக் காரணம்?'னு அவரை சங்கடப்படுத்தி, இது போறாதுன்னு அவர் 'தர்ம சங்கடம்'கிறதையும் படறதுக்குத்தான் அப்ப பரதன் காரணமாயிருந்தான்! அண்ணனுக்குத் தம்பி ஓதவாதது மாத்திரமில்லே; துக்கமே குடுத்தான்! அதையேதான் அவரும் அவனுக்கு பண்ணினார்! அவன் மனஸூப்படி அவன் எதை தர்மம்னு நெனச்சானோ அதும்படி (அதன்படி)ப் பண்ணி அவனோட மனஸைக் குளிர வைக்காம, அதைக் காயக் காயக் கஷ்டப்படுத்தி!

"அந்த சந்தர்ப்பத்துல அவரோட திருவடி – திருஅடி – தானே ரெண்டு பேருக்கும் ஓதவி பண்ணி, 'அண்ணாவுக்கு வனவாஸந்தான்'னு ஏற்பட்டிருக்கிறப்போ அதுல பரதன் பட்ட துக்கத்துக்குள்ளேயே எவ்வளவு 'மாக்ஸிமம்' ஸந்தோஷம் படவைக்க முடியுமோ அவ்வளவை அவனுக்கு குடுத்தது? வனவாஸத்துலேயே ஸந்தோஷப்பட்ட ராமருக்குக் கேக்கவே வேண்டாம்! அதோட, தம்பி கடைசியா ஆசைப்பட்டபடி பாதுகையாவது குடுத்து, ஆசையை நெறவேத்த முடிஞ்சுதேன்னு ஸந்தோஷம்.

@Page 67

"பாதமே மஹாபுருஷாளோட பூர்ண ஸ்வரூபந்தான்; அதுல போட்டுக்கற பாதுகை அந்தப் பாதத்துககே ஸமந்தான்–னு சொன்னேனோல்லியோ? ஆனதுனால ஸ்ரீராம பாதுகை–ன்னா அதுவே அவரோட திருஅடிதான்."

அடியின் உதவி பற்றிய தமிழ்ப் பழமொழி குறித்து ஸ்ரீமத் ராமாயணத் தொடர்பாகத் தாம் கூறியதை நிரூபித்துவிட்டதில் குழந்தை போன்ற நிறைவுடன் ஸ்ரீசரணர் ஒரே ஆனந்த விகாஸத்துடன், அந்த நிரூபணத்தில் மகிழ்ந்து கலகலவென ஆஹாகாரம் செய்த ச்ரோதாக்களை வெற்றிச் சுடர்விடும் திருநயனங்களுடன் பார்த்து, வார்த்தை வார்த்தையாக இலக்கண சுத்தத்துடன் கூறுகிறார். "இப்படியாகத்தானே ஸ்ரீராம சரித்ரத்தில் உதவிக்கே உருவமான அண்ணன்–தம்பிகள் உதவ

முடியாமலிருந்தபோது – ஒருத்தருக்கொருத்தர் உதவி பண்ணிக் கொள்ள முடியாமலிந்தபோது – அடியே உதவி செய்து தமிழ் வசனத்தின் உள்ளர்த்தத்தை நிரூபித்தது!

"இந்த ஒரு எடத்துல மட்டுமில்லே.. இங்கேதான்–னு சித்த முன்னே சொன்னேன் போலேயிருக்கு. அது விஷயத்துக்கு அழுத்தங் குடுக்கவே சொன்னது. இங்கே மட்டுமில்லே... இன்னொரு எடத்துலயும் ராமாயணத்துலே அது ரெண்டாந்தடவை 'ப்ரூவ்' ஆயிருக்கு! அதையும் சொல்றேன்" என்று தொண்டையைக் கனைத்துச் சரி செய்து கொண்டு நிமிர்ந்து அமர்ந்தார்.

5

பகவானின் சரண கமலத்திலேயே ஸ்ரீசரணரின் சித்த வண்டு தொடர்ந்தும் தேன் பருக, அத் தேனைச் சிந்தும் மதுரமாக அவரது வாக்கு அடி உதவுவது குறித்த இரண்டாவது எடுத்துக்காட்டுக்குச் செல்லாமல்

@Page 68

பொதுவாக அதற்குள்ள பெருமை பற்றியும் ராம–பரதர்கள் பற்றியுமே தொடர்ந்தது.

"இத்தனை நாழி கதை கேட்டதுலேந்து அந்த அடி மாஹாத்மியம் எல்லாருக்கும் புரிஞ்சிருக்கும். 'பாதுகாஸஹஸ்ரம்'னே வேதாந்த தேசிகர் ஆயிரம் ச்லோகத்துல அதோட மஹிமையைப் பாடி வெச்சிருக்கார். ஸஹஸ்ர நாமார்ச்சனை, லக்ஷார்ச்சனை, கோடி அர்ச்சனை எல்லாமும் கூட ஸ்வாமியோட பாதத்துலதானே பண்றோம்?

" **'ஸ்ரீராம பாதமா'**–ன்னு ராம பாதத்தை மாத்திரமே ஒரு மூர்த்தியா ஆக்கி த்யாகராஜ ஸ்வாமிகள் பாடியிருக்கார். ரொம்பப் பொருத்தமா அம்ருதவாஹினி–ங்கற ஒரு ராகத்துல, அபூர்வ ராகத்துல பாடியிருக்கார். அம்ருதமாப் பெருகி ஓடற நதி–ன்னு அர்த்தம். பகவத் பாதத்துலேந்துதானே பகவானோட காருண்யாம்ருதமும், ஞானாம்ருதமும் பெருகறது? அந்தப் பாட்டுல, 'நீ க்ருப சாலுநே'ங்கிறார். 'ஒன் க்ருபையே போறும்'–னு அர்த்தம். அதாவது, ராமரோட க்ருபைகூட வேண்டாம்; ராம பாதத்தோட க்ருபையே போறும்–னு அர்த்தம்! ஏன்னா, ராமர் மநுஷராவே நடச்சதுல அவர் மனஸறிஞ்சு, தன்னோட அநுக்ரஹமா தெய்வ சக்தி வெளிப்படத் தெரியும்படியா எதுவும் பண்ணாமலே இருந்தவர்; அந்த மாதிரி நடிச்சவர். எப்பவானும் ஒரு மையத்துலதான் கருணை பீறிண்டு வந்து அவர் தன்னோட திவ்ய சக்தியைக்

காட்டினது."

இங்கு ஸ்ரீசரணர் தம்மையுமேதான் ரத்னச் சுருக்கமாக வர்ணித்துக் கொண்டுவிட்டார்!

"ஆனா அந்தத் திருவடி ரூபமேயான மிதியடியோ அவர் வனவாஸம் பண்ணின பதிநாலு வருஷமும் திவ்ய சக்தி ப்ரபாவத்துல ஸாம்ராஸ்யம் பூராவுக்கும் யோக



க்ஷேமம் குடுத்து ரக்ஷிச்சிருக்கு. ராஜான்னு வெளியில தெரிஞ்ச பரதன் பாட்டுக்குத் தபஸ்வியாட்டமா ஒக்காந்திருக்கச்சே ராக்ஷஸாதிகளோ, வேறே சத்ரு ராஜாவோ படையெடுத்து வந்து ராஸ்யத்தைக் கபளீகரம் பண்ணியிருக்கலாந்தானே? ஆனா அப்படியெல்லாம் ஒரு ஹிம்ஸை இல்லாம, பஞ்சம் துர்பிக்ஷம் மொதலானதுகளும் இல்லாம ராஜ்யம் நிம்மதியா, ஸுபிக்ஷமா இருந்தது-ன்னா அதுக்கு அந்த பாத மஹிமைதான் - பாதுகையே பாதத்துக்கு ஸமதைதான்-னு நான் சொன்னது நெனவு இருக்கும்; அதனால பாதுகா மஹிமை, பாத மஹிமை ரெண்டும் ஒண்ணுதான். அந்த மஹிமைதான் - காரணம். பாதுகை யாரைச் சேந்துதோ அவர் அங்கே வனத்துல ராக்ஷஸன் கிட்ட பத்னியைப் பறி குடுத்துட்டு, நிம்மதியெல்லாம் போய் நிலை குலைஞ்சு, அன்ன-பானம் வேண்டியில்லாம எளச்சு, களச்சு (இளைத்து, களைத்து) அவதிப்பட்ட காலத்துலயே இப்படிப் பாதுகை இருந்த ஸாம்ராஜ்யம் நிம்மதியா ஸுபிக்ஷமா இருந்தது-ங்கதை கவனிக்கணும்! அப்பறம், ராவண ஸம்ஹாரத்துக்குப் பின்னாடி ராமரே ஸாக்ஷத்தா ஆட்சி நடத்தரப்போகூட லவணாஸுரன் வாலை ஆட்டறான்! தர்மராஜ்யம் - அதிலே 'ஐடிய'லா சொல்ற ராமராஜ்யமே - நடந்த அப்போ வர்ணதர்மத்துக்கு விரோதமா ஒத்தன் தபஸ்பண்ணி, அதனால, ஒரு பாபமும் பண்ணாத ஒரு அப்பா-அம்மா இருக்கறப்பவே அவாளோட ஏக புத்ரன் செத்துப்போற விபரீதமும் நடக்கறது. ஆனா அவரோட பாதுகை ஆண்டபோதோ இந்த மாதிரி எதுவும் நடக்கடைல. அத்தனை ஒசத்தியா அது ராஜ்யத்தைப் பாதுகாத்திருக்கு...

"வால்மீகி ராமாயண வசனம்-னு தமிழ்ல ஒரு பொஸ்தகம் பாத்தேன். ராமர் பாதுகையை பரதனுக்குத் தத்தம் பண்ணினப்ப, அதைப் பத்தி ஒரு பெருமையும், ப்ரதாபமும் சொல்லாம நைஸாத் தள்ளிண்டு போய்ட்டு,

ஊருக்குத் திரும்பிப் போய் பரதன் ஆட்சி ஏத்துண்ட அப்பறம் கைகேயிகிட்ட கொஞ்சம்கூடக் கோபம் இல்லாம ரக்ஷிக்கணும்–னு மட்டுமே சொல்றார். அதுதான் அவரோட குண விசேஷம்! அந்த எடத்துல, 'அம்மாவை ரக்ஷி!', 'மாதரம் ரக்ஷ'–ன்னு ராமர் சொல்றதை அந்தப் பொஸ்தகத்துல, 'தாயைப் பாதுகா!'–ன்னு போட்டிருக்கும். சட்னு படிச்சுண்டு போறச்சே புரியாது. 'அதென்ன அம்மாவைப் பாதுகா? பாதுகையைக் குடுத்தாரே, அதைப் பத்தியா? ஏதாவது வரியோ, வார்த்தையோ விட்டுப்போச்சா?–ன்னு கொஞ்சம் புரியாம இருக்கும். அதெல்லாம் ஒண்ணுமில்லை. மிதியடியான ஸ்ரீராம பாதுகாவுக்கும் இங்கே சொல்ற 'பாதுகா'வுக்கும் ஒரு ஸம்பந்தமும் இல்லே! 'அம்மாவைப் பாதுகாப்பாயாக!' –ன்னு ராமர் சொல்றதையே புலவர் பாஷையிலே சுருக்கிப் 'பாதுகா!'–ன்னு போட்டிருக்கும். வாஸ்தவத்துல அந்த மிதியடிப் பாதுகாவும் ராமர்–பரதன் ரெண்டு பேரையும் தர்ம ஸங்கடத்துலேந்து பாதுகாத்து பதிநாலு வருஷம் ரகுவம்ச ஸாம்ராஜ்யத்தையும் பாதுகாத்திருக்கு! திருவடி, அது யாருக்கு ஸொந்தமோ அச்த மஹா புருஷனை விடவுமே மஹிமைல ஒசத்தி–ங்கறதுக்காகச் சொல்ல வந்தேன்...

"ராமர்–ங்கிற முழு மூர்த்தி தன்னோட திவ்ய சக்தியை மூடி மறைச்சுக்கிண்டு 'ஐடியல்' மநுஷ்யராவே, பரம விநயத்தோட இருந்தவர், ஆனதுனாலே அவர் பரதன் சிரஸுல – எவர் சிரஸுலயுமே – மனஸறிஞ்சு தன்னோட பாதத்தை வெச்சிருக்கமாட்டார். தர்ம சாஸ்த்ரப்படி ஒரு அண்ணா தம்பிக்கு எப்படி ப்ரியம் காட்டணும்னு இருக்கோ அப்படியே தம்பிமார்களை மடியில ஒக்காத்தி வெச்சுக்கிண்டார்; ஆலிங்கனம் பண்ணிக்கிண்டார்னுதான் இருக்கு. ஆனதுனால ஒரு அவதார புருஷன்கிட்டேந்து

@Page 71

பெறக்கூடிய மஹா ப்ரஸாதமா சிரஸுல அவரோட பாதத்தைச் சூட்டிக்கிற பாக்யம் ராமர் காலத்துல யாருக்கும் கிடைச்சிருக்காது. அண்ணா கிட்டவே உசிரை வெச்சிருந்த பரதனுக்குந்தான்! ஆனா அவரே பண்ணாத அந்த மஹா பெரிய ஒதவியைப் பாதுகை பண்ணிடுத்து! அதை அலக் விரஸு மேலே வெச்சுண்டு ஆனந்த தாரையைக் கொட்டிண்டிருந்தான்...

**" 'கை வண்ணம் அங்கு கண்டேன்**
**கால்வண்ணம் இங்கு கண்டேன்'**

–னு கம்பராமாயணத்துல வரதாக் கேள்விப் பட்டிருப்பேன். அப்படிக் 'கால் வண்ணம்' தெரிஞ்ச எடம் கல்லாக் கெடந்த அஹல்யை ஸ்ரீராம பாத ஸ்பர்சம் பெத்து மறுபடி

ஸ்த்ரீ ரூபத்தைப் பெத்துண்டதுதான். அப்போ விச்வாமித்ரர் சொல்ற வசனந்தான் அது. இதுக்குக் கொஞ்சம் முன்னாடி நடந்த தாடகா வதத்துல ராமரோட கை வண்ணத்தை – புஜபல பராக்ரமத்தை – கண்டதாவும், இப்போ கல்லு ஸ்த்ரீயானதுல கால் வண்ணத்தைக் காண்கிறதாவும் விச்வாமித்ரர் ராமர்கிட்டயே சொல்றார்.

"அந்தக் கை வண்ணத்தைவிட இந்தக் கால் வண்ணம் தான் விசேஷமானது; அதி விசேஷமானது. வீரதீராளா இருந்த எத்தனையோ ராஜாக்கள் அஸுர–ராக்ஷஸாளை விட புஜபல பராக்ரமசாலிகளா இருந்து அவாளை ஹதம் பண்ணி 'கை வண்ணம்' காட்டினதுண்டு. ஆனா ஒரு பாபிஷ்டையை க்ஷணத்துல பரிசுத்தி பண்ணித்தே, அந்தக் 'கால் வண்ணம்' ஸ்ரீ ராம பாதம் ஒண்ணுக்கே சொந்தமானது! 'இங்கே மட்டும் பாதத்துல போட்டுக்கற பாதுகையா இல்லாம நேரா பாத ஸ்பர்சமாவே இருக்கே'–ன்னா, கல்லுங்றதாலதான் ராமர் பாதத்தை அதுமேலே வெச்சார். எல்லா மநுஷாளும் கல்லு, மண்ணு மேலே காலை வெச்சுத்தானே நடந்து போறோம்? அந்த

@Page 72

மாதிரி விச்வாமித்ரரோட மிதிலைக்குப் போற வழில ராமர் பாதையில ஒரு கல்லை ஸஹஜமா மிதிச்சுண்டு போனார். அதுவே பாத மஹிமையால அதிசய ஸம்பவமாயிடுத்து! கல்லு ஸ்த்ரீயாச்சு! சாபமும் பாபமும் போய் அநுக்ரஹமும் பரிசுத்தமும் ஆச்சு!

"பாதம் வெறும் கல்லு மேலேதான் ஏறித்து. அயோத்யா ஸிம்ஹாஸனத்து மேலே ராமர் ஒரு நாளும் அந்தப் பாதத்தை வெச்சிருக்கமாட்டார். எந்த ராஜாவுமே தான் வெக்கமாட்டான். ஸிம்ஹாசனம் மாதிரியான அநேகம், அசேதனம் மாதிரி இருந்தாலும், அதுகளுக்கு உசிரேயிருக்கற மாதிரி கௌரவ ஸ்தானம் குடுத்திருக்கு மநுஷக் கால்னு எடுத்துண்டாலோ ஸர்வாங்கங்களிலேயும் அதுவே ரொம்பக் கீழா இருக்கறது. அதனால காலைக் கொண்டு போய் ஆஸனத்து மேலே வெக்கமாட்டா! ராமரே ஆட்சி நடத்தினப்போ பாதத்தை ஒரு நாளும் பரம கௌரதைக்குப் பாத்ரமான ஸுர்யவம்ச ஸிம்ஹாஸனத்து மேலே வெச்சிருக்கமாட்டார். ஆனா, அந்த ராமர் பட்டாபிஷேகம்'னு இன்னிக்கும் பண்றோம்! உபந்யாஸம் பண்றவாளுக்கு ஸ்ரீராம பட்டாபிஷேகம் ஸம்பாவனை வாங்கித் தரதுக்கு முந்தியே பாதுகா பட்டாபிஷேகம் வாங்கித் தந்துடறது!..."

சிறிது நேரம் எதையோ எண்ணித் தமக்குத் தாமே சிரித்தபடியிருந்த ஸ்ரீசரணர் அவ்வெண்ணத்தைச் சொல்லாக்கித் தொடர்கிறார். "இப்ப பல அண்ணா–தம்பிகள்

ஜோடியா உபந்யாஸம் பண்றா. இல்லாட்டா அண்ணா உபந்யாஸம் பண்றார்; தம்பி பின்பாட்டுப் பாடறார். இப்படியிருக்கறதுல ஸம்பாவனை பண்ற

@Page 73

கட்டங்கள்ல ரெண்டு பேருக்கும் பண்ண வேண்டி வரது. இதிலே அண்ணா–தம்பிகள் பரஸ்பரம் ஒதவி பண்ணிக்கறதா இல்லாம, ரொம்ப வித்யாஸமாவே நடந்துடறதுன்னும் கொஞ்சம் கேள்விப்படறேன். நல்லவேளை, ராமாயணத்தை எடுத்துண்ணா – இப்ப(வெ)ல்லாம் அநேக புராணதிகளில் உபந்யாஸங்கள் நடக்கறதுன்னாலும் அந்த உபந்யாஸங்களில பாதி அல்லது அதுக்கு மேலேயே ராமாயணந்தானே ? அதை எடுத்துண்டா – அதுல ஒரே ஒரு ராமபட்டாபிஷேகம் தான்னு இல்லாம, பாதுகா பட்டாபிஷேகம்னும் ஒண்ணு வந்து மனோ பேதம் ரொம்ப முத்திப்போகாம காப்பாத்திக் குடுக்கிறது! அதாவது அண்ணன்–தம்பிகளே ஒதவி பண்ணிக்காம, குடுமியைப் படிச்சுப்பாளோ–ங்கிற ஹேது ஏற்படாம அடிதான் பெரிய ஒதவியான ஸமாதானத்தைப் பண்ணி வெக்கறது.

"இத்தனை மஹறமை, இத்தனை ப்ரதாபம் பாதுகா ரூபத்திலே இருக்கப்பட்ட அந்த அடிக்கு!

"அதோட இன்னொரு ரூபத்துலயும் அதே அடி அந்த ராமாயணத்துல அண்ணன்–தம்பிகளுக்கு ரொம்ப ரொம்ப ஒதவி பண்ணியிருக்கு.

"மஹிமை–னாலே, ப்ரதாபம்–னாலே பக்தலோகம் பூரா அந்த ரூபத்தை, அந்த மூர்த்தையைத்தான் நினைக்கிறதாயிருக்கு! எதைச் சொல்றேன், யாரைச் சொல்றேன் (என்று) புரியறதோல்லியோ ?"

அநுமனைப் பற்றிச் சொல்வாரென எதிர்பார்த்த போது பரதனைப் பற்றிச் சொன்னார். இப்போதாவது அந்தப் பாத்திரத்திற்குப் போவாரா என்று வாசகர் எதிர் பார்க்கிறாரா ? 'அப்படிப் போகாமல் வேறேதோ சொன்னாலும் ஒன்றும் பெரிய குறையில்லை. அவர்தான் எதைச் சொன்னாலும் நம்மை நிறைவித்துவிடுகிறாரே!

@Page 74

இப்போது பரதனைப் பற்றி அவர் சொன்னதும் நிறையவே மதுர விருந்து படைக்கத்தானே செய்தது ? நூலாசிரியன் தான் இது அநுமன் விஷயம் என்று ஆரம்பத்திலிருந்து அநாவசியமாகச் சொல்லி அதை எதிர்பார்க்க வைத்துக்

குறையைச் சம்பாதித்துத் தருகிறான்' என்றே வாசகர் முணுமுணுக்கிறாரோ என்னவோ ?

பெரியவாளே! அசட்டுத்தனமாய் மாட்டிக் கொண்ட நூலாசிரியனை இப்போதாவது காப்பாற்றுங்களேன்!

ஆஹா! இதோ பளிச்சென்று காப்பாற்றுகிறார்!

மஹிமா மூர்த்தியாகத் தாம் சொன்னது எவரை என்று பளீரெனத் தெரிவிக்கிறார்!

"ஆஞ்ஜநேய ஸ்வாமியைத்தான்!

"மஹிமைக்கு, ப்ரதாபத்துக்கு, ப்ரபாவத்துக்கு அவரை மிஞ்சி ஒத்தர் இல்லே. **உல்லங்க்ய ஸிந்தோ: ஸலிலம் ஸலீலம்**–னு ஸமுத்ரத்தை விளையாட்டாத் தாண்டிப் போனது, அதைவிட இன்னும் பஹுதூரம் லங்கையிலேந்து ஹிமாசலத்துக்கு க்ஷணத்துல போய், அந்த 'ரேஞ்ஜு'லேந்து ஸஞ்ஜீவி பர்வதம்னு ஒரு மலையையே பூவைப் பறிக்கறாப்பல பறிச்செடுத்துண்டு க்ஷணத்துல திரும்பி வந்தது; ஒரு பக்கம் லங்காதஹணத்துலயும், அப்புறம் ராமசந்த்ரமூர்த்தி வானர ஸைன்யத்தோட வந்த ராவண ஸைன்யத்தோட யுத்தம் பண்ணினப்பவும் லக்ஷக்கணக்கான சத்ருக்களை ஹதாஹதம் பண்ணி உயிரிழக்கப் பண்ணினது; இன்னொரு பக்கம் ஸஞ்ஜீவி மலையைக் கொண்டு வந்து லக்ஷக்கணக்கான வானராளை உயிர்ப்பிச்சது; ப்ராணஹத்தி பண்ணிக்க இருந்த ஸாக்ஷாத் ஸீதைக்கே ராமரோட அங்குளீயத்தைக் குடுத்துப் புத்துயிர் ஊட்டினது; அதே மாதிரி அவளைப் பத்தித் தெரியாமத் தவிச்சுண்டிருந்த ராமருக்கு அவளோட சூடாமணியைக் குடுத்து உத்ஸாஹ புருஷரா, வீரராகராப் படையெடுக்க

@Page 75

வெச்சு, யுத்தத்திலே அவருக்கு விசேஷமாப் பக்கபலம் குடுத்து விஜயராகவரா அவர் வெற்றி காண வெச்சது; ஸரியா ஸீதை தூக்குப் போட்டுக்க இருந்த ஸமயத்துலயே அவளுக்கு சுபச்சேதி சொல்லி ரஷிச்சாப்பலயே பரதன் (பதிநாலாண்டு வனவாஸம் முடியும் தருணமாயினும் ராமபிரான் அயோத்தி திரும்பாததால்) அக்னி ப்ரவேசம் பண்ண இருந்தப்ப, அந்த ஸமயம் தப்பாம அவனுக்குச் சுபச் சேதி சொல்லி ரக்ஷச்சதுன்னு... இன்னும் இப்படி எத்தனையோ சொல்லிண்டே போகலாம். அந்த மஹிமையைப் பத்தி! 'ஆஞ்ஜநேய மஹிமை',

'ஆஞ்ஜநேய ப்ரபாவம்'னே உபந்யாஸம் பண்றாளே, கேட்டா அதிசயமா இருக்கும்! ஒவ்வொரு ராமாயணத்துலயும், மத்த இதிஹாஸ புராணங்களிலேயும் அத்தனை அதிசயக் கதைகள் அவரைப் பத்தி வரது.

"அவதார கட்டத்துலேந்தே அந்த ப்ரபாவம் ஆரம்பிச்சுடறது. பிற்பாடு அவர் பாரத தேசத்துத் தென் கோடியிலேந்து லங்கைக்குத் தாண்டினதும், லங்கையிலேந்து பாரதத்து வடகோடிக்கே to and fro–ன்னு ரெண்டு பக்கமும் தாவினதும் இருக்கட்டும்; பொறந்தவுடயேயே இதையெல்லாம்விட எத்தனையோ மடங்கு தூரம், பூமண்டத்துலேந்து ஸூர்ய மண்டலத்துக்கே ஒரே தாவாத் தாவினார்–னு உத்தரகாண்டத்துல வரது. செக்கச்செவேல்னு உதிக்கற ஸூர்யனை பாத்து ஏதோ பழமாக்கும், அதைத் தின்னணும்னு பச்சைக் கொழந்தையாயிருந்த ஆஞ்ஜநேய ஸ்வாமி அப்படித் தாவினார்–னு அவர் சரித்ரத்தை அகஸ்த்ய மஹர்ஷி சொல்ற எடத்துல இருக்கு. அப்பறமா உதயகிரியிலேந்து அஸ்தகிரி வரை ஸூர்யனுக்கு எதிர்முகமாவே போய், ஆசார்யருக்கு எதிர்முகமா சிஷ்யாள் இருந்துண்டு உபதேசம் கேட்டுக்கற க்ரமப்படி அவர் ஸூர்யன்கிட்டயிருந்து வ்யாகரண சாஸ்த்ரம் பூராவையும் கத்துக்கிண்டார்–னும் அதிசயம் அதிசயமா அநேகம் அவரைப் பத்தி அங்கே சொல்லியிருக்கு.

@Page 76

"ஸரி, அவருக்கும் அடி ஓதவறதுக்கும் என்ன ஸம்பந்தம்?

"ரொம்ப ஸம்பந்தமிருக்கு. வைஷ்ணவ பரிபாஷைல அவருக்கு ப்ரஸித்தமான பேரு என்ன? **சிறிய திருவடி**–ங்கறதுதானே? ஆசார்யாளை பகவத்பாதாள்–ங்கிறாப்பலயே இன்னம் ரெண்டு பேரையும் பகவானோட பாதஸ்வரூபமாவே சொல்றது வழக்கம். ஒண்ணு, 'பெரிய திருவடி'ங்கிற கருட பகவான். ரெண்டாவது 'சிறிய திருவடி'ங்கிற ஆஞ்ஜநேய ஸ்வாமி. அவதாரங்களுக்கெல்லாம் மூலமாயிருக்கிற மஹாவிஷ்ணுவையே தாங்கிண்டு, அவரோட திருவடிகளைத் தன் கையில் தாங்கிண்டு பறந்து போய், அவர் சிஷ்டரக்ஷணமும், துஷ்டசிக்ஷணமும் பண்ணப் பரமோபகாரம் பண்றவர் கருடன். அதனாலேயே அவரைப் 'பெரிய' திருவடி–ன்னு சொல்றது. வயஸுலயும் அவர் ஹநுமாருக்கு ரொம்பப் பெரியவர் தானே? அநாதியா இருக்கிற மஹாவிஷ்ணுவுக்கு அந்த அநாதிக் காலத்திலேயிருந்தே வாஹனமா இருந்திருக்கறவராச்சே! அதனால பெரிய திருவடி பின்னால, ராமாவதார ஸமயத்துல அவதாரம் பண்ணின ஆஞ்ஜநேயர் சிறிய திருவடி யுத்தத்துல அப்பப்போ அவரும் ராமரைத் தோளிலேயே தூக்கிண்டு போனதும் உண்டு. அப்பப்போதான்; கருடன் மாதிரி ஸ்வாமி ப்ரயாணப்படற காலம் பூராவும்

இல்லே. 'பாரப்ருத்'னு ஸஹஸ்ரநாமதுல சொல்லியிருக்கறபடி ஸர்வலோகங்களோட பாரத்தையும் தாங்கிண்டிருக்கற மஹாவிஷ்ணுவோட பாரத்தையே தாங்கிண்டு பறக்கறதால கருடபகவானுக்கு ரெண்டு திருவடிகள்ல மொதல் ஸ்தானம். ஆதிசேஷனும் பகவானைத் தாங்கறார். ஆனாலும் அவர் இருந்த இடத்துலயே இருக்கறவர். கருடன் தானே தாங்கிக்கறதோட, அவரைத் தூக்கிண்டு வேகவேகமாப் பறந்தும் போறவர்... ?

@Page 77

"ஸ்ரீராம பட்டாபிஷேகத்துக்கு அப்பறம், வெளிக்கார்யத்துல போகாத வேளை பூராவும், ஸதாஸர்வகாலமும் ராமரோட திருவடிகளைப் பிடிச்சுண்டுதான் ஆஞ்ஜநேயர் ஒக்காந்துண்டிருப்பார். தஞ்சாவூர் படத்துல அப்படித்தான் போட்டிருக்கும். திருவடியைப் பிடிச்சுப் பிடிச்சு (மோஹன நகையுடன் ஸ்ரீசரணர் கூறுகிறார்) அதுவே ரொம்பப் 'பிடிச்சுப்' போய், அந்தப் பிடிமானத்துல அதாவே (அதாகவே) ஆயிட்டவர் ஆஞ்ஜநேய ஸ்வாமி!

"நாம நடக்கறதுக்கு அடிதானே ஒதவறது ? அப்படி, ப்ரபுவான ராமரோட ஸகல கார்யமும் நடக்கறதுக்கு ஒதவியா இருந்த திருவடியா ஆஞ்ஜநேயர் இருந்தார்!

"பகவத் பாதத்திலேந்துதான் **'விச்வா பூதாநி'**ன்னு ஸமஸ்தலோகமும், அதிலே இருக்கற உயிர்களும் உண்டாச்சுன்னு புருஷஸூக்தத்துல இருக்கு. அதுலயே நாலு வர்ணகளும் – நாலு 'ஜாதி'ன்னு நாம சொல்றமே, அந்த நாலும் – பகவானோட எந்தெந்த அவயவத்துலேந்து உண்டாச்சு–ன்னும் வரது. பிறத்தியாருக்குத் தொண்டு செய்யறதுக்காவே ஜன்மா எடுத்திருக்கிற மஹா பாக்யசாலிகளான நாலாவது வர்ணத்தார் பகவானோட பாத ஸ்வரூபமாகவே உண்டானவா–ன்னு அங்கே வரது. அதாவது திருவடியே விச்வமாவும் இருக்கு; விச்வத்துக்குத் தொண்டு செய்கிறவாளாயும் இருக்கு! எது பெரிசு–ன்னு அவ்வையார் ஒண்ணைக் காட்டிலும் ஒண்ணு பெரிசாப் பெரிய லிஸ்ட் குடுத்துப் பாடிண்டு போயிருக்கா. **'புவனம் பெரியது'**–ன்னு விச்வத்துலயே ஆரம்பிச்சு, **'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!'**ன்னு முடிச்சிருக்கா. புருஷஸூக்த வசனத்துக்கு அந்தக் கெழ ஸ்த்ரீயோட ஸூக்தம் பொருந்தறது! 'ஸூக்தம்'–னா 'நல்லதாகச் சொல்லப்பட்டது', நல்வாக்கு; 'ஸு'–நல்லது; 'உக்தம்'– சொல்லப்பட்டது.

@Page 78

"ஆஞ்ஜநேய ஸ்வாமி **'ஸர்வம் ராமமயம் பச்யந்தம்'**னு விச்வம் பூராவையும் ராம

ஸ்வரூபமாகப் பாத்தவர்; அந்த ராமரோட தொண்டர்களுக்கெல்லாம் நாயகமா 'ராமதாஸன்'னே பேர் பெத்தவராயும் இருந்தவர்! அவரே விச்வரூபமும் எடுத்திருக்கார்! ராமர் விச்வரூபம் எடுத்ததில்லே! ராமதாஸர்தான் எடுத்திருக்கார்! அதே மாதிரி, இவர்தான் ஸமுத்ரத்தை ககன மார்க்கமாப் பறந்து போய் நிமிஷத்துல தாண்டினாரே தவிர ராமர் எத்தனையோ வானராளோட ப்ரயாஸை–ப்ரயத்னங்களால கஷ்டப்பட்டு அணை கட்டிக்கிண்டுதான் அதுமேலே நடந்து போய் லங்கையை அடைஞ்சார். அதுதான் 'தொண்டர்தம் பெருமை'! ஆஞ்ஜநேய மஹிமை!

"ஆனாலும் 'சிறிய' திருவடி–ன்னு 'சிறுமை'யைக் காட்டிண்டு பேரு! இந்தச் சிறுமையே பெரிய பெருமைதான்! பிறத்தியார் சிறுமைப் படுத்தினா அதுதான் தாழ்த்தியான சிறுமை; நாமே சின்னவாளா சுருக்கிண்டு இருந்துட்டா அந்தச் சிறுமையே பெரிய பெருமை! அடக்கம் அமரருள் உய்க்கும்–னு வள்ளுவர் சொல்லியிருக்காப்பல, தேவத்வத்தையே தருகிற சிறுமை இது! பிறத்தியார் பண்ணினா, humiliation; லஜ்ஜைப்பட்ட வேண்டிய விஷயம்! நாமே பண்ணிண்டா, humility; குணசீலத்துலே விசேஷமான விநய ஸம்பத்..."

தம் மஹிமையைச் சுருக்கியே வாழ்ந்த ஸ்ரீசரணர் சொல்லின் செல்வராக அரிய கருத்துக்களைச் சுருங்கக் கூறுவதில் பெற்றிருந்த திறனுக்கு இந்த வாசகங்களும் ஓர் அத்தாட்சி.

"ஆஞ்ஜநேய ஸ்வாமி அப்படித்தான் அடக்கத்துலயும் அடக்கமாயிருந்தவர். ஸர்வலோகத்தையும் கிடுகிடுன்னு நடுங்கவெக்கற பராக்ராமசாலியா இருந்த அவரே இப்படி

@Page 79

விநய ஸ்வரூபமா ராமருக்கு தாஸ்யம் (தொண்டு) பண்ணினதுதான் ரொம்ப விசேஷம், ரொம்ப ஆச்சர்யம்! இது அவராவே இஷ்டப்பட்டு ஏற்படுத்திண்ட சிறுமை. 'ஏற்படுத்திண்டார்'–ங்கறதுகூட ஸரியில்லே! ஸ்வாபாவிகமாகவே (தன்னியற்கையாகவே) 'பகவதவதாரத்துக்கு முன்னாடி தன்னோட ப்ரதாபத்துக்குக் கொஞ்சமும் எடமில்லே அந்த ப்ரதாபம் அத்தனையும் அவர் போட்ட துளிப் பிச்சைதான்'–னு feel பண்ணி, அதனால சின்னவராயிருந்தவர் அவர்....

"விச்வரூபம் எடுத்தவரே கொசு ப்ரமாணமா தம்மைச் சிறிசு பண்ணிண்டும் இருக்கார். எப்போ–ன்னா, அவர் ஸமுத்ரத்தைத் தாண்டிப் போனாரோன்னோ? அப்போ... அவர் பலவான் மட்டுமில்லை... பலவானா மட்டும் இருந்தா விபரீதந்தான்.

தனக்கும் விபரீதம்; லோகத்துக்கும் விபரீதம்! புத்திமானா இருந்துண்டு லோகத்துக்கு ரெண்டுக்குமே க்ஷேமம். ஆஞ்ஜநேய ஸ்வாமி அப்படி இருந்தவர்தான். அவர் பக்தாளுக்கு என்னென்னல்லாம் தரார்னு சொல்றப்பவும், 'புத்தி:பலம்'—னு மொதல்ல புத்தையைச் சொல்லிட்டு அப்பறந்தான் பலத்தைச் சொல்லியிருக்கு."

"அவர் அப்படி (புத்திமான், பலவான் என்ற) ரெண்டாவும் இருந்தவர்—ங்கறதைக் கண்ணுக்கு மெய்யாப்

* ஸ்ரீசரணர் குறிப்பிடும் ச்லோகம்:
புத்திர் – பலம் – யசோ – தைர்யம் – நிர்பயத்வம் – அரோகதா
அஜாட்யம் –வாக்படுத்வம் ச ஹநூமத் ஸ்மரணாத் பவேத்.
'ஹநுமாரை ஸ்மரிப்பதால் நல்ல புத்தி, பலம், கீர்த்தி, தைரியம், பயமின்மை, நோயின்மை, சோம்பலின்மை, வாக்குத்திறன் ஆகியன உண்டாகும்.

@Page 80

பாத்து ஸந்தோஷப்படணும்னு தேவாள், தேவரிஷிகள்லாம் ஆசைப்பட்டுண்டு ஒரு 'டெஸ்ட்' வெச்சா. அவா, அவர் போறவழியில நாகாளோட – அதாவது பாம்பு ரூபத்திலே, ஸமுத்ரத்துக்கு அடியில நாகலோகத்துல வஸிக்கிற ஜாதிக்கு நாகாள், நாகர்கள்—னு பேரு. அவாளோட – அம்மாவான ஸுரஸை—ங்கறவகிட்ட, 'நீ ஆஞ்ஜநேயர் ஸமுத்ரத்து மேலே பறந்து போற வழியில ப்ரம்மாண்டமா ராக்ஷஸி ரூபம் எடுத்துண்டு போய்க் குறுக்கே நில்லு. அவர் வரச்சே அவர்கிட்ட, 'இந்த வழியிலே போறவா என் வாய்க்குள்ளே பூந்துதான் ஆகணும்; எனக்கு அவாளை பக்ஷிக்கறதுக்கு அதிகாரம் உண்டு'ன்னு ப்ரம்மாவே வரம் குடுததிருக்கார்—னு சொல்லிட்டு, வாயைப் பொளந்துண்டு நில்லு. அவர், தான் ஈடுபட்டிருக்கற ராம கார்யத்துக்கு விக்னமோ, க்ஷணமும் தாமஸமோ உண்டாகப்படாது—ஙனனு, ஒன் பேச்சைப் பொருட்படுத்தாம, தம் போக்கில பறக்கணும்னுதான் நினைப்பார். அதை ஸாதிக்கவும் ஸாதிச்சுடுவார்'.... **'அஸாத்ய ஸாதக ஸ்வாமி'**—ன்னே அவருக்கு ஒரு பேரு... 'அதனால ஒனக்குப் பதில் குடுத்துண்டு நிக்காம அவர் தம் கார்யத்தை ஸாதிச்சுண்டுடுவார். ஆனாலும் நீ ப்ரம்மாகிட்ட இப்படி வரம் பெத்திண்டிருக்கே—ங்கிறதால அதையும் மதிச்சு, ஒனக்கு எந்த ஹானியும் பண்ணாமலே தன் கார்யத்தையும் முடிச்சுப்பார். அந்த புத்தி சாதுர்யம் அவருக்கு உண்டு எப்படி அந்த புத்தியை ப்ரயோகிச்சு அவர் முடிச்சுக்கறார்—னு பாக்கணும்னு எங்களுக்கு ஆசை. அதை நிறைவேத்தித் தரதுக்கே ஒன்னைக் கேட்டுக்கிறோம்'னு சொன்னா.

"அவளும்(ஸுரஸையும்) அதே மாதிரி அவரை வழி மறிச்சு, விஷயத்தைச்

சொல்லி, வாயைப் பெரிசா பொளந்துண்டு நின்னா, எவ்வளவு பெரிசு தெரியுமோ ?

@Page 81

பத்து யோஜனை நீளம், பத்து யோஜனை அகலம்! ஒரு யோஜனை–ன்னா ஒம்பது மைல். ஒடனே ஹநுமார் இருபது யோஜனையா வளந்துட்டார்! அதுக்காக அவ அசந்து போய் விட்டுக்குடுத்துடலை. வாயை முப்பது யோஜனை விஸ்தாரமாத் தெறந்துண்டா. இவரும் அசராம நாப்பது யோஜனையா வ்ருத்தியானார். டக், டக்னு ஸ்விட்சைப் போட்டு லைட் எரியற வேகத்துல இப்படி ரெண்டு பேரும் மாத்தி மாத்திப் பண்ணிண்டே போனா, அவ தொண்ணூறு யோஜனைக்கு வாயைத் தெறந்துண்டப்ப, 'ஸரி, இந்த மீணீநீமீவீநீஉ ப்ரயோஜனம் இல்லை'ன்னு அவர் க்ஷணத்துல யோஜனை பண்ணி (தமது வார்த்தை விளையாட்டில் ஸ்ரீசரணர் தாமே குழந்தைக் குதூஹலத்துடன் மகிழ்ந்து தொடர்கிறார்:) மூணு யோஜனை சொல்லிட்டேன்: நீட்டலளவு யோஜனை ஒண்ணு, அதுக்கு மாத்தி வழி ப்ர'யோஜனம்' இல்லைங்கறது ரெண்டாவது; வேறே வழியை அவர் 'யோஜிச்சது' மூணாவது!… அப்படி யோஜிச்சு, ஒடனே வழி கண்டுபிடிச்சுட்டார். அப்பத்தான், விச்வாகாரமா தொண்ணூறு யோஜனை ஒசரத்துக்கு நின்னவர் கண்மூடிக் கண் தெறக்கறதுக்குள்ளே கொசு அளவாத் தம்மைச் சிறிசு பண்ணிண்டு அவ வாயில பூந்துட்டார். பூந்துட்டு, நாஸி த்வாரமோ, ச்ரோத்ர த்வாரமோ (மூக்குத் துவாரமோ, அல்லது காதுத் துவாரமோ) ஏதோ ஒண்ணு வழியா வெளில வந்து, தன் வழியில போயே போய்ட்டார்! பலவான் புத்திமானாக் கார்யம் ஸாதிச்சுண்டுட்டார்!

"ரூபத்துல அப்படி விச்வாகாரம், அணுமாத்ரம்னு ரெண்டுமா இருந்தவர், ப்ரதாபத்துல விச்வாகாரமாயிருந்தாலும் குணசீலத்தினால அதை அணு மாத்ரமா அடக்கிண்டு ராமதாஸனா, இருந்த எடம் தெரியாம, அத்தனைச் சின்னவரா இருந்தார்.

@Page 82

"சிறுமைதான் அவருக்குப் பெருமை–ன்னு இப்பப் புரியறதோல்லியோ ?"

"எப்பேர்ப்பட்ட பெருமை! அந்த விசேஷத்தினாலதான் ராமாயணம் தோணின த்ரேதா யுகத்திலேந்து இன்னி வரைக்கும் ராமாயணம் ஸப்த காண்டத்துலேயும் அதிவிசேஷமா அவரோட ப்ரபாவம் விரியற ஸுந்தரகாண்டமே பாராயண க்ரந்தமா இருந்துண்டிருக்கு. கதாநாயகரும், லோக நாயகருமான ராமசந்திர மூர்த்தியோட பல விதமான ப்ராதபப் பெருமை, குணசீலப் பெருமை ரெண்டும் ப்ரகாசிக்கிற மத்த ஆறு

காண்டத்தையும் விட்டுட்டு, அவருக்கு ஒரு பார்ட்டும் இல்லாம, கடைசியில மட்டும் அவர் கொஞ்சம் தலை நீட்டற 'ஸுந்தர காண்டம்' ஒண்ணையே பாராயணம் பண்றதா இருக்கு! அது முழுக்க முழுக்க ஹநுமாரோட அந்த ரெண்டு தினுசுப் பெருமையும் கொழுந்துவிட்டு ப்ரகாசிக்கற காண்டமாவே இருக்கு. கடைசியிலதான் ராமர் கொஞ்சூண்டு தலை நீட்டறார். அப்ப ஆஞ்ஜநேய ஸ்வாமி அந்தப் பெருமை ரெண்டையும் ஒரே அடக்கலா அடக்கிண்டு, தான் ஸாதிச்ச அத்தனை கார்யமும் அவர் போட்ட பிச்சை–னுத் தன்னைச் சிறிசு பண்ணிக்கிறதோட அழகா முடியறது. முடிவு மட்டுமில்லை; ஆரம்பம், மத்தி, முடிவு எல்லாமே அத்தனை அழகா அந்தக் காண்டம் இருக்கறதாலதான் அதுக்கு ஸுந்தர காண்டம்–னே பேர் இருக்கு! பரம ஸௌந்தர்யமான ராமர்–ஸீதைகள் வர காண்டங்களுக்கு 'ஸுந்தர'ப் பேர் இல்லாம, குரூபக் கொரங்கு–ன்னு சொல்லக்கூடியவர் வர காண்டமே அப்படிப் பேர் பெத்திருக்கு! ரூபத்துக்கு முக்யமேயில்லாம அடிச்சுத் தள்ளிடற ப்ரதாப ஸுந்தரமும், குணசீல ஸுந்தரமுந்தான் அந்தப் பேரைப் பெத்துத் தந்திருக்கு. இந்த ரெண்டு ஸௌந்தர்யமும் உள்ளவா, அங்க லக்ஷணப்படி எத்தனை குரூபமாயிருந்தாலும் அது கண்ணுக்குத் தெரியாம, அவாளோட

@Page 83

பாதாதி கேசம் ஸர்வாங்கமும் ஒரு பரம ஸுந்தரமான சோபை கெட்டி முலாம் பூசி, அவா ரூபத்திலேயும் ஸுந்தரமாத்தான் தெரிவா! ஆஞ்ஜநேய ஸ்வாமி அப்படிப்பட்ட ஸுந்தர மூர்த்தியாத்தானே நமக்குத் தெரியறார்?

"ந்யாயமாப் பாத்தா வால்மீகி மஹர்ஷி அந்த காண்டத்துக்கு ஆஞ்ஜநேய காண்டம்னுதான் பேர் வெச்சிருக்கணும்னு தோணும். பின்னே ஏன் அவர் அப்படிப் பண்ணலை–ன்னா, ஆஞ்ஜநேயரோட குண ஸௌந்தர்யம் அவருக்கு நன்னாத் தெரிஞ்சிருந்ததாலே தான் அவர் பேரை வைக்கலை. சிறிசா இருக்கறதையே பெரிசா மதிச்ச அவர் 'ஸாக்ஷாத் பகவான், ராமசந்திர ப்ரபு – அவரோட கதையில அல்பத்திலேயும் அல்பமான தம் பேரிலே ஒரு காண்டமா?'ன்னு தவிக்கத்தான் தவிப்பார்–னு வால்மீகிக்குத் தெரியும். அவரோட அந்த உத்தமமான feelingஐ respect பண்ணித்தான் அவர் பேரைப் போடாம, 'ஸுந்தர'ன்னு போட்டார்.

"இதுல ஒரு ஸூக்ஷ்மம் என்னன்னா ஆஞ்ஜநேயரோட அம்மா இருந்தாளே, அஞ்ஜனை–ன்னு – 'ஆஞ்ஜநேயர்' –ங்கிற பேருக்கே 'அஞ்ஜனையின் வழிவந்தவர்' அஞ்ஜனை புத்ரர்'னுதான் அர்த்தம். அப்படி இந்தப் புத்ர பாக்யத்தைப் பெத்த அந்த அம்மா – தன் மனஸுக்குள்ளே அவரை நெனைச்சக்கறச்சேயெல்லாம், 'ஆஞ்ஜநேயர்', 'ஹநுமார்', 'மாருதி' –ங்கிற எந்தப் பேரையும் நெனைக்காம,

'ஸுந்தரன்', 'ஸுந்தரன்' –னேதான் நெனைச்சுப்பாளாம்! 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'–ன்னு சொல்றது. இவரோ நெஜமாவே குணம், பராக்ரமம் ரெண்டுலேயும் பொன்னாயிருந்து, ரூபத்துலயும் அந்த முலாம் நன்னா ஏறி 'காஞ்சிநாத்ரி கமநீய விக்ரஹம்' (மேருவாகிய பொன்மலை போல் மனதைத்தைக் கவரும் திருவுருவம் பெற்றவர்)–னு ஸ்தோத்ரிக்கப்படுகிறவர்.

@Page 84

அதனால, அவரோட மஹிமையைச் சொல்ற காண்டத்தைக் கேட்டு எல்லாரையும்விட ஸந்தோஷப்படக் கூடிய, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கக் கூடிய அந்தத் தாயின் மனஸு குளிர்கிற மாதிரி, அவளோட ஸ்மரணையில அவருக்குப் பேரா இருக்கற 'ஸுந்தர'–ங்கிறதையே காண்ட headingஆ (வால்மீகி) போட்டுட்டார்! அந்தக் காண்டத்துல ஆஞ்ஜநேய ஸ்வாமி காட்டின ஸௌந்தர்யமெல்லாம் கடைசில ராமபாதத்துல சிறுசா அடங்கற ஸௌந்தர்யத்திலேயே முடியறதாப் பூர்த்தி பண்ணி, அவரைச் 'சிறிய' திருவடியாவே வால்மீகி தர்சனம் பண்ணி வைக்கிறார்.

"எல்லாம் ஸரி! இந்த அடி அண்ணன் தம்பியை விட ஒதவி பண்ணினது எப்போ ?"

6

"ரொம்பவும் ஆபத்தான ரெண்டு ஸந்தர்ப்பத்துல அந்தச் சின்...ன திருவடிதான் ஒதவி பண்ணித்து. ஸந்தர்ப்பத்தை மொதல்ல பாத்துடுவோம். அதுல, லோகத்துக்கெல்லாம் ஜீவாதாரமா இருக்கப்பட்ட ராமசந்த்ர மூர்த்திக்கே – 'லீலா மாநுஷ வேஷம்'னு அவர் போட்டுண்டு கூத்தடிச்சதுல – ஆபத்து! ஆபத்தையெல்லாம் அபஹரிப்பவர், 'ஆபதாம் அபஹர்த்தாரம்'–னே யாரை ஸ்தோத்ரம் பண்றோமோ, அவரோட பிரக்ஞைக்கே ஆபத்து வந்து, அவர் ஸ்மரணை இல்லாம கெடக்கறபோது அவரோட ஆபத்தையும் அபஹரிச்ச மஹா பெருமை அந்த அடிக்கு, சிறிய திருவடிக்குத்தான்!

@Page 85

" 'அப்ப இணை பிரியாத் தம்பி, 'இளைய பெருமாள்'ங்கிற லக்ஷ்மணர் ஒதவி பண்ணாம என்ன பண்ணிக்கிண்டிருந்தார் ?'னு கேட்டா அவரும் ப்ரஜ்ஞை தம்பிக் கட்டையாட்டமாத்தான் கெடந்தார். அண்ணாக்காரரும் அவருக்கு உதவ முடியாம அதே 'ஸ்டேஜ்'ல இருந்தார்.

" 'எப்ப ? என்ன கதை ?'–ன்னா…", தொண்டையைச் சரி செய்து கொண்டு, நாம் பேசிப்போகையில் சரியாகவே உள்ள தொண்டையை ஏதேனும் முக்யமான விஷயம் வந்தால் மேலும் 'சரிப்பண்ணி'க் கொள்வோமே. அப்படிச் செய்து கொண்டு ஸ்ரீசரணர் தொடர்கிறார்.

"ராவணனுக்கு ஆறு புத்ராள். இந்த்ரஜித். எல்லாருக்கும் தெரியும். இன்னும் அஞ்சு பேர் – அக்ஷகுமாரன், தேவாந்தகன், நராந்தகன், த்ரிசிரஸ், அதிகாயன்–னு ஸீதைக்கு ஹநுமாரை ராமர் தூது அனுப்பிச்சப்போ, அவரை அசோகவனத்துலேந்து ராக்ஷஸ வீராள் விடிச்சுண்டு போனாளோன்னோ ? அப்பவே அவர் அக்ஷகுமாரனை 'க்ளோஸ்' பண்ணிட்டார். அதாவது, ராமாயணத்துல ராவணனோட வம்ச நாசத்துக்கு அவர்தான் (சிரித்து) 'திறப்பு விழா'ப் பண்ணினது! அப்பறம், ராமர் வானர ஸைன்யத்தோட லங்கைக்கு வந்து ராக்ஷஸாளோட யுத்தம் நடந்தப்பவும் தேவாந்தகன், த்ரிசிரஸ் ரெண்டு பேரையும் ஹநுமார் வதம் பண்ணினார். (ராவண புத்ரர்களாகிய) ஆறு பேர்ல பேர்பாதி அவராலதான் ஸமாப்தி. அதிகாயனையும் இந்த்ரஜித்தையும் லக்ஷ்மணர் வதம் பண்ணினார். இந்த்ரஜித் வதம் பின்னாடி. அதுக்கு முந்தி தேவாந்தக–நராந்தகாள், த்ரிசிரஸ், அதிகாயன்–ங்கற நாலு பேரும் அடுத்தடுத்து யுத்தத்துக்கு வந்து, வந்தாளே தவிர திரும்பிப் போகாம, கதையை முடிச்சுண்டா, அடுத்தடுத்து–ன்னு நான் சொன்னாலும் அந்த 'ஆர்டர்'ல இல்லைன்னு நினைக்கறேன்…."

@Page 86

ஸ்ரீசரணர்தாம் அப்பழுக்கின்றி ஒன்றைச் செய்வதில், சொல்வதில் எப்பேர்ப்பட்ட தேர்ச்சி பெற்றிருந்தார் ? அதாவது அவர் எப்பேர்ப்பட்ட Perfectionist ? தாம் சொல்வதில் மிகச் சிறிய imperfection வந்தாலும், உடனே கவனமாக அதை ஸபையில் விண்டு காட்டும் திறந்த மனம் கொண்ட perfectionist! இங்கு அதற்கே எடுத்துக்காட்டுக் காண்கிறோம். அவர் சொன்ன 'அந்த ஆர்டல இல்லைன்னு' அவர் நினைத்தது போலவே முதலில் நராந்தகன், அடுத்து தேவாந்தகன், மூன்றாவதாக த்ரிசிரஸ், கடைசியில் அதிகாயன் என்ற 'ஆர்ட'ரிலேயே அந்நால்வர் போருக்கு வந்து மடிந்தது. நராந்தகனை வாலிகுமாரனான அங்கதன் வதம் செய்தான்.

"அடுத்தடுத்து நாலு பிள்ளைகள் போனதுல ராவணன் ரொம்பக் கலங்கிப் போய்ப் பொலம்ப ஆரம்பிச்சுட்டான். பாக்கியிருந்த இந்த்ரஜித் சூராதி சூரப்பிள்ளை; சூரத்தனத்தோட பயங்கரமா ஹோமாதிகள் வேறே பண்ணி சத்ரு ஸம்ஹாரம் பண்றதுக்கு அபூர்வமான, ஆச்சர்யமான சக்திகள் பெத்தவன்.

பொலம்பிக்கிண்டிருந்த அப்பாவைத் தேத்தி (தேற்றி) உத்ஸாஹப்படுத்திட்டு, ராமரை ஸஸைன்யம் (அவரது சேனை முழுவதுடனும்) தீர்த்துக் கட்டிடறது—ன்னு தீர்மானம் பண்ணிண்டு யுத்தத்துக்கு வந்தான். நாலு ஸஹோதராளை வாரிக்குடுத்துல, பழி தீத்துக்கணும்—கிற வர்மமும் வஜ்ராமச்சேர்ந்ததால, எப்பவும் காட்டற சூரத்தனத்துக்கு மேலே ப்ரளய கால ருத்ரனாவே யுத்தம்பண்ணி வானர ஸைன்யத்தைக் கொன்னு குவிச்சான்.

"முடிவா, மஹா சக்தி படைச்ச ப்ரம்மாஸ்த்ரத்தை ப்ரயோகம் பண்ணிட்டான்.

"என்ன கவனிக்கணும்னா அப்ப அவன் குறிப்பா யாரோடேயும் யுத்தம் பண்ணலை. ஸாதாரணமா எப்படி

@Page 87

வழக்கம்? ஒரு வீரன் சத்ரு பக்ஷத்துல இருக்கற இன்னொரு வீரனோட சண்டை போட்டு அஸ்த்ர—சஸ்த்ர ப்ரயோகம் பண்றதுதானே?.. 'சஸ்த்ரம்'கிறதுதான் ஆயுதம்; வெறும் ஆயுதம். 'அஸ்த்ரம்'கிறது மந்த்ரபூர்வமா ஒரு தேவதையோட சக்தியையும் சேர்த்த ஆயுதம். ஆயுதத்தோடதான் – அதாவது 'போர்க்கருவி'ன்னே சொல்றதோடதான் – இப்படி தேவதா சக்தியைச் சேத்துப் பிரயோகிக்கணும்—னு இல்லே. எந்த வஸ்துவிலே வேணாலும். ஒரு புல்லிலே கூட அந்த சக்தியை அபிமந்த்ரிச்சு ப்ரயோகம் பண்ணலாம். காகாஸுரன் மேலே ராமர் ஒரு தர்ப்பைப் புல்லைத்தான் அந்த மாதிரி விட்டார். ஆனாலும் பொதுவா, ஆயுதமாவே இருக்கிற ஒண்ணைத்தான் அப்படி அஸ்த்ரமாப் பண்ணி, விடறது... ஒரு வீரன் எதிரி கட்சியிலே குறிப்பா அதே மாதிரி இன்னொருத்தனோட அஸ்த்ர—சஸ்த்ர ப்ரயோகம் பணிண சண்டை போடறதுதான் பொது வழக்கம். அப்ப ரொம்ப சக்தி வாஞ்ச (வாய்ந்த) திவ்யாஸ்த்ரங்களைவிட்டா, அந்த ஒரு சத்ருவை மட்டுமில்லாம, சத்ரு ஸைன்யம் பூராவையுமே அது பாதிக்கறதுண்டு, நேருக்கு நேரா எதிர்க்கற ஒத்தனுக்குப் பெரிய பாதிப்பாவும், மத்தவாளுக்கு ஓரளவு பாதிப்பாவும் இருக்கும்.

"இப்ப இந்த்ரஜித் ப்ரம்மாஸ்த்ரம் போடறச்சே என்ன பண்ணினான்—னா ராமர்தான் முக்யமான சத்ரு, அதுக்கப்புறம் தன் தம்பிமாரைக் கொன்ன ஹநுமார், லக்ஷ்மணன்—னு அவனோட vengeance—குக் குறிப்பாப் பாத்ரமாயிருந்தாலும், அவா மட்டுமில்லாம அவாளோட ஸைன்யம் பூராவையுமே ஸர்வ ஸம்ஹாரமாப் பண்ணிடறது—ன்னு ஒரே உத்தண்டமா சீறிக்கிண்டு... அதுக்கு எவ்வளவு மந்த்ரபலம் வேணும்? அவ்வளவையும் ஹோமங்கள் பண்ணி ஸம்பாதிச்சுக்கிண்டு.. ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் போட்டான்.

@Page 88

"தான் குறிப்பா எந்த ஒத்தரையும் தாக்காத மாதிரியே தன்னையும் எவரும் தாக்க முடியாம, தான் பெத்திருந்த அபூர்வமான சக்திகளில ஒண்ணான திரஸ்கரிணி–ங்கிற மாயா சக்தியினால, எவர் கண்ணுக்கும் தெரியாம மறைஞ்சிருந்தே அஸ்த்ரம் போட்டான்.

"இப்ப(வெ)ல்லாம் Warfare–னு இருக்கறதுல தர்ம யுத்தம்–அதர்ம யுத்தம்னு பாகுபாடே இல்லாம என்ன வேணாப் பண்ணி எதிரியைத் தொலச்சுடலாம்னு வெச்சுண்டிருக்கா. குறிப்பா இன்னாரோட சண்டைன்னே இல்லாம, War-field–ல war-service–ல இருந்த எல்லார் மேலேயும், அஸ்த்ர ப்ரயோகம் பண்றதைவிடவும் கோரமா, அதர்மமா, War service–லயே இல்லாம இருந்துண்டிருக்கற civilian population–ங்கிற பொது ஜனங்கள் அத்தனை பேர் மேலேயும், ப்ளேன்–லேந்து குண்டு போடறா, பெரிசா world war–னு நடந்ததே, அதுல கடைசியா ஜப்பானை 'ஸ்ரண்டர்' பண்ண வெக்கறதுக்கே இப்படித்தான் ஸர்வ நாசம் பண்ற அணு குண்டைப் போட்டு ஒடனேயே மநுஷன் மட்டுமில்லாம அத்தனை ஜீவராசிகள், பூமி, ஜலம், காத்து எல்லாத்துக்கும் சாவு, ஹானின்னு உண்டாக்கினது மட்டுமில்லாம, எதிர்காலத்துலயும் ரொம்ப நாள் அந்த பாதிப்பு இருக்கற மாதிரிப் பண்ணிட்டா. Air Force – ஆகாயப் படை – ன்னு ஏற்பட்டு ப்ளேன்–லேந்து குண்டு போடறதுங்கறதும் ஒரு விதத்தில மறைஞ்சிருந்து சண்டை போடற மாதிரிதான் இருந்தது. போகப் போகத்தான் அது மாறி, ஆகாசத்திலேயும் சண்டை, பூமிலேந்தே ப்ளேனைச் சுட்டுத் தள்றது–ன்னுல்லாம் வந்தது.

"பூர்வ காலங்கள்–ல மநுஷ்ய ஜாதின்னு பொறந்து சண்டை போட்டவா தர்ம யுத்தம்னு பண்ணினப்ப, குறிப்பா ஒரு சத்ருவையும், அவனுக்கு ஸஹாயமா வரவாளையும், அந்த வ்யூஹ பாகத்தையும் அதாவது, படையோட

@Page 89

ஸப்–டிவிஷனையும்தான் எதித்து யுத்தம் பண்ணுவா; பொதுஜனங்களைத் தாக்கமாட்டாங்கறது மட்டுமில்லாம, வார்–ஸர்வீஸிலேயே இருக்கற சத்ரு ஸைன்யத்தைக்கூட ஜாடா (முழுவதும்) அழிச்சுடணும்னு பயங்கரமான அஸ்த்ரங்களைப் போட மாட்டா. குறிப்பா ஒத்தனை aim பண்ணித்தான் போடுவா.

அதுவே அவன் இருக்கற ஸைன்யத்தையும் பாதிக்கதான் செய்யும்.

"நேருக்கு நேர் முகம் கொடுத்து ஒருத்தரோட யுத்தம் பண்ணாம, ஸர்வ நாசம் பண்றது, அதுலயும் மாயா ஸாமர்த்யங்களைக் கலந்து கண்ணுக்குத் தெரியாம இருந்துண்டு பண்றது–ங்கறதையெல்லாம் அஸுராள், ராக்ஷஸாள் மொதலானவாதான் பண்ணுவா. அவாளை தேவாள், 'தெய்வம்'னே சொல்றவா, எதிர்க்கறப்போ இவாளும் பதிலுக்கு அதே மாதிரிப் பண்ணுவா.

"இதுல ஆச்சர்யம் என்னன்னா, தர்ம–ந்யாயம் இல்லாமயும், ஈவு–இரக்கம் இல்லாமயும் இருக்கற அந்த க்ரூரமான ஜாதிகள் அப்படிப் பண்றதையும், அவாளோட ஸ்வபாவத்துக்கு அது ஒத்ததுதானே–ன்னா என்னவோ, அவாளை எதித்த மநுஷ்ய ஜாதி சத்ருக்கள் அதர்மம்–னு ஆக்ஷேபிச்சு வாதிச்சதில்லை. மநுஷ்ய ஜாதியையே சேந்த கௌரவ–பாண்டவாள்–ங்கிற ரெண்டு தரப்புக்காராளும் சண்டை போட்டுக்கறச்சேதான் இந்த மாதிரில்லாம் யாராவது பண்ணினா சத்ரு பக்ஷத்தில இருக்கிறவா அது தர்மயுத்தம் இல்லை–ன்னு வாதம் பண்ணினதா மஹாபாரதத்துல வரதே தவிர, மநுஷ்ய ஜாதியைச் சேர்ந்த ராம–லக்ஷ்மணாளும் வானர ஜாதியைச் சேர்ந்த அவாளோட ஸைன்யமும் ராக்ஷஸ ஜாதியான ராவண ஸைன்யத்தோட சண்டை போடறச்சே, அந்த ராக்ஷஸா இந்த மாதிரிப் பண்றப்ப ராமர் கட்சியிலே அதை அதர்மம்–னு ஆக்ஷேபிச்சதா ராமாயணத்துல காணும்!

@Page 90

யுத்தம்னு இல்லாம, ஸீதையை ராவணன் வஞ்சகமா புருஷ ஸஹாயமில்லாம தனிச்சிருக்கப் பண்ணி, பொய் வேஷம் போட்டுண்டு போய்த் தூக்கிண்டு வந்ததைத்தான் ராமர் கட்சிக்காரா தூஷிக்கறதாப் பாக்கறமே தவிர, யுத்தத்துல ஸர்வநாசம் பண்றதையோ, மாயா ஜால தந்த்ரம் பண்றதையோ இல்லை. இது நமக்குப் பெருமை தர விஷயம்.

"ஏன்னா... ஒரு ஜாதியோட... இங்கே நான் மநுஷாள்லயே இருக்கற ஜாதிகளைச் சொல்லலை; அத்தனை மநுஷாளுமே ஒரு ஜாதி, அதே மாதிரி ராக்ஷஸா ஒரு ஜாதி, அஸுரஜாதி, பக்ஷிஜாதி, மிருகஜாதி, விருக்ஷ ஜாதின்னு, அதாவது ஒரு எனத்தை (இனத்தை), உயிரினங்கள்–னு இருக்கற அநேக ஜீவராசிகளில் ஒரு பிரிவை, genes, species–ங்கறதைத்தான் 'ஜாதி'ன்னு சொல்றேன். இப்படி அநேகம் இருக்கறதுல.. 'ஒரு ஜாதியோட நேச்சரே இதுதான்'னு ஒத்துக்கிண்டு, அதுல மநுஷ ஜாதிக்குத் தப்புத் தண்டாவாத் தெரியறதைக்கூட 'அந்த ஜாதிக்கு அது அவ்வளவு தப்பு இல்லை, அதர்மம் இல்லை!'–ன்னு 'ஸிம்பதெடிக்'கா

எடுத்துண்டிருக்கா–ங்கறதைத்தானே இது காட்டறது? எவ்வளவு பரந்த மனஸும், விட்டுக்குடுக்கற ஸ்வபாவமும் அவாளுக்கு இருந்திருக்கு–ன்னு ஆச்சர்யமாயிருக்கு!

"இந்த்ரஜித் இந்த்ரஜால, மஹேந்த்ர ஜாலமெல்லாம் பண்ணி ராமரோட வானர ஸேனைக்கு ஒண்ணும் புரியாம ஆக்கி ப்ரளய தாண்டவம் ஆடறான். இருட்டுன்னா அப்பேர்ப்பட்ட இருட்டை ரண பூமியில பரப்பி வானராளுக்குக் கண்–மண் தெரியாம ஆக்கி த்வம்ஸம் பண்றான். கண்ணை மறைச்சது மாத்திரமில்லை. அவனோட ரதம் ரண பூமியில போற சப்தம், அவன் அம்பு பூட்டி எய்யற சப்தம் – twang–ங்கிறது – எதுவும் வானராள்

@Page 91

காதுக்குக் கேக்காமயும் ஜாலம் பண்றான். இருட்டானா கூட சப்தத்தை வெச்சு ஆஸாமியைக் கண்டுபிடிச்சுடலாமோன்னோ? அதுவும் முடியாதபடிதான் இப்படி அவன் தந்த்ரம் பண்ணினது.

"லக்ஷ்மணருக்குப் பொறுக்கலை. 'அண்ணா, இவன் ஆனாலும் அதியாப் போறான். நான் ப்ரஹ்மாஸ்த்ரத்தையே போட்டு இவனை அத்தனை அஸுராளோடேயும் சேத்துக் கூண்டோட கைலாஸம் அனுப்பிச்சுடலாம்னு பாக்கறேன்'–னு ராமர்கிட்டச் சொல்றார்.

"அப்ப ராமர், தர்மமூர்த்தி இல்லையா? அதனால மநுஷ ஜாதியா இருக்கறவா பின்பத்த வேண்டிய யுத்த தர்மத்தை அவனுக்கு எடுத்துக்காட்டறார். 'ஒத்தனைத் தொலைக்கணும்கிறதுக்காக ராக்ஷஸ ஸைன்யம் பூராவையுமே ஸர்வ நாசம் பண்றதுன்னு வைச்சுக்காதேப்பா!"ன்னு தர்மமாவும், கருணையோடேயும் சொல்லிட்டு மேலேயும் விதிமுறைகள் சொல்றார்... சரணாகதின்னு கையைத் தூக்கிட்ட சத்ருவோட யுத்தம் பண்ணப்படாது. புறமுதுகு காட்டி ஓடறவனையும் தாக்கப்படாதுன்னு நாம எல்லாரும் கேள்விப் பட்டிருக்கோம். ஆனா ராமரோ மறைச்சுண்டிருக்கிற சத்ருகிட்டயும் யுத்தம் கூடாது; அப்படியே சண்டை போடாம இருக்கறவனோடும் குடி போதையுல இருக்கிறவனோடுங் கூட யுத்தம் பண்ணப்படாது–ன்னு அபூர்வமா தர்ம விதிகள் சொல்றார்.

"மறைச்சுண்டிருக்கிறவனை 'ப்ரச்சன்னன்'–னு சொல்றார். 'ப்ரச்சதம்'னா ஒறை (உறை); cover பண்றது. ஒறையைப் போட்டுட்டா உள்ளேயிருக்கற வஸ்து கண்ணுக்குத் தெரியாம மறைஞ்சுடறதோல்லியோ? அதனால் மறைஞ்சிருக்கறவனை 'ப்ரச்சன்னன்'–கிறது இந்த்ரஜித் இப்ப அப்படி

மறைஞ்சுதானே இருந்தான்?

@Page 92

"ஆனா இங்கே ராமர் இம்மிகூட தர்மம் தப்பிடக்கூடாதுங்கறதுல தர்மயுத்த விதியை ரொம்பவே நீட்டி அர்த்தம் பண்ணிட்டாரோன்னும் தோணறது! ஒரு யுத்த வீரன் சத்ருகிட்ட பயந்துண்டு அந்த பயத்தின் பேர்ல மறைஞ்சுக்கறப்பவே அவனோட சண்டை போடப்படாதுன்னே அந்த விதி ஏற்படுத்தியிருக்கலாம். அப்படியில்லாம, சத்ருவை மதி கலங்க அடிச்சு, தானே தடையில்லாம யுத்தம் பண்ணணும்கிற எண்ணத்துல ஜால வித்தையா இருட்டை ஸ்ருஷ்டிச்சு அதுல ஒத்தன் மறைஞ்சுக்கறப்ப, இப்படி ஒரு அக்ரமம் பண்றவளைத் தாக்கப்படாதுன்னு விதி ஏற்பட்டிருக்குமா–ன்னே இருக்கு. ஆனா, ராமர் தர்ம விஷயமா இப்படியா அப்படியா –ன்னு ஸந்தேஹம் வரச்சே, தமக்கே ஹானி உண்டாக்கறதுன்னா கூட ஏதோ ஒண்ணு அதர்மமாயிருந்துடக்கூடாதே என்கிற எண்ணத்திலே – 'இந்த ஹானி தேஹத்துக்குத்தான்; தர்மம் தப்பினாலோ – ஆத்மாவுக்கே–ன்னா ஹானி? –ங்கிற த்ருஷ்டியிலே – எதிராளிக்கு ஸாதகமாகவே ஒரு ரூலை இன்டர்ப்ரிட் பண்ணிக்கத் தயங்காதார். Err on the right side–கிறாளே அப்படி! 'ரைட் ஸைட்' என்னன்னா தன்னலம் கருதாமைதான்!"

'தன்னலம் கருதாமை' என்ற இலக்கண சுத்தமான சொற்றொடரை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். அந்தத் தத்துவமே மனித உருக்கொண்டு அப்படிச் சொல்லிக் கொள்வது போலுள்ளது!

"எதுக்குச் சொல்ல வந்தேன்–னா மநுஷ ஜாதிக்கு அதர்மமாயிருக்கற யுத்த முறைகளில் பலதைக்கூட மத்த ஜாதிகளுக்கு அநுமதிக்கிற 'ஜெனரஸ்' பார்வை நம்ம கலாசாரத்தில் இருந்திருக்கு–ன்னு காட்டறதுக்காகத்தான்.

"இதலேயே நடுப்பற (நடுவில்) இன்னொரு தர்மமும் வந்துது. ஒத்தனைத் தொலைக்கணும்–கிறதுக்காக சத்ரு

@Page 93

ஸைன்யம் பூராவுக்கும் ஸர்வநாசமா – 'ஹாலோகாஸ்ட்'–னு – ப்ரஹ்மாஸ்த்ரம் போடப்படாது–ன்னு ஸ்வாமி சொன்னதுலதான். ஸிவிலியன் பாபுலேஷனை மட்டுமில்லாம ஸேனா வீரர்களையும்கூட, அவா சத்ருக்கள்தான்னாலுங்கூட அப்படி அழிச்சுப்பிடற வழக்கம் நம்ம ராஜநீதியில கெடையாது–ன்னு செத்த (சிறிது)

முன்னாடி நான் சொன்னதை இது ஸ்வாமி வாயால 'கன்ஃபர்ம்' பண்றது. ஆனா நான் காட்ட வந்த தர்மம் இது இல்லே. அது என்னன்னா, எத்தனையோ கஷ்டப்பட்டு, வருஷக்கணக்காத் தபஸ், கிபஸ் பண்ணியே அந்த நாள்ல மஹாவீராள் ப்ரஹ்மாஸ்த்ரம் மாதிரியான திவ்ய அஸ்த்ரங்களைப் பெத்துக்கிண்டிருந்தா. ஆனாகூட யுத்த ஆரம்பத்துலயே அதைப் போட்டுட மாட்டா. அப்படிப் பண்ணினா ஸுலபமா ஜயிச்சிடலாம்—னாலும் அந்த மாதிரிப் பண்ணமாட்டா. ஏன்னா அந்த அஸ்த்ரங்களுக்கு நாச சக்தி ரொம்ப ஜாஸ்தி. ஆனதுனால, அந்த மஹாவீராள் தங்களை அடக்கிண்டு வேற வழியே இல்லேன்னு நெருக்கடியா உண்டாறப்போதான் அதுகளைப் போடறதா வெச்சிண்டிருந்தா. மித்ர பக்ஷம், சத்ரு பக்ஷம்னு இல்லாம ஸகலமான பேர்கிட்டயும் (சிரித்து) பக்ஷமா இருக்க முடிஞ்ச அளவுக்கு அப்படியே ப்ரயத்னப் பட்டுண்டு ஸமஸ்த ஜீவகுலத்துக்கிட்டயும் ஒரு அபிமானம்—அநுதாபம், 'கன்ஸிடரேஷன்' காட்டிக்கிண்டே மஹாவீராளும் இருந்திருக்கா. வீர சூராள்—னா தயாதாக்ஷிண்யமில்லாமயும், ஒரே படபடப்பாவும் குத்தி வெட்டித் தள்ளிண்டுதான் இருப்பா—ன்னு இல்லாம அவாளையும் ஸரியான வித்யாப்யாஸத்தினாலேயும் அவாள்—ல பெரிவாளா இருந்தவாளோட ஸஹவாஸத்தாலேயும் நம்மோட ஒசந்....த நாகரிகத்திலே இப்படி பதப்படுத்தியிருக்கு, பண்படுத்தியிருக்கு.

@Page 94

"நம்ம தேசத்து நாகரிகம் மாதிரி ஒசத்தியா ஒண்ணு எங்கேயுமே பாக்கமுடியாது. நாகரியம்—கிறதைப் 'பண்பாடு'ன்னு சொல்றா. பண்பாடு—ன்னா பண்படுத்தறது. இப்ப என் வாயிலேயும் அதே வார்த்தைதான் வந்தது — வீரசூராளைக்கூட ஜீவகுல அபிமானமுள்ளவாளா, ஒரு தர்மவ்யவஸ்தைக்கு அடங்கி நடக்கறவாளா நம்ம நாகரிகம் பண்படுத்தியிருக்கு—ன்னு சொன்னேன்.

" 'பண்படுத்தி'ங்கிறதுதான் உழுது, கிழுது நிலத்தைப் பண்றது. 'கல்டிவேட்' பண்றதுங்கிறது. நெலத்தைக் 'கல்டிவேட்' பண்றதுக்கு 'அக்ரிகல்ச்சர்'ன்னு பேர் குடுத்து ('அக்ரி' என்ற மாதிரி) எந்த 'ப்ரிஃபிக்'ஸும் சேக்காம, நம்ம மனஸைப் பண்படுத்தறதுக்கே 'கல்ச்சர்'—ங்கிற பொதுப் பேர் குடுத்திருக்கறதுலயே மேல்நாட்டுக் காராகிட்ட இருக்கிற உத்தமமான 'கல்ச்ச'ரும் தெரியறது. உழவு 'அக்ரிகல்ச்சர்'—னா இது 'அக்ர'கல்ச்சர்"!

சிரிக்கிறார்.

'அக்ர' என்றால் 'முதன்மையான', சொல்லின் செல்வராகவே ஸ்ரீசரணர் பேசியுள்ளார்!ஹ

"கல்ச்சரை கிட்டத்தட்ட அதே மாதிரி த்வனிக்கிற 'கலாசாரம்'னு புது வார்த்தை 'காயின்' பண்ணிச் சொல்றா. அதுவும் நன்னாத்தான் இருக்கு. கலாசாரம், நாகரிகம், பண்பாடு, ஸம்ப்ரதாயம், மரபு – எல்லாம் ஒண்ணுதான். இல்லாட்டா நெருக்கமா ஸம்பந்தப்பட்டதுகள்தான். இந்தத் தேசத்தோட அந்தப் பாரம்பர்யம் எத்தனை ஒசந்துதுன்னு தெரியாம, வெளிதேச வழிகளிலேயே போய் வீணாப் போய்ட்டோமேன்னு இருக்கு. இதை மட்டும் நம்ம ஜனங்களுக்குப் புரிய வெச்சுட்டாப் போறும்!... எங்கேயோ போயிட்டேன்!

@Page 95

"வெட்டு, குத்து–ன்னு கார்யமா யுத்தம்னு ஏற்படறச்சே, க்ரூரமே ஸ்வபாவமான அஸுரமே–ராக்ஷஸாள் மநுஷ்ய ஜாதியான நமக்கு அதர்மமாயிருக்கிறதுகளைப் பண்றதுகூட அந்த ஜாதி தர்மம்–னு எடுத்துண்டிருக்கற மாதிரி இன்னூணு (இன்னொன்று) சொல்றேன். ராமர் ஸைன்யம் பூரா வானர ஜாதிதானே ? ஜாம்பவான் மட்டும் கரடி. அவரும் வானராளும் (சிரித்து) 'alies' (நேசக்கட்சிகள்)! மநுஷன் மாதிரியே ரெண்டு காலால நிக்க முடியற கரடி, அப்பறம் மநுஷனுக்கு இருக்கற அநேகத் தன்மைகளுக்கு முன்னோட–ன்னு டார்வின் கட்சிக்காரா சொல்ற வானரம்–னு Evolution Theory (பரிணாமக் கொள்கை)–ப்படியும் பொருத்தமாதான் இருக்கு! அந்த விஷயம் இருக்கட்டும். இப்படி ராமரைச் சேந்த ஸைன்யம் வானரம்–கரடிங்கிற ஜாதிகள் ரெண்டும் அடங்கற பெரிய டிவிஷனான மிருக ஜாதியா இருந்திருக்கு. அவாள்ளாம், – ஆஞ்ஜநேயர், வாலி–ஸுக்ரீவாள், ஜாம்பவான் உள்பட எல்லாருமே – அஸ்த்ர –சஸ்த்ரம் போட்டதே இல்லை. ஆமாம், ஸாதாரண ஆயுதமோ, மந்த்ர பலம் இருக்கற திவ்யாஸ்த்ரமோ எதுவுமே ரிக்ஷ–வானரஸேதனை என்கிற அந்தக் கரடி–குரங்குப் படைக்காரா போட்டதா ராமாயணத்துல எங்கேயுமே இல்லை! அவா கல்லு, மரம், கிளை முதலானதுகளை எறிஞ்சும், கிளையால அடிச்சுஞ்தான் சண்டை போடுவா. அதுதான் அவா ஆயுதம்! அதைவிட முக்யமா, தங்களோட, சரீரத்தைக் கொண்டே அடிக்கறது, குத்தறது, பிறாண்டறது, ஒதைக்கறது, தொகைக்கறது, குத்துச் சண்டை, மல்யுத்தம் பண்றது–ன்னும் வெச்சுண்டிருந்தா. இதை அதர்ம–அக்ரமக்காராளான அஸுர–ராக்ஷஸாகூட ஆட்சேபிக்கலை. (வேதனைச் சிரிப்புடன்) மநுஷ ஜாதின்னே இருந்துண்டு எதிலேயும் ஒரு வியவஸ்தையுமில்லாத

@Page 96

நம்மைவிட அவாளுக்குங்கூட ஏதோ சிலதிலாவது வியவஸ்தை இருந்திருக்கு. மிருக ஜாதியைச் சேர்ந்த வானராளிலே ஒத்தர் மநுஷன் கையால பண்ணின ஒண்ணை

ஆயுதமா ப்ரயோகிச்சார்–ன்னு ராமாயணத்துல விதிவிலக்கா வரது, நான் படிச்சு, கேட்டுப் புரிஞ்சுண்டிருக்கற மட்டும், என் ஞாபகத்துல இருக்கற மட்டும், ஆஞ்ஜநேய ஸ்வாமி அசோக வனத்துல தோரணம்–கிற வாசல் மண்டபத்தோட தூணைப் பிடுங்கி, அதனால ராக்ஷஸாளை மொத்தின ஒரே ஒரு எடத்துலதான்!

" 'பின்னே கதையும் கையுமா அவரக்கு பிம்பங்கள் இருக்கே!'–ன்னா, அது பின்னாளில வரப்போற நமக்காக அவர் எடுத்துண்ட கோலம்தான்! அவர் கல்லையோ, கட்டையையோ கையிலே வெச்சுண்டு காட்சி குடுத்தார்–னா நமக்குக் கொஞ்சம் 'என்னமோ மாதிரி' தானே இருக்கும்? ரொம்பப் பெரிய கல்லா ஸஞ்ஜீவி பர்வதத்தைத் தூக்கிப் பிடிச்சுண்டார்னா நன்னாயிருக்கே தவிர, வேறே ஏதோ கல்லை விட்டெறிஞ்சார்னா, கிளையால அடிச்சார்–னா, நம்ம முன்னோர்கள் மாதிரி அந்தந்த எனத்துக்கு அப்படியப்படி–ன்னு 'ஸிம்பதெடிக்'காப் பாக்க முடியாத நமக்கு அவ்வளவு ஸரியாத் தோணாதுதானே? அதனாலதான், தனக்கு அப்பறம் தன் மாதிரியே வாயுகுமாரனா வந்த வீமஸேனன் கதையும் கையுமா இருக்கற மாதிரித் தானும் கதையைப் பிடிச்சுக்கிண்டு பரம பக்தாளா இருக்கறவாளுக்கு ஆஞ்ஜநேயர் தரிசனம் குடுத்து, அவா கண்டு சொன்னபடி சில்பசித்ரங்கள் பண்ண ஆரம்பிச்சதா ஏற்பட்டிருக்கு...

"இந்திரஜித் கண்ணுக்குத் தெரியாம நின்னுண்டு, ராமரை ஸைன்யத்தோட அழிச்சுடணும்னு பிரம்மாஸ்திரத்தை ப்ரயோகிச்சுட்டான். அப்ப ராமர் அதுக்கு எதிர் அஸ்த்ரம் போட்டிருக்கலாம், ஆனா போடலை. தான்

@Page 97

போடாததோட இல்லாம லக்ஷ்மணர்கிட்டேயும் 'எதித்து சண்டை போட வேண்டாம்'னு சொல்லிட்டார். அவரோட ஸைன்யத்துக்கு அவர் எதுவும் சொல்றதுக்கில்லாம அது அஸ்த்ரம் இந்த்ரஜித் கிட்டேயிருந்து விடுபட்டவொடனேயே ப்ராணன் போயோ, குத்துயிர் கொலை உயிராவோ அப்படியே சாஞ்சுடுத்து! ராமரையே நேர்முகமா இல்லாட்டாலும் மனஸுக்குள்ளே இந்த்ரஜித் முக்யமா நினைச்சு aim பண்ணினாலும், அவர் எத்தனை மநுஷ வேஷம் போட்டாலும் அப்பப்போ தன்னால வெளிப்பட்ட 'அவதார சக்தி'ங்கிறதோட மஹிமையாலே அவரையும், தெய்வாம்சமான லக்ஷ்மணரையும் ப்ரஹ்மாஸ்த்ரங்கூட affect பண்றதுக்குக் கொஞ்ச நாழி பிடிச்சுது. அதுக்கு முந்தியே ஸைன்யத்தைத்தான் affect பண்ணித்து. என்ன இருந்தாலும் அவர் (ராமர் திருமாலாகயுள்ளபோது) ப்ரம்மாவுக்கு அப்பா இல்லையோ? லக்ஷ்தமணனும் ஒண்ணு, அந்த அப்பாவோட கலை; இல்லாட்டா அவரோட சயனமாயிருக்கற ஆதிசேஷன். அதனாலே

ப்ரம்மாவுடைய அஸ்த்ரம் அவர்கிட்டயும் கொஞ்சம் தயங்கிண்டுதான் வேலை பண்ணித்து.

"அப்ப ராமர் ஏன் அதை எதிர்க்க வேண்டாம்–னு விசித்ரமா சொன்னார்? அப்படியே விட்டுட்டா, ஸைன்யம் பூரா போனது போனதேன்னு ஆயிடாதோ? இவா ரெண்டு பேர்கிட்டயுங்கூட, அஸ்த்ரம் மொதல்ல தயங்கினாலும் அப்பறம் தன்னோட சக்தியைக் காட்டத்தானே செய்யும்? இந்த்ரஜித்துக்கு ப்ரம்மா அவனோட உபாஸனைக்குப் பலனாகவே அதைக் குடுத்ததாலே, அது சத்ருநாசம் என்கிற தன்னோட தர்மத்துக்குக் கட்டுப்பட்டு ரா–லக்ஷ்மணாளோட ப்ராணனுக்கும் ஹானி பண்ணத்தானே பண்ணும்? அதுக்கு எப்படி அவர் ஸம்மதிக்க முடியும்? – இப்படிக் கேள்வி வரது.

@Page 98

"இதுக்கு ராமர் லக்ஷ்மணர்கிட்ட அப்பவே பதில் சொல்லிட்டார். அஸ்த்ரம் அதன் தர்மப்படி நடக்கத்தான் நடக்கும்னு அவருக்கு நன்னாத் தெரியும். ஆனா அவரும் தர்ம விக்ரஹமே ஆச்சே, அதனால என்ன சொன்னார்–னா, 'இந்த்ரஜித்தோட தபஸுக்குப் பலனா ப்ரம்மா அஸ்த்ரத்தைக் குடுக்காம இருக்க முடியாது–ன்னு தர்ம ந்யாயப்படி குடுத்துட்டார். அது திவ்யாஸ்திரம். ஹோமங்கள் பண்ணி இந்த்ரஜித் அதனோட வீர்யத்தை ரக்ஷிச்சிருக்கான். மநுஷாளான நாம ஸ்ருஷ்டிகர்த்தா, த்ரிமூர்த்தியில மொதலாமவர்–னு இருக்கற ப்ரம்மாவோட அந்த அஸ்த்ரத்துக்கு மதிப்பு மரியாதை குடுத்து, அதை எதிக்காம, ஏத்துக்கத்தான் வேணும்'னு சொன்னார். அப்பா–பிள்ளையா இல்லாம, தன்னை ரொம்ப ரொம்பக் கொறச்சுண்டு – அவராலதான் அப்படி முடியும் (ஏன், நமது ஸ்ரீசரணராலும் முடியுமே!) – ப்ரம்மா தெய்வம், தானும் தம்பியும் மநுஷன்னு வெச்சுக்கிண்டு இப்படிச் சொன்னார்.

"அப்படின்னா அவதார கார்யமான ராவண ஸம்ஹாரத்தைப் பண்ணாம ப்ரம்மாஸ்த்ரத்துக்குப் பலி ஆயிடறதா–ன்னா, 'நாமாவே ப்ரக்ஞையை விட்டுட்டு விழுந்துடுவோம். ப்ராணனை விடாம ப்ரஜ்ஞையை மட்டும் விட்டுடுவோம்'–னார்.

"வஸிஷ்ட–விச்வாமித்ராதிகளிடம் ராம–லக்ஷ்மணாள் யோக சாஸ்த்ரம், தநுர் வேதம் உள்பட ஸகல வித்யையும் கத்துண்டு எல்லாத்துலயும் ஸித்தி பெத்திருந்ததாலே இப்படி ப்ராணனை தக்க வெச்சுண்டே 'கோமா' மாதிரி ஸ்மரணை மட்டும் தப்பி இருக்கும்படியாப் பண்ணிக்கத் தெரிஞ்சுண்டிருந்திருப்பா...

"ப்ரக்ஞை இல்லாம நாம விழுந்துட்டா ப்ரஹ்மாஸ்த்ரமும் அந்த ஸ்டேஜுக்கு

மேலே நம்மை பாதிக்காம

@Page 99

அப்படியேதான் வெச்சிருக்கும். க்ரூர ராக்ஷஸனேயானாலுங்கூட இந்த்ரஜித்தும் சுத்த வீரனானதால, மரக்கட்டையாட்டம் இருக்கற நம்மோட யுத்தம் பண்ணாமப் போயிடுவான். அவனைப் பிடிச்சு வதம் பண்ணவேண்டியதும் நம்ம கார்யமோல்லியோ ? அவனானா இப்ப கண்ணுக்கே தெரியாம–ன்னா இருக்கான் ? அதனால, அப்பறம் நமக்கு ப்ரக்ஞை தெளிஞ்ச விட்டு அவனும் யுத்தத்துக்கு வருவான்; நாமும் யுத்தத்தை ஆரம்பிச்சுக்கலாம்'னு சொன்னார்."

நூலாசிரியன் ராமாயணங்களில் வல்லுநர்களை விசாரித்து அறிந்த அளவில், வால்மீகத்தில் இதற்கு ஓரளவு ஆதாரம் இருப்பதாகக் கொள்ளலாமே தவிர வேறெந்த ராமாயணத்திலும் இவ்வாறு பிராணனை விடாமல் பிரக்ஞையை மட்டும் விடுவது பற்றிச் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. ஸத்திய– தர்மமே உருவானவரும் வால்மீகத்தையே பரம ஸத்யமாகப் போற்றுபவருமான ஸ்ரீசரணர் எக்காரணத்தாலோ வால்மீகத்தில் இவ்வளவு தெளிவுபடக் கூறாததையே தெளிவுபடுத்தியதாக கொள்ளலாம்.

"அப்படி அவர் சொன்னவுடன், அவர் எது சொன்னாலும் அதுதானே லக்ஷ்மணருக்கு வேதம் ? அதனால, அவரும், 'அப்படியே!'ன்னு ஒத்துக்கிண்டார்.

"ஒடனே அந்த ரெண்டு பேரும் ஸ்மரணை இல்லாம சாஞ்சுட்டா!

"ஸரி, அது எப்ப தெளியணும்னு ஸ்வாமி ஏதாவது டயம்–லிமிட் வெச்சாரான்னா அதுதான் இல்லை! விபரீத விளையாட்டாட்டமா அதை அவரும் சொல்லலை; அவர் சொல்லாத எதையும் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்–கிற எண்ணமேயில்லாத தம்பிக்காரரும் கேட்டுக்கலை!

"டைம் லிமிட் இன்ன–ன்னு ஸங்கல்பம் பண்ணிக்காமலே ப்ரக்ஞையை தியாகம் பண்ணினா,

@Page 100

அப்பறம் ப்ரக்ஞை போன நிலையிலே அது தெளியணும்னு எப்படி நினைச்சு, தெளிவிச்சுக்க முடியும் ? விட்டுட்ட ப்ரஜ்ஞை எக்காலத்திற்குமாகப் போனது

போனதுதான்–னுதானே சாச்வதமா நீடிச்சுடும்? அது ப்ராணனே போய், ஆயுஸே முடிஞ்சுட்ட மாதிரிதானே? அப்படி ஆனா, அவதார கார்யம்?

"ஸ்வாமி மனஸுல என்ன நெனச்சுண்டிருந்தாரோ? ஆனா இதுக்கு அவர் வெளிப்பட ஒரு பதிலும் குடுக்கலை. எனக்குத் தோணறது. **ஹநுமத் ப்ரபாவம் லோகத்துக்கு நன்னாத் தெரியணும்–னேதான் அவர் இப்படித் தீர்மானம் பண்ணியிருப்பார்**–னு!

"ஆகக்கூடி, அவதார புருஷாள், மஹா வீராள் ராம லக்ஷ்மணாள் ஸ்மரணையில்லாம ரணபூமியில சாஞ்சுட்டா.

"அவா ஸைன்யமும் முன்னாடியே சாஞ்சுாச்சு.

"இந்த்ரஜித் மிச்சம் மீதியில்லாம அத்தனை பேரையும் நெஜமாவே தொலைச்சாச்சு, மஹத்தான ஜயத்தை ஸம்பாதிச்சாச்சு–ன்னு தீர்மானம் பண்ணிண்டு, 'இந்த சவப் பட்டாளத்தை அப்பறப்படுத்தறதை அப்பறம் பாத்துக்கலாம்; மொதல்ல ஊருக்குத் திரும்பிப் போய் அப்பாவுக்கு ஸந்தோஷன ஸமாசாரத்தைச் சொல்லி விஜயோத்ஸவம்(வெற்றி விழா) கொண்டாடுவோம்'னு கெளம்பிப் போய்ட்டான்.

"இங்கே விபீஷணர் தவிச்சுக்கிண்டு, 'என்ன இப்படி ஆயிடுத்தே!'ன்னு நெனக்கறச்சே, அவர் பரம பாகவதரானதால ராம–லக்ஷ்மணாளுக்கு ப்ராண ஹானியில்லை. ப்ரஜ்ஞா ஹானிதான்–னு அவருக்கு பகவத் க்ருபையில புரிஞ்சுடுத்து. ஆனா, ப்ரக்ஞை எப்ப வருமோ, அதுக்குள்ளே சத்ருக்கள் என்ன பண்ணிடுவோளோ–ன்னு பதைப்பும் இருக்கத்தான் செஞ்சுது.

@Page 101

"வானராள்–லயும் எல்லாருமே செத்துப் போயிடலை; அவா எல்லாருமே தேவாளோட அம்சந்தான்–னாலும் அதுலயே ஜாஸ்தியம்சம், அதைவிட ஜாஸ்தியம்சம்னு இருக்கறவா அந்தந்த அம்சத்துக்கு ஏற்க, குத்துயிர்–கொலையுயிராக் கெடக்கறதுலேந்து, ப்ரக்ஞை கூடத் தப்பாம ரொம்பவும் பலஹீனத்தில் மட்டும் அசத்தமா விழுந்திருக்கிற வரையில பல தினுஸா இருந்திண்டிருக்கா–ன்னும் விபீஷணர் புரிஞ்சுண்டார்.

"இங்கேதான் ஆஞ்ஜநேய ஸ்வாமியோட அலாதிப் பெருமை தெரியறது...

"அவர் பொறந்தவொடனேயே, செக்கச் செவேல்–னு உதிக்கற ஸூர்யனைப் பாத்துட்டு, பழம்னு நெனச்சுண்டு,
அதைப் பறிச்சுத் திங்கணும்னு ஸூர்ய மண்டலத்துக்கு ஒரே தாவாத் தாவிட்டார்–னு சொன்னேனோல்லியோ ?

"அன்னிக்கு அமாவாஸ்யை. மார்கழி மாஸ அமாவாஸ்யை. நக்ஷத்ரம் மூலம். ஆஞ்ஜநேயர் பாஹுபலம், புத்திபலம், பக்திபலம்னு எல்லா பலத்துக்கும் மூலமாயிருக்கறப்போறவா! வானர ஸைன்யத்தின் பலத்துக்கே மூலமாயிருக்கப் போறவர்! ராவணனோட மூலபலம்–கிற ஸேனையை நிர்மூலமாக்கப் போறவர்! அமாவாஸ்யையில சந்திரன் அடியோட தேஞ்சு போயிருப்பான். ஆனாலும் அதைத்தான் நெறஞ்ச (நிறைந்த) நாள்–ங்கிறது. நல்லது அத்தனையும் நெறஞ்சிருந்த ஆஞ்ஜநேய ஸ்வாமி ராம–**சந்திரனுக்கு** முன்னாடி தன்னோட மஹிமையைப் பூராவும் தேச்சுண்டு தாஸராக் கெடந்தவர். 'மாஸங்களுக்குள்ளே நான் மார்க்கசீர்ஷம்'னு கிருஷ்ண பரமாத்மா (கீதையில்) சொன்ன மார்கழியில் அவதாரம் பண்ணியிருக்கார்.

"அமாவாஸ்யைலதானே ஸூர்ய க்ரஹணம் வரும்? இவர் அவதாரம் பண்ணின அன்னிக்கு அப்படித்தான்

@Page 102

ராஹு ஸூர்யனைப் பிடிக்கற நாளாயிருந்தது. இவர் ஸூர்ய மண்டலத்துக்குப் போய்ச் சேருகிறபோதே அவனும் ஸூர்யனைப் பிடிக்க வந்தான். 'இவன் யாருடா, குறுக்கே வரான் ?'னு ஆஞ்ஜநேயர் ஸூர்யனை விட்டுட்டு அவனைப் பிடிக்கப் போனார்.

"அவன் ஓட்டமா ஓடிப்போய் இந்த்ரன் கிட்ட, 'நீதானே அப்பப்ப நானும் கேதுவும் ஸூர்ய–சந்திராளைப் பிடிச்சு அவாளோட ஸத்தை ஆஹாரம் பண்ணிக்கலாம்னு ஏற்படுத்தி வெச்சே? இப்ப வேறே ஒத்தன் குறுக்கே வந்து என்னைக் கதிகலங்க அடிச்சுத் தொரத்திட்டான். நீ பாத்துண்டிருக்கலாமா ?'ன்னு அழுதான்.

"தன்னோட ஆஜ்ஞைக்கு பங்கமா ஒத்தன் பண்றதா ?–ன்னு அதிகோபத்தோட இந்த்ரன் ராஹுவையும் அழைச்சுக்கிண்டு ஸூர்ய மண்டலத்துக்குப் போய் (அவனது பட்டத்து யானையான) ஐராவதத்துலேந்து எறங்கினான்.

"ஸூர்யனை '(இ)தோ பிடிச்சாச்சு'ங்கற கட்டத்துல அப்ப இருந்த ஆஞ்ஜநேயர், ரொம்பவும் கொழந்தையா இருந்தாரோன்னோ, அதனால வெள்ளை வெளேர்னு பெரிசா நிக்கற அந்த ஐராவதத்தைப் பாத்ததும், 'அந்த வெள்ளைப் பழத்தைத் தின்னலாமே!'ன்னு தோணி (தோன்றி), ஸூர்யனை விட்டுட்டு அதுமேலே பாஞ்சார்.

"ஏற்கெனவே இந்த்ரனுக்கு கனகோபமா? இப்ப ஹநுமார் தன்னோட வாஹனத்து மேலே வேறே பாஞ்சவொடனே அவனால பொறுக்க முடியல.

"கொழந்...தை ஆஞ்ஜநேயரைக் கொழந்தை—ன்னும் பாக்காம, வஜ்ராயுதத்தாலே அடிச்சுட்டான்!"

மிகுந்த உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு இதைக் கூறிய ஸ்ரீசரணர் தொடர்ந்தார்.

@Page 103

"வஸ்ரம்தான் உறுதியிலெல்லாம் உறுதியானது... 'வஸ்ரம்' தமிழ் பாஷைல 'வைரம்'னு ஆச்சு. ஹிந்தி முதலான வடக்கத்தி பாஷைகளிலே இதே 'வஜ்ர' என்கிறது திரிஞ்சு திரிஞ்சு 'ஜவ்ர', 'ஜௌஹ்ர', ஜௌஹர்', 'ஜவஹர்'னு ஆச்சு. 'ஜவஹர்லால்'—ங்கிறோமே, அது நம்ம ஊர்ல ரத்தினம், மாணிக்கம், முத்து—ன்னெல்லாம் மனுஷாளுக்கு மணிகள் பேரை வெக்கற மாதிரி வடக்கே வைரத்தின் பேரை வெக்கறதுதான். ஜவஹர்லால் நேருவோட அப்பா மோதிலால் நேரு, மோதி—ன்னா முத்து. (சிரித்து) அப்பா முத்து, பிள்ளை வைரம்!

"ஸம்ஸ்கிருதத்துலயும் 'வைரம்' (என்னும் பதம்) உண்டு. 'வீரம்'—கிறதன் அடியாக ஏற்பட்ட வார்த்தை அது. 'வைரம்'னா 'பகை'. வீரமுள்ள சத்ருவை 'வைரி' என்கிறது. தமிழ்ல அந்த அர்த்தத்தையும் எடுத்துண்டிருக்கோம் – 'வைரம் பாராட்டாதே!" என்கிறோமோல்லியோ?...

"மஹர்ஷி ததீசியுடைய அத்தனை தபோ பலத்தையும் சேர்த்து வெச்சுண்டு வஜ்ரமா உறுதி பெத்துக் கொண்டிருந்தது அவரோட முதுகெலும்பு, குண்டலிநீ சக்தி சக்ரங்களின் வழியாக மேலே ஏறிப்போகிறது முதுகெலும்பின் மூலமாகத்தானே? அதுதான் மஹா தபஸ்வியான ததீசியின் முதுகெலும்புக்கு அத்தனை பலத்தைக்

கொடுத்திருந்தது. அந்த முதுகெலும்புதான் இந்த்ரனோட வஜ்ராயுதமாச்சு. அத்தனை பலமான ஆயுதத்தாலே அவன் கோபத்தோட போட்ட அடியை பலிஷ்டரானாலும் கொழந்தையாயிருந்த ஹநுமாராலேயும் தாங்கிக்க முடியலை.

"அப்படியே பூமண்டலத்துல 'ஓசரமா நீட்டிக்கிண்டிருந்த ஒரு மலைப்பாறை மேலே விழுந்துட்டார். அவரோட ஸப்த நாடியும் ஒடுங்கிப் போயிடுத்து. அதோட, அவர் எடது பக்கமா பாறை மேலே விழுந்ததால அந்தப் பக்கத்துத் தாடை நொறுங்கிப் போயிடுத்து.

@Page 104

"அவனுடைய தகப்பனாரான வாயு பகவானுக்கு துக்கம் தாங்கலை. தன்னோட அருமந்தக் கொழந்தைக்கு இந்த கதியா–ன்னு இந்திரன் மேலே அஸாத்யக் கோபம் வந்து. அந்தக் கோபம் புத்ரசோக வேகத்திலே லோகம் பூராவின் மேலேயுமே திரும்பித்து.

"தன் ஸஞ்சாரத்தை அடியோட நிறுத்திண்டுட்டான்.

"வாயு ஸஞ்சாரமில்லாட்டா ஜீவராசிள் என்ன ஆறது ? படாத பாடு பட்டா, இந்த்ராதி தேவாளும் அவதிப் பட்டுண்டு ப்ரம்மாகிட்ட முறையிட்டா.

"வாயுவை ஆச்வாஸப்படுத்தித் திருப்தி பண்ணினாலொழிய மறுபடி அவனை ஸஞ்சரிக்கப் பண்ண முடியாதுன்னு ப்ரம்மா சொல்லிட்டு, அவாளையும் அழைச்சுண்டு, அவன் பிள்ளையை மடியில போட்டுண்டு ஒக்காந்திருந்த மலைக்கு வந்து சேந்தார்.

"வாயு கிட்டேயிருந்த கொழந்தையை அவர் வாங்கிண்டு தடவிக் குடுத்தார்.

"குடுத்தாரோ இல்லியோ, ஒடனேயே ஆஞ்ஜநேயர் பளிச்சுனு எழுந்துட்டார்!

"ப்ரஹ்மா இந்த்ராதி தேவதைகளைப் பாத்து, 'ஓங்க எல்லாருக்கும் உபகாரமா இவனால ரொம்பக் கார்யம் நடக்க வேண்டியிருக்கு'... தேவாளை ராவணன் கொடுமைப்படுத்தி அடக்கி வெச்சிருந்ததுக்கு விமோசனம் தரதுக்குத் தானே அவா ப்ராத்தனையின் பேரில் மஹாவிஷ்ணு ஸ்ரீராமனா வந்தது ? அந்த ராவண ஸம்ஹாரத்துல அவருக்கு ரொம்பவும் ஸஹாயமா இருந்தது ஆஞ்ஜநேய ஸ்வாமிதானே ? அதைத்தான் ப்ரம்மா சொல்லாம சொன்னார்.. 'ஆனாதுனாலே

இவனுக்கு நீங்களே கஷ்டம் உண்டாக்காம, வரம்தான் தரணும். அப்பதான் வாயுவும் த்ருப்தியடைஞ்சு மறுபடி ஸஞ்சாரம் பண்ண ஆரம்பிப்பான்'ன்னு சொன்னார். ஒடனே, கொழந்தைக்குக்

@Page 105

கஷ்டம் குடுத்த இந்த்ரனே முன்னாடி வந்து, 'எந்த வஜ்ராயுதத்தாலே இவனை அடிச்சேனோ அதனாலும் அதன் சக்தியைக்கொண்ட மந்த்ராஸ்த்ரத்தாலும் இவனுக்கு ஒரு ஹானியும் வராது'ன்னு வரம் குடுத்தான்.

"அது மாத்திரமில்லை. ப்ரஹ்மா தடவிக்குடுத்து பாலஹநுமாருக்குப் புத்துயிர் ஊட்டினதுல அவரோட சரீரம், சக்திகள், ஸத்குணங்கள் எல்லாமே வஜ்ரம் மாதிரி உறுதியாயிடுத்து! 'பஜ்ராங்' – வஜ்ராங்கர் – வஜ்ரமான தேஹபலம் பெற்றவர்–னே வடதேசத்துல அவரைச் சொல்றா.

" 'ஹநுமார்'–ங்கிற திவ்ய நாமத்தையும் அப்ப இந்திரன்தான் அவருக்கு வெச்சான். 'ஹநு'–ன்னா 'தாடை', 'என் வஜ்ராயுதத்தாலே அடிபட்டு விழுந்ததுலதானே இவனோட 'ஹநு' நொறுங்கித்து? அதனால இவனுக்கு 'ஹநுமான்'னே பேர் ப்ரஸித்தமா ஆகட்டும்!'னு சொல்லி அந்தப் பேரை இந்த்ரன் வெச்சதா (வன்மீகத்தின் உத்தர காண்டத்தில்) இருக்கு.

" 'ஹநுமான்'–னா 'ஹதநுவை உடையவன்'னுதான் அர்த்தமே தவிர 'இழந்தவன்–னு அர்த்தம் ஏற்படாது. 'ஸ்ரீமான்'–னா ஸ்ரீயை (செல்வத்தை) உடையவன்தானே? இழந்தவனையா அப்படிச் சொல்வா? அதனால, எனக்கு என்ன தோணறது–ன்னா மொதல்ல இந்த்ரன் அடிச்சப்ப அவரோட தாடை நொறுங்கிப் போனாலும், ப்ரம்மா தடவிக் குடுத்து அவர் புத்துயிர் பெத்தப்போ அந்த நொறுங்கின தாடையும் ஸரியாயிருக்கணும்னே தோணறது. இந்த அதிசயம் லோகத்துகும் தெரியணும்னே இந்த்ரன் 'ஹநுமான்'னு குறிப்பாத் தெரிவிக்கற ஒரு பேர் இருக்கணும்னு நெனச்சுதான் அப்படி வெச்சான்–னு தோணறது.

@Page 106

"சில்ப – சித்ரங்களிலேயோ, த்யான ச்லோக வர்ணனையிலேயோ அவரை எடது தாடை இல்லாதவரா எங்கேயும் காட்டியிருக்கலை–ங்கறதையும் கவனிக்கணும்.

"வஜ்ராயுதத்தாலே ஆஞ்ஜநேயருக்கு ஹானி ஏற்படாதுன்னு இந்த்ரன் சொன்னாவொடனே, மத்த தேவாளும் அதேமாதிரி அவாவாளுக்கு உரியதான திவ்யாஸ்த்ரத்துனாலேயும் அவருக்கு ஹானி வராது–ன்னு வரம் குடுத்தா. இவாளையெல்லாம் வரம் குடுக்க வெச்ச ப்ரஹ்மா மட்டும் சும்மாயிருப்பாரா? அவரும் தனக்கு உரியதான ப்ரம்மாஸ்த்ரமும் அவரைத் தொடாதுன்னு அநுக்ரஹிச்சுட்டார்.

"இப்ப இருக்கற ப்ரம்மா இன்னும் எத்தனையோ கோடி கோடி வருஷத்துக்கு அப்பறம் அவரோட ஸ்ருஷ்டியத்தனையும் மஹா ப்ரளயத்துலே முடிஞ்சு போறப்ப, தன்னோட ஆயுஸும் முடிஞ்சு பரமாத்மாவோடயே பரமாத்மாவா ஐக்யமாயிடுவார். அப்பறம் புது ஸ்ருஷ்டி உண்டாகும். அப்ப புது ஸ்ருஷ்டி கர்த்தரான ப்ரம்மாவா யார் இருக்கப் போறா–ன்னா, ஆஞ்ஜநேய ஸ்வாமிதான்! இந்த ஸ்ருஷ்டியிலே அவர் சிரஞ்ஜீவி. அடுத்ததுல அவரே ஸ்ருஷ்டி கர்த்தா. எத்தனை கார்யம் பண்ணினாலும் தன்னைக் கர்த்தாவா துளிக்கூட நெனக்காம, பரமாத்ம ஸ்வரூபமான ராமரே கர்த்தா, தான் அவரோட கருவிதான்னு அடங்கியும், அதே ஸமயத்திலே எத்தனை கார்யம் பண்ணினாலும் அந்தராத்மாவிலே அந்த ராம ப்ரம்மமேதான் தான்னு பரமாத்ம ஸ்வரூபத்துலயே இருந்துண்டும் இருக்கறவர் அவர். ரெண்டுக்கும் நடுப்பற (நடுவில்) ப்ரேமானந்தம்–கிற அம்ருதத்தை ருசிச்சுண்டிருக்கணும்–கிறதுக்காக ராமரோட பரம பக்தராயிருந்துண்டு, அந்த ராமநாமத்தையே ஜபிச்சுண்டு நாமரஸத்திலேயே ப்ரேம ரஸாம்ருதத்தை ருசிச்சுண்டும்

@Page 107

இருக்கறவர். அதாவது, கர்மா, பக்தி, ஞானங்கிற மூணும் த்ரிவேணியா ஸங்கமிக்கிற ஒரு ஆச்சர்ய மூர்த்தமா தாமொருத்தரே இருந்துண்டிருக்கிறவர்...

"இந்த்ரஜித் ப்ரம்மாஸ்த்ரம் போட்டப்பவும் ப்ரம்மா குடுத்திருந்த வரபலத்தால அது அவரைத் தொடத்தான் இல்லை. ஏற்கெனவே அசோகவத்துல அவரைச் சிறைப் பிடிக்கறதுக்காக இந்த்ரஜித் அவர் மேலே ப்ரம்மாஸ்த்ரம் போட்டிருக்கான். அப்பவும் அது அவரை வாஸ்தவத்துல பாதிக்கத்தான் இல்லே. ஆனா அவரும் ராமர் மாதிரியேதான். ஸ்ருஷ்டிகர்த்தாவோட அஸ்திரம், அதுக்கு மதிப்புத் தராம இருக்கறதான்னு முஹூர்த்த காலம் அதுககுத் தாமாவே கட்டுப்பட்டிருந்தார். அதுக்காக ராமர் மாதிரி ப்ரஜ்ஞா பங்கம் உண்டாக்கிக்கலை. (சிரித்து) ராமருக்கு இவர் இருக்கிற தைர்யம், அப்படிப் பண்ணிண்டார்! இவருக்கு யார் இருந்தா? 'ராமர் இல்லையா?'–ன்னா, ராமர் யஜமானர், தாம் தாஸாநுதாஸன்னு இருந்த இவர் அவர் தம்மை ரக்ஷிச்சுத்தான் ஆகணும்னு 'டிமான்ட்' பண்ணுவாரா என்ன? அதனால,

தாம் ரொம்ப சோ(ர்)ந்து போய் அசக்தமா இருக்கற அளவுக்கு மட்டும் ப்ரம்மாஸ்த்ர சக்திக்கு அளவு கட்டிண்டு, இந்த்ரஜித் கிட்டக் கட்டுப்பட்டார்.

"இப்பவும் அப்படியே முஹூர்த்த காலம் சோந்து படுத்துண்டு கெடந்துட்டு, அப்பறம் ஸஹஜமா எழுந்திருந்து விபீஷணர்கிட்ட வந்து சேர்ந்தார். ரெண்டு பேரும் சிரஞ்ஜீவிகள். ஒரு ஐதிஹ்யப்படி ஜாம்பவானும் சிரஞ்ஜீவிதான். அந்த ஜாம்பவான் எங்கே இருக்கார். எப்படி இருக்கார்–னு இந்த ரெண்டு பேரும் ரணகளம் பூரா தேடிண்டு போனா. வெவ்வேற திசைல தேடிண்டு போனா. ஏன்னா, மேலே என்ன பண்ணலாம்–னு அவர்தான் நல்ல யோஜனை சொல்லக் கூடியவர்.

@Page 108

"விபீஷணர்தான் அவரைக் கண்டுபிடிச்சார். அவர் கண்ணே தெறக்க முடியாம ஓய்ஞ்சு கெடந்தார். விபீஷணரோட கொரல் கேட்டவுடனே அவர், 'ஹநுமான் ஸௌக்யமா இருக்கானா ?'ன்னுதான் மொத(ல்) கேள்வி கேட்டார்.

"விபீஷணர், 'அதென்ன! ராம–லக்ஷ்மணாள், ஒங்களுக்குத் தலைமையில இருக்கற ஸுக்ரீவன் இவாளைப் பத்திக் கேக்காம ஹநுமானைப் பத்திக் கேக்கறேளே!'ன்னு ஆச்சர்யத்தோட கேட்டார்.

"அதுக்கு ஜாம்பவான் என்ன சொன்னார்னா – அதை ஹநுமார் மஹிமைக்கே ஒரு பெரிய testimonial–ஆ (நற்சான்றிதழாக) சொல்லலாம் – அப்படி ஒண்ணு சொன்னார். **'ஹநுமானைப் பத்தி ஏன் கேக்கறேன்–னா அவன் ஒத்தன் ஸௌக்யமா இருந்தாலே போறும், மத்த வானர ஸைன்யம் பூராவும் செத்துக்கிடந்தாலும் பிழைச்சுக்கும். அவன் ஒத்தன் இல்லாம, மத்தவா அவ்வளவு பேரும் உசிரோட இருந்தாலும் செத்த மாதிரிதான்' –னார்!**

"விபீஷணர் அவருக்கு ராம லக்ஷ்மணாள் இருக்கற விபரீதமான ஸ்திதியைச் சொன்னார்.

"அவர் அதைச் சொல்லி முடிக்கறச்சேயே ஆஞ்ஜநேயரும் அங்கே வந்து சேந்துட்டார். ஒடனே ஜாம்பவான் அவருக்கு அவஸரச் சேதி சொல்லி அவஸரக் கார்யம் குடுத்தார். 'நீதான் ராம–லஷ்மணாள் உள்பட எல்லாருக்கும் இப்பப் புத்துயிர் தரணும். என்ன பண்ணனும்னா, பாரததேசத்து வடகோடி ஹிமாசலத்துல கைலாஸத்துக்கும், ரிஷபாசலம்கிறதுக்கும் மத்தியில ஓஷதி பர்வதம்னு ஒண்ணு இருக்கு'... ஸஞ்ஜீவி பர்வதம்னு பொது வழக்குல ப்ரஸித்தமா சொல்லிண்டு

இருக்கோமே, அது இந்த ஓஷதி பர்வதம்தான்!.... 'அந்தப் பர்வதத்திலே

@Page 109

திவ்யாஸ்த்ரங்களோட பாதிப்புக்கும் முறிப்பா இருக்கற திவ்ய ஔஷதிகள், தெய்விகமான மூலிகைள் இருக்கு. செத்துப் போனவாளையும் பொழைக்க வைக்கிற ம்ருத ஸஞ்ஜீவின்னு ஒரு மூலிகை'.. ஸஞ்ஜீவினி–ன்னு மட்டுமே அதைச் சொல்றதுண்டு. அதை வெச்சுத்தான் ஓஷதி பர்வதத்தையே ஸஞ்ஜீவி பர்வதம் என்கிறது.. 'அம்பு தைச்சுக் கெடக்கறவாளுக்கு அதைப் பிடுங்கிப் போட்டுட்டு, வடுவும் தெரியாம ஸொஸ்தப்படுத்தற விசல்யகரணி–ன்னு இன்னொரு மூலிகை. கிழிஞ்சு போன சதை, ஒடைஞ்சு போன எலும்பு மொதலானதை மறுபடி ஒண்ணு சேர்க்கிறதா ஸந்தானகரணி–ன்னு மூணாவதா ஒரு மூலிகை. நாலாவதா, அஸ்த்ர ஜ்வாலையிலே எரிஞ்சுபோன சர்மத்தை ஸொஸ்தம்பண்ணி, கலர் வித்யாஸங்கூட இல்லாம அதைப் பழையபடியே ஆக்கற ஸாவர்ண்யகரணி–ங்கிற மூலிகை, இப்படி நாலு அங்கே இருக்கு. அதுகளை வாயு புத்ரனான நீதான் வாயு வேகத்திலே போய்ப் பிடுங்கி எடுத்துண்டு வரணும்'னு சொன்னார்.

"ஆஹா ஆஹா–ன்னு ஆஞ்ஜநேய ஸ்வாமியும் குதிச்சுண்டு பொறப்பட்டார்! அந்தக் குதியிலே அத்தனை ஆயிரம் மைலையும் தாண்டி ஜாம்பவான் சொன்ன ஓஷதி பர்வதத்துலயே வந்து குதிச்சுட்டார்!

"ஸாதாரணமா ஒரே ப்ரகாசமா இருக்கற அந்த திவ்ய ஔஷதிகள் அவரை சோதிச்சுப் பாக்கணும், அவரோட புத்தி பலத்துக்கு இந்த crisis–ல கூட test வெச்சு அவர் pass பண்ணறதை லோகத்துக்குக் காட்டணும்னு நெனச்சுதுகள். அதனால, அதுகளும் இந்த்ரஜித் மாதிரியே கண்ணுக்குத் தெரியாம ஆயிடுத்து!

"புத்திமானான ஆஞ்ஜநேயர் அதுக்காகச் சளைக்கலை! மூலிகை தெரியாட்டா என்ன ? அது இருக்கற மலையையேப் பிடுங்கிண்டு போய்ட்டா

@Page 110

போறது'–ன்னு எளிசா நெனச்சு, அநாயாஸமா பூப்பறிக்கறாப்பல ஸஞ்ஜீவி பர்வதத்தையே பிடுங்கி எடுத்துண்டு பறந்து வந்துட்டார்!

"விபீஷணனும் ஜாம்பவானும் ஒவ்வொரு க்ஷணமும் யுகமா நெனச்சுக் கையைப் பிசைஞ்சுண்டு நிக்கறச்சே, ஸமய ஸஞ்ஜீவியா முழு பர்வதத்தோடயே

அங்கே வந்து குதிச்சார், எடுத்த கார்யம் எதுவானாலும் ஜயிச்சுண்டுவர ஆஞ்ஜநேய ஸ்வாமி.

"கொண்டு வந்தது ஸஞ்ஜீவி; அவரோ சிரஞ்ஜீவி. ராமாயணத்துக்கே ஜீவனாயிருக்கிறவர் அவர்தான். இந்த பாரததேசப் பண்பாட்டுக்கு அவரே ஜீவன். 'ஸகல தினுஸூலயும் மஹா பலமும் இருக்கணும்; அதே ஸமயத்துல மஹா அடக்கமாவும் இருக்கணும்'–கிறதுதான் அந்தப் பண்பாடு!

"அவர் மலையும் கையுமா வந்தாரோ இல்லையோ, அதுல இருந்த திவ்ய மூலிகைகளின் காத்து பட்ட மாத்திரத்திலே ராம–லக்ஷ்மணாளும் மத்த எல்லா வானராளும், தூங்கி எழுந்திருக்கறாப்பல எழுந்துட்டா.

"அண்ணா–தம்பிகள் ஒதவிக்க முடியாத பெரிய பேராபத்துல சின்ன திரு 'அடி' தான் இப்படி இந்த ஒதவியைப் பண்ணித்து.

"அத்...தனை பேருக்கும் உசிர் குடுத்தவர், சக்தி குடுத்தவர் 'சிறிய' திருவடின்னு அடக்கமாப் பேர் உள்ள மஹாசக்தர். ஆனா 'அஸாத்ய ஸாதக'ராத் தாம் பண்ணினதை அவர் பொருட்டா நினைக்கலை. எழுந்திருந்த ராமாதியர்களைக்கூடக் கட்டிண்டு கூத்தாடலை. பின்னே என்ன பண்ணினார்–னா, 'இங்கே ஸஞ்ஜீவி பர்வதத்தோட கார்யம் முடிஞ்சாச்சு; இனிமே க்ஷணங்கூட தாமஸிக்காம அதை அதனோட எடத்துல கொண்டு போய் வெச்சுடணும்'–ங்கிற தர்மத்தையே முக்யமா நெனச்சார். அப்படியே மறுபடி இமயமலைக்குப்

@Page 111

போய் அதை வெச்சுட்டு வந்து, ஸுக்ரீவன் கிட்ட மேக்கொண்டு (மேற்கொண்டு) தான் என்ன பண்ணணும்னு 'இன்ஸ்ட்ரக்ஷன்' வாங்கிக்க ஆரம்பிச்சுட்டார்!

"தன் பெருமையைப் பாராட்டாம, அத்யந்தமானவா கிட்ட உறவுகூடப் பாராட்டாம, கார்யந்தான் குறி–ன்னு அவர் இருந்ததை என்ன சொல்றதுன்னே தெரியலை!

"இதே மாதிரி அந்த அடி ஒதவினதா இன்னொண்ணும் அந்த யுத்த காண்டத்துலயே வரது. இதைவிட அதை விசேஷமானதாச் சொல்ல நியாயமிருக்கு."

## 7

"இந்த்ரஜித் ப்ரம்மாஸ்திரம் போட்டு அண்ணா–தம்பி.... ராம–லக்ஷ்மணாள்தான்; அந்த ரெண்டு பேருமே நெனவு தப்பிக் கிடந்தப்ப ஒருத்தருக்கொத்தர் ஒதவி பண்ணிக்க முடியலை–னாலும், 'நெனவே இல்லாதவா எப்படி ஒதவி பண்ணிக்க முடியும் ?'–ங்கிற ஸமாதானமும் அதுக்கு இருக்கு.

"அதோடகூட நெனவு தப்பிப் போனதுலயே அவாளுக்கு ஒரு லாபமும் இருந்தது. 'அதென்ன ? வேடிக்கையாயிருக்கே!'ன்னா, ப்ரஜ்ஞையே இல்லாததால அவா ரெண்டு பேருக்குமே தங்கள்ல மத்தவர் இப்படி அடிபட்டுச் சாஞ்சுட்டாறே–ங்கிற பரம துக்கமும் அப்ப ஏற்படலை. அவா பரஸ்பரம் உயிருக்குயிரா இருந்தவான்னா ? அதனால, மூர்ச்சைதான் போட்டிருக்கா, மூச்சே போயிடுத்தா–ன்னு தெரியாத அப்படிப்பட்ட ஒரு ஆபத்துல ஒத்தர் இருக்கறதை இன்னொத்தர் பாத்தா அப்படியே துடிச்சுப் போயிருப்பார். நெனவு தப்பிட்டதால அந்தத் துடிப்பு லாபம் உண்டாச்சு.

@Page 112

"அவா ரெண்டு பேர் மட்டுமில்லே. ஜாம்பவான், விபீஷணர், ஹநுமார் (ஆகிய) மூணு பேர் தவிர, வானர கரடி ஸைன்யங்கள் முழுழக்கவுங்கூட அப்ப ப்ரஜ்ஞா பங்கமாயி (நினைவு தப்பி)த்தான் கெடந்தன. அதனால, பெரிய உத்பாதம்தான் நடந்திருந்தது–ன்னாலும் அப்படி ஒண்ணு நடந்திருக்கு–ன்னு தெரிஞ்சுண்டு துக்கப்படறதுக்கும் அந்த மூணு பேரைத் தவிர யாரும் இல்லே! மத்தவாள்ளாம் விபரீதமே தெரியாம அவா பாட்டுக்குக் கட்டையாட்டமா தெடந்தா.

"ஆனபடியினால, அண்ணன்–தம்பி, இன்னும் அந்த அண்ணாஸாமிக்காரருக்குப் பக்தத் தம்பிகளாவேயிருந்த அத்தனை வானரங்கள், கரடிகள் மொதலான அத்தனை லக்ஷம் பேருமே பரஸ்பரம் யாருமே எவருக்குமே ஒதவிக்க முடியாத பரம உத்பாதத்துல அந்தச் சிறிய திரு அடிதான் ஸஞ்ஜீவி பர்வதத்தைக் கொண்டு வந்து, அதுல இருந்த ஸஞ்ஜீவினி மூலிகையோட காத்து க்ஷணத்துல அத்தனை பேரோட மூக்கையும் தொளைச்சுண்டு உள்ளே போய், அத்தனை பேரும் ஸ்வஸ்தமா எழுந்திருக்கும்படிப் பண்ணி அளவிட முடியாத ஒதவியைப் பண்ணித்து.அப்பேர்ப்பட்ட ஒதவியைப் பண்ணியிருந்துங்கூட, அந்த ஒதவியோட பரிமாணத்துக்கு க்ஷத்த பெரிய 'ரிலீஃப்' – பரம துக்கம் போய் பரமானந்தம் லபிச்சுடுத்துங்கற 'ரிலீப்' – யாருக்கும் இல்லே; மூணே மூணு பேர் தவிர!

"ராம லக்ஷ்மணாள் மாத்திரமில்லாம, லக்ஷக்கணக்குல அந்த ஸகல ஸைன்யத்துக்குமே உசிர் தந்த மஹா பெரிய ஒதவி நடந்தும் அதனோட 'ரிஸல்ட்' (ஒரு கணம் சிந்திந்து, அதைவிடப் பொருத்தமான வார்த்தையைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியுடன்) அதனோட 'இம்பாக்ட்' ஒதவிக்கு 'ப்ரபோர்ஷனேட்'ட்டாயில்லாம, ஏதோ துளிதான் இருந்தது. 'ஹநுமார் ஒத்தர் மட்டும் ஸௌக்யமா

@Page 113

இருந்துட்டா போறும், ஸைன்யம் முழுக்கச் செத்துக் கெடந்தாலும் உசிர் பெத்துக்கும்'னு ஜாம்பவான் சொன்னது ப்ரத்யக்ஷமாவே 'ப்ரூவ்' ஆனாலும், அந்தப் பெரிய ஸாதனையை உள்ளபடி புரிஞ்சுண்டு ரிலீஃப் அடைஞ்சு ஸந்தோஷப்படறதுக்கு அந்த ஜாம்பவானையும் விபீஷணரையும் தவிர யாருமில்லே. மூணு பேர்ல பாக்கியிருந்த ஹநுமார் தானே தன்னோட ஸாதனையைப் பெரிசா நெனச்சு ஸந்தோஷப்படறவரில்லே. மத்த எல்லாருமே தங்களுக்குப் போன உசிர் அவரால்தான் திரும்பி வந்தது–ன்னு தெரிஞ்சு சந்தோஷம், அவர்கிட்ட நன்றி, எத்தனை பெரிய கார்யம் பண்ணிவிட்டார்–ங்கறதுல போத்தி (போற்றி)ப் பாராட்டறது – எல்லாம் காட்டித்தான் இருக்கான்னாலும், ஒரு ஆபத்தை ஆபத்து நடக்கறப்பவே அவஸ்தைப்பட்டு அநுபவிச்சு, 'இப்படி வந்துடுத்தே'ன்னு துடிச்சு, 'இது தீரணுமே!'ன்னு தவிக்கறப்ப, அது தீருகிறதனால ஏற்படற மஹா பெரிய ரிலீஃப் உணர்ச்சி இதும்போது (இந்த நிகழ்ச்சியின் போது) ஏற்படாததால அந்த ஸாதனை – ஹிமாலத்தோட ஒரு போர்ஷனையே பிடுங்கிண்டு வந்த ஹிமால ஸாதனை – அதுக்கேத்த 'ரெகக்னிஷ'னைப் பெற முடியாமதான் போயிடுத்து.

"இன்னொரு தடவையும் இதே ஒதவியை அந்த அடி பண்ணித்துன்னு சொன்னேனே, அப்பத்தான் ரெண்டு பேரும் நெனவுதப்பி உதவி பண்ணிக்கமுடியாம, (சிரித்து) 'ஹெல்ப்' பண்ணிக்க முடியாட்டாலும், 'they could not help it' –னு சொல்லும்படிக் கட்டையாட்டம் கெடக்காம, ஒத்தர் மட்டும் அப்படிக் கெடந்து, மத்தவர் பூர்ண ப்ரக்ஞையோட இருந்துங்கூட இவர் அவருக்கு ஒதவாம அடியே – சிறிய திருவடியே – ஒதவினது. இதுல விசேஷம், அப்படிப் பிரக்ஞையிருந்தும் ஒதவாம 'ஹெல்ப்லெஸ்'ஸா இருந்தது

@Page 114

ஸாக்ஷாத் அந்த அண்ணாக்காரர், ராமசந்த்ர் மூர்த்தியே–ங்கறதுதான்! மநுஷ வேஷத்தை perfect–ஆ நடிச்சுண்டு இருந்ததுல அவர் அப்படித் தன்னைக் குறுக்கிச் சிறிசு பண்ணிக்கிண்டு, சிறிய அடியையே அந்தப் பெரிய ஒதவி பண்ணும்படியாச்

செஞ்சு, பரம பக்தருக்குப் பேர் வாங்கித் தந்தார்.

"சில வியாதிகள்–ல நோயாளியோட ரத்தத்திலேந்தே 'ஸீரம்' எடுத்து 'இனாகுலேட்' பண்ணி அவனை சொஸ்தப் படுத்திடராளோல்லியோ? அப்ப நோயாளி பலஹீனனா கெடக்கறச்ச அவனோட துளிப்போர (துளியளவு போன்ற) ரத்தமே அவனுக்கு பலம் குடுத்துடறது! அந்த மாதிரிதான் இது. ராமச்சந்திரமூர்த்தி தம்முடைய தெய்விகமான மஹா பலம் – தெய்வ சக்தி – ஹீனமாப் போன மநுஷர் மாதிரிப் பொதுவாவே ஜீவிதம் பூரா இருந்தவர். அதுலயும் ரொம்ப துக்கம் நேர்ந்த காலங்களில ரொம்பவுமே மனோபலம் கொறைஞ்சு போனாப்பல இருந்தவர். அப்படி இருந்தாலும், அவரோட பலத்தையே ஆஞ்ஜநேய ஸ்வாமி தம்மோட பக்தியினாலே க்ரஹிச்சுண்டு – 'ஸ்ட்ரா'ன்னு ஒண்ணால 'கூல் ட்ரிங்கை' உறிஞ்சிக் குடிக்கிறாளாமே, அந்த மாதிரி அந்த நாமாவாலேயே சைதன்ய ரஸ ஸமுத்ரமா இருக்கற ராம சக்தியைத் தமக்குள்ள உறிஞ்சுண்டு – அமாநுஷ்யமானதையெல்லாம் பண்ணி **அஸாத்ய ஸாதக ஸ்வாமி** –ன்னே பேர் பெத்திருக்கார். நமக்கு ரொம்ப சிரமமான ஒரு கார்யத்திலே பிராத்திச்சுக்கறதுக்காக ஒரு ச்லோகம் இருக்கு. அதுல அவரை அந்தப் பேர் சொல்லித்தான் கூப்பிட்டு ப்ரார்த்தனை பண்றதா இருக்கு.

**அஸாத்ய ஸாதக ஸ்வாமி! அஸாத்ய தவ கிம்? வத |**
**ராமதூத ! க்ருபாஸிந்தோ ! மத் கார்யம் ஸாதய ! ப்ரபோ ||**

@Page 115

" 'ஸாதிக்க முடியாததை ஸாதிக்கற பகவானே! உன்னாலயும் ஸாதிக்கமுடியாதது எதுவானும் (ஏதாயினும்) உண்டா என்ன? நீயே சொல்லு. ஆனதுனால, ஹே ராம தூதனே! அருட்கடலாயிருக்கிறவனே! என் கார்யத்தை ஸாதிச்சுக் குடு, ப்ரபுவே!' –ன்னு அர்த்தம். 'நீயே சொல்லு'ங்கிறதுல ஒரு தனியழகு! வேறே யார்கிட்டேயோ தீர்ப்பை விடாம ப்ரார்த்தனா மூர்த்திகிட்டயே விட்டுடற அழகு! பொய்த் தீர்ப்புப் பண்ணினா 'லோகம் என்ன சொல்லும்?', 'நாலு பேர் என்ன சொல்லுவா?' –ன்னெல்லாம் கேக்காம, 'நீயே சொல்லு'ங்கிறதுல 'பவ'ருக்குப் 'பவ'ரும் ஜாஸ்தியாத் தெரியது. அதோட தைன்யமும் (தீன பாவமும்) தெரியறது. **'ஒருதரம் சரவணபவா என்று'** –ன்னு ஒரு விருத்தம் பாடறாளே – அது 'திருவேரக நவரத்தின மாலை'ங்கிற ஸ்தோத்திரத்தில ஒரு பாடல் – அதுல இப்படித்தான் 'ஒரு தரம் அந்த ஷடக்ஷரீயைச் சொன்னாலே நெனச்சதெல்லாம் பலிச்சுடும்னு வேதமே சொல்றதே! இருந்தாலும் நான் எண்ணிமுடியாத ஆவ்ருத்தி அதை ஜபிச்சும் நான் நெனச்சுது பலிக்காமலே இருக்கே! இது ஏனோ?'ன்னு கேட்டுட்டு, **"சொல், குமரா!"** –ன்னு ஸ்வாமி கிட்டயே கேக்கறதா வரும். யாரோ ஊர், பேர் தெரியாத ஒத்தர் ஒரு

நா(ள்) தள்ளி நின்னுண்டு அந்தப் பாடலை அப்படியொரு உருக்கமாப் பாடினார். அதுல அந்த 'சொல் குமரா'வை ஒவ்வொரு தரம் ஒவ்வொரு பாவத்தோட – கெஞ்சலா, கொஞ்சலா, டிமான்ட் பண்றாப்பல, இன்னும் பல தினுஸாயும் ரொம்ப ஃபீலிங்கோட பலுக்கிப் பலுக்கிப் பாடினது இன்னும் காதுல நிக்கறது. பெரிய ஸங்கீத வித்வான் இல்லே, யாரோ கிராமவாசி அப்படி பக்தியிலே பாடிட்டார். பாடிட்டு, வேறே ஒண்ணும் கேட்டுக்காம, போயே போயிட்டார்.....



" 'சொல்லு!'ங்கிற சொல்லைப் போட்டா அதுக்கு இத்தனை அர்த்தமான்னு அதுலேந்துதான் தெரிஞ்சுண்டேன். நாம பாத்துண்டிருக்கற ச்லோகத்துல 'வத'ன்னு – **அஸாத்யம் தவ கிம் 'வத**'ன்னு – வரதே அந்த 'வத'வுக்கு அர்த்தம் 'சொல்லு!'ங்கறதுதான்..."

பெரியவாள் அதோடு நிறுத்திக் கொண்டுவிட்டார். மேல்கதை: ஒரு சில தினங்களுக்குப் பின் அவ்வடியார் மீண்டும் வந்தாராம். நெடுஞ்சாண்கிடையாக ஸ்ரீசரணரை நெடுநேரம் வணங்கிக் கிடந்துவிட்டு கண்ணும் கண்ணீருமாக முன்போலவே எதுவும் சொல்லாமல் புறப்பட்டுவிட்டாராம். விஷயமறியும் ஆவலுடன் அவரைத் தடுத்து நிறுத்திக் கேட்ட கிங்கரரிடம் அவர், "அன்னிக்கு 'சொல்லு, சொல்லு'–னு இந்த முருகனைக் கேட்டுக்கிட்டேன். நெனச்சதைக் காரியமாவே நடத்திக் குடுத்துப் பதில் சொல்லிட்டாரு!" என்றாராம்!...

"அப்படி ராமர் மநுஷ்ய சக்திக்குள்ளேயே தம்மைப் பெரும்பாலும் கட்டுப்படுத்திண்டு இருந்தாலும் அவருடைய சக்தியையே இவர் பக்தியினாலே க்ரஹிச்சுண்டு (அஸாத்ய ஸாதக ஸ்வாமி'ன்னே பேர் பெறும்படி, அமாநுஷ்யமா அநேகம் பண்ணினதுல, அந்த ராமரேகூடத் தம்மல ஸாதிக்க முடியாத கார்யம் மாதிரி வெச்சுட்டதையும் ஸாதிச்சுக் குடுத்து ஸஹாயம் பண்ணி, அவருக்கே சக்தியும் ஊட்டியிருக்கார் – ஒரு பேஷன்டோட ரத்தத்துலேந்து தயாரிச்ச மருந்தே அவனுக்கே பலம் தரமாதிரி!

"அந்த மருந்துக்கு அவனோட துளி ரத்தம் போறும். இவரோ ஸ்வாமியோட சக்தியிலே துளி மாத்திரம் இல்லாம, பூர்ண சக்தியையுமே தமக்குள்ளே வாங்கிண்டு அதனால லோகோபகாரம் – அந்த ஸ்வாமிக்கே உபகாரம் – பண்ணினவர். ஆனாலும் அந்த ப்ரபு பரமகருணை

யோட போட்ட துளிப் பிச்சையிலேயே தாம் இத்தனை பண்ணறதும்–னே மனஸாரப் புரிஞ்சுண்டு அவர் காலடியிலேயே தூளியா, ஒரு சின்ன தூசியா, ஒட்டிக்கிண்டு கிடந்தவர். ராமர் வெளிப்படத் தம்மைக் கார்யத்திலேயே மநுஷ்யர் மாதிரிக் கட்டுப்படுத்திண்டு கொறைஞ்சு நின்ன வினயம் பெரிசா, ஆஞ்ஜநேய ஸ்வாமி கார்யத்திலே அமாநுஷ்யமாப் பண்ணின போதிலும் மனோபாவத்துல ராமரோட கால்தூசியாத் தம்மைக் கொறைச்சிண்டு கெடந்த வினயம் பெரிசான்னு கேட்டா, எடைபோட்டுத் தாரதம்யம் சொல்றதே கஷ்டம்!

"அண்ணன்–தம்பி ஒதவி பண்ணிக்காம அடியே ஒதவி பண்ணின ரெண்டாவது ஸந்தர்ப்பம்னு நான் சொன்னதுல அண்ணன்காரர் தம்பிக்கு நேர்ந்திருக்கிற பிராணாபத்துல ஒதவ முடியாதவராத் தம்மைக் கொறைச்சுண்டு, பொலம்பிண்டு இருந்தார். மொதல் ஸந்தர்ப்பத்துல ரெண்டு பேருமே பரஸ்பரம் ஒதவிக்க முடியாம ப்ரக்ஞை தப்பிக் கிடந்ததுல 'ஒதவ முடியலையே'ன்னு பொலம்பறதுக்கும் எடமில்லாத லாபமாவது இருந்தது. நாமும், 'பிரக்ஞை போனவா, அண்ணன்–தம்பிக்குள்ளதான் ஆகட்டும்; இல்லை. தனக்குத் தானேதான் ஆகட்டும்; எப்படி ஒதவி செஞ்சுக்க முடியும்?'னு 'ரெகன்ஸைல்' பண்ணிக்கும்படியா அப்ப இருந்தது. இப்ப அப்படியில்லே. வாழ்நாளை அண்ணாவுக்கே ப்ரதிக்ஷணமும் அர்ப்பணம் பண்ணி, அவரோட கைங்கர்யமே 'லைஃப்'னு இருந்த தம்பி மட்டும் ப்ரஜ்ஞை போய், ச்வாஸமும் முக்காலே மூணு வீசம் போய், விழுந்து கெடக்கார். அவரை எழுப்பறதுக்கு எதுவும் பண்ணமுடியாம, 'இப்படி ஒதவாக்கரையா இருக்கேனே!' –ன்னு அண்ணாக்காரர் தம்மையே சபிச்சுக்கிண்டு, முட்டிக்கிண்டு பொலம்பறார்.

"என்ன நடந்தது–ன்னா: ஸஞ்ஜீவி மூலிகையால ரா–லக்ஷ்மணாளும் வானர ஸைன்யமும் புத்துயிர் பெத்த

@Page 118

பிறகு மறுபடி உக்ரமான யுத்தம் ஆரம்பிச்சது. ராவணஸேனையைச் சேந்த இன்னம் சில மஹாவீராளையும் ராமரோட ஸேனை தீர்த்துக்கட்டித்து. அப்ப இந்திரஜித் ஸீதை மாதிரி ஒரு மாய ரூபத்தைப் பண்ணி அதை ராமருக்கு எதிரேயே வெட்டிப் போட்டு, அவரையும் ஸைன்யத்தையும் கதிகலங்க அடிச்சுட்டு, 'எவளை மீட்கிறதற்கு படையெடுத்து வந்து யுத்தம் பண்ணினோமோ அவளே போயிட்டாளே!'ன்னு அப்படியே ஸதம்பிச்சு நிக்கும்படியா ஆக்கிட்டு, நிகும்பிலா சைத்தியம்–கிற ஒரு உக்ரசக்தியோட கோவிலிலே பெரிய யாகம் பண்ணப் போய்ட்டான். அந்த யாகத்தை

மட்டும் அவன் நடுவுல எழுந்து வராம, நிர்விக்னமா முடிச்சுட்டானானா. அப்பறம் அவனுக்குத்தான் ஜயம்னு ஆயிடும்; யாரும் அவனைத் தோக்கடிக்க முடியாது. யாக மத்தில சத்ரு பக்ஷத்துக்காரா யாரும் வந்து விக்னம் பண்ணாம இருக்கறதுக்கு வழியாத்தான், ஸீதையைக் கொன்னு போடறதா அவாளுக்குக் காட்டினாதான் அவாளை கதிகலங்கிச் செயலிழந்து நிக்கப் பண்ணமுடியும்னு முடிவு பண்ணி மாயாஸீதை ஒருத்தியைப் படைச்சு அவளை ராமருக்கு முன்னாலேயே வெட்டிப் போட்டுட்டு நிகும்பிலாலயத்துக்கு (நிகும்பலா ஆலத்துக்கு)ப் போய் யாகத்தை ஆரம்பிச்சான்."

ஆனைக்கும் அடி சறுக்கும்! நுணுக்கம் தப்பாது மூலத்திலுள்ளபடி ராமாயண ஸம்பவங்களைச் சொன்ன மேதைமேருவான ஸ்ரீசரணரும் இங்கு...! இந்திரஜித் மாயா ஸீதையை வெட்டிப் போட்டது ராமபிரானின் முன்பு அல்ல; ஹநுமாரின் முன்புதான். முன்பு அசோகவனத்தில் அன்னையைக் கண்டு, அந்த சந்தோஷச் செய்தியை ஐயனுக்குத் தெரிவித்து இன்புறச் செய்த மாருதியே அவள் மாண்ட செய்தியை அவருக்குத் தெரிவித்துத் துடிக்கச் செய்யவேண்டும் என்ற 'ஸாடிஸ்ட்' மனப்பான்மையில் போலும்! கொடூர நிகழ்ச்சியை ஹநுமான் தெரிவிக்க ஸ்ரீ ராமன் தெரிந்து கொண்டு நிலை கலங்கிச் செயலிழந்தார்.

@Page 119

"ராமர்லேந்து ஆரம்பிச்சு ஸகல ஸைன்யமும் ஒரே துக்காக்ராந்தமாய், சோர்ந்து ஒக்காந்து, இந்த்ரஜித்துக்கு அவன் ஆசைப்பட்ட மாதிரியே யாகத்தை ஒரு இடைஞ்சலும் இல்லாமப் பண்றதுக்கு 'ஃப்ரீ பாஸ்' குடுத்துட்டா. அந்த ஸமயத்துல விபீஷணர் விஷயம் கேள்விப்பட்டு ஓடோடி வந்தார். ராவணனோட சித்தப்போக்கு, இந்த்ரஜித்தோட இந்த்ரஜால ஸாமர்த்யம் ரெண்டும் அவருக்கு நன்னாத் தெரியுமானதுனாலயும், அவரைச் சேர்ந்த வீராளும் ராக்ஷஸாளேயானதுனால லங்கைல நடக்கற ஸகல கார்யமும் அவருக்கு ஔவு (உளவு) தெரிஞ்சு, நிகும்பிலாலயத்துல யாகத்துக்கு ஏற்பாடாயிருக்கிறது தெரிஞ்சிருந்திருந்தனாலேயும் வாஸ்தவத்துல என்ன நடந்ததுங்கிறதை ஊஹிச்சுண்டுட்டார். ஸீதை கிட்ட துர்நோக்கம் படைச்ச ராவணன் 'தன்னோட நோக்கத்துக்கு அவ என்னிக்கோ ஒரு காலத்திலேயாவது உடன்பட்டாலும் படலாம். ஆனதுனால அவளைக் கொன்னுப்புடக்கூடாது'ன்னு ஒரு நப்பாசை வெச்சுண்டிருந்தான். இது எல்லா ராக்ஷஸாளுக்கும் தெரிஞ்சதுதான். ஆகையினாலே அதுக்கு மாறா அவளை வெட்டிப்போடறதுக்கு இந்த்ரஜித் ஒருகாலும் நினைச்சிருக்க முடியாது; அவளை மாத்திரம் அவன் நிஜமாவே ஹத்தி (கொலை) பண்ணியிருந்தானானா ராவணன் அவனையே வெட்டிப் போட்டிருப்பான்; ஆனதுனால, யாராலும் தன்னை ஜயிக்க

முடியாமப் பண்ற பாகத்தை இடைஞ்சலில்லாமல் செய்யறதுக்காகவேதான் அவன் மாயா சக்தியினாலே ஸீதை மாதிரி ஸ்ருஷ்டிச்சு வெட்டிப் போட்டிருக்கான்–னு விபீஷணர் ஊகிச்சுத் தெரிஞ்சுண்டு அதை ராமருக்குச் சொன்னார்.

"ஓடனே ராமருக்கும் ஸைன்யம் பூராவுக்கும் உத்ஸாஹம் பொறந்து மறுபடி யுத்த முஸ்தீபு ஆரம்பிச்சதுன. யாகத்துக்கு இடைஞ்சல் பண்ணி இந்த்ரஜித்தை அதுலேந்து இழுத்தாலொழிய தாங்கள் ஜயிக்க வழியில்லைங்கறதால

@Page 120

வானர வீராள் அந்தக் கார்யத்தைப் பண்ண நிகும்பிலாலயத்துக்குப் போய்ச் சேர்ந்தா. (சிரித்து) 'Roles reversed'–ங்கிறாளே, அப்படி! ஸாதாரணமா வழக்கம், ரிஷிகளும், ஸத்துக்களான ராஜாக்களும் யாகம் பண்றப்ப அஸுராளும் ராக்ஷஸாளும் அதை நடக்கவெட்டாம பண்றதுதான். ராமசந்திர மூர்த்தி அவதார கார்யமா மொதமொதலாப் பண்ணினதே அந்த மாதிரி எடைஞ்சல் பண்ணின ராக்ஷஸாளை வதைச்சு, விசுவாமித்ரரோட யஜ்ஞத்தை ரக்ஷிச்சுக் குடுத்ததுதான். இப்ப நேரெதிரா ராக்ஷஸனோட யஜ்ஞத்துக்கு விக்னம் உண்டாக்கறதுக்காக ஸத்துக்காளன வானராள் போனா! போய், தங்களோட உத்தேசத்தை நிறைவேத்தியும்விட்டா. இந்த்ரஜித் சொல்லி முடியாத ஆத்திரக்ஷாத்திரத்தோட மறுபடி யுத்தத்துக்கு வந்தான்...

"வள(ர்)த்தாம சொல்லிண்டு போறேன்: இந்த்ரஜித்தை லக்ஷ்மணன் ஹதம் பண்ணினார். பிள்ளை, அதலயும் வீராதிவீரன் போய்ட்டான்–னவொடனே ராவணனால தாங்கவே முடியலை. பழிக்குப் பழி வாங்கணும்–கிற வேகம் புத்ரசோகத்துக்கு மேலே பெசிா எழுப்பித்து. தன்னுடைய ப்ரிய புத்ரனை வதம் பண்ணின லக்ஷ்மணர் மேலே சக்த்யாயுதத்தை (சக்தி எனும் வேலாயுதத்தை) ப்ரயோகம் பண்ணிட்டான்.

"பேரே சக்தி! மந்த்ர சக்தி, ராக்ஷஸ சக்தியோட சேந்து அது வந்து பாஞ்சு லக்ஷ்மணரோட மாரை (மார்பை)ப் பொளந்துடுத்து! அவர் அப்படியே சாஞ்சுட்டார்! ஏதோ பேருக்கு ஒரு இழைதான் உசிர் அவர் ஒடம்புல ஒட்டிக்கிண்டிருந்தது. எந்த க்ஷணமும் அது போயிடலாம்–கிற ஸ்திதி.

"லக்ஷ்மணரை ராமர் 'வெளியில உலாத்தற (உலாவுகிற) தன்னோட ஸொந்த உசிரி'னே நெனச்சவர்,

@Page 121

சொன்னவர். **'பஹிச்சர ப்ராணன்'**–னு சொல்வார். தனக்காவே ஜீவிச்ச அவன் போனவிட்டுத் தான் ஜீவிச்சு என்ன ப்ரயோஜனம், யுத்தத்திலே ஜயிக்கறதுலயோ ஸீதையை மீட்கறதுலயோ என்ன ப்ரயோஜனம்–கிற அளவுக்கு அப்ப ஸ்வாமி ஒரேடியா மனஸ் தள(ர்)ந்து, கொலஞ்சு (குலைந்து) பொலம்ப ஆரம்பிச்சுட்டார். அண்ணன்–தம்பி ஒறவுக்கே இலக்கணம்னு சொல்லும்படியா, ராம வசனத்துல ஒரு ச்லோகம் ப்ரஸித்தமா சொல்லுவா, அது இந்த ஸந்தர்ப்பத்துல அவர் சொன்னதுதான் :

**"தேசே தேசே களத்ராணி, தேசே தேசே ச பாந்தவா: |**
**தம் து தேசம் ந பச்யாமி யத்ர ப்ராதா ஸஹோதர: ||**

" 'லோகத்துல எல்லா எடத்திலயும் ஒரு பத்னி போனா இன்னொருத்தி கிடைப்பா.. புனர்விவாஹம் (மறுமணம்) செஞ்சுக்கலாமோன்னோ ? அதை வெச்சுச் சொல்றார்.. மத்த பந்துக்களிலே ஒத்தர் போனா புதுசா இனொருத்தர்கிட்ட பாந்தவ்யம் உண்டாக்கிண்டு ஸரிப்பண்ணிண்டுடலாம். ஆனா ஸஹோதரனுக்கு ஈடா ஒரு ஸஹோதரனைக் குடுக்கக்கூடிய எடம் எங்கேயும் எனக்குத் தெரியலை'–ன்னு அர்த்தம்.

"இப்படிப் பொலம்பிண்டு ஸ்வாமி தாமும் ப்ராணனை விட்டுடுவாரோ–ங்கற மாதிரி இருந்தப்ப, மத்த ஸைன்யமும் அப்படியே மனஸு சோந்து, தளந்து ஒக்காந்துடுத்து.

"எந்தக் காலத்திலயும் ஒத்தர் 'போய்ட்டார்'னு 'கன்ஃபர்ம்' பண்ணி டாக்டர் 'ஸர்ட்டிஃபை' பண்ணணும்னு ராஜாக்கல் பரம்பரையில இருந்திருக்கு. அப்படி இப்ப ஸுஷேணன்–கிற வானர ஸைன்ய டாக்டர் லக்ஷ்மணனை 'டெஸ்ட்' பண்ணிப் பாத்தான். பாத்ததுல

@Page 122

லக்ஷ்மணருக்கு இன்னமும் ஒரு எழை உசிர் ஓடிக்கிண்டிருந்ததுன்னு தெரிஞ்சுது. முந்தி ராம–லக்ஷ்மணாளும் ஸகல ஸைன்யமும் சாஞ்சு கெடந்தபோது ஜாம்பவான் சொல்லி ஹநுமார் கொண்டு வந்த ஹிமாசல மூலிகைகளை இப்பவும் கொண்டுவரப் பண்ணினா லக்ஷ்மணரை உசிர்ப்பிச்சுடலாம்–னு அவனுக்குத் தெரிஞ்சுது. அதைச் சொல்லி ராமரையும் ஸைன்யத்தையும் தேத்திட்டு, ஆஞ்ஜநேய ஸ்வாமியை மறுபடி இமய மலையிலே இருந்த ஓஷதி பர்வதத்துக்கு அனுப்பிச்சான்.

"Once more–னு ஆஞ்ஜநேயரும் அதே மாதிரி மருந்து மலையைப் பறிச்சுக்கிண்டு பறந்து வந்தார்!

"முன்தடவை அந்தக் காத்தே எல்லாரையும் எழுப்பிடுத்து. அப்ப இந்த்ரஜித் அத்தனை பேரையும் aim பண்ணி அஸ்த்ரம் போட்டதுல அதனோட சக்தி பரவிச் சிதறித் தாக்கினதால அப்படி நடந்தது. இப்பவோ ராவணன் லக்ஷ்மணர் ஒத்தர் மேலேயே 'கான்ஸென்ட்ரேட்' பண்ணிப் போட்டதால அஸ்த்ரத்தோட 'எஃபெக்ட்' ஜாஸ்தியா இருந்தது. அதனால லக்ஷ்மணருக்கு மூலிகையோட வாஸனை மாத்திரம் போதுமானதா இல்லாம, ஸுஷேணன் அதை நசுக்கி லக்ஷ்மணர் மூக்குக்குள்ளே பிழிய வேண்டியிருந்தது.. பும்ஸவனம்–கிற ஸம்ஸ்காரத்துல அப்படித்தான் புத்ர ப்ரஜை உத்பத்தியாகணும்–னு கர்ப்பவதி மூக்குல ஆலங்கொழுந்தை அரைச்ச விழுதை பதி பிழியறது வழக்கம். ஸுஷேணன் அப்படிப் பண்ணினவொடனே லக்ஷ்மணர் துள்ளிக்கிண்டு எழுந்தார். ராமர், இன்னும் ஸைன்யம்–லாமும் அப்படியே ஸந்தோஷத்துல துள்ளிண்டு எழுந்தா.

"ஹநுமானும் துள்ளினார். ஆனா கார்யத்துலே – அதுவும் தர்மப்படியே பண்ற கார்யத்துலயே – அவர் குறி எப்பவும் இருந்ததால அவர் அந்த ஸஞ்ஜீவ மலையையும்

@Page 123

தூக்கிண்டு இமயமலைக்கேதான் ஒரே துள்ளாத் துள்ளினார். அங்கே அதை 'யதா ஸ்தானம்' பிரதிஷ்டை பண்ணிட்டு யுத்தரங்கத்துக்குத் திரும்ப வந்து சேர்ந்தார்.

"மஹா பெரிய அண்ணன், பகவதவதாரமேயான அண்ணன் அம்சாவதாரமான அருமைத் தம்பிக்கு ஒதவ முடியாம அபலரா – அல்லது அபலர்மாதிரி – இருந்தப்ப இப்படி அடிதான், சிறிய திருவடிதான் மஹா பெரிய ஒதவியைப் பண்ணித்து!

"ராமருக்கு இதே மாதிரி ப்ராணனாயிருந்த ஸீதை–பரதாள் விஷயமா அவரோட தம்பிகள் ஒதவாத போதும் அதே அடிதான் ஒதவித்து. அவருடைய ஸாக்ஷாத் திருவடி ஸ்வரூபமான பாதுகைகூட பரதனுக்கு ஒதவாதப்ப இந்த சின்ன திருவடிதான் ஒதவித்து! அடிகளுக்குள்ளேயே இப்படி ஸ்தூலமா எல்லாருக்கும் ராஜாஸ்தானத்துல பெரிசாத் தெரிஞ்ச பாதுகையைச் சின்னது ஒதவறதுல மிஞ்சிக் காட்டிடுத்து! சின்னதா அடங்கியிருக்கறதோட பெருமை அப்படி!

"ஸீதை விஷயம் என்னன்னா, நீங்களே ஊஹிச்சுக்கலாம். அவளை ராவணன் தூக்கிண்டு போனவிட்டு, லோகம் பூராவிலேயும் அவனோட ஆதிக்கம் இருந்ததால எங்கே ஒளிச்சு வெச்சிருக்கானோ–ன்னு தெரியாம ராமர் தவிச்சுண்டிருந்தார். அப்ப, ஆஞ்ஜநேயர்தானே அவ லங்கையில் அசோக வனத்தில் இருக்கறதை நேரில போய்ப் பாத்துட்டு வந்து அவரை ஆச்வாஸப்படுத்தினவர்? அப்பறம் ஸ்வாமி ராவணனோட யுத்தப்ரயத்னம் பண்ணி, தன்னோட அவதார லக்ஷ்யமான ராவண வதத்தை முடிச்சு, 'ஜய ராம ஜய ஜய ராம'–ன்னு அந்த ஆஞ்ஜநேயரே ஸதாவும் ஜபிச்சுக்கிண்டிருக்கும் படியா ஜயராமனா, விஜய ராகவனா ஆயி; ஸீதையை மீட்டு ஸீதாராமனா ஆயி; அவளோட பட்டாபிஷேகம் பண்ணிண்டு பட்டா



பிராமனாயி; ராம ராஜ்யம், ராம ராஜ்யம்னே இன்னிக்கு கொண்டாடும்படி தர்ம ராஜ்யமா ஆண்டு ராஜராமனானதுக்கெல்லாம் வழி பண்ணினவர்?

"ஸீதைக்காக ஸ்வாமி துடிச்சிண்டிருந்தபோது அவரோட சேந்து தானும் துடிக்கறது, அல்லது அவருக்கு ஆறுதல் சொல்றதுன்னுதான் அருமைத் தம்பி லக்ஷ்மணரும் பண்ணினாரே தவிர அண்ணாவுக்கு என்ன கார்யம் பண்ணி ஒதவணுமோ அதைச் செய்யாமத்தான் இருந்தார். பொதுவாவே அண்ணாவை விட்டு க்ஷணமும் பிரியாம, அவருக்கு ஆனதையெல்லாம் பண்ணிக்கிண்டிருக்கறவர் லக்ஷ்மணர். இப்ப அண்ணாவை எங்கேயோ கிஷ்கிந்தை வானராளுக்கு மத்தியிலே, பத்தினியையும் பறிகுடுத்துட்டுப் பரிதவிச்சுண்டிருக்கறப்ப அவரை விட்டுட்டு இவர் எப்படி மன்னியைத் தேடிண்டு போவார்? இந்த ந்யாயம் இருக்கத்தான் இருந்தது–ன்னாலும், அப்ப அண்ணா எந்தச் சேதிக்காகத் துடிச்சிண்டிருந்தாரோ – ஸீதை எங்கேயிருக்காக–ங்கிற சேதிதான், அதுக்கு – அந்தத் தம்பி ஒதவத்தானேயில்லை? அப்ப அடியாயிருந்த ஆஞ்ஜநேயர் தானே அந்த ஒதவியைப் பண்ணி ராமருக்கு உசிரைக் குடுத்தார்? அதுதானே ஸுந்தர காண்டமாயி, பாராயண க்ரந்தங்களில ப்ரதம ஸ்தானம் பெற்ற கதையா இருக்கறது? யுத்தத்திலே ஸ்வாமி தேஹத்துல அடிபட்டு விழுந்தப்ப ஸஞ்ஜீவினியால பௌதிகமா அவரை உயிர்ப்பிச்ச அதே அடிதான். ப்ராணநாயகின்னா ப்ராணநாயகியாவே ஸ்வாமி உசிரா வெச்சிண்டிருந்த பத்னியை இழந்து மனஸுல அடிபட்டு விழுந்தப்பவும் அவளைப் பத்திச் சேதி கொண்டு வந்து அதனால மனோரீதியில அவரை உயிர்ப்பிச்சது!

"அதுல ஸ்வாமி பெத்த ஸந்தோஷம் வேறே எப்பவுமே பெறலை. 'இப்படி ஒரு உபகாரம்

@Page 125

பண்ணிப்பிட்டியே அப்பா! ஓனக்கு என்ன ப்ரதி – கைம்மாறு – பண்ணுவேன்? ராஜ்யத்தையும் எழந்துட்டு (இழந்துவிட்டு) தீனனாவேறே இருக்கற இந்த தசையிலே பொன்ன, பூமியா ஓனக்கு என்ன ஸம்மானமும் பண்ண முடியாம இருக்கேன்! இப்ப நான் ப்ரதியாப் பண்ணக் கூடியதெல்லாம்..... அப்பா, இங்கே வா இப்படி, கிட்ட'ன்னு சொல்லி ( உன்னத உணர்ச்சியுருக்கத்துடன் நாடகமாகவே பேசிப்போன ஸ்ரீசரணர், ஓரிரு வினாடி பேசவொண்ணாமலிருந்து பின்னர்) ஆஞ்ஜநேயரைக் கிட்டக்கக் கூப்பிட்டு அப்படியே கட்டிக்கிண்டுட்டார்!

"இங்கே ஸ்வாமி கடபமாத்தான் – ரொம்பவும் அழகான, உத்தமமான கபடமாத்தான் – பேசியிருக்கார்! பொதுவா ராமசந்த்ர மூர்த்தி அப்படிப் பேசமாட்டார்; கிருஷ்ணர்தான் அதே தொழிலாயிருந்தவர்! அபூர்வமா இங்கே ராமரும் அப்படிப் பண்ணினார். வாஸ்தவத்துல அவர் அயோத்யா சக்ரவர்த்தியாவே இருந்து ராஜ்யம் பூராவையும் ஆஞ்ஜநேயருக்குக் குடுத்திருந்தாலும் அது அந்த ஆலிங்கனத்துக்கு ஸமதையாகாது. அவரைத் தன்னோட திவ்விய சரீரத்தோட சேத்துக் கட்டிக்கிண்ட gesture–ல ஸ்வாமி தன்னையே அவரக்குத் தத்தம் பண்ணிண்டுட்டார்! அதுதான் நிஜம்! அதைத்தான், வாயிட்டுச் சொன்னா அழகில்லே; ஆஞ்ஜநேய ஸ்வாமியும் 'தனக்கா? அவ்வளவு அர்ஹதை (அருகதை) உண்டா?'ன்னு நடுங்கத்தான் நடுங்குவார்–ங்கிறதால சொல்லாமச் சொல்லி – அழகாக் கபடம் பண்ணி – ஸ்வாமி நடத்திப்பிட்டார்!

"ஸ்ரீராம சரீரம் பௌருஷமான (ஆணுக்குரியதான) திவ்ய ஸௌந்தர்யத்தினுடைய பூர்த்தி ஸ்தானம்; அதே மாதிரி ஸ்த்ரீகளுக்கு அம்பாள், த்ரிபுஸுந்தரின்னே பேர் இருக்கிறவ; இந்த ரெண்டு தினுசு ஸௌந்தர்யமும் ஒண்ணு

@Page 126

சேந்தது க்ருஷ்ண பரமாத்மாவோட ரூபம்–னு சொல்லுவா. அதனாலதான் க்ருஷ்ணருக்கு புல்லாக்குப் போடறது! அது இருக்கட்டும். ராமரோட திவ்ய மோஹன சரீரத்தைப் பாத்துட்டு, இச்சைகளையெல்லாம் எரிச்சுட்ட தண்ட காரண்ய ரிஷிகளே மோஹிச்சு, 'ராமா, ஓன்னைக் கட்டிக்கணும்போல இருக்கே!'ன்னாளாம். அதுக்கு அவர், 'இந்த அவதாரத்துல ஆலிங்கனத்துக்கு உரிமை பெத்தது, (சிரித்து) sole right

பெத்திருக்கறது ஸீதை மட்டுந்தான். வேறே யாருக்கும் அதைக் குடுக்கறதுக்கு இல்லே. த்வாபராந்தத்துல (துவாபர யுகக் கடைசிப் பகுதியில்) மறுபடி ப்ருந்தாவனத்துல பரப்போறேன். அப்ப நீங்கள்ளாம் – கர்மாவோ, ஞானமோ என்னன்னே தெரியாத, ஆனா ப்ரேம பக்தியில ஈடில்லை –ன்னு இருக்கற கோபிகா ஸ்த்ரீகளா ஜன்மா எடுங்கோ; ஆலிங்கன பாக்யம் தரேன்'னுட்டாராம்.

"தன்னை வருந்திக் கேட்டுண்ட மஹான்கள் கிட்ட அப்படிச் சொன்னவரே, ஒரு யுக காலம் 'வெய்ட்' பண்ணும்படிச் சொன்னவரே, இப்ப தானா கூப்பிட்டு ஆஞ்ஜநேயரை ஆலிங்கனம் பண்ணிண்டார்–னா, அதுக்கு மேலே அந்தச் சிறிய திருவடியோட பெரிய பெருமையைக்காட்ட என்ன இருக்கு? ஆஞ்ஜநேயர் பெத்துண்ட மஹா பாக்யம் அதுதான்! அதுக்கு ஈடா எதுவுமே இல்லே!"

புதிதே ஒரு சிந்தனை உதித்ததில் உண்டான மலர்ச்சியுடன் ஸ்ரீசரணர் தொடர்கிறார்; "இல்லே! அதுக்கு ஈடா இன்னூணு (இன்னொன்று) இருக்கு.. ஸீதையோட 'ஸோல் ரைட்'டான ராம சரீராலிங்கனத்தை ஆஞ்ஜநேயர் அபஹரிச்சுண்டார்–னா அப்ப அவாளுக்குள்ள சக்களத்திச் சண்டைதான் உண்டாயிருக்கணும். ஆனா, இங்கேயோ

@Page 127

ஆஞ்ஜநேயருக்கு ராமர்கிட்ட பரம பக்தின்னா, அந்தப் 'பரம'த்துக்கும் மேலேயே ஸீதைகிட்ட பக்தி! அதே மாதிரி, ராமருக்கு ஆஞ்ஜநேயர் கிட்ட பரம ப்ரீதி–ன்னா ஸீதைக்கோ அந்தப் 'பரம'த்துக்கும் மேலே ப்ரீதி! இங்கே ராமர் 'கண்டேன் ஸீதையை!'னு சேதி கொண்டு வந்து புத்துயிர் குடுத்த ஆஞ்ஜநேயருக்கு ப்ரதியா ஆலிங்கனத்தைக் குடுத்தார். இதுக்கு முந்தி அங்கே அசோகவனத்துல ராமரே நெனவா உருகிண்டு, ராவணனோட தகாத மெரட்டலுக்கு நடுங்கிண்டு, ராக்ஷஸிகள் பண்ற கொடுமையில அவஸ்தைப் பட்டுண்டு உசிரே செத்த மாதிரி இருந்த ஸீதைக்கும் ராமரைப் பத்திச் சேதி சொல்லி, அதுக்கு மேலா அவரோட முத்ரை மோதிரித்தைக் குடுத்து, ஸுக்ரீவ ஸஹாயத்துல அவர் பெரிய ஸைன்யத்தோட வந்து ராவணாதிகளை ஹதாஹதம் பண்ண இருக்கார்–ங்கிற நல்ல ஸமாசாரமும் சொல்லிப் புத்துயிர் குடுத்ததும் ஆஞ்ஜநேயர்தானே? அதனால அவளும் அவருக்கு ரொம்பவும் நன்றிக் கடன், தீர்க்க முடியாத நன்றிக்கடன் பட்டிருப்பதாவே நெனச்சா. பிற்பாடு ராவண வதம் ஆயி, அந்தச் சேதியைச் சொல்லி ஆஞ்ஜநேயர் ஸீதையை அசோக வனத்துலேந்து மீட்டு ஸ்வாமிகிட்ட அழைச்சுண்டு போக வந்த ஸமயத்துல இதைத்தான் அவ அவர்கிட்ட சொன்னா.

"ஏறக் கொறைய ராமர் சொன்னாப்பலேயே அவளும் சொன்னா, 'அப்பா! இப்படியொரு சுபச் சேதி கொண்டு வந்த ஒனக்கு த்ரைலோகாதிபத்யமே (மூவுலகையும் அரசாளும் உரிமையே) கொடுத்தாலும் போறாது. ஒனக்குப் பிரதியா நான் பண்ணக்கூடியது எதுவுமே தெரியலை'–ன்னா.

"ராமர் ஆணாயிருந்ததால ஆலிங்கனம் பண்ணிக்க முடிஞ்சுது. ஸீதை ஸாக்ஷாத் அம்மாவே ஆனாலும்

@Page 128

'தாயார்', 'தாயார் ஸந்நிதி'ன்னே கோவில்ல சொல்ற மஹா லக்ஷ்மியே அவதான்–ன்னாலும் – லோக தர்மம், வியவஸ்தை–ங்கிறது இருக்கோல்லியோ ? ஆனா அம்மா கொழந்தையை அணைச்சுக்கறாப்பலயே இங்கே ஸீதை ரொம்ப ஸூக்ஷ்மமான தினுசுலே ஒண்ணு பண்ணிட்டா. என்ன பண்ணினா–ன்னா, 'ஒனக்கு நான் ஒண்ணும் ப்ரதி பண்ண முடியலையே!'ன்னு, மனஸார அவ நெனச்சுக் சொன்னதே அம்மாவோட அரவணைப்பு மாதிரியான பெரிய ப்ரதியா ஹநுமாருக்கு தெரிஞ்சுது! 'அம்மா, நீ இப்ப சொன்னதே எனக்கு தேவராஜ்ய ஆதிக்யத்தைக் காட்டிலும் மேலானதாயிருக்கு!'ன்னு அவர் ஆனந்தத்தோட சொன்னார். ஸீதை சொன்னதை நேரில் கேட்டுண்ட அவருக்குத்தான் அது எப்பேர்ப்பட்ட பாக்யம்னு தெரியும்!

"இப்படி ஸதி–பதி ரெண்டு பேருமே ப்ரதி பண்றதுக்கு இல்லேன்னு சொன்னாலும் பெரிய ப்ரதி ஸூக்ஷ்மாப் பண்ணித்தான் விட்டா. ஆனா லோகத்தின் பார்வைக்கு அது போறாதுன்னே, பட்டாபிஷேகம் ஆனவிட்டு அந்த திவ்ய தம்பதி அந்த பக்த சிகாமணிக்கு ஸ்தூலமாயும் ஒரு பரிசு குடுத்தா."

**8**

"அதைவிட ஸந்தோஷம் தரதா ஒரு ஸம்பவம் கிடையாது! ராம பட்டாபிஷேகம், ராம பட்டாபிஷேகம்–னு இன்னிக்கும் வீட்டுக்கு வீடு படம் வெச்சுண்டிருக்கோமே, கோவில்களிலேயும் சில்பம் வெச்சிருக்கே, அந்தப் பட்டாபிஷேக கட்டம். லோகம் பூராவுக்கும் ஒரே ஸந்தோஷம், பட்டாபிராமனா ஸ்வாமியைப் பாக்கறதுல! அவனோட ஸஹோதர துல்யாளான (சகோதரருக்கு

@Page 129

நிகரான) விபீஷண – ஸுக்ரீவாளுக்கு ஒரே ஆனந்தம்! எல்லாத்தையும் (எல்லாருடையதையும்) சேத்து வெச்சு ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு!

"பட்டாபிஷேகக் கோலத்துல ராமரை வர்ணிக்கிறதா இருக்கிற ச்லோகங்கள்–ல பிரஸித்தமான ஒண்ணு; ராமாயணத்தைப் பாராயணம் பண்றப்ப ஸ்மார்த்த ஸம்பிரதாயஸ்தா சொல்றது:

**வாமே பூமிஸுதா, புரச்ச ஹநுமான், பச்சாத் ஸுமித்ராஸுத:,**
**சத்ருக்னோ பரதச்ச பார்ச்வ தளயோ:, வாய்வாதி கோணேஷுச|**

**ஸுக்ரீவச்ச விபீஷணச்ச யுவராட் தாராஸுதோ ஜாம்பவான்,**
**மத்யே நீல ஸரோஜ கோமளருசிம் ராமம் பஜே ச்யாமளம் ||**

"அமர்ந்த திருக்கோலத்தில் இருக்கற ஸ்வாமிக்கு இடது பக்கம் மஹாராணியா ஸீதையும் ஒக்காந்திருக்கா. **'வாமே பூமி ஸுதா'**ங்கிறது அதைத் தெரிவிக்கிறதுதான். 'பூமிஸுதா'ன்னா 'பூமாதேவிக்குப் பொண்ணு' ஜனகர் அவளை பூமிக்குள்ளேந்துதான் எடுத்துண்டு வந்து வளத்தது. பொறுமைக்கு பூமாதேவி–ன்னுவா. அப்படி, அம்மா குணத்தை உரிச்சு வெச்சிண்டு இருந்தவ ஸீதை. 'பொறுத்தார் பூமி ஆள்வார்'னும் பழமொழி. அப்படி எத்தனையோ கஷ்டங்களைப் பொறுத்துண்ட விட்டு, இப்ப ராமர் 'ஸார்வ பௌமர்'னு பூமி பூராவையும் ஆளறத்துக்கு ஸிம்ஹாஸனத்துல ஆரோஹணிச்சிருக்கிறப்ப அந்த பூமி ஸுதாவும் மஹாராணியா அவருக்கு வாம பாகத்துல கொலு வீற்றிருக்கா.

"(ச்லோகத்தில்) அப்படிச் சொன்னவொடனேயே ஆஞ்ஜநேயரோட 'பொஸிஷ'னைப் பத்திதான் வரது. அப்பறந்தான் அவர் தம்பிகளைப் பத்திக்கூட வரது.

@Page 130

அப்பேர்ப்பட்ட ஸ்தானம், (சிரித்து) 'பொஸிஷன்' அவருக்கு, ராமாயண பாத்ரங்களுக்குள்ளே! ராமர்–ஸீதைக்கு அடுத்தபடி அவர்தான்!

"ஸீதைக்கு மாத்ரமே–ன்னு ராமர் வெச்சிருந்த ஆலிங்கன பாக்யத்தைப் பெத்தது அவர்தானே? அதனால அப்படி!.. மத்தவா சில பேரையும் அவர் கட்டிக்கிண்டதா ராமாயணத்துலேந்து எடுத்துக்காட்டலாம். ஆனா அதெல்லாம் லோக ரீதியாப் பொதுவாவே – அதுவும் வட தேசத்திலே – ப்ரியமா இருக்கறவா

பண்ற மாதிரிதான். ஹநுமார்கிட்டதான் 'நீ பண்ணினதுக்கெல்லாம் ப்ரதி'னு சொல்லி, தன்னையே குடுத்துக்கற பாவத்துல உத்தேசிச்சு அப்படிப் பண்ணினது. ஏதோ ஜெனரலா கட்டிண்டு ப்ரியம் காட்டற மாதிரி இல்லாம, இப்படி விசேஷ ப்ரியத்தோட, மனஸிலே தீர்க்கமாக நெனச்சுக் கட்டிக்கும்படிதான் ரிஷிகள் அவரைக் கேட்டுண்டதும், அவர் அப்ப, 'ஸீதையைத் தவிர இந்த அவதாரத்துல அதுக்கு யாரும் பாத்ராள் இல்லியே!'ன்னுதும்... மத்தவாகிட்ட, தான் அவதாரம்–கிறதை அவர் மறைச்சுத்தான் வெச்சார். ஆனா ரிஷிகளுக்கு எல்லாம் தெரியுமே! அவரே மறந்து போனாலும் அவருக்கே அதை அவா ஞாபகமூட்டிடுவா! அதனாலதான் அவர் இங்கே தம்மை அவதாரமாச் சொல்லிண்டது!...

"ஸீதைக்கு அடுத்த ஸ்தானம் ஆஞ்ஜநேயருக்குத்தான்! ஸீதை ஸ்வாமிக்கு எடது பக்கம் – 'வாமே பூமிஸுதா'ன்னு ஒக்காந்திருக்கச்சே இவர் எதிர்க்கே (எதிரே), நேர் எதிராயில்லாம ஸ்வாமிக்குக் கொஞ்சம் வலது பக்கக்கோணமா கீழே ஒக்காந்துண்டு அவரோட பாதத்தைப் பிடிச்சுவிட்டுண்டிருப்பார். எப்பவும் ஸ்வாமியோட திருவடி ஸேவையே அந்த சிறிய திருவடிக்கு! இந்த மூணுபேர்தான் பட்டாபிஷேக 'ஸீன்'ல ஒக்காந்திருக்கிறவா

@Page 131

மத்தவாள்ளாம் நிக்கறவாதான். ஆஞ்ஜநேயரும் பரமபவ்யமா நின்னுண்டே இருக்கப்பட்டவர்தான். ஆனாலும் 'நின்னுண்டே ஸ்வாமி பாதத்தைப் பிடிச்சுவிட்டா, வாகா வருமோ, வராதோ ? எப்படி 'ப்ரெஷர்' குடுத்துப் பிடிச்சா ஹிதமா இருக்குமோ, அப்படி முடியுமோ, முடியாதோ ?'ன்னு அவர் நெனச்சு, ஸ்வாமி ஸேவை சுத்தமா நடக்கணுமே–ன்னே ஒக்காந்திருப்பாரா யிருக்கும். இல்லாட்டா 'அஸாத்ய ஸாதக'ரான அவருக்கு அதுவும் ஒரு விஷயமாயிருந்திருக்காது. ஆனா ஸ்வாமிக்குத்தான், தாம் எத்தனையோ பேரை எத்தனையோ வேலை வாங்கும் படியிருந்தாகூட – ஸமுத்ரத்துல அணை கட்டறது; வெட்டும் குத்தும் பட்டுண்டு யுத்தம் பண்றதுன்னுலாங்கூட அவரால வானராளுக்கு வேலை ஏற்படத்தானே செஞ்சுது ? அப்படிப் பண்ணும்படி இருந்தாலுங்கூட – அத்யாவச்யத்துக்கு அதிகமா யாராவது தன் நிமித்தமா துளி ச்ரமப் பட்டாகூட மனஸு ஏற்காது. நின்னுக்கிண்டு ஒத்தரோட காலைப் பிடிச்சுவிடறதுன்னா, ஆஞ்ஜநேயர் என்னதான் பலிஷ்டராயிருந்து அதைப் பொருப்படுத்தாமலே இருந்தாலும் ஒக்காந்துண்டு பிடிக்கறதைவிட அது அவருக்கு ஒரு அணுவாவது அதிகப்படி 'ஸ்ட்ரெயின்' தானே ? அதனால ராமரே ஆக்ஞாபிச்சு அவரை ஒக்காத்தி வெச்சுருப்பார்.

"ராமர் எடது காலை ஸிம்ஹாஸனத்திலேயே மடிச்சு வெச்சுண்டு வலது

காலை மட்டுந்தான் தொங்கப் போட்டுண்டிருப்பார். அப்ப, இணையடி—ன்னு ரெண்டு காலையும் சேத்தே சொல்றதாச்சே, அப்படிப் பிடிச்சுவிடற த்ருப்தி ஆஞ்ஜநேயருக்கு இருந்திருக்காதே—ன்னா.. எனக்குத் தோணும், பரமதயா மூர்த்தாதியான தாயார் ஸீதை அந்த குறையைக் 'காம்பன்ஸேட்' பண்ணியிருப்பேன்.

@Page 132

எடது காலைத் தொங்கவிட்டுண்டிருப்போ. அப்படித்தான் வழக்கம். அப்ப, ஸ்வாமியோட வலது பாதமும் – அர்த்த நாரீச்வர ஸ்வரூவத்துல புருஷ பாகமா இருக்கப்பட்ட வலது பக்கப் பாதமும் – அந்தத் தாயாரோட, ஸ்த்ரீ பாகத்துக்கே உரியதான எடது பாதமும் பாத வீடத்துல இருக்கும். அந்த ரெண்டு பாதத்தையுமேதான் ஆஞ்ஜநேய ஸ்வாமி பிடிச்சுவிட்டுண்டு இருக்கார்—னு தோணும்."

(தமக்குத்தாமே சிறிது சிரித்துக்கொண்டு) தொடருவார். " 'பிடிச்சு விட்டுண்டு'—ன்னா, பிடிச்சார் – விட்டார்னு அர்த்தமில்லை! இது விடாப்பிட! 'பிடிச்சாப்பிடி'ன்னு ஒரே அடியா அவாளைப் பிடிச்ச ஹநுமார் அந்த திவ்ய தம்பதியோட திருவடியையும் விடாமலே பிடிச்சவர் தான். ஆனா 'பிடிக்கிறது'ன்னு மட்டும் சொல்லாம, ஹிதமா 'மஸாஜ்' பண்றதுன்னா கை—காலைப் பிடிக்கிறதும் விடறதும், பிடிக்கிறதும் விடறதுமாகப் பண்ணிக்கிண்டு போறதால 'பிடிச்சு விடறது—'ன்னு சொல்றதே வழக்கம்.. பொதுவாகவே கூட 'போய்**விட்டு** வா', சொலிலி**விட்டு** வா'ன்னு தானே சொல்றது ? அந்த மாதிரிதான் இந்தப் 'பிடிச்சுவிடறது'—ன்னும் வெச்சுக்கலாம்.

"ராமர்—ஸீதை ஸிம்ஹாஸனத்துலயும் எதிக்க தரையிலே ஆஞ்ஜநேயரும் அப்படி ஒக்காந்திருக்கச்சே சுத்திவர (அவர்களைச் சுற்றி) நிக்கற ராமரோட ஆப்தாள்—ல (ஆப்தர்களானவர்ளில், நெருக்கமானவர்களில்) யார் யாருக்கு என்ன 'பொஸிஷன்'னு அந்த ச்லோகத்துல சொல்லியிருக்கு. ராமர் கிழக்குப் பாக்க ஒக்காந்திருப்பார். அதுதான் தீர்மானமான வழக்கம். அதை ச்லோகத்துல சொல்லவேண்டிய அவச்யமில்லே—ங்கறதால சொல்லல்லே. எடது பக்கத்துல தாயார், அவளும் அப்படியேதான் கிழக்கு முகமா; அதையும் சொல்ல வேண்டியதில்லை. ஒரே நேரா இல்லாம அந்த ரெண்டு

@Page 133

பேரும் லேசா ஒத்தர் பக்கம் மத்தவர் பாக்கறாப்பல ஒக்காந்திருப்பா.

" **'வாமே பூமிஸுதா', 'புரச்ச ஹநுமான்'**–கிறது ஸீதை ஸ்வாமிக்கு எடது பக்கமும், ஆஞ்ஜநேயர் எதிர்க்கேயும் இருக்கறதைத் தெரிவிக்கறதுதான். அப்பறம் மத்த ஆப்தாள் பத்தி: **'பச்சாத் ஸுமித்ரா ஸுத:'** – லக்ஷ்மணஸ்வாமி ஸ்வாமிக்குப் பின்னாடி நின்னுண்டிருப்பார்.

"வனவாஸ காலம் உள்பட ஸதா காலமும் ஸ்வாமியோடயே இருந்தவர் லக்ஷ்மணர்தான். அதனாலதான் கோவில்களிலயும் ஸ்வாமி மநின்ன திருக்கோலத்துல இருக்கிறதா பிம்பம் வெக்கறப்ப, அவருக்கு எடது பக்கம் ஸீதை, எதிர்க்கே ஆஞ்ஜநேயர், வலது பக்கம் லக்ஷ்மணர்னு வெக்கறதாவே இருக்கு. அந்தப்படிதான் இந்த ச்லோகத்துலயும் ராமர், ஸீதை, ஆஞ்ஜநேயர், லக்ஷ்மணர்னு சொல்லிட்டு, அப்பறமே மத்தவாளைப் பத்திச் சொல்லியிருக்கு.

"ஆனா இங்கே லக்ஷ்மணர் ஸ்வாமிக்கு வலது பக்கத்துல இருக்கமாட்டார். பின்னாடியே நின்னுண்டிருப்பார். வெறுமனே நிக்கமாட்டார்; கொடை – ராஜான்னா ச்வேத சத்ரம், வெண்கொற்றக் குடை–ன்னு உண்டே, அந்தக் கொடையைப் பின்பக்கம் நின்னுண்டு ஸ்வாமிக்கு மேலே பிடிச்சுண்டிருப்பார். லக்ஷ்மணரும் வெளுப்பு; கொடையும் வெளுப்பு. ச்லோக முடிவுல, ஸ்வாமியை 'ச்யாமளம்'னும் **'நீல ஸரோஜ கோமளருசிம்'**னு சொல்லியிருக்கே, அந்தக் கலருக்கு நல்ல மாறுதலா, அதை நன்னா எடுத்துக் காட்டறாப்பல இப்படி வெள்ளி வெளேர் back-ground! 'ச்யாமளம்'– னா ரொம்ப அடர்த்தியாயில்லாத இள நீலம். 'சாம்பல்' –கிறது அதிலேருந்து வந்ததுதான். சாம்பல் அந்த நிறம்தானே ? வடக்கே 'ச்யாமள்'னு ஆனது இங்கே 'சாம்பல்' ஆயிருக்கு.

@Page 134

செந்தாமரை–ன்னு எங்கேயும் உண்டு. அபூர்வமா, நீலத் தாமரையும் உண்டு. அதுவும் இள நீலமாயிருக்கறதுதான். அதோட, ஸ்பர்சத்துக்குத் தாமரை கோமளமோன்னோ ? அதாவது, ம்ருதுவோன்னோ ? அந்த ஸ்பர்ச ம்ருதுவே கண்ணுக்குத் தெரியற ராமரோட நீலக் கலர்–லயும் பிரதி பலிக்கிறதாம்: **'நீல ஸரோஜ கோமள ருசிம்'!** 'ருசி'–ன்னா இங்கே 'டேஸ்ட்' இல்லே; ப்ரகாசம்–னு அர்த்தம். இள நீலமானாலும் அதுல பளிச்சுனு ஒரு ஜ்யோதிஸ்ஸா ஸ்வாமி இருப்பார்.. ராமரை மரகத வர்ணமாவும் அவரோட ஆப்த பரிவாரம் வேறே மாதிரி 'ஆர்டர்'ல நிக்கறதாவும் ஐதிஹ்யங்கள் உண்டு; பிரஸித்தமான தஞ்சாவூர் படத்துல கூட அப்பத்தான். அதுல இப்ப போகவேண்டாம்.(அவ்விஷயத்தில் இப்போது பிரவேசிக்க வேண்டாம்)!

"அநுபவிகளா இருக்கப்பட்டவாள்–ல ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மாதிரி ஸ்வாமி கொஞ்சம் வித்யாஸமா தரிசனம் குடுத்திருப்பார்; அதுல இது ஒண்ணுன்னு ச்லோகப்படியே பாத்துண்டு போவோம்.

"லக்ஷ்மணர் அப்படிப் பின்னாடி நின்னுண்டு இருந்தார்–னா அப்ப ராமரை அவர் தரிசனம் பண்ணிக்க முடியாது. ஆனாலும் கொடையைப் பிடிக்கிறவா அங்கே தானே நின்னாகணும் ?

"அந்த அருமை அண்ணாவும் வனவாஸத்தை முடிச்சுட்டு, ஸீதாபஹரணத்துல பட்ட கஷ்டமெல்லாம் பட்டுட்டு, கடைசில, இழந்த ராஜ்யத்தை மறுபடிப் பெத்துக்கிண்டு ராஜாராமனாயிருக்கச்சே, அந்த ராஜாவுக்குக் கொடை பிடிக்கிறது, ரெண்டு பக்கமும் ரெண்டு பேர் நின்னுண்டு கவரி வீசறது, அதாவது சாமரம் போடறது–ன்னு ராஜாவுக்கு ப்ரதான மரியாதையாயிருக்கற சத்ர–சாமர கைங்கர்யத்தைக் கூலிக்கு வேலை செய்யற

@Page 135

சேவகன் கிட்ட விடப்படாது; தாங்களேதான் பண்ணணும்–னு அவரோட மூணு தம்பிகளுக்குட்ம (ஆசை)! அப்ப லக்ஷ்மணர், 'நாமதான் வனவாஸ காலத்துலயும் அண்ணாவைப் பிரியாமப் பாத்துக்கிண்டே இருந்துட்டமே! பரத–சத்ருக்னாள்தானே பதிநா...லு வருஷம் அந்த தர்சன பாக்யத்தை இழந்துட்டு கஷ்டப்பட்டுண்டு இருந்தா ? அதனால இப்ப நாம பின்னாடி நின்னுண்டு கொடை பிடிப்போம். அவா ரெண்டு பேரும் பக்கங்களில நின்னுண்டு நன்னா தரிசனம் பண்ணிடே கவரி வீசட்டும்'னு தன்னோட உத்தம குணத்தால நெனச்சுப் பின் பக்கம் போய்ட்டார். இப்ப நான் சொல்லிண்டு போனதுலேயே பரத–சத்ருக்னாள் பொஸிஷனும் தெரிஞ்சுடுத்து – அவா கவரி வீசறதுக்காக ஸ்வாமியோட ரெண்டு பக்கத்துலேயும் நின்னுண்டிருந்தா –ன்னு **'சத்ருக்னோ பரதச்ச பார்ச்வ தளயோ:' –** ன்னு அதைத்தான் ச்லோகத்துல சொல்லியிருக்கு. ஸ்வாமிக்கு வலது பக்கத்துல பரதனும், எடது பக்கத்துல சத்ருக்னனுமா நின்னுண்டிருந்திருப்பா. எடது பக்கத்து ஸீதையை 'வாமே'ன்னு முன்னாடி சொன்னதாலே இப்பவும் அந்தப் பக்கத்து சத்ருக்னனையே பரதனுக்கு முந்தி சொல்லியிருக்கு.

"அப்பறம், **'வாய்வாதி கோணேஷுச ஸுக்ரீவச்ச, விபீஷண'** –ன்னு பேர்களை சொல்லிண்டே போயிருக்கு. அதுக்கு 'வாயு திக்கு முதலான நாலு மூலை திசைகளிலேயும் ஸுக்ரீவன், விபீஷணர், அங்கதன், ஜாம்பவான் ஆகிய நாலு பேர்'னு அர்த்தம். நேராயிருக்கற கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்குகளில் ஸ்வாமி கிழக்குப்

பாக்க ஒக்காந்திருக்கச்சே அவருக்கு எதிரே கொஞ்சம் மேற்கு முகமா அவரைப் பாத்துண்டு ஆஞ்ஜநேயர் காலைப் பிடிச்சுவிட்டுண்டிருப்பார். பின்னாடி, மேற்குத் திசையிலே,

@Page 136

கிழக்குப் பார்க்க ராமர் மாதிரியே லக்ஷ்மணர். ரெண்டு பக்கத்துலயும் தெற்கு–வடக்கா வரத சத்ருக்னாள். அதுல யார் தெற்கு, யார் வடக்கு–ன்னு ச்லோகத்துல இல்லே. ரெண்டு பேர்–ல மூத்தவரான பரத ஸ்வாமி வலது பக்கம், அதாவது தெற்கு–ன்னும், சத்ருக்னர் இடது பக்கம், வடக்கு–ன்னும் வெச்சுக்கலாம். இது நேராயிருக்கற நாலு திசை. அதுல ரெண்டு ரெண்டு திசைக்கு நடுவில ஒவ்வொண்ணா, நாலு மூலையிலேயும் கிழக்குலேந்து ப்ரதக்ஷிண க்ரமத்துல போறப்ப தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு–ன்னு நாலு இருக்கோல்லியோ? எல்லாத்தையும் சேத்துத்தானே அஷ்டதிக், அதைப் பரிபாலிக்கற அஷ்டதிக் பரிபாலகாள்–னு சொல்றது? கிழக்குக்கு இந்த்ரன். தென்கிழக்கு அக்னி, தெற்குக்கு யமன், தென் மேற்குக்கு நிர்ருதி... அந்தப் பேர்ல பல பேரை (பலரை)ச் சொல்றா. தேவ ஜாதியிலே சோராத ஒரு ராக்ஷஸி அல்லது ராக்ஷஸன்தான் அது; யமன் மரண தேவதை–ன்னா இந்த நிர்ருதியும் மாரகமான (மரணத் தொடர்புள்ளதான) ஒண்ணுதான்; உருவின கத்தியோட கழுதை வாஹனத்துல ஒக்காந்திருக்கும் அப்படின்னெல்லாம் சொல்றதுண்டு. தென் மேற்குக்கு அந்த நிர்ருதி, மேற்குக்கு வருணன், வடமேற்குக்கு வாயு, வடக்குக்குக் குபேரன், வடகிழக்குக்கு ஈசானன்–ங்கிற பரமசிவாம்சமான தேவதை–ன்னு எட்டுத் திசையையும் பரிபாலிச்சுண்டிருக்கிற எட்டுப் பேர். அதுலதான் வாயு திசையான வடமேற்கிலேந்து ஆரம்பிச்சு வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு மூலைகளிலே அந்த க்ரமப்படியே – 'முறையே' – ஸுக்ரீவன், விபீஷணன், அங்கதன், ஜாம்பவான் ஆகிய நாலு பேர்னு ச்லோகம் சொல்றது: **'ஸுக்ரீவச்ச, விபீஷணச்ச, யுவராட் தாரா ஸுதோ, ஜாம்பவான்'.** யுவராட்–னா யுவராஜா; தாரா ஸுத–ன்னா

@Page 137

தாரைக்கு புத்ரன். அப்படிச் சொன்னது தாரைக்கும் வாலிக்கும் பொறந்து, வாலியை ராமர் வதம் பண்ணி ஸுக்ரீவனை வானர ராஜாவாக்கினபோது ராமர், வாலி, ஸுக்ரீவன் எல்லாருமே மனஸார இஷ்டப்பட்டு ஸம்மதிச்சதன் பேர்ல பட்டத்திளவரசனா நியமனம் பெத்த அங்கதன்தான். ஸுக்ரீவனுக்கு ஸந்ததி கிடையாது.

"ச்லோகத்துல மூணு 'ஸுத'வரது; மொதல்ல **'பூமி ஸுதா'** – பூமாதேவிக்குப்

பொண்ணான ஸீதை; அப்பறம் **'ஸுமித்ரா ஸுதா:'** – லக்ஷ்மணர். ஸுமித்ரையோட புத்ரரோல்லியோ ? சத்ருக்னரும் அவ புத்ரர்தான். அவர் பேரை 'சத்ருக்னர்' –னே வ்யக்தமா (வெளிப்பட) சொல்லிட்டு, அவரோட அண்ணாவுக்கு மட்டும் பேர் சொல்லாம இப்படிச் சொல்லுவானேன்–னா, புத்ராள்–லயே யாரு ஜ்யேஷ்டாளாவோ, இல்லாட்டா ச்ரேஷ்டாளாவோ இருக்காளோ அவாளைத்தான் குறிப்பாத் தாயார்–தோப்பனார் பேரை வெச்சுச் சொல்றது வழக்கம். எங்கேயாவது வித்யாஸமாயும் சொல்லியிருக்கலாம். தசரத நந்தன், தாசரதி–ன்னெல்லாம் சொல்றதுக்கு தசரதர் பிள்ளைன்னுதான் அர்த்தம். ஆனாலும் அந்தப் பிள்ளைன்னுதான் அர்த்தம். ஆனாலும் அந்தப் பிள்ளைகளுக்குள்ளேயே ஜ்யேஷ்டர், ச்ரேஷ்டர் ரெண்டுமா இருந்த ராமரை மட்டுந்தானே அப்படிச் சொல்றதாயிருக்கு ? 'பார்த்தன்'னா ப்ருதாவோட பிள்ளைன்னு அர்த்தம். ப்ருதா–ங்கிறதுதான் குந்தியோட நிஜப் பேர். அவ க்ருஷ்ணருக்கு ஸாக்ஷாத் அத்தையா வஸுதேவரோட கூடப் பொறந்தவ. சூரஸேனர் என்கிற யாதவச் சிற்றரசருக்கு அவா கொழந்தைகள். அவளை அவர் தன் அத்தானான குந்திபோஜன்–கிற இன்னொரு சிற்றரசருக்கு ஸ்வீகாரம் குடுத்தார். அதனால அவளுக்கு குந்தின்னு பேர் வந்து அதுவே முக்யமா நின்னுடுத்து. ப்ருதா பிள்ளை: 'பார்த்தன்', பாண்டவா அஞ்சு பேருமே

@Page 138

அப்படிப் பாத்தா பார்த்தர்கள்தானே ? ஆனாலும் பிதாவான 'பாண்டு'வுடைய பேரை வெச்சு உண்டான 'பாண்டவா'ங்கற பேர் மட்டும் அஞ்சு பேருக்கும் பொதுவா இருக்கே தவிர, 'பார்த்தன்'–கிறது அப்படியில்லாம, ஜ்யேஷ்ட புத்ரரான தர்மபுத்ரர் பேராவும் இல்லாம, மூணாவதான அர்ஜுனன் பேராவே இருக்கு. ஏன்னா அவர் ஜ்யேஷ்டர்னாலும் இவன்தான் ச்ரேஷ்டன். குணத்திலேயும் தர்மபுத்திரரே ச்ரேஷ்டரானதால அதுலயும் இல்லே; 'இம்பார்டன்ஸ்'–ல! பாண்டவருக்குள் அர்ஜுனனே முக்கியத்துவத்தில் சிரேஷ்டன். மஹாபாரதத்துக்கு அவன்தான் 'ஹீரோ'. த்ரௌபதியை ஸ்வயம்வரப் போட்டியில ஜயிச்சு அவளை நேரா பத்னியா ஆக்கிண்டது மொதலான அநேக முக்யமான கார்யங்கள் அவன் பண்ணினதுதான். பகவான் க்ருஷ்ணரோட அத்யந்த ஸம்பந்தமும் அவனுக்குத்தானே ? கீதோபதேசமே அவனுக்குதானே ? நர–நாராயணாவதாரம்–னு மஹா விஷ்ணு ஒரு ரெட்டை அவதாரம் பண்ணி, அந்த ரெண்டு பேருமே மறுபடியும் அவதாரம் பண்ணினா. அதுதான் க்ருஷ்ணார்ஜுனாள். க்ருஷ்ணர்தான் நாராயணராயிருந்தது; (அது) சொல்லித்தான் தெரியணும்னு இல்லே. நரனாயிருந்தது யார்னா அதுதான் அர்ஜுனன். அதனாலெல்லாந்தான் அவனுக்கே பார்த்தன்னு பேர் வந்தது... ஸுமித்ரா ஸுதனாவே லக்ஷ்மண–சத்ருக்னாள் ரெண்டு பேரும் இருந்தாலும் அதுல லக்ஷ்மணரே ஜ்யேஷ்டர், ச்ரேஷ்டர் ரெண்டுமாயிருந்ததால், 'ஸுமித்ரா ஸுதனன்னா அது குறிப்பா

அவர்தான். ராமாவதார்த்துல ஸ்வாமிக்கு அத்யந்தமா, ஸதாவும் கூடவே இருந்தவர் அவர்தானே ? (ஸுமித்ரை என்ற பெயரின் அடியாகவே பிறந்த) ஸௌமித்ரீ–ங்கறதும் அப்படித்தான் குறிப்பா அந்த 'இளைய பெருமாள்' என்கிறவருக்கே வழங்குகிறது.

@Page 139

" 'பூமிஸுதா', ஸுமித்ரா ஸுதா:'வுக்கு அப்பறம் மூணாவதா அங்கதனைத் 'தாராஸுத'னாச் சொல்லியிருக்கு. (ஸ்ரீராம பட்டாபிஷேகக் காட்சியில்) வாயு திக்கு என்கிற வட மேந்கிலேருந்து ஆரம்பிச்சு அந்த திக்குல ஸுக்ரீவன், அப்பறம் ப்ரதக்ஷிண க்ரமமா வடகிழக்குல விபீஷணன்னு போறதுல, அக்னி மூலையான தென் கிழக்குல அவன் (அங்கதன்) நின்னுண்டுக்கிண்டிருப்பான். கடைசியா, நிர்ருதிக்கு உரியதான தென்மேற்குல ஜாம்பவான்.

"இப்படியிருக்கிறதுல, லக்ஷ்மணர் மாதிரியே, ஆனாலும் அப்படி ஸ்வாமிக்கு முழுக்கப் பின்னாடி அவரை பாக்கவே முடியாதுங்கற அளவுக்கு இல்லாட்டாலும், அவரை ஏதோ எலை மறைவு, கா(ய்) மறைவாவே பாக்கற ரெண்டு மூலைத் திசைகளில ஸுக்ரீவ–ஜாம்பவான்களும், நன்னா தர்சனம் பண்ற எடங்கள்–ல விபீஷண–அங்கதர்களுமா இருப்பா. 'நாமதான் ஸ்வாமியால மஹத்தான அநுக்ரஹங்கள் பெத்துண்டாச்சே! நம்மைக் கொலை (குலை) நடுங்க வெச்சிண்டிருந்த வாலியை ஸம்ஹாரம் பண்ணிப் பெரிய 'ரிலீஃபை'க் குடுத்து, வானர ராஜாவாவும் நம்மை அவர் ஆக்கி, அவரால அத்தனை லாபமும் நாம அடைஞ்சாச்சே! இப்பவும் அவரை நன்னாப் பாக்கும்படியான (சிரித்து) vantage position–கு நாமே ஆசைப்பட்டா நியாயமில்லே'–ன்னே ஸுக்ரீவன் அப்படிப் பின்னுக்குப் போயிருப்பான். ஜாம்பவான் நல்ல வ்ருத்தர். அப்படிப்பட்டவா முண்டியடிச்சுண்டு முன்னுக்கு வராம மத்தவாளுக்கு விட்டுக்குடுக்கறவாளாத்தானே இருப்பா ? அதோடகூட அவர் கலி(யுகம்) பொறக்கறவரையும் தமக்கு ஆயுஸ் உண்டுன்னு வரம் பெத்துக்கிண்டிருந்தவர்.. முன்னாலே எங்கேயோ அவரையும் சிரஞ்ஜீவிகளில

@Page 140

ஒத்தரா சொல்றதுண்டுன்னு சொல்லிட்டேன்." ஞாபகப் பெசகுல அப்படிச் சொல்லியிருக்கேன். வெள்ளைக்காராளாயிருந்தா 'எக்ஸ்க்யூஸ் மீ', 'ஸாரி', சொல்வா. இப்பல்லாம் அந்த ஃபாஷன்–ல நம்மளவாளும் சொல்றா. ஸ்தானம் அதுக்கு தளடம் குடுக்கலே. ஆனாலும் மனஸுல அந்த அபிப்ராயம் (தவற்றுக்கு வருந்தி மன்னிப்புக் கோருவது) இல்லாமலில்லை. அந்த ஸ்தானத்துனாலேயே, அப்படிப்பட்ட

ஸ்தானத்துல இருக்கறவா நமக்கு நல்லதே சொல்வான்னு நம்...பிண்டு வர பக்தாளுக்கு கொஞ்சகூடப் பிசகா எதுவும் சொல்லிடப்டாதேங்கற கவலை, கடமையுணர்ச்சி இருக்கணும். Careful–ஆ இருக்கணும்னுதான் நானும் பாக்கறேன். எங்கேயானும் எடறியும் விட்டுடறது!"....

தாம் ஒரு சிறிய விஷயம் பிசகாகக் கூறியதை மகாபெரியோன் சிறியோரறியப் பிரகாசப்படுத்துவதும், பிசகியதற்கு சூட்சமமாக மன்னிப்பே கேட்கும் அளவுக்குச் செல்வதும், குரு ஸ்தானத்தின் பொறுப்பில் அவருக்குள்ள கெடுபிடிக் கவனமும்! அவைதான் அவரை **'புவிக்குளே முதன்மையுற்றாய்!'** எனுமாறு ஏற்றம் கொள்ளச் செய்திருப்பது.

அவர் ஜகத்குரு, மஹோன்னத மடமொன்றின் அதிபர் என்று உயர் ஸ்தானம் பெற்றவர். அந்த ஸ்தானத்தைப் பெறத் தேவையான ஸகல வித உயர்வுகளும் பரிபூர்ணமாகப் பெற்றவர். அப்படிச் சொல்வதும் போதாது. தாம் ஸ்தானம் வஹித்தால் அந்த ஸ்தானத்திற்கே புதியதோர் உயர்வை ஊட்டியவர் என்று வாயார, மனமாரச் சொல்லத்தக்கவர், அப்பேர்ப்பட்டவர் அந்த ஸ்தானம்தான் தாம் 'எக்ஸ்யூஸ் மீ' கேட்டுக்கொள்ள

*பக். 107

@Page 141

முடியாமல் தடுக்கிறது என்று வருத்தப்படுவதன் எளிமையை என்ன சொல்வது? என்னதான் சொல்வது? ஜகத்குரு சிஷ்ய லோத்திடம் காட்டிய அந்த எளிமையில் துளியளவு த்ருணமாத்ரமேயான சீடரான நம்மால் அவரிடம் காட்ட முடியுமா?

அந்த ஸ்தானத்திடமுந்தான் எத்தனை மரியாதை கொண்டு எளிமை காட்டினார்? 'ஆசார்யாள், பகவத் பாதாள் வஹித்தது இந்த ஜகத்குரு விருது. அவர் ஸ்தாபித்தது இம் மடம். அது எவ்வாறோ தமக்கு வாய்த்துவிட்டது. தாம் குறைந்தவராயிருந்தாலும் அதைக் குறைத்து விடக்கூடாது' என்ற மரியாதை! அதில் பெற்ற எளிமை! அதனாலேயே, மன்னிப்புக் கேட்பதென்றால் நமக்கு எப்படிக் கஷ்டமாயிருக்குமோ அவர் உற்ற கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டார்!

அதிசயமான குரு! மஹா அதிசயமான மட அதிபர்!

ஸ்ரீ மஹா பெரியவாளின் இது போன்ற கணக்கற்ற குணமாண்புகளை உன்னுகையில் உள்ளம் உருகுகிறது. உருகி! எங்கே காணமுடியும் அப்படியொரு மூர்த்தியை ?

"கலிக்கு முந்தி, அதைத் தொட்டுண்டு த்வாபர முடிவுல ஸ்வாமி மறுபடி க்ருஷ்ணரா வரப்போறார்–னும், அப்ப அவருக்கு தன்னோட புத்ரி ஜாம்பவதியை விவாஹம் பண்ணிக்குடுத்து மாமனாரே ஆ(க)ப் போறோம்–னும் ஜாம்பவானுக்கு மேகமூட்டமா தெரிஞ்சிருந்தது. அதனால அவரும் (இந்த பட்டாபிஷேகக் காட்சியில்) பின்னுக்குப் போயிட்டார். (ஸுக்ரீவ–ஜாம்பவான்களான) அந்த ரெண்டு பேருக்கு அப்பறமே விபீஷணர் ராமர்கிட்ட வந்தது. அதனால அவருக்கும், 'தோப்பனாரை (வாலியை) எழுந்துட்ட கொழந்தை'னு

@Page 142

அங்கதனுக்கும் முன்னால நல்ல பொஸிஷனாக் குடுத்துட்டு அவா பின்னுக்குப் போயிட்டா.

"ஸூர்யன் மத்தியிலே, சுத்தி எட்டு க்ரஹம் மாதிரி, ஸூர்ய வம்சதிலகரான ராமர், ஸீதா–ராமர்கள் மத்தியிலே, அவாளைச் சுத்தி, கிழக்குல இருந்து ஆரம்பிச்சு ஆஞ்ஜநேயர், அங்கதன், பரதன், ஜாம்பவான், லக்ஷ்மணர், ஸுக்ரீவன், சத்ருக்னன், விபீஷணன்–னு அந்த ஒம்பது பேரும் காட்சி தர ஸீன் அது. (சிரித்து) ஒம்பது பேருமே எல்லோருக்குமே, எல்லாக் காலத்துலயும் நல்லதே பண்ற க்ரஹங்கள்! ஸூர்யாதி நவக்ரஹ 'ஸெட்–அப்' ஜாமெட்ரிப்படி சச்சதுரமாயவும், அதுக்கு exact–ஆ மத்தியிலே ஸூர்யனும், சுத்தி எட்டுத் திசையிலே பாக்கி எட்டு க்ரஹமுமாகவும் இருக்கற மாதிரி இந்த ராம நவாயதனம் இருக்காது. 'ஆயதனம்'னா 'க்ரூப்'பா ஒண்ணு சேந்திருக்கற ஒரு அமைப்பு. ஏறக்கொறைய அந்த 'பாட்டர்ன்' மாதிரி இருந்ததாலயும், ஒம்பது பேரா இருந்ததாலயும் அப்படிச் சொன்னேன்.

"ராமருக்கு ஒம்பது முக்யமான நம்பர். அவர் அவதாரமே நவமியிலே! ராமாயணத்தைப் பாராயணம், உபந்யாஸம் பண்றப்ப 'நவாஹம்'னு ஒம்பது நாளிலே முடிக்கறதை விசேஷமாச் சொல்றது..

"இத்தனை கதையும் எதுக்கு வந்துன்னா, ஆஞ்ஜநேரயருக்கு, அவர் பண்ணின உபகாரத்துக்காக ஸ்வாமி, ஸீதை ரெண்டு பேரும் ஸூக்ஷ்மமா மஹா பெரிய ப்ரதி

பண்ணிட்டாலும் லோகத்துக்கும் அந்த உபகாரப் பெருமை தெரியும்படியா ஸ்தூலத்துலயும் ஸம்மானிச்சா (வெகுமதி அளித்தார்கள்)ன்னும், அதை ரொம்பவும் ஓசத்தியான பட்டாபிஷேக ஸமயத்துல பண்ணினா–ன்னும் சொன்னேனோல்லியோ ? அப்ப ராமர் மட்டும் ரொம்ப ஆப்தமாயிருந்த இன்னும் செல (சில) பேருக்கும் அப்படியே

@Page 143

ஸம்மானம் பண்ணி, அதெல்லாத்திலேந்தும் பிரிச்செடுத்துப் பளிச்சுனு ஆஞ்ஜநேயருக்குத் தம்பதியாவே செஞ்சான்னும் சொல்லவந்தேன். அதுலதான் அந்த ஸீன் வர்ணனை முழுக்க வந்துடுத்து.

"கூடவே பொறந்த தம்பிகளுக்கு ஸம்பாவனை–னு ஸதஸறியப் பண்ற வழக்கம் இல்லே, பண்ணவேண்டியதுயில்லே. அதனால ஸ்வாமியும் பரத, லக்ஷ்மண, சத்ருக்னாளுக்குப் பண்ணலை. ராமருக்குத் தம்பிகள் தன்னிலேயே பங்கு மாதிரிதான். தனக்குத் தானே ஸம்மானிச்சுக்கிறது உண்டா என்ன ? ஆனா, பிற்பாடு வார்ஸு நியமனத்தின் போது, எங்கேயுமே கேட்டிராத விஷயமா, ஸ்வாமி தன் புத்ராளான லவ–குசாளுக்கு மட்டுமில்லாம, மூணு தம்பிகளோட அத்தனை புத்ராளுக்குமே ராஜ்யத்தைப் பங்குப்போட்டுத்தான் குடுத்தார். சத்ருக்னன் (நாம் பார்த்துக் கொண்டிருக்கும்) இந்த ஸீன்–ல முன்னுக்கு வந்தாலும் ராமாயணத்துல எங்கேயோ பின்னாலதான் இருந்தான்–கிற கொறையில்லாம, ராமர் ராஜாவானவிட்டு அவனோட வீர பராக்ரமாதிகளை வெளிப்படுத்தறதுக்காக அவனை அனுப்பியே லவணாஸுரனை வதம் பண்ண வெச்சார். அதோட லவணன்கிட்டயிருந்து அவன் மீட்ட மதுரா ராஜ்யத்துக்கு – வட மதுரைதான் – அந்த ராஜ்யத்துக்கு அவனையே ராஜாவாகவும் நியமிச்சுட்டார்! இதெல்லாந்தான் ராம குண கண வைபவத்துக்கு எடுத்துக் காட்டு.

"தம்பிகளுக்குப் பரிசு, கிரிசு குடுக்கவேண்டாம். ஸுக்ரீவ, விபீஷாதியரும் தம்பிகள் மாதிரிதான்–னாலும் 'மாதிரி'தானே ? அவாளும் அவாளைச் சேந்தவாளும் விருந்தாளிகளா, அதுவும் ராஜாவாயிட்ட ராமருக்கு honoured guest–ஆ அவாளும் ராஜாக்களா இருக்கிற royal guest–ஆ வந்திருக்கா. எல்லாம் ராஜ தர்மப் பத்ததிப் படியே

@Page 144

செஞ்ச ராமர் அவாளுக்கும் யுவராஜாவான அங்கதனுக்கும் 'ஆனர்' பண்ணத்தானே

வேணும்? அதைத்தான் பட்டாபிஷேகம் ஆனவுடனே ஸ்வாமி பண்ணினார்.

"அவரோட குணகணங்களிலே 'க்ருதஜ்ஞதை' என்கிற நன்றியறிதலும் ஒண்ணு. இவரால மத்தவா அடைஞ்ச உபகாரம் எத்தனை பெரிசாயிருந்தாலும் அதை நெனக்காம, அவா தனக்குப் பண்ணினதையே நெனச்சு ப்ரதியா கைம்மாறு பண்ணினவர் அவர்."

குண கண வைபவரான நம் ஸ்ரீசரணாளுக்கும் இதே போல், தாம் பரமாநுக்ரஹம் செய்தோரிடமும் செய்ந்நன்றி மறவாத சீலம் இருந்தது.

"அப்படிப் பாத்தா, ஆஞ்ஜநேயருக்கே ராமகார்யம் பண்ற திருப்தியிலே ஏற்பட்ட பரமானந்தம், ராமநாம ஜபத்திலே கிடைச்ச அம்ருத பான ஆனந்தம் முதலானதோடு பாத்தா ராமருக்காக அவர் பண்ணின தெல்லாம்கூடக கொறைச்சல்தான்னு ஆயிடலாம்! ஆனா இப்ப ராமரோ அந்த ஆஞ்ஜநேயரையும், ஸுக்ரீவ–அங்கதாளோட சேத்துண்டு ஸம்மானிச்சார்.

" 'வீபீஷணரை விட்டுட்டாரா?'ன்னா... நவநிதியும் கொழிக்கற குபேரனையே ராவணன் ஜயிச்ச லங்கையை தனலக்ஷ்மி தாண்டவமாடற எடமாப் பண்ணியிருந்தான். கிஷ்கிந்தை அப்படியில்லை, வானரங்களோட காட்டு ராஜ்யம்தான் அது. விபீஷணருக்கு அந்த லங்கையையே ஸ்வாமி பெத்துக் குடுத்துட்டார். அதுக்கு மேலே என்ன பண்ணணும்? இருந்தாலும், ஸுக்ரீவனைவிட பக்தியிலே ரொம்ப உச்சிக்குப் போன விபீஷணர் லங்கைக்குப் போய் அதிபத்யம் பண்றதைவிட தங்கிட்டயே இருந்துண்டு பூஜிச்சுண்டிருக்கத்தான் ப்ரியப்படறார்னும் ராமருக்குத் தெரியும். ஆனா ராவணன் புத்ர–பௌத்ராதிகளோட

@Page 145

'போயிட்ட'தால, அந்த ராஜ்யம் வீணாகாம விபீஷணர் அங்கே போய் ஆட்சி பண்ணித்தான் ஆகணும்–கிற தர்மத்துக்காக ராமர் அவரை லங்கைக்கே அனுப்பிச்சார். அப்ப அவருக்குத் தன்னைப் பிரிஞ்சிருக்கிற துக்கம் இருக்கப்படாது–ன்னு ரொம்பப் பெரிசா ஒரு பரிசு குடுத்தே அனுப்பினார். ரொம்பப் பெரிசு! இக்ஷ்வாகு வம்சத்துல வழிவழியா குல தெய்வமா வந்து, ராமரோட அத்தனை பூர்விகாளும் (மூதாதையரும்), தசரதர் உள்படப் பூஜிச்சுண்டு வந்த ஸ்ரீ ரங்கநாத விக்ரஹம்தான் அது! தான் அவதாரம் என்கிறதை ஒளிச்சே வந்திருக்கிற ராமர் இங்கே மட்டும் தனக்குப் பதிலா ரங்கநாதர்னு அந்தப் பரம பக்தருக்குக் காட்டி அந்த விக்ரஹத்தையே குடுத்துட்டார். 'பூஜா விக்ரஹத்தை ராஜ ஸதஸ்ல தரது மொறையில்லை, குப்தமா

(மறைத்துக் காத்து)ப் பண்ண வேண்டியதே அது. அதோட இப்ப அப்படிப் பண்ணினா பொதுஸபையில அவதார ரஹஸ்யத்தை அவுத்து விட்டும் ஆகணுமே! இல்லாட்டா, அயோத்யாக்காரா 'அதெப்படி நம்ம ராஜவம்சத்தோட குல தெய்வத்தை ராக்ஷஸ ராஜாவுக்குத் தரலாம்?'–னு நெனக்கறதுக்கு அது எடமாயிடுமே! அதனால, அப்பறம் விபீஷணர் விடை பெத்துக்கறபோதே ராமர் அதை குப்தமாக் குடுத்தார்.

"ராமர் ஜீவியவந்தரா இருக்கறப்பவே அவர் முன்னாலே அவரோட ரெட்டைக் கொழந்தைகளைக் கொண்டே வால்மீகி மஹர்ஷி ராமாயணத்தை அரங்கேத்தம் பண்ணினார். அதனால அந்த ஆதி காவியத்துல அவர் இந்த ரங்கநாத 'ப்ரெஸன்டேஷ'னை ஒடச்சு (உடைத்து)ச் சொல்லாம, ரொம்ப ஸாமர்த்யமா ஒண்ணு பண்ணினார்: **'லப்த்வா குலதனம் லங்காம் ப்ரயாத் விபீஷண:'** –ன்னு அவர் எழுதிட்டார். அதுக்கு ஒரு அர்த்தம், 'ராஜாவான விபீஷணர் அவருடைய குலதனமான

@Page 146

லங்கையைப் பெத்துண்டு திரும்பிப் போனார்'–ங்கிறது. அப்படித்தான் அப்ப ராமர் காலத்துலயே இருந்து அவரோட கூட ராமாயணம் கேட்ட ஸகலமான பேரும் அர்த்தம் பண்ணிண்டிருப்பா. இன்னொரு அர்த்தம், "**ராமருடைய** குலதனமான ரங்கநாதரைப் பெத்துண்டு லங்கைக்கு விபீஷணராஜா திரும்பிப் போனார்"–ங்கிறது. இதுதான் நிஜத்துல நடந்தது. ஆனா யாரும் அதை எதிர்பார்த்தேயிருக்க மாட்டாளானதால அந்த நிஜ அர்த்தத்தைப் புரிஞ்சுண்டு இருக்கமாட்டா. யாரோட குலதனம்னோ, ரங்கநாதர்–னோ குறிப்பிடாம, ஸாமர்த்தியமா 'குலதனம்'னு மாத்திரம் போட்டு மஹாகவியாயிருந்த மஹரிஷி, மஹானுபாவர் ஸமாளிச்சுட்டார்!

"வ்ருத்தரான ஜாம்பவானுக்கு ஞான–வைராக்யங்களிலேயே செய்யணும்னோ என்னவோ அவருக்கு ராமர் ஒரு ஸம்பாவனையும் செய்யாம விட்டுட்டார். இல்லாட்டா, 'பின்னவதாரத்துலதான் நமக்கே மாமனாராக்கப் போறோமே!ன்னோ, என்னவோ? பாக்கி நின்னது ஆஞ்ஜநேயர், ஸுக்ரீவன், அங்கதன்–கிற மூணுபேர்.

"மொதல்ல ஸுக்ரீவனுக்கு ஸம்மானம் செஞ்சார். ராஜாவாயிட்ட ராமர் ஒரு ராஜாவுக்குத்தானே மொதல்ல செய்யணும்? அவனோட ப்ரஜைகளான ஆஞ்ஜநேயருக்கும் அங்கதனுக்கும் மரியாதை செய்யறதுக்கு முந்தியும் அதைச் செய்யணும்? ஸீதையைத் தேடறது, ராவண–ராக்ஷஸாளோட யுத்தம் செய்யறது (ஆகிய) ரெண்டுலயும் தன்னுடைய வானர ஸைன்யம் பூராவையும் ராமருக்குன்னே ஆக்கினவன்வேறே இல்லியா? அதோட இவர் ஸூர்ய வம்சம்

@Page 147

அவனே—ன்னு வெச்சார். அவனுக்கு நெறய்ய ஸ்வர்ணக் காசுமாலைகளைக் குடுத்தார். ஒடனேயே, 'டிப்ளமாடிக் ப்ரோடோகால்' (ராஜநீதி மரியாதை முறைமைப்)படி, கிஷ்கிந்தைக்கு யுவராஜாவான அங்கதனுக்குப் பேர் பொருத்தத்தோட நவமணி எழைச்ச அங்கதம் என்கிற பாஹுவலயங்களை (தோள்வளைகளை)க் குடுத்தார். அப்பறந்தான் ஸுக்ரீவ ஸசிவரேயான (சுக்கிரீவனுக்கு அமைச்சரேயான) ஆஞ்ஜநேயருக்கு வந்தார் – தனக்கு பரம ப்ரீதி அவரிடமேயானாலும்!

"அப்ப ராமரும் ஸீதையுந்தான் அத்தனை நயமாப் பண்ணமுடியும் என்கிற மாதிரி அந்தத் தம்பதி பண்ணினா! நெனச்சுப் பாத்தாலே ஆச்சர்யமாயிருக்கு, எத்தனை ஸூக்ஷ்மமா எத்தனை பெரிசான ஒண்ணைப் பரஸ்பரம் வாய்விட்டுச் சொல்லாமலே புரிஞ்சுண்டு அவா அப்ப பண்ணினா—ங்கிறது!

"ஸீதைக்கு அடுத்தபடியா தாம் ஸ்தானம் குடுத்திருக்கறது ஆஞ்ஜநேயருக்குத்தான், அதை அந்த ஸீதையும் மனஸார ஒப்புக் கொண்டிருக்கா—ங்கறதைப் புரிஞ்சுக்கக் கூடியவா புரிஞ்சுக்கட்டும்; புத்திகூர்மை, பக்தி சக்தி ரெண்டாலேயும் அதை ஆஞ்ஜநேயர் நிச்சயம் புரிஞ்சுப்பார்—னு அப்ப ராமர் ஒண்ணு பண்ணினார். ஆஞ்ஜநேயருக்குத் தாம் நேரா ஒண்ணும் (சம்மானம்) பண்ணாம, ஆனா, அவருக்குத்தான் அவர் அப்பப் பண்ணுவார், பண்ணியாகணும்னு ஸபையோரெல்லாம் எதிர்பார்த்துண்டிருக்கற ஸமயத்துல, ஸீதைக்கு ஒரு ஹாரத்தைக் குடுத்தார். முக்யமா முத்தும் மத்த கல்லுகளும் எழைச்ச ஒரு சந்திரஹாரம் அது. அப்படி பதியா(க) இருக்கிற ஒரு ராஜா பத்னியான ராணிக்கு ஸதஸ்ல குடுக்கிற வழக்கமேயில்லை. அதுவும் வெளி ரெண்டு பேருக்குக் குடுத்தவிட்டு, ஸம்பந்தமே இல்லாத மாதிரி! புது

@Page 148

வழக்கம் எதையும் தாமா ஆரம்பிக்காத தர்ம வ்யவஸ்தரான ஸ்வாமியே இப்ப அப்படிப் பண்ணினார்! ஏன் பண்ணினார்—னா ஆஞ்ஜநேயரோட அஸாதாரணமான மஹிமைக்காகத்தான் அப்படித் தாமும் அஸாதாரணமா இப்படி ஒண்ணு பண்ணினார்!

"ஸீதை அதை வாங்கிக் கழுத்துல போட்டுக்கிண்டா. ஆனாலும் அப்பவே

ஸ்வாமியோட மனஸறிஞ்ச ஸீதைக்கு, 'ஆஞ்ஜநேயருக்குப் போய்ச் சேரவேண்டிய ஹாரமே இது! அவர் மாதிரியே (ஆஞ்ஜநேயருக்கு) ப்ரதி பண்றதுக்காகத் துடிச்சுண்டிருக்கற தன்னோட உணர்ச்சியை மதிச்சே, தன் கையாலே அதை அவனுக்குக் குடுக்கும்படியாப் பண்ணியிருக்கார்!'னு புரிஞ்சுடுத்து. தனக்கு அந்த 'சான்ஸ்' பதியே குடுத்த ஸந்தோஷமும், பதியோட குண விசேஷத்துல ஸந்தோஷமும் அப்ப அந்த லோகமாதாவுக்குக் கரை கடந்திருக்கும். ஆனாலும் இப்படி ரெண்டு பேருமா ரொம்ப விசேஷ கௌரவம் பண்றதுல ஆஞ்ஜநேயக் கொழந்தைக்கு ஸதஸ்ல த்ருஷ்டி பட்டுடப் போறதே, யாராவது பொறாமைப்பட்டுடப் போறாளேன்னும் அந்தத் தாய்மனஸுக்கு இருந்திருக்கும்! இந்த மாதிரி ஸமயங்களில தெய்வமாவே இருக்கறவாளும் மாநுஷமாத்தான் இருப்பா! அதுலேயே மநுஷாளான நம்ப ஹ்ருதயத்தைத் தொடராப்பல ஒரு அழகு இருக்கும்!"

தெய்வப் பெரியவாள் மாநுஷமாக இருந்து நம் ஹ்ருதயத்தை எப்படியெப்படியெல்லாம் தொட்டிருக்கிறார்?

"ஆனதுனால பஹிரங்கமா இல்லாம அந்தரங்கமாவே அந்த ஹாரத்தை ஆஞ்ஜநேயருக்கு தரணும்னு ஸீதை நெனச்சா.

ஒடனேயே அவளுக்கு இன்னொரு யோஜனையும் எழும்பியிருக்கணும். 'ரெண்டு பேருக்கு பஹிரங்கமா



ஸதஸ்ல ஸம்மானம் பண்ணிட்டு, மூணாம் பேரை விட்டா மட்டும் நன்னாயிருக்குமா? அதுவும் அந்த மூணாமவர் தான் தன்னைக் கண்டுபிடிச்சது, தனியாவே லங்கையை தஹனம் பண்ணினது, யுத்தத்துல ஸஞ்ஜீவி கொண்டு வந்தது, சண்டையிலேயும் வீரதீரத்தால ரொம்ப ஸஹாயம் பண்ணினது–ங்கறதுல்லாம் லோகத்துக்குத் தெரிஞ்சுட்டதால ஸபையில இருக்கிறவாளுக்கு அவரை (ஸம்மானிக்காமல்) விட்டாலும் ஸரியாதானே இருக்காது?'ன்னு நெனச்சிருப்பா. 'அதனால, ஸ்வாமி தனக்கே ஒண்ணு குடுத்து, தான் அதை ரெண்டு பேரோட பரிசாவும் குடுக்கற அளவுக்கு ரொம்பப் பெரிசா ஸதஸ்ல தந்தா த்ருஷ்டி படுமானாலும், அந்த ஸதஸ்காராளையே த்ருப்தி பண்றதுக்காக வேறே ஏதாவது குடுத்தும் ஆகணும். அதுவும் நல்லதுக்கே! அவரும் (ராமரும்) நானும் என்னதான் ஒண்ணு, அவர் பண்ற எல்லா தானதர்மாதி புண்யங்களிலேயும் எனக்கும் பங்கு உண்டுதான்–ன்னாலும், **எனக்கு....ன்னு** (இதை ஸ்ரீசரணர் கூறிய அருமை உண்டே!) இந்த ஆஞ்ஜநேயனுக்கு மாத்திரம் ஏதாவது பண்ணியாகணும்னு இருக்கே! அதுக்கும்

இப்ப வாய்ப்பு வாய்சசிருக்கறதா ஆக்கிண்டுடலாம். ஸ்வாமிக்குத் தெரியாததா? அவரும் இதெல்லாத்தையும் உள்ளே அடக்கித்தான் இப்படி லீலை பண்ணிக்கிண்டிருக்கார். இல்லாட்டா, பத்னியோட சார்புல பதி எது ஒண்ணையும் பண்ணினாத்தான் ப்ரயோஜனமே தவிர, பதியோட சார்புல பத்தினி பண்றதுல ஒரு ப்ரயோஜனமும் இல்லே–ன்னு சாஸ்த்ரம் இருக்கறப்ப, சாஸ்த்ரத்தையே தீவிரமா ரக்ஷிக்கிற அவர் இந்த ஆஞ்ஜநேயன் விஷயம் மாத்திரம் அதுக்கு விசேஷ விலக்கு–ன்னு நெனச்சு, அவர் ஒண்ணை எனக்குக் குடுத்து, அவர் சாப்புலயுமாச் சேத்து நான் அதை அவனுக்குத் தரும்படியாச் செய்வானேன்?

@Page 150

அதை அப்புறம் பாத்துப்போம். இப்ப நாம் மாத்திரமே தனியா, புதுசா அவனுக்கு ஏதாவது குடுத்துடலாம்'னு ஸீதை தீர்மானம் பண்ணினா. ஒடனே திவ்ய வஸ்த்ரங்களும் ஒசந்த பல ஆபரணங்களும் ஆஞ்ஜநேயருக்கு வெச்சுக்குடுத்தா, அந்த ஸதஸ்ல ராணி வேறே யாருக்கும் பண்ணாத 'ஆனர்'!

"குடுத்தாளோ இல்லியோ, இத்தனை நாழி அவ புத்தியால யோஜிச்சு முடிவு பண்ணினதெல்லாம், ஸ்வாமியோட அன்பு விசேஷத்தைப் பத்தின எண்ணம் அவளுக்குப் பொத்துண்டு வந்து, அதுல ஓடியே போயிடுத்து! 'போயும், போயும் எனக்கு இவன்கிட்ட இருக்கற அன்பைப் பெரிசா நெனச்சேனே! அந்த ப்ரபுவோட அன்புக்கு அது உறை போடக்காணுமா? பொம்மனாட்டியானதுனால நாம உணர்ச்சியை வேகமா வெளிப்படக் கொட்டற மாதிரியில்லாம புருஷரா, அதுலயும் சாந்தராயிருக்கிறதால அவர் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுல வெச்சிருக்காரே தவிர, வெளியில விட்டா அதுக்கு ஈடு இணையே இருக்காது. அப்படித்தான் உள்ளுக்குள்ளே அவர் எத்தனையோ அன்பா தாஸாக்ரேஸனுக்காக (தனதடியார்களில் முதலிடம் கொண்டவனுக்காக) உத்தேசிச்சு இந்த முக்தா ஹாரத்தை எனக்குக் குடுத்திருக்கிறதும்! அதைச் சேரிடம் சேக்காம தான் ஏதேதோ காரணங்களைக் கல்பனை பண்ணிக்கிண்டு தாமஸப்படுத்தறது ந்யாயமேயில்லை'ன்னு தோணி (தோன்றி) கழுத்துல போட்டிண்டிருந்த அதைக் கழட்டினா. அது கைக்கு வரப்பவே.... சித்தம்கிறது க்ஷணத்துல நானா தினுஸா மாறிமாறி நெனக்கத்தானே பண்றது? அதனால அவளுக்கு மறுபடி யோஜனை வந்து, 'நாம இப்பத்தான் வேறே யாருக்கும் செய்யாத கௌரவமா இவனுக்கு மாத்திரம் வஸ்த்ர, பூஷணங்கள் குடுத்தோம். அவரே

@Page 151

தனக்கு குடுத்த ஹாரத்தையும் இப்ப அதோட சேத்தா, (ஹநுமானை) ரொம்பத் துஹக்கி வைக்கிறதா பாக்கறபேருக்குத் தோணும்போல இருக்கே! குடுக்காமலும் இருக்கே'ன்னு ஒரே dilemma ஆயிடுத்து, 'ஸ்வாமிதான் நம்பிக்கையோட, மாலையைக் கையில எடுத்து தலை குனிஞ்சுக்கறதுமா மாத்தி மாத்திப் பண்ணினா. ஸ்வாமியும் புரிஞ்சுண்டுட்டார்! இந்த எடத்துல வால்மீகி ஸ்வாமியை 'இங்கிதஜ்ஞர்'–னு சொல்றார். அப்படின்னா வாய்ப்பேச்சு, எழுத்து மொதலான எதுவும் இல்லாமலே ஒத்தரோட மனஸுக்குள்ளே இருக்கறதை அவாளோட முகபாவம் மொதலானதுகளால புரிஞ்சுக்கறது. குறிப்பறிதல்'னு தமிழ்ல சொல்றது.

"ஸ்வாமி பஹு (வெகு) ஸாமர்த்யமா 'டைலம்மா'வை 'ஸால்வ்' பண்ணிட்டார். என்ன இருந்தாலும் ஆஞ்ஜநேயனுக்கு இவ்வளவு பெரிய கௌரதையான்னு யாருக்காவது தோணினா, அந்தக் கேள்விக்குப் பதில் எல்லாருக்கும் தெரியற மாதிரிப் பண்ணிட்டார். அந்த கௌரதைக்கு அவர் அர்ஹர் (அருகதை வாய்ந்தவர்)தான்–னு ஸர்வ நிச்சயமா எல்லாருக்கும் புரியற விதத்தில பண்ணிட்டா அப்பறம் விசேஷ கௌரவம் பண்ணினாலும். 'யதார்த்தமா நடக்க வேண்டியதுதானே நடக்கிறது ?'–ன்னு எல்லாருக்கும் தோணிடுமானதால திருஷ்டி போடமாட்டா, பொறாமைப் படமாட்டா, கேள்வி கேக்கமாட்டா! அப்படி அவரோட விசேஷ யோக்யதாம்சம் தெரியும்படியா, ஆனாலும் பொத்தைப் பூசணியாப் போட்டு ஒடைக்காம நயமாப்

@Page 152

பண்ணுவோம்னு ரொம்ப அழகா ஒரு யுக்தி பண்ணினார். ஆஞ்ஜநேயர் பேரைச் சொல்லாமலே, 'அம்மா ஸீதே; ஒனக்கு ப்ரியமான ஒத்தருக்கு, ப்ரியமானவரா இருக்கறதோட, பௌருஷம், விக்ரமம், புத்தி முதலான எல்லாமும் விசேஷமா எவர்கிட்டப் பரிபூர்ணமா இருக்கோ அவருக்கு ஹாரத்தைக் குடும்மா'–ன்னார்.

"ப்ரியத்துக்காக மட்டும் favourtism ஆகப் பண்ணிடலை; யோக்யதாம்சமும் பாத்தே குடுக்கிறது–ன்னா யாருக்கும் மாத்து அபிப்ராயம் ஏற்படாதுதானே ? அதைப் புரியப் பண்ணவே இப்படி அவர் சொன்னார்.

" 'பௌருஷம்'னா ஆண்மை. ஆண்மை–ன்னா மொரட்டு ராக்ஷஸத்தனம் மாதிரி இல்லை; நல்ல வீர தீரம், அஞ்சா நெஞ்சம் முதலியதோட ஸஹாயகுணம், பணிவு எல்லாமும் சேந்து இருக்கறது அது. 'விக்ரமம்'னா எந்தத் தடையையும் கடக்கிறது: எந்தச் சக்திக்கும் மேலே சக்தி காட்டறது. விக்ரமாதித்தன்–னே ப்ரஸித்தமா ஒரு ராஜாவைச் சொல்றோம். தமிழ் தேசத்து ராஜாக்கள் உள்பட தேசம் பூரா ராஜகுலத்துல நிறைய வெச்சுண்ட பேர் விக்ரமன். பகவான் வாமனாவதாரத்துல

த்ரிவிக்ரமனா வளந்தார். அப்ப மூணுலோகத்தையும் பாதத்தால கடந்தாரோன்னோ ?.....

"அந்த யோக்யதாம்சங்களைக் கேட்டுண்டே போறப்ப, அதுவும் ஒத்தர்கிட்டயே அதெல்லாம் சேர்ந்து–ன்னு வேறே ராமர் சொன்னப்ப, ஸதஸ்ல ஸகலமான பேருக்குமே அது 'ஆஞ்ஜநேயர்தான், ஆஞ்ஜநேயர்தான்'னு தன்னால உறுதிப்பட்டு, அவருக்கு வேறே யாருக்கும் இல்லாத உச்சமான கௌரவ ஸ்தானம் குடுத்திருப்பா; நிச்சயமாக் குடுத்திருப்பா!

"அந்த ஸர்வாநுகூல ஸமயத்துலயே ஸீதையும் சொல்லி முடியாத திருப்தி–ஸந்தோஷங்களோட அந்த

@Page 153

முக்தாஹாரத்தை 'பக்தாக்ரேஸனு'க்கு (அடியார்களில் முதலிடம் கொண்ட ஆஞ்ஜநேயருக்கு)த் தன் கையால குடுத்தா.

"அதை வாங்கிப் போட்டுக்கிண்ட ஆஞ்ஜநேய ஸ்வாமி, 'சந்த்ராம்சு–சய கௌரேண ச்வேதாப்ரேண யதா (அ)சல:'ன்னு இருந்ததா வால்மீகி பாடியிருக்கார். சந்த்ர கிரணங்கள் மாதிரி குளிர் வெளிராயிருக்கற (குளுமையும் வெண்மையும் கொண்டதான) முத்துமாலை ஒரு வெண் மேகம் மாதிரி தன்னோட மலை மாதிரியான வக்ஷஸ்தலத்துல ப்ரகாசிக்க, அவர் பரம சோபையோட விளங்கனார்–னு அர்த்தம். மலைமேலே மேகம் படியுமோன்னோ, அப்படி ஆஞ்ஜநேய ஸ்வாமியோட வஜ்ரதேஹத்து மேலே முக்தாஹாரம்!

"அப்பத்தான் அந்த திவ்ய தம்பதி ஸ்தூலமாவும் அவருக்கு ப்ரதி பண்ணிக் காட்டித் திருப்திப்பட்டது. அதுக்குள்ளேயே ஆஞ்ஜநேயரோட விசேஷ மஹிமை எல்லாருக்கும் தன்னால புரியும்படியாவும் பண்ணிட்டா.

"அவா பெத்த ஸந்தோஷத்தைவிட ஆஞ்ஜநேயர் பெத்தது எவ்வளவோ ஜாஸ்தியா இருந்திருக்கும்.

"எத்தனை பாக்யம், தம்பதியா சேந்து ஸாக்ஷாத் பகவானும் மஹாலக்ஷ்மியுமே பண்ணினது ? வேறே யாருக்குமே இலலாததா, மஹாலக்ஷ்மி தனியா வேறே பண்ணினது ? சேந்து பண்ணினதுலயும் ப்ரிய பர்த்தா குடுத்ததை அவ தன்னோட திவ்ய சரீரத்துல போட்டுண்டு, தனக்கு விசேஷ ஆபரணமாவே ஆயிட்ட அதைக்

கழட்டிக் குடுத்தது ?

"ஸீதையைக் கண்டு பிடிச்சு, ஸரியான ஸமயத்துல அவ ப்ராணனை ரக்ஷிச்சு, அதனாலேயே ராமரோட பரம துக்கத்தைப் போக்கி, அவரோட தம்பிகள் யாராலும்



பண்ண முடியாத ஒதவியைச் சிறிய ஒரு அடியே செஞ்சதுக்குப் பலனான மஹா பாக்யம்தான் அது!

9

"ஸீதை ப்ராண நாயகின்னா, உயிரான தம்பி பரதன் ஸீதை மாதிரியே ப்ராணனை விட இருந்த கட்டத்துலயும், எங்கத் தம்பியும் அந்தத் தம்பியை ரக்ஷிச்சு ஒதவாம அதே அடிதான் ஒதவித்து!

" 'பதிநாலு வருஷ வனவாஸம் முடியற நிமிஷம் வந்துடுத்து. இன்னும் அண்ணா திரும்பி வரதா எந்த அடையாளமோ அறிகுறியோ இல்லையே! இத்தனை நாழி ஊரெல்லைக்கே–ன்னா அவர் வந்திருக்கணும் ?'னு தவியாத் தவிச்சான் பரதன். அதுக்கு மேல தாங்க முடியாம அவன் அக்னியை மூட்டிண்டு அதுல ப்ரவேசம் பண்ணி ப்ராணத்தியாகம் செய்யப் போற ஸமயம்!

"அவனோடயே பொறந்ததுலேந்து ஒட்டிண்டிருந்த சத்ருக்னன் பரிதவிச்சு உருகறான்! அந்தத் தம்பி அப்படி உருகறானே தவிர, அண்ணா அக்னி பிரவேசம் பண்ணாம தடுக்கறதுக்கு எந்த ஒதவியும் பண்ணமுடியலை!

"ராமர் இல்லாத கொறையை பரதனைப் பாத்தே ஆத்திண்ட (ஆற்றிக்கொண்ட) கௌஸல்யையும், 'இப்படிப் பண்ணாதேடா, கொழந்தே!'னு கதறுகிறா!

"ஆனா பரதன் கேக்கற வழியாத் தெரியலை.

"அப்ப, ராமர் ஸமீபிச்சு வந்துண்டேதான் இருக்கார் என்கிறதை, வந்தான் வந்தான்!'னு ஆகாசத்திலேந்து கோஷிச்சுண்டே அங்கே வந்து குதிச்ச ஆஞ்ஜநேயர்தான் பரதனோட உசிரைக் காப்பாத்திக்குடுத்தார்!

@Page 155

"வனவாஸ காலமான பதினாலு வருஷம் முடியப் போறப்பவும் ராமர் ஏன் அயோத்தி எல்லைக்குக்கூட வரலை? அவருக்கு பரதனால அதுக்கு மேலே தாங்கிக்கிண்டு க்ஷணங்கூட ஜீவிச்சிருக்க முடியாது-ன்னு தெரியாதா என்ன? பாதுகையை ஆதியில பெத்துக்கறப்பவே அவன் அவர்கிட்டத் தீர்மானமா, பதினாலாவது வருஷம் முடிஞ்சுதோ இல்லியோ, நீ திரும்பி வரலை-ன்னா நான் நெருப்புல குதிச்சுடுவேன்'னு வெளிப்படவே சொல்லியும் இருந்தானே! அப்படியும் அவர் ஏன் வரலை?

"ஆனா ஒண்ணு. அவர் வராட்டாலும் ஸரியான ஸமயத்துல ஆஞ்ஜநேய ஸ்வாமி குதிச்சிருக்கார். அவர் வந்திருக்கார்னா அவர் தாமா வந்திருக்கமாட்டார். ஏன்னா இந்த மாதிரி எதுவும் தாமா செய்யறது-ன்னு இல்லாம, முழுக்க ராமருக்கு சரணாகதி பண்ணி, அவருக்குப் பராதீனமா ஆயி அவர் ஏவலின் கீழேதான் இவர் ஸகலமும் செய்யறவர். இதுல அழகு, இது கொஞ்சம் கூட நிர்பந்தப் பராதீனமில்லே. பரிபூர்ணமான அன்பினால ஆஞ்ஜநேயர் ஸ்வயேச்சையாவே தன்னோட ஸ்வயேச்சையைத் தியாகம் பண்ணி ராமர் இச்சைப்படி அவருக்கே ஆதீனப்பட்டு இருந்தார். சரணாகதாளா இருக்கற எல்லாருமே அப்படித்தான்...

"ஆகையினாலே, ராமரே அவஸரமா அனுப்பிச்சுதான் ஆஞ்ஜநேயர் அந்த ஆபத்தான ஸமயத்துல பரதனுக்கு முன்னால வந்து குதிச்சு ரக்ஷிச்சார்னு ஆறது.

"இவரை அனுப்பிச்ச அந்த ராமரே ஏன் வந்திருக்கப்படாது? எதனால இவரை அனுப்பணும்? அப்ப அவருக்கு இதைவிட முக்கியமா என்ன காரியம் இருந்தது?

"என்ன காரியம்னா, மூக்கைப் பிடிக்க விருந்து சாப்பிடற காரியந்தான்! 'சாப்பாட்டு ராமன்'னு

@Page 156

சொல்றமே, அதை ரூபிக்கறாப்பலவே அப்ப ஸ்வாமி பண்ணிப்பிட்டார்!"

சிரிக்கிறார். ஸ்ரீசரணர். கதை கேட்கும் ச்ரோதாக்கள் சிந்தித்துக் குழம்புகிறார்கள்! அவர்களைச் சிறிது போது அப்படி ஊசலாடவிட்டு கதைக்கு விருவிருப்பூட்டும் இலக்கிய கர்த்தர் தொடர்கிறார்.

"உயிரான தம்பி ப்ராண த்யாகம் பண்ணிடுவான்கிற ஸமயத்துலயா குண ச்ரேஷ்டரான ஸ்வாமி விருந்தைப் பெரிசா நெனச்சார்–னா, அவர் விருந்தைப் பெரிசா நெனக்கலை. அந்த விருந்தை வெச்சாரே, அவரோட வார்த்தையைப் பெரிசா நெனச்சார். மீறவே முடியாத ஆக்ஞை அதுன்னு நெனச்சே அதுக்குக் கட்டுப்பட்டார்.

"யார் அப்படி ஆக்ஞை பண்ணினது ? அவர் சொன்ன வார்த்தை என்ன ?

"பரத்வாஜ மஹரிஷிதான் அது. மஹா சக்திமானகளாக இருந்த பெரிய ரிஷிகள்ல அவர் ஒருத்தர். அவர் மாதிரியானவா கிட்ட ராமருக்கு ரொம்ப பக்தி, மரியாதை. பிராம்மணாள், வயஸுல பெரியவா எல்லார்கிட்டயுமே பவ்யமா இருந்த ராமருக்கு மஹர்ஷிகள் வார்த்தை–ன்னா வேத வாக்கே! வேதவாக்கு–ன்னா அது வேதத்தோட comman–ஏ, ஆஜ்ஞையே!... அப்படித்தான் ஸகலமான ஜனங்களுமே யுக யுகமா இந்தத் தேசத்துல அபிப்ராயப்பட்டு வந்திருக்கா. ராஜா வாக்கா வர ராஜ ஆஜ்ஞையைக்கூட மீறினாலும் மீறுவாளே தவிர, வேத வாக்கை மீறப்படாது–ன்னு வெச்சுண்டிருந்தா. அப்படி யுகாந்தரமா ஊறினதாலதான், இன்னிக்கு வேதத்தை அடியோட மறந்துட்டு, அல்லது வேணும்னே தூக்கிப் போட்டுட்டு வேத வாக்குக்கு வித்தியாஸமா தன்னிஷ்டப்படியே பண்றது–ன்னு ஆயிருந்தாலும், யாராவது வேறே எவரோ ஒருத்தர் சொன்னபடியேதான்

@Page 157

ஆடறார்–னா, 'இவனுக்கு அவன் சொல்றதுதான் வேதவாக்கு'ன்னு சொல்றதா ஏற்பட்டிருக்கு! (ஏதோ ஒரு கூற்றைப் பிறர் வலியுறுத்தும் போது) 'கேட்டுத்தான் ஆகணுமோ ? வேத வாக்கோ ?'–ங்னிணோம்!

"ராமருக்கு ரிஷிகள் சொல்றது வேதவாக்கு. (சிரித்து) அகண்டாகாசத்துல ஸூக்ஷ்மமா வியாபிச்சிருக்கிற வேத வாக்குகளை நம்ம காதுக்குக் கேக்கறாப்பல, நம்ம வாக்கால அத்யயனம் பண்ணறாப்பல இழுத்துப் பிடிச்சுக் கொண்டு வந்து குடுத்திருக்கறதே ரிஷிகள்தானே ?

"பரத்வாஜர் அயோத்தியிலேந்து தண்டகாரண்யம் போற வழியில அயோத்திக்குக் கிட்டயே ப்ரயாகைக் காட்டுல ஆச்ரமம் வெச்சுண்டு இருந்தவர். ஸ்வாமி வனவாஸம் ஆரம்பிக்கறப்ப, கங்கை தாண்டினவிட்டு மொத மொதலாத் தேடிண்டு போய்ப் பாத்த ரிஷி கங்கா–யமுனா ஸங்கமத்துல இருந்துண்டிருந்த பரத்வாஜர் தான். அப்படி அவர் ரிஷிகிட்ட, பிதா ஆக்ஞைப்படி வனவாஸம் செய்யப்

போறதாவும், அந்த 'பீரியட்'ல, க்ஷத்ரியாள் ஒரு நாளும் விடறதுக்கு இல்லாத துஷ்ட ஸம்ஹாரம் தவிர மத்த எல்லா விஷயத்துலயும் ஒரு தபஸ்வி மாதிரியே தாம் இருக்கப் போறதாவும் சொன்னார். குறிப்பா கந்த–மூல–பலங்களையே (கிழக்கு–வேர்–கனிகள் முதலியவற்றையே) ஆஹாரம் பண்ணிக்கிண்டு இருக்கப் போறதாச் சொன்னார்.

"பரத்வாஜருக்கு ஆதித்யத்துல, அதாவது விருந்தோம்பலிலே ஒரு அலாதி ப்ரியம்...... 'அதிதி' (athithi)க்குப் பண்ற உபசாரம் 'ஆதித்யம்' (aathithyam). ஸூர்யன் பேர் ஆதித்யன் (Aadhthyan) கவனிச்சேளா? Tha-dha வித்யாஸம். 'அதிதி'–ங்கிற உத்தம ஸ்த்ரீக்கு ஸூர்ய பகவான் புத்ரரானதால அவருக்கு 'ஆதித்யன்'–னு பேரு. இப்ப நான்

@Page 158

சொன்னது ஸூர்ய ஸம்பந்தமானதில்லே. அதிதிக்குப் பண்ற விருந்தோம்பல்தான். அப்படி ஆதித்யம் பண்றதுல பரத்வாஜருக்கு ஒரு ப்ரீதி. அதுலயும் அவதாரமான ராமரே வந்திருக்கிறப்ப, ஞானத்ருஷ்டியால அவர் அவதாரம்–னு தெரிஞ்சுண்டிருந்த மஹர்ஷி அவதார புருஷனுக்குப் பெரிசா விருந்து நடத்தணும்னு ரொம்ப ஆசைப்பட்டார். ராமரானா, 'தபஸ்வியாட்டமா இருக்கப் போறேன். கந்த–மூல–பலாசனத்தோட'–ன்னு குண்டைத் தூக்கிப் போட்டுட்டார். அவர் அப்படிச் சொன்னதையும் ரிஷி ரொம்ப 'ரெஸ்பெக்ட்' பண்ணினார். ராஜாவா போகபோக்யத்துல திளைக்க வேண்டிய ஸமயத்துல ராஜ்ய ப்ரஷ்டமாயி வனத்துக்கு வந்திருக்கிறவர் அதுலயும் ஸந்தோஷமே பட்டுக்கிண்டு, ராஜ போகத்துக்கு நேரெதிரா தபஸ்வியாட்டம் இருக்கற பாக்யம் லபிச்சிருக்கறதாவே திருப்திப்பட்டுக்கிண்டு, அதுக்கான ஆஹார நியமத்தோட இருக்கப்போறேன்னு சொன்னது பரத்வாஜர் மனஸைத் தொட்டுடுத்து. அதை 'ரெஸ்பெக்ட்' பண்றதுதான் அழகே தவிர, தம்மோட ஆதித்ய ஆசையைப் பெரிசா நெனச்சு அதை பங்கப்படுத்தப்படாது–ன்னு முடிவு பண்ணினார். அதனால அப்ப ராமர் கேட்டுண்டபடி அவருக்குக் கந்த மூலாதிகளே ஸமர்ப்பணம் பண்ணினார்.

"இப்ப ராமர் ராவண ஸம்ஹாரம் ஆயி, வனவாஸ காலமும் ஸரியா அப்பவே பூர்த்தியாற ஸமயமா இருந்ததால அயோத்திக்குத் திரும்ப வந்துண்டிருந்தார். புஷ்பக விமானத்துல அப்படி வரப்ப, ஸீதைக்குக் கீழே ஒவ்வொரு எடமாக் காட்டி, 'இங்கேதான் இது (இன்ன நிகழ்ச்சி) நடந்தது, இங்கேதான் இது நடந்தது'ன்னு சொல்லிண்டே வந்தார். அப்ப அயோத்தி ஸமீபிக்கிறப்ப, பரத்வாஜ ஆச்ரமம் தெரிஞ்சுது. அப்ப, அங்கே இறங்கி (வனவாசத்தின்போது) மொத மொதலாப் பாத்து ஆசீர்வாதம் பெத்துக்கிண்ட ரிஷியை முடிவுலயும் பாத்து,

@Page 159

எல்லாம் நல்லபடியானதுக்காக நமஸ்காரம் பண்ணுவோம்; அதோட, இந்தப் பதினாலு வருஷத்துல அயோத்தில என்னென்ன நடந்துதோ? நாம் திடுதிப்புனு அங்கே போய் நின்னா எப்படி ஆகுமோ? ஆனபடியால அங்கத்திய விஷயங்களையும் ரிஷிகிட்டக் கேட்டுண்டுடுவோம்–னு நெனச்சார். அப்படியே எல்லாரும் புஷ்பகத்துலேந்து எறங்கனா.

"ஸரியா, அன்னிக்குத்தான் பதினாலு வருஷம் முடியற நாளாயிருந்தது. அன்னிக்கு எப்படியும் பரதனைப் போய் அடைஞ்சாயிடணும்னுதான் ஸ்வாமிக்கு (இருந்தது). ஆனாலும், போறவழியிலேயே... (சிரித்து) கொஞ்சங்கூட 'டைவர்ஷன்', 'பைபாஸ்' இல்லே! நேர் வழியிலேயே மஹா பெரிய ரிஷியோட ஆச்ரமம் இருக்கறப்ப, அவர் தலைக்கு மேலா பறந்து போறது முறையில்லை; அதோட அவருக்கு கேட்டுக்க வேண்டியதும் அவசியந்தான். அதனால அந்த த்ரேதாயுகத்துலயே (சிரித்து) நெஜமாவே ஒரு flying visit பண்ணிட்டுக் கிளம்பிடலாம்னு உத்தேசம் பண்ணினார். புஷ்பகம் ஏரோப்ளேனைவிட ஸ்பீடாப் போகுமானதால நிமிஷத்துல அயோத்திக்குப் போயிடலாம்னு நெனச்சார்.

"ஸ்வாமி அப்படி நெனச்சாலும் நடந்தது என்னன்னா... 'ஸ்வாமி நெனச்சதுதானே நடக்கணும்? நடக்கலை–ன்னா அவர் எப்படி ஸ்வாமியாவார்?'னு தோணலாம். ஆனா, எப்படி சரணாகத பக்தாள் ஸ்வேச்சா ஸ்வதந்த்ரம் இல்லாம பகவத் பராதீனமா இருக்காளோ, அப்படியே அந்த பகவானும் 'பக்த பராதீனன்'னு பேர் வாங்கினவனாயிருக்கானே! அப்படியிருக்கறச்சே அவன் ஒண்ணு நெனச்சு, அதே ஸமயத்திலே முழு சரணாகதின்னு இல்லாம, ஆனாலும் பரம பக்தியோடயிருக்கற பக்தாள் வேறே மாதிரி நெனச்சா பகவானே அவா நெனக்கிறதுக்குக்

@Page 160

கட்டுப்பட்டு அதன்படிதான் நடப்பான். அந்த மாதிரி இப்ப என்ன ஆச்சுன்னா, ராமர் flying visit குடுத்துட்டுக் கிளம்பிடலாம்னு நெனச்சாலும், பரத்வாஜர், 'அப்பா ராமா! நீ காட்டுக்கு உள்ளே போறதுக்கு முந்தி கிடைக்கத் தகாத அதிதியான ஒனக்கு நான் விமர்சையா ஆதித்யம் பண்ணி ஸந்தோஷம் அடைய பாக்கியத்தை நீ தரலை. இப்பவும் அப்படிப் பண்ணிப்பிடாதே! எத்தனையோ பேருக்குப் பண்ணினதை அத்தனை பேருமான ஒனக்குப் பண்ண முடியலையேன்னு நான் மனஸு ஒடையறாப்பல பண்ணிப்பிடாதே! அப்ப நீ தாபஸ ஜீவனம் (தவ வாழ்வு) அநுஷ்டிக்கப் போறேன்னு காரணம் சொன்னதால, வனவாஸ காலத்துல,

ராஜ்யாதிகாரமும் பண்ணாத நெலமையிலே அதுவும் யுக்தந்தான்–னு நானும் 'கம்பெல்' பண்ணாம விட்டுட்டேன். இப்ப வனவாஸம் முடிக்கறே! ராஜாவா, மஹா ஸாம்ராஜ்யத்துக்குச் சக்ரவர்த்தியா ஆகப்போறே! ஆனதுனால இப்ப என் வார்த்தையை, விஜ்ஞாபனத்தை நீ தட்டவே படாது. என்ன ஆசைப் படறேன்–னா நீ இங்கேயே ராத் தங்கி சிரம பரிஹாரம் பண்ணிக்கிண்டு நாளைக்கு நான் வைக்கற விருந்தை ஏத்துக்கிண்டுதான் பொறப்படணும்'னுட்டார்.

"பக்தாள்–னு பரம பாமரமா, ரொம்பக் கீழ்நிலையிலே இருக்கறவாளுக்கும் ஸ்வாமி பராதீனம். ஸ்வாமியா(கத்) தன்னைக் காட்டிக்காம மநுஷ்யராவே ராமர் இருந்தப்பவோ, அந்தப் பராதீனத்தோட, ப்ராம்மண ச்ரேஷ்டாளா, மஹர்ஷிகளா இருக்கறவா கிட்ட அடங்…கி பவ்யப்பட்டு வேறே பராதீனம்!

"என்ன பண்ணுவார்? 'ரிஷி சொல்றபடி பண்ணினா பரதன் கிட்டப் போய்ச் சேருகிறப்ப பதினாலு வருஷப் பூர்த்திக்கப்பறமும் கொஞ்ச நேரம் ஆயிடும். அதை நிச்சயமாப் பொறுத்துக்க முடியாம பரதன் அக்னிப்

@Page 161

பிரவேசம் பண்ணத்தான் பண்ணிடுவான். ரிஷி கிட்ட அதைச் சொன்னா அவர் நாம இங்கே தங்காமப் பொறப்படறதுக்கு ஒப்புத்துக்கவே செய்வார்–னாலும் நமக்கே (அப்படிச்) சொல்றதுக்கு வாய் வரமாட்டேங்கறதே! இந்த மாதிரியான ஒரு மஹானுடைய பரிசுத்தமான ப்ரியத்துல ஏற்பட்ட ஆசையைப் பூர்த்தி பண்ணி எங்கேயானும் கெடுதி வருமா? அதனால பரதனும் எப்படியோ 'பொழச்சுக்குவான்'–னு இப்படி ராமர் நெனக்கறப்பவே, 'டக்'குனு, அவன் ப்ராண த்யாகம் பண்ணிக்காம இருக்கிறதுக்கு வழியும் அவருக்குத் தோணிடுத்து! பரத்வாஜருக்கு பரதன் ஸமாசாரத்தைச் சொல்றதைவிட அவனுக்கு இவரோட ஆசையைச் சொல்லியனுப்பிச்சு, 'வெய்ட்' பண்ண வெச்சுடலாமே–ன்னு தோணிடுத்து.

"இதுலயும் ஒரு சிக்கல்.

"பதினாலு வருஷம் முடியற டயத்துக்கு அவகாசம் என்னவோ ரொம்பக் கொறச்சலாத்தான் இருந்தது. புஷ்பகமானதால அந்த அவகாசத்துக்குள்ளே போய்ச் சேர்ந்துடலாம்னுதான் பரத்வாஜ ஆச்ரமத்துல கொஞ்ச நாழி தங்கலாம்னு அவர் எறங்கினார். இப்ப கொஞ்ச நாழி–ங்கிறது ரொம்ப நாழியாவே நீண்டுட்டப்ப அதை பரதனுக்குத் தெரிவிக்கறதுக்காக ஆளை அனுப்பினா அந்த ஆள் போய்ச் சேர்றதுக்குள்ளயே பரதன் வெச்ச கால கெடு முடிஞ்சுபோய், அவனும் ஆயுஸை

முடிச்சுண்டிருப்பானா இருக்கும். ஏன்னா, இப்ப பஹு வேகமா, புஷ்பக விமான ஸ்பீடுல போனாதான் கால கெடுவுக்குள்ளே அங்க போய்ச் சேரமுடியும். ஆனா புஷ்பகத்தையோ தூதா(க) அனுப்பற ஆளுக்குத் தரதுக்கில்லை. ஏன்னா, அது பஹு வேகமாக பறக்கறதோட மாத்திரமில்லாம எத்தனை பேருக்கு வேணுமானாலும் எடம் குடுக்கும் – சங்கப் பலகை மாதிரி! அதுலதான் வானர–கரடி ஸைன்யம் பூராவையும் ஸ்வாமி

@Page 162

லங்கையிலேந்து அழைச்சுக்கிண்டு வந்தது. பரத்வாஜாச்ர மத்துல போஜனம் முடிஞ்சதும், ஒடனேயே அதுலதான் அவா அத்தனை பேரையும் ஏத்திக்கிண்டு போயாகணும் ஆகையினாலதான் அதை ஒரு ஒத்தை ஆளுக்குக் குடுக்கறதுக்கில்லாம இருந்துது. ஆனா அந்த ஆள் புஷ்பக ஸ்பீடில போகாட்டாலோ, அவன் போய்ச் சேருகிறதற்குள்ளே பதினாலு வருஷம் முடிஞ்சு பரதன் ப்ராணஹத்தி பண்ணிண்டுடுவான்.

"இங்கேதான் அண்ணன்–தம்பி ஒதவாதபோதும் ஒதவற அடி – சிறிய திருவடி – ஸஹாயமா வந்தது! தம்பி லக்ஷ்மணனை – அவர் ஸ்வாமிக்கும் தம்பி, பரதனுக்கும் தம்பி – அவரை அனுப்பினாக்கூட ப்ரயோஜப்படாது. அவர் வேளைக்குப் போய்ச் சேர முடியாது. அதாவது, தம்பி 'ஒதவ' மாட்டார்! வேறே யாரும் ஒதவமாட்டா. 'மநோஜவம், மாருத துல்ய வேகம்' –ங்கிறபடி மனோவேக–வாயு வேகத்துல பறக்கிற ஆஞ்ஜநேய ஸ்வாமி ஒருத்தர்தான் அந்தக் குறுகின டயத்துக்குள்ளே (பரதன் வாழ்ந்து வந்த) நந்திக்ராமத்துக்குப் போய் பரதனை ரக்ஷிக்க முடியும்!

"அவரைத்தான் ராமர் அப்ப அனுப்பிச்சு பரதனுக்கு ஸங்கதி சொல்லப் பண்ணினார்.

"பரதனோட ப்ராணனை ரக்ஷிக்கறதைப் பத்தியே இதுவரை சொன்னாலும் இதுக்குள்ளயே இன்னூணும்! ஸூக்ஷ்மமான ஒண்ணு. ஆஞ்ஜநேயர் மாதிரி அதிஸூக்ஷ்ம புத்தியுள்ள ஒருத்தர்தான் அதை உள்ளபடி புரிஞ்சுண்டு வந்து சொல்லமுடியும். என்னன்னா, பரதன் பரம பக்தன், பரம த்யாகி–ங்கிறதெல்லாம் வாஸ்தவம். அது ஸ்வாமிக்கு நன்னாத் தெரியும். ஆனா அதே மாதிரி இன்னொரு விஷயமும் நன்னாத் தெரியும். பதவி–ங்கறது எப்பேர்ப் பட்டவாயிட்டயும் உண்டாக்கக்கூடிய மோஹந்தான் அது! ஒரு பெரிய ஸ்தானம் கெடச்சுட்டா அதுல பற்று

@Page 163

அப்படியே கெட்டியாப் பிடுச்சுக்கிண்டு, ஒத்தனை 'அதை விட்டு எறங்கப்படாது'ன்னு ஒட்டி வெச்சுடும். எத்தனையோ உத்தமமான பேர்களையும் பதவி மோஹம் அப்படி ஆட்டி வெச்சிருக்கு. பரதனோ ஒரு நா(ள்), ரெண்டு நா(ள்) இல்லே; பதினாலு வருஷம் ராஜ்யத்தை ஆண்டிருக்கான். தான் ஆளப்போறதில்லே; பாதுகைக்குத் தான் ஆட்சி; தான் ப்ரதிநிதி பூதமாத்தான் ராஜான்னு பேர் பண்ணப் போறதுன்னு அவன் தீர்மானிச்சது, அந்தரங்க சுத்தமாவே தீர்மானிச்சது, வாஸ்தவந்தான். ஆனாலும் அவ்வளவு நீண்ட காலத்திலே, எந்த ஸ்திர புத்தியுங்கூட ஸந்தர்ப்ப வசத்தால சலிக்க (சலனமுற)க் கூடும்தானே ? ஒரு வேளை பரதனுக்கும் அப்படி ஏற்பட்டிருந்தா ? – இப்படி ஸ்வாமி நெனச்சார். பரதன் மேலே கோளாறா அவர் நெனக்கவேயில்லை. கோளாறு அவன் கிட்ட இல்லே; பதவியோடதுதான்–னே நெனச்சார்.

"இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை ஸ்வாமி நெனச்சுப் பாத்தார். 'அவனுக்கு அதிகாரத்துல ஆசை வந்திருந்தா நாம போய் அந்த ஆசையைக் கெடுக்க வேண்டாம்; அவனே தேசத்தை நன்னா, தர்ம மார்க்கத்துலயே பரிபாலிப்பானானதுனால, அவனே தொடர்ந்தும் ஆண்டுக்கிண்டு இருக்கட்டும்னு விட்டுட்டு, நாம வந்த சுவடே தெரியாம, இங்கேயிருந்தே இன்னும் உள்ளே காட்டுக்கு மறுபடிப் போயிடலாம்'னு நெனச்சார்.

"பரதனுக்கு ஆசை வந்திருக்கு, வரலை–ன்னு யார் கண்டுபிடிச்சுண்டு வந்து சொல்லுவா ? பரதன் கம்பீர புருஷன். ஆகையினால இந்த மாதிரி ஒரு ஆசை வந்திருந்தாக்கூட அதை வெளிப்படக் காட்டாம அழுத்தமாத்தான் இருப்பான். பிறத்தியாருக்குத் தெரியாம அழுத்தறது மாத்திரமில்லை. தனக்கே அது ஸரியில்லை–ன்னும் ந்யாய புத்தியிலே தோணிண்டே

@Page 164

யிருக்குமானதுனாலயும் அதைத் தலை தூக்க முடியாம உள்ளுக்குள்ளே அழுத்தி அழிக்கப் பாத்துண்டுதான் இருப்பான். அப்படி ரஹஸ்யமா இருக்கறதை யார் கண்டு பிடிச்சுண்டு வந்து சொல்ல முடியும் ? அதுவும் அதிஸூக்ஷ்ம புத்தி படைச்சவரான ஆஞ்ஜநேயர் ஒருத்தராலதான் முடியும்! ஒத்தர் என்னதான் தன் உள்ளுக்குள்ளே இருக்கறதை மறைச்சாலும் அவரோட சின்னச்சின்ன முக பாவங்கள், சைகைகள், கொரல்ல (குரலில்) இருக்கற சின்ன ஏத்த–எறக்கங்கள் மொதலானதுகள்லேந்தே ஆஸாமிக்கு உள்ளேயிருக்கறதைக் கண்டுபிடிக்கற இங்கிதஜ்ஞ ஸாமர்த்யம்

ஆஞ்ஜநேயருக்கே உண்டு. அதனாலயும் அவரைத்தான் இப்ப அனுப்பணும் – அப்படின்னு ஸ்வாமி தீர்மானம் பண்ணினார்.

"பரதன் விடஇருந்த ப்ராணனைக் காப்பாத்தி ஒதவறதுக்கு அப்ப தம்பி லக்ஷ்மணரால முடியலை–னு பாத்தோம். அதுக்கான ஸ்பீடிலே அவரால போகமுடியாது. இப்ப பரதன் மனஸை உள்ளபடி அறிஞ்சுக்கற விஷயத்துலயும்... தப்பா ஆசைப்படறவா அழுத்தமா அதை மூடி வெச்சிண்டேயிருப்பாங்கற மாதிரியே அவாளைப் பரீக்ஷிச்சுப் பாக்கறவாளும் அழுத்தமா இருந்துண்டு, தங்க(ள்) உத்தேசம் வெளியில தெரியாமப் பண்ணினாத் தான் எதிராளியோட உள்ளே இருக்கறதைக் கறந்துக்க முடியும். லக்ஷ்மணர் உத்தம குணங்கள் நிறைஞ்சவர் தான்–னாலும் படபடப்புக்காரர். ஆனதுனால அவர் இந்தக் காரியத்துக்கும் ஸரிப்படமாட்டார். தம்பி ஒதவமாட்டார்!

"இப்படி ரெண்டு விதத்திலயும் ஒதவக்கூடிய ஒத்தரே ஒத்தர் சிறிய திருவடி என்கிறதாலதான் அவரையே ராமர் அனுப்பி வெச்சது.

"தம்பிதான் ஒதவ முடியலே–ன்னா மஹா பெரிய அவதாரமான அண்ணாவா ?

@Page 165

ஸ்ரீ பெரியவாள் பொங்கிப் பொங்கிச் சிரித்தபடி மேலே பேசவொண்ணாமல் நிறுத்துகிறார். ஸ்ரீகரமான அச்சிரிப்பு ஆனந்த ஸ்வரூபனுக்கு அடங்க மறுப்பதால் சிரித்தவாறே தொடர்கிறார்.

தனிப்பட்டோரிடம் உரையாடலாயினும் சரி, பொதுச்சபையில் உபந்நியாஸமாயினும் சரி, ஸ்ரீசரணாள் உள்ளம் திறந்து அவ்வுள்ளத்தில் தோன்றுவதனைத்தையும் தோன்றியபடியே கொட்டி, கேட்போர் அதில் கலந்து கொண்டு கரைந்து போகச் செய்துவிடுவார்! அப்படியோர் அற்புத பாந்தவ்யம் அகிலரனைவரிடமும் பெருக்கிக் கொண்டிருந்தவர் அந்த வைராக்ய ஞானி! அது போன்ற மனம் விட்ட பேச்சு வேறெங்கேனும் கேட்க முடியுமா என்றே வியக்கத் தோன்றுகிறது! ரஸப் பிண்டமான அவர் தமது பலவித உணர்ச்சிகளையும் அப்படியப்படியே வெளியிட்டதில் குறிப்பாக ஸர்வாங்கமும் பொங்கிச் சிலிர்த்துச் சிரித்து, அந்த ஆனந்தம் நம்மையும் தொத்திக் கொள்ளுமாறு அவர் செய்த அழகுண்டே!"

இப்போது அவரது உள்ளத்தில் பக்தி ஸ்வாதீனத்தால் பரமாத்ம ராமனையே

'கோட்டா' செய்து நிந்தா ஸ்துதி செய்யும் கருத்து முளைத்துவிட்டது! அதுதான் வார்த்தையாகி வெளிவரு முன்னரே நகையாகப் பிதிர்ந்து விட்டது! வார்த்தை வந்த பின்னும் அந் நகை சிறிது தூரம் அதனோடு கைகோத்துக்கொண்டு தொடர்ந்தது.

"அண்ணாவா, கேக்கவே வேண்டாம்! ஒதவியே பண்ணாத அண்ணா மாத்திரமில்லே; **ஹிம்ஸையே அவராலதான்!** ரொம்ப ரொம்ப உத்தமமா, பரம ப்ரேமைக்கு உரியவரா அவர் இருந்த ஹிம்ஸையிலதான், முந்தி ஸீதையாகட்டும், இப்ப பரதனாகட்டும் அவரோட

---

*அவ்வழகையே இந் நூலினுள் முகப்புச் சித்திரமாகத் திகழும் வண்ணப்படம் வடித்துத் தருகிறது.

@Page 166

தரிசனம் இல்லாததைத் தாங்க முடியாம ப்ராணஹத்தி வரைக்கும் போனதே!

"ஆஞ்ஜநேய ஸ்வாமி நந்திக்ராமத்துக்குப் போற வழியில ச்ருங்கிபேரபுரத்தில குஹன் கிட்டயும் தாம் க்ஷேமமா, ஜயசாலியா திரும்பிட்டதைச் சொல்லிட்டுப் போகணும்னும் ராமர் சொன்னார். அவஸரம்னா அப்பேர்ப்பட்ட அவஸரமான 1திதியிலே இப்படி ஒரு ரயடவ வேறே சொன்னார்—னா காரணம், ஆஞ்ஜநேய ஸ்வாமி 'அஸாத்ய ஸாதகர்'—ங்கிறதுதான்!

"அவரும் அப்படியே 'மாருத துல்ய வேகம்' —னு காத்துக்கு ஸமமான வேகத்துல இல்லாம, 'காற்றினும் கடுகி' —ன்னு அதிவேகமா, ஆகாச மார்க்கமாவே போய் குஹன் கிட்டே ஸமாசாரம் சொல்லிட்டு, '(இ)தோ பரதன் நெருப்புல குதிச்சுடப் போறான்'—ங்கிற ஸமயத்துல, ஸமய ஸஞ்ஜீவின்னா ஸமய ஸஞ்ஜீவியாவே நந்திக்ராமத்துல போய்க் குதிச்சார். 'வந்தான், வந்தான்!'னு கோஷம் பண்ணி, பரதன் அக்னி ப்ரவேசம் பண்ணாம தடுத்து ரக்ஷிச்சும் விட்டார்.

"வால்மீகத்துல இங்கே கொஞ்சம் விசித்ரமா இருக்கு. என்னன்னா, க்ஷணம் தப்பினாலும் பரதன் ப்ராண த்யாகம் பண்ண இருந்த ஸமாசாரத்துக்கு அதுல முக்யத்வம் தரவேயில்லை. வால்மீகி ராமாயணத்துல அநேக பாடாந்தரங்கள் (பாட பேதங்கள்) இருக்கறதுல, சிலதுல ஒரு வரிதான் அதைப் பத்தி இருக்கு! சிலதுல அதுகூட இல்லே!

"சக்ரவர்த்தியா போக–போக்யத்தோட, அதிகாரத் தோரணையோட இருக்கவேண்டிய பரதன், தானும் ராமன் மாதிரியே ஜடா முடியும் வல்கலமுமா (மரவுரி ஆடையுமாக) கந்த மூலங்களையே சாப்பிட்டுக்கிண்டு

@Page 167

தாபஸ வேஷத்தில இருந்தான். ராமராவது ஸீதை பறிபோறதுக்கு முன்னாடி வரை – வனவாஸத்துல 'மேஜர் பார்ட்'டான பதிமூணு வருஷம் – பரமானந்தமாவே இருந்தார்னா பரதனோ பரம துக்கத்துல மனஸு நொந்துண்டு, வெந்துண்டு, ராமனே நெனவா உருகிண்டு, ஒடம்பும் உருகி இளைச்சுத் தவிச்சுண்டு, வருவானோ வருவானோன்னு அதே சிந்தையா இருந்தான். இப்படி ஜெனரலா அவன் பட்ட கஷ்டத்தையும் ராமரோட புனராகமனத்துக்காக (திரும்பி வருகைக்காக) துடிச்சுண்டிருந்ததையுந்தான் வால்மீகத்துல இங்கே முக்யம் குடுத்துச் சொல்லியிருக்கே தவிர அக்னி ப்ரவேசத்தை இல்லே! ஆனா, அதுவும் நிச்சயம் அப்ப நடந்துதான் இருக்கணும். ஏன்னா, அயோத்யா காண்டத்துல பாதுகை பெத்துக்கற ஸந்தர்ப்பத்துல, முடியா பரதன் ப்ரதிநிதி பூதமாக்கூடத் தன்னால ஸரியா அந்தப் பதினாலு வருஷம் முடியத்தான் ஆட்சியைக் கவனிக்க முடியும்னும், ராமரோட ஸங்கமில்லாம தேஹத்துல உசிரை வெச்சுக்கிண்டு இருக்க முடியும்னும், க்ஷணம் தப்பினா அக்னி ப்ரவேசம் பண்ணிப்பிடுவேன்–னும் ப்ரதிக்ஞை பண்றதா வரது. ஆனாலும் பின்னாடி எதனாலயோ அதைப்பத்தி ப்ரஸ்தாவம் பண்ணக்காணோம்!

"கம்பர்தான் அதை விஸ்தரிச்சு மனஸைத் தொடராப்பல பாட்டுக்களைக் கொட்டியிருக்கார். (பரதன் தீப்பாய இருந்ததில்) சத்ருக்னன் தவிச்சான், கௌஸல்யை தவிச்சா–ன்னு சொன்னேனே, அதெல்லாம் கம்ப ராமாயணத்துல வரதுதான். தவிச்சானே தவிர அந்தத் தம்பி சத்ருக்னனும் பரதண்ணாவுக்கு ஒதவ முடியலை தான்! 'அடி' தான் ஒதவித்து!

"கம்ப ராமாயணத்தின்படி, ஸீதையோட ப்ராணனை ரக்ஷிச்சப்ப ஆஞ்ஜநேயர் அவளுக்கு ஸ்வாமியோட

@Page 168

அங்குளீயத்தைத் தந்தாப்பலயே இப்பவும் தந்ததா ரொம்ப பொருத்தமாச் சொல்லியிருக்கு. தன்னோட தூதன்தான், யாரோ பொய் ஆஸாமியில்லேன்னு நிச்சயப்படுத்தறதுக்காக ஸ்வாமி ரெண்டு எடத்துலயும் தன் மோதிரத்தைக் குடுத்து அனுப்பினார்னாலும், ஸீதை ப்ராண த்யாகம் பண்ணிக்கப்போறா–ன்னோ, அப்ப

ஆஞ்ஜநேயர் தடுத்து ரக்ஷிக்கப் போறார்னோ யாருக்கும் தெரியாது. ஸ்வாமியும் மனுஷாளாட்டமே இருந்ததிலே தெரியாதவராத்தான் இருந்தாரோ, நடிச்சாரோ, எதுவோ ஒண்ணு! இப்பத்தான் பரதனோட ப்ராண த்யாகத்தைத் தடுக்கணும்னே அதே ஹனுமாரை அனுப்பிச்சப்ப, அதே மாதிரி மோதிரம் குடுத்து அனுப்பினதா கம்பர் சொல்றது யுக்தமாத்தான் இருக்கு.

"ஒரே துக்கத்துல துடிச்சுண்டு உசிரை விட இருந்த பரதனுக்கு நல்ல சேதி கேட்டு ஒரே ஆனந்தமாயிடுத்து. அதை வால்மீகி, கம்பர் ரெண்டு பேருமே போட்டி போட்டுண்டு ரொம்ப அழகாப் பாடிக் குடுத்திருக்கா. ஆனந்தத்துல பரதன் மூர்ச்சை போட்டே விழுந்துட்டான்; அது தெளிஞ்சதும் ஆஞ்ஜநேயரைக் கட்டிக்கிண்டு ஆனந்த பாஷ்பத்தை தாரை தாரையாக் கொட்டி அவரை நனைச்சுட்டான்–னு வால்மீகி சொல்றார். ராமர் ராஜ்யஹீனனா இருக்கற தாம் ஆஞ்ஜநேயருக்குப் பொன்னா பொருளா குடுத்து ப்ரதி பண்ண முடியாததால ஆலிங்கனம் பண்ணிக்கறதா சொன்னாரில்லையா ? அப்பறம் ராஜாவானவிட்டு ஸீதா ஸமேதரா முத்து மாலை குடுத்தார்–னும் பாத்தோம். பரதன் இப்பவே பேருக்குத்தான்னாலும் ராஜாவா இருக்கறவன். அதனால ஆலிங்கனமும் பண்ணிண்டு, ஏகப்பட்ட ஸம்மானமும் கோதானம், பூதானம்–னு பண்ணினான்னும், அது மாத்ரமில்லாம கல்யாணம் பண்ணிக்கறதுக்கு உத்தம

@Page 169

கன்னிகைகள்ளாமும் தத்தம் பண்ணினான்னும் வால்மீகி சொல்லியிருக்கார். ஆனா ஆஞ்ஜநேயரோ பிற்பாடு ஸீதா–ராமர்கள் குடுத்த ஹாரத்தைத்தான் மஹா ப்ரஸதமா மதிச்சு கழுத்துல போட்டுண்டு வெண்மேகம் படிஞ்ச மலையாட்டமா ப்ரகாசிச்சிண்டு நின்னார். பரதன் என்னவெல்லாமோ தத்தம் பண்ணினானே தவிர சொந்த வாழ்க்கை, சொந்த ஸொத்து–ன்னு கொஞ்சங்கூட இல்லாம, நைஷ்டிக ப்ரஹ்மசாரியா இருந்த ஆஞ்ஜநேய ஸ்வாமி அது எதையும் ஏறெடுத்தும் பாக்கலை!

"சிறிய திருவடியின் குணம் அத்தனை பெரிசு! அதை நெனச்சு நெனச்சுப் பாக்கணும், மத்தவாளுக்கும் சொல்லணும்னு இருந்ததுலதான், 'அடி ஒதவற மாதிரி அண்ணன்–தம்பி ஒதவ மாட்டாங்கறா' வசனத்துக்கு பாஷ்யம் பண்றதா ஆரம்பிச்சு, ஹநுமார் வால் மாதிரி நீட்டிண்டே போயிட்டேன்! அவர் வால் எத்தனை வேணும்னாலும் நீளும். அவரோட பிரபாவம் பத்தியும் இன்னும் எத்தனையோ சொல்லலாம். அத்தனை சொல்றதுக்கும் முடிவு அந்தச் சிறிய திருவடியை நம்ம முடியிலே தரிச்சிண்டு, அவர் ராம பாதத்தை சிரஸில தரிச்சிண்டிருக்கற மாதிரியே நாம அவர் பாதத்தை தரிச்சுண்டு, நம்மோட மண்டைக் கனத்தையெல்லாம்

எறக்கிட்டு, அடக்கமா, பணிவா இருக்கறதுதான்... 'தாஸாநு தாஸன்', 'அடியார்க்கடியான்'—ங்கிறது (வழக்கம்). அப்படி, அவர் ராமதாஸன்—னா நாம அவருக்கு தாஸனா; அவர் அடியார், சிறிய திருவடியார்—னா நாம அவருக்கு அடியாரா இருந்துண்டு, அவராட்டமாவே நம்மையும் ஆக்கணும்னு ப்ரார்த்திச்சுண்டு இருப்போம். புத்தி, பலம், யசஸ்—னு இப்படி அநேகம் அவரை ஸ்மரிக்கிறதால கெடைக்கறதா ச்லோகம் சொல்றது. அதெல்லாமும் தரட்டும். அத்தனையையும் அவர் மாதிரியே நமக்குன்னு



இல்லாம லோகோபகாரமா, லோகத்துல தர்மம் அபிவ்ருத்தி ஆறதுக்காக ப்ரயோஜனப்படுத்துவோம். அதெல்லாத்தோடயும், அதுக்கெல்லாம் மேலா அவரோட பாதம் நம்ம சிரஸிலே பட்டு நம்மோட அஹங்காரத்தை அழுத்தி நசிப்பிச்சு விநயமா ஆக்கணும்னு பிரார்த்தனை பண்ணிப்போம். மனஸாரப் பண்ணினோமானா, கருணாமூர்த்தியான அவர் நிச்சயம் அநுக்ரஹம் பண்ணுவார்.

"ஒதவி பண்ணுவோம். ஆனா நாம ஒதவினோம்கிற எண்ணமே இல்லாம அந்த ஆஞ்ஜநேய ஸ்வாமி இருந்த மாதிரியே இருந்துண்டு, அப்படி லேசாயிருக்கறதுலயே இருக்கற பெரிய ஆனந்தத்தை அநுபவிச்சுண்டிருப்போம்."

## 10

சொல்லிலும் சிந்தனையிலும் ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு இருந்த தனிப்பட்டதோர் முத்திரை பதிந்த ஆற்றலைக் காட்டவே இந்நூல். அதற்குத் தொடக்க ஸாம்பிளாக 'சொல்லின் செல்வன்' என்றே கம்பநாடரால் பட்டம் கட்டப்பெற்ற மூலவனும், மல நக்ஷத்திரத்தில் உற்பவித்த உத்தமனும், அரக்கரின் மூல பலப் படையை நிர்மூலம் செய்தவனும், பரம மூர்த்தியான ஸ்ரீ ராமமூர்த்தியின் பாத மூலம் பற்றியவனும், அந்த ராமனது நாமத்திலேயே மோக்ஷ மூலம் தொட்டவனும், அடியார்களுக்கெல்லாம் அழியாத 'மூல பண்டாரம்' வழங்குபவனுமான அநுமந்த பகவந்தன் குறித்துப் பெரியவாள் சொல்லின் செல்வராகக் கூறியதை எடுத்துரைக்கப் புகுந்தோம்.

சென்ற அத்தியாய முடிவுப் பகுதியில் பெரியவாளே கூறியிருப்பதுபோல அது 'ஹநுமார் வால் மாதிரி' நீண்டு

கொண்டே போய்விட்டது! என்றாலும் இவ்விஷயம் இவ்வளவு சொன்னபின் 'சொல்லின் செல்வன்' என்ற சொற்றொடர் குறித்தே ஸ்ரீசரணர் அருளிய சொற்செல்வத்தைச் சொல்லாது விடலாகாதல்லவா? அதோடு மதுர மதுரத் தலைப்புப் பெற்ற இந்நூல்த்தொடரில் ராம மதுரம் பற்றி அவர் சொன்னதையும் விடக்கூடாதுதானே?

*

"ஆஞ்ஜநேய ஸ்வாமி ராம–லக்ஷ்மணாளைப் பாத்தவொடனே பேசின மொதல் செல வாக்கியத்துலேந்தே ஸ்வாமிக்கு அவரோட குணமஹிமையெல்லாம் க்ளாஸ் கேஸுக்குள்ள இருக்கிற ஸாமான்கள் தெரியறாப்பல தெரிஞ்சுடுத்து. அதுலேந்து முக்யமா, ஒரு ராஜாங்க தூதனா இன்னொரு ராஜாகிட்ட – சத்ருவா இருக்கற ராஜாகிட்டக்கூட – தூது சொல்லிட்டு வரதுக்கு என்னல்லாம் ஸாமர்த்யம் இருக்கணுமோ அதெல்லாம் பூர்ணமா ஆஞ்ஜநேயர் கிட்ட இருக்குன்னு அவருக்குத் தெரிஞ்சுது. குறிப்பா இந்த விஷயம் ஏன் தெரியணும்னா அப்ப ஆஞ்ஜநேயர் அவா (ராம–லக்ஷ்மணர்கள்) கிட்டப் போய்ப் பாத்துப் பேசினதே ஸுக்ரீவன் அவரை தூது அனுப்பிச்சுத்தான்! அவன் வாலி எப்ப, எப்படி வந்து ஹிம்ஸிச்சுக் கொன்னுடுவானோ–ன்னு பயந்துக்கிண்டு, ரிஷி சாபத்துனாலே வாலி வரமுடியாம இருந்த ரிச்யமூக பர்வதத்துல பதுங்கிண்டு கெடந்தான். 'ரிச்யம்'னா மான். 'மூகம்'னா ஊமை. மான்கள் கூட்டம் கூட்டமா வஸிச்சுக்கிண்டிருந்த அந்த மலைப்பாங்கான எடத்துல ஒரு காலத்துல நெறய்ய ரிஷிகள் தேஹம் தெரியாமத் தபஸ் பண்ணிண்டிருந்தாளாம். அதனால அந்த எடம் அத்தனை பேர் இருந்தும் ஒரே நிசப்தமா இருந்துதாம். அந்த

@Page 172

நிசப்தத்துலயே அப்பேர்ப்பட்ட ஒரு சாந்தமாம்! அந்த சாந்தத்தை 'நாம ஏதாவது கர் புர் சத்தம் போட்டுக் கொலைக்க(குலைக்க) வேண்டாம்'னு அந்த மான்கள்கூட நெனச்சுதுகளாம்! ஊமையாப் போயிடுவோம்னு முடிவு பண்ணி ஸ்வாமியை வேண்டிண்டு அப்படியே வரமும் பெத்துண்டுடுத்துகளாம்! அதுதான் 'ரிச்ய மூகம்'னு அந்தப் பர்வதத்துக்கே பேர் வாங்கித் தந்துடுத்து.

"இன்னூணும் சொல்றதுண்டு; அந்த மலைச் சிகரம் ஒரு கலைமான் மூஞ்சி மாதிரி 'ஷேப்'புல இருக்கறது. அதானல 'ரிச்ய முகம்'. 'நிழல்–ங்கிறது 'நீழல்'னும்

'ஹநுமான்'கிறதே கூட ஹநூமான்'னும் நீளறாப்பல 'முகம்' 'மூக'மா நீண்டு ரிச்யமூகமாயிடுத்து, அப்படின்னும் சொல்லுவா.

"ஸீதையைப் பறி குடுத்துட்டுத் தேடிண்டு போன ராம-லக்ஷ்மணாள் அந்த ப்ராந்தியத்துக்குள்ளே வரச்சே ஸுக்ரீவன் பாத்துட்டான். ஆஜாநுபாஹுக்களாவும் தநுஸும் அம்பும் தரிச்சுண்டும் அவா தெரிஞ்சதுல அவன் அவாளை மஹா வீர சுராள்னு புரிஞ்சுண்டு கதி கலங்கிப் போய்ட்டான். 'வாலிதானே இந்த மலைக்கு வரமுடியாது? அதனால, அவன் சார்புல இந்த ரெண்டு வீராளை அனுப்பிச்சிருப்பானோ என்னவோ?'ன்னு நெனச்சே அப்படி கதி கலங்கிப் போய்ட்டான். அவாளைப் பத்தி ஸாமர்த்யமா எல்லா விஷயமும் தெரிஞ்சுண்டு வரக்கூடியது ஆஞ்ஜநேயர்தான்-னே அவரை அனுப்பிச்சிருந்தான். அதாவது, சத்ருவாவே இருக்கக்கூடிய பேர்கிட்ட போய்க் கெட்டிக்காரத்தனமா தௌத்யம் (தூதுப்பணி) பண்ணிட்டு வரவே அவன் ஆஞ்ஜநேயரை அனுப்பிச்சுத்தான். அவர் அவாளை ஸந்திக்கப் போனது.

@Page 173

அவரும் அந்தக் கெட்டிக்காரத்தனத்தோடயே தன்னை அடையாளம் காட்டிக்காம ஜாக்ரதைப் படுத்திக்கிண்டு மநுஷ்ய ஸந்நியாஸி மாதிரி மாறு ரூபம் எடுத்துண்டு போனார்.

"ராமரும் மஹா ஸாமர்த்யசாலி... தெய்வம்-னு இல்லாம, மநுஷ்யாவதாரமா வந்து, 'தான் தெய்வமில்லை, மநுஷ்யன்தான்'னு நெனச்சுண்டாப்பலயே சரித்ரத்தை நடத்திண்டு போனவரா அவரை வெச்சுத்தான் 'ஸாமர்த்யசாலி'ன்னு சொன்னேன். ராமாயண ஆரம்பத்துலயே பூர்ணமான மநுஷரா இருக்கற ஒருத்தராத்தான் அவரை நாரதர் வால்மீகி கிட்ட வர்ணிச்சுண்டு போய், மநுஷ்யனோட நல்ல குணங்கள், மநுஷ்யனோட திறமைகள் என்னல்லாம் இருக்க முடியுமோ அத்தனைக்கும் லிஸ்ட் குடுக்கறாப்பல அடுக்கிக்கிண்டு போய், அது ஒண்ணு ஒண்ணுலயும் ராமர் படு (தலைசிறந்தவர்)ன்னு சொல்றதா வரது. அப்ப அவரை 'புத்திமான்'ன்னு நாரதர் சொல்றதா வரது. அந்த ரீதியிலயே அவர் அபார ஊஹ புத்தியுள்ள ஸாமர்த்யசாலியாவும் இருந்தவர்-னு சொன்னேன்.... அதனால அவர் தன்னை ஆபத்து ஹேது இருக்கக்கூடிய எடமா யாரோ நெனச்சு வேவு பாத்துண்டு வரச் சொல்லி அனுப்பிச்ச தூதராத்தான் ஆஞ்ஜநேயர் வந்திருக்கார்னு புரிஞ்சுண்டுட்டார்.

"தூதன்-னா முக்யமா யார்கிட்ட தூது போறானோ அவாகிட்ட அழகாவும்

சாதுர்யமாவும் பேசணும். வாக்சதுரத்துக்கு (பேச்சுத் திறனுக்கு) அங்கே ரொம்ப முக்யம். அதனாலதான் ராமர் ஆஞ்ஜநேயர் கிட்டயிருந்த புத்தி, பலம், விநயம் இத்யாதிகளை விட்டுட்டு எடுத்தவொடனே அவரோட வாக்சதுரத்தையே ஏகமாப் புகழ்ந்து லக்ஷ்மணர் கிட்டச் சொல்லிண்டு போறார்.

@Page 174

"ஸரி, தூத லக்ஷணம் ஆஞ்ஜநேயர் கிட்டப் பூர்ணமாவே இருக்கட்டும். அதை இத்தனை முக்யமா நெனச்சு இவர் என்னத்துக்குச் சொல்லணும்–னா அப்ப அவருக்கு ஒரு தூதன்தான் தேவையாயிருந்தான்!.... 'சத்ரு–மித்ராள்'–னுவா. அப்படி அவரோட பரம மைத்ரீக்கு (நட்புக்கு) பாத்ரமாயிருந்த ஸீதை, பரம சாத்ரவத்துக்கு (பகைமைக்கு)ப் பாத்ரமாயிருந்த ராவணன் ரெண்டு பேர் கிட்டயும் தூது போய், அந்த நேர்மாறான இரண்டு ஸ்தானத்துல இருந்தவா கிட்டயும் அவாவா கிட்ட எப்படிப் பேசினாத்தான் போன கார்யம் ஸரியா ஆகுமோ அப்படிப் பேசி ரொம்ப ஸாமர்த்யமா கார்யத்தை முடிச்சுண்டு வர அதி கெட்டிக்கார தூதன் தேவையாயிருந்தான்...

"மாயமானை வதம் பண்ணிட்டு ஸ்வாமி திரும்பி வந்து ஸீதை பறிபோய்ட்டதை பாத்து, அவளைத் தேடிக்கிண்டு போறச்சே மொதல்ல ஜடாயுவைப் பாத்தார். ராவணனோட சண்டை போட்டுக் குத்துசிரும் கொலையுசிருமாக் கெடந்த ஜடாயு அவருக்கு ராக்ஷஸேந்த்ரனான ராவணன்தான் ஸீதையை அபஹரிச்சதுன்னும், அவன் தக்ஷிண திசையிலதான் அவளைத் தூக்கிண்டு பறந்தது–ன்னும் ரெண்டு முக்யமான விவரத்தைச் சொல்லிட்டு அதுக்கு மேலே பேச முடியாம ப்ராணனை விட்டுடறார். அப்பறம் ராமர் அஸுர ஜன்மாவான கபந்தனைப் பாக்கறார், வதமும் பண்றார்."

'அஸுர ஜன்மா' என்று பெரியவாள் கூறியது பற்றி ஒன்று கூறவேண்டும் ஹிரண்யன், சூரபத்மன் முதலானோர் 'அவுணர்' எனப்படும் அஸுர ஜாதியினர். ராவணன் முதலானோர் 'அரக்கர்' எனும் ராக்ஷஸர். இவர்கள் வெவ்வேறு இனத்தவர்கள். கபந்தன் ராக்ஷஸ ஜாதியல்ல; தைத்யர் எனப்படும் ஒரு அசுர ஜாதியனே. 'திதி'

@Page 175

என்பவளின் வழி வந்த அசுரருக்கு தைத்யர் எனப் பெயர். கபந்தனை திதியுடன் தொடர்புறுத்தியே வால்மீகம் பேசுகிறது.

"ராவணனால உயிரை விட்ட மித்ரரான ஜடாயுவுக்கு ஸ்வாமியே தஹன ஸம்ஸ்காரம் பண்ணினார். அதே மாதிரி இப்ப சத்ருவான கபந்தனுக்கும் பண்ணினார். உயிர் போற ஸமயத்துல அவர் ராமர்—னு தெரிஞ்சுண்ட கபந்தனே ப்ரார்த்திச்சுண்டதன் பேர்லதான் பண்ணினார். உயிர் போயிண்டே இருக்கறப்ப அவன் ஸீதையை ராவணன் தூக்கிண்டு தெற்காக போனதை confirm பண்றான். அது மாத்ரமில்லே; அவர் கையால வதமாயி, அதோட அவர் தஹன ஸம்ஸ்காரமும் பண்ணினா தனக்கு தேவ ஜாதிக்காரனா நல்ல ரூபம் கெடச்சு ஸ்வர்க்க வாஸமும் லபிக்கும்னு பூர்வத்துல விதிச்சிருந்தால, 'கொன்னது கொன்னேள், என்னை ஒங்க கையாலயே கொளுத்தியும் விடுங்கோ!'ன்னு கேட்டுண்டான். அப்படியே ஸ்வாமியும் பண்ணினார். அவனுக்கு திவ்ய ரூபம் கெடைச்சுடறது. கெடைச்சவொடனேயே திவ்ய திருஷ்டியும் உண்டாயி, ஸுக்ரீவனை ராமர் பாத்து அவனோட ஸ்நேஹிதம் பண்ணிக்கிண்டா, அவன் ஸஹாயத்தால ஸீதையைக் கண்டுபிடிச்சு மீட்டுண்டு வரமுடியும்—னு சொல்றான்..."

தமக்குத் தாமே சிரித்துக் கொண்டு ஸ்ரீசரணர் தொடருவார். "ரொம்ப வேடிக்கைதான்! அவதார சரித்ரம் இப்படியிப்படி நடக்கணும்னு எந்த பகவான் – மஹா விஷ்ணு – ஸங்கல்பிச்சாரோ அவரோட அந்த அவதாரமே தான் ராமர். ஆனா இருக்கு வெறும் மாநுஷ்யமான சக்திதான் இருந்த மாதிரியும், தன்னோட future தனக்கே தெரியாம, எவனோ அஸுரன் தேவனா ஆயி, அதுவும் அவரோட ஹஸ்த விசேஷத்தாலயே அப்படி ஆயி, அவன் சொல்லித் தெரிஞ்சுக்கற மாதிரியும் பஹு விசித்ரமா நாடகம் நடத்தியிருக்கார்!....

@Page 176

"அந்தப்படிதான் அவர் ஸுக்ரீவனைத் தேடிண்டு போய் ஸக்யம் பண்ணிக்கணும்னே (நட்புப் பூணவேண்டுமென்றே) அந்த ரிச்யமூக ப்ராந்தியத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவர் 'ப்ளான்' என்னன்னா: ராவணன் ஸீதையைத் தெற்குப் பக்கமா தூக்கிண்டு போனதுனால அங்கேயிருந்த அவனோட ராஜதானியான லங்காபுரியிலேயேதான் வெச்சிருப்பான்—னு சொல்றதுக்கில்லே. கீழ் ஏழு, மேல் ஏழு லோகங்களான பதினாலு லோகத்துலேயும் அவன் துராக்ரமிச்சு எடங்கள் பிடிச்சிருக்கறவனானதால, மொதல்ல ராஜதானிப் பக்கமா எடுத்துண்டு போனாலும், அப்பறம் அவளை எந்த லோகத்துல வேணுமானாலும் வெச்சிருக்கலாம். இந்த பூலோகத்துலயே வேறே எங்கேயாவதும் மாத்தி வெச்சிருக்கலாம். ஆகையினாலே, ஸுக்ரீவனோட ஸஹாயத்துல அவனோட வானர ஸைன்யத்தைக் கொண்டு இந்த பூலோகத்துல ஸகல திசையிலுமே ஸீதையைத் தேடப் பண்ணணும். தேடிக் கண்டுபிடிக்கிறவர் மூலமா அவகிட்ட, தான் வானர ஸைன்யத்தோட வந்து

ராவணனை வதம் பண்ணி அவளை மீட்டுண்டு வரதா இருக்கோம்னு சேதி – 'தூத்யம்', 'தூது மொழி'ங்கறது – சொல்லியனுப்பணும். ராவணன் கிட்டயும் எடுத்தவொடனே சண்டை–னு இல்லாம 'ஸாம–தான–பேத – தண்டம்'கிற நீதியை அநுஸரிச்சு மொதல்ல ஸமரஸமா, நல்லபடியா, ஸீதையைத் தன் கிட்ட ஒப்பிச்சுடும்படியா எடுத்துச் சொல்லி, அவன் கேக்காட்டா, தான் பெரிய ஸைன்யத்தோட வந்து அவனை ஸபரிவாரம் ஸம்ஹாரம் பண்ணிடறதா இருக்கோம்கிறதையும் அந்த தூதர் மூலம் தெரிவிக்கணும்னு, இப்படி 'ப்ளான்' பண்ணியிருந்தார்.

"அதனாலதான் தூதாளுக்கு இருக்கவேண்டிய ப்ரதம லக்ஷணமான வாக்சதுரம் ஆஞ்ஜநேய ஸ்வாமிகிட்ட

@Page 177

இருக்கறதைக் குறிப்பாக் கவனிச்சு லக்ஷ்மணர்கிட்டயும் முக்யமா சிலாகிச்சுச் சொன்னார்.

"ஓடச்சு சொல்லலை. (ஏனெனில்) இவர் ராஜவம்சம். மநுஷ்ய ஜாதியில சக்ரவர்த்தியாவே இருக்கவேண்டியவர். வனவாஸம் முடிஞ்ச விட்டு அப்படி ஆகப் போறவர். ஸுக்ரீவன் வானர ராஜ வம்சம். கபந்தன் சொன்னதுலேந்து, வானர ராஜாவாவே இருக்கிற அண்ணா வாலி பண்ற ஹிம்ஸை தாளாம அவனைத் தொலைச்சு முழுக நினைக்கிறவன்–னும், அவனை ஜயிச்சுட்டா தானே ராஜாவாவும் ஆயிடற 'சான்ஸ்' இருக்கிறவன்–னும் அவர் தெரிஞ்சுண்டிருந்தார். ராவணனோ, இவா ரெண்டு பேர் மாதிரி இல்லாம ராக்ஷஸ ராஜாவாவே – ராவணேச்வரன், லங்கேச்வரன்னு 'ஈச்வர'ப் பட்டமே பெத்து – கொடி கட்டிப் பறந்துண்டிருக்கிறவன். இப்படி மூணு விதமான ராஜ குலத்தவர் ஸம்பந்தப்படற விஷயத்துல, அதுக்கேத்தபடி, ராஜதந்த்ரப்படி (சிரித்தவண்ணம் கூறுவார்:) diplomatic–ஆவும், tactful–ஆவுந்தான் விஷயங்களைக் கொண்டு போகணும்னு ராமர் தீர்மானம் பண்ணினார். அவர் ராஜ தர்ம வ்யவஸ்தைகளை (தர்மப்படி எல்லை விதித்து ஏற்படுத்திய கட்டுப்பாடுகளை) அப்பழுக்கில்லாமல் அநுஸரிச்சவரானதால அப்படிப் பண்ணினார். ஆரம்பத்துல அப்படி; போகப்போக, அந்த மாதிரி அவர் நடந்துக்கிறவா ரொம்ப ப்ரியார்ஹாளா (மிகவும் அன்புக்குரியவர்களாக)த் தெரிஞ்சா அப்ப அந்த ராஜரீகம், அதுல 'ரெஸ்பெக்'டைக் காப்பாத்திக்கிறது, ஜாக்ரதை பண்ணிக்கிறது–ங்கிறதையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு, ப்ரேமை ஒண்ணுதான்னு அவாகிட்ட ஸ்வாமி ஹ்ருதயத்தையே குடுத்து, அவாளுக்காக உசிரையும் குடுக்கத் தயாரா வர்ஷிச்சுப்பிடுவார். ஸுக்ரீவன் – அதை விடவும் ஆஞ்ஜநேயர் விஷயமாவும் – அப்படித்தான் பிறபாடு ஆச்சு.

@Page 178

"இப்ப ஆரம்பம்தானே? ஆரம்பம்னாலும் இப்பவே ஸ்வாமி, ஆஞ்ஜநேயர் ரெண்டு பேருக்குள்ளேயும் பரஸ்பரம் சொல்லி முடியாத ப்ரியம் உண்டாகத்தான் செஞ்சுது. இருந்தாலும் லோகத்து ஜனங்களுக்கெல்லாம் எப்ப, எவர்கிட்ட, எப்படி (நடந்துகொள்ள வேண்டும்)–ங்கிற லோகவ்யவஸ்தைகளை தாமே வழிகாட்டியா இருந்து காட்டிக் குடுக்கணும்–னும் இந்த அவதாரத்துக்கு ஏற்பட்டிருந்தது. ஆஞ்ஜநேயரும் ஜாக்ரதையா, (சிரித்தவாறு) diplomatic caution–ஓடத்தானே வந்திருந்தார்? அதனாலதான் அவர் ஸ்வய ரூபத்தை மறைச்சுண்டு ஸந்நியாஸி வேஷத்துல வந்திருந்தார். கம்பன் கதைப்படி ப்ரஹ்மசாரி–ன்னு இருக்கும். 'மாணி'ன்னு சொல்லியிருப்பார். மாணாக்கன், மாணவன்–கிற ப்ரஹ்மசாரியான வித்யார்த்திதான் மாணி. 'ஆஞ்ஜநேயர் வானர ரூபத்தை விட்டு மாநுஷமா வேஷந்தான் போட்டுண்டார்–னாலும், வேஷம்கிறதுல சூது–பொய் அம்சம் இருக்கத்தானே செய்யறது? ஆனாலும் அவர் **ரொம்பவும்** வேஷம் போட்டதா இருக்க வேண்டாம். நெஜமாவே சுத்த ப்ரஹ்மசாரியா வானராள்–ல இருந்த அவர் மாநுஷ ப்ரஹ்மசாரியா ஆனதா மட்டும் இருக்கட்டும்; ஸந்நியாஸி ஆனதா வேறே வேண்டாம்'னு கம்பருக்கு இநருந்திருக்கும். அதனால அவரைக் கடைசியான நாலாவது ஆச்ரமத்துக்குக் கொண்டு போகாம, மொதலாவதான ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்துலயே வெச்சுப்பிட்டார்னு தோணறது.

"ஏன் இந்த ரெண்டு வேஷம்னும் சொல்றேன். தநுர்–பாணங்களோட ராம–லக்ஷ்மணாள் வந்தாளா? அவா இன்னார்னு ஸுக்ரீவ–ஆஞ்ஜநேயாதிகளுக்குத் தெரியாதோல்லியோ? அதனால, அவா யாரோ வாலி அனுப்பின ஆளாயிருந்துடுவாளோன்னே ரிச்யமூகத்துல இருக்கற வானரமாத் தன்னைத் காட்டிக் குடுத்துக்கவேண்டாம்னு

@Page 179

வேஷம் போட்டுண்டார். 'வந்தவர் வாலி ஆளா இருக்கலாம்; இல்லாட்டா வேட்டையாட வந்தவாளாவும் இருக்கலாம்'னும் நெனச்சார்....

"ராமாயணத்துல நாம பாக்கற வானர ஜாதி–ங்கிறது அசல் கொரங்கான 'சதுஷ்பாத்' என்கிற நாற்கால் பிராணியாக, quadruped-ஆக இல்லாமல் anthropoid ape என்கிற மநுஷக் கொரங்கு, கொரில்லா மாதிரி, இன்னும் அதுக்கு மேல் 'ஸ்டெப்'புல எப்பவுமே முதுகெலும்பு–ஜீவனா நிமிந்து நின்னு, கை–கால்னு நன்னாப் பிரிச்சுக்

காரியம் பண்ணிண்டு, அதோட நன்னாப் பேசவும் பேசிண்டு, வஸ்திர பூஷணங்கள் போட்டுண்டு இருந்த ஒரு எனம்(இனம்)தான்—னாலும், மநுஷா அதைத் தங்க(ளுடைய) எனத்துல சேக்காம ம்ருக ஜாதியிலேயே சேத்திருந்தா. ஏன்னா, 'எண் சாண் ஒடம்புக்கு சிரஸே ப்ரதானம்'கிறோமே, அந்த சிரஸு வானரத்துக்கு அஸல் கொரங்கோடதாத்தானே இருக்கு ? அது மட்டுமில்லாம கொரங்குக்கு முக்யமா இருக்கப்பட்ட வாலும் அதுக்கு இருக்கே! அதனோட பலம், பெருமை எல்லாத்துக்கும் மூலமா இருக்கே! ஆகையினால அதை ம்ருக ஜாதியிலேயே வெச்சுட்டா. அதனால அவா அதையும் வேட்டையாடறதுண்டு.

"ஆனா அஸல் கொரங்கையே கொல்லப்படாது, வேட்டையாடப்படாது—ன்னு சொல்றதுண்டாச்சே! நான் இப்படிச் சொல்றேனே—ன்னு தோணலாம். அந்த மாதிரி விதி ஏற்பட்டது ராமர் காலத்துக்கு அப்பறந்தான். 'லக்ஷ்மணர் ஒத்தர் தவிரப் படைபலமா, பக்கத் துணையா எதுவுமில்லாத ராமருக்குப் பரம ஸஹாயம்—னா பரம ஸஹாயமா இருந்த எனத்தைச் சேந்ததுன்னா அது ?'ன்னு அவருக்குப் பிற்காலத்துலதான் அதை 'அவத்யம்'னு – கொல்லப்படக்கூடாததுன்னு – வெச்சது. ராமரே

@Page 180

ஸ்பஷ்டமா வாலி கிட்ட, 'மநுஷாளோட நேரெதிர்ல நின்னுதான் யுத்தம் செய்யணும்—கிற மாதிரி இல்லாம, ம்ருகத்தை மறைஞ்சிருந்தும் கொல்லலாம். நீ ம்ருகந்தானே ? அதனால அப்படிப் பண்ணினேன், கேள்வி கேக்காதே!'—ங்கிறார்.

"ஆகையினாலதான், ராம—லக்ஷ்மணாள் வாலி ஆளானாலும் ஸரி, வேட்டையாட வந்தவாளானாலும் ஸரி, ஸுக்ரீவனுக்குக் காப்பான எடமா இருக்கற ரிச்யமூகத்துல வானர ரூபத்தோட ஆஞ்சநேயரைப் பாத்த மாத்ரத்துல அம்பு போட்டு வதம் பண்ணிடுவாளோ—ன்னு அவர் மாறுரூபம் போட்டுக்கிண்டது.

"அது ஏன் ஸந்நியாஸியாவோ, ப்ரஹ்மசாரியாவோ இருக்கணும்னா அந்த ரெண்டு ஆச்ரமக்காராளையும் யாரும் கொல்ல மாட்டா. அப்படிக் கண்டிப்பா ஒரு சாஸ்த்ர விதி, அப்பேர்ப்பட்ட பாபமாக்கும்னு சொல்லி! வித்யைக்கே தன்னை அர்ப்பணம் பண்ணிண்டவன் ப்ரஹ்மசாரி. ஞானத்துக்கே தன்னை அர்ப்பணம் பண்ணிண்டவன். ஸந்நியாஸி. அதனால அவா ரெண்டு பேருக்கும் ஒரு தனிச் சிறப்பு நம்ம ஸம்பிரதாயத்துல. அதமாதமனா, பஞ்சமாபாதகனா இருக்கறவன்கூட அந்த ரெண்டு பேரைக் கொல்றதுன்னா கொஞ்சம் யோஜனை பண்ணத்தான் பண்ணுவான். ஆகையினாலதான் ஆஞ்ஜநேயர் வேஷத்தை அந்த ரெண்டுல ஒண்ணொண்ணா

வால்மீகியும் கம்பரும் சொன்னது.

"வானராள்—ல ஸந்நியாஸியா யாரும் இருந்ததாத் தெரியலை. ஆஞ்ஜநேயர் ப்ரஹ்மசாரியா இருந்தவர். அந்த வானர பரஹ்சர்ய ரூபத்துலயே அவர் போயிருக்கலாமே—ன்னா அப்படிப் பண்றதுக்கில்லை. (ஏனென்றால்) இப்பத்தானே சொன்னேன். மநுஷ ஜாதியோட வானரத்தைச் சேக்கலை; ம்ருக ஜாதியிலேயே

@Page 181

சேத்திருந்தா; வதம் பண்றதானாலும் ம்ருகத்துக்குள்ள தர்மப்படிதான்—னு? அதனால, மானுஷ ப்ரஹ்மசாரி மாதிரியில்லாம வானர ப்ரஹ்மசாரியை வதைக்கலாம்னு இருந்திருக்கலாமோன்னோ? அதுவுந் தவிர, மநுஷ ரூப ப்ரஹ்மசாரியைத்தான் பாத்த மாத்ரத்துல அவாளோட சிகை, தண்டம், மொழங்காலுக்கு மேலே வேஷ்டி மொதலானதுகள் பளிச்சுனு காட்டிக் குடுக்கும். வானரம் ஒடம்பு பூரா பொஸ பொஸன்னு ரோமமானாலும் சிகை—ன்னு முடிஞ்சக்கறாப்பல சிரஸுல கெடயாது. ஆஞ்ஜநேயர் தண்டம் வெச்சுண்டிருந்ததா எங்கேயுமே வர்ணனை இல்லாததால வானர ஜாதியில அப்படி இருந்திருக்காதோ—ன்னு தோணறது. வஸ்த்ரமும் புராதன சிற்பங்களிலகூடப் பாத்தா, எல்லா வானராளுமே மொழங்காலுக்கு மேலே உடுத்திண்டிருந்ததாத்தான் தெரியறது. மரத்துக்கு மரம் தாவறது, மலைகளிலே, மாட மாளிகைகளில தாவித் தாவி ஏறறது (ஏறுவது)—ன்னு அவா அஸல் கொரங்கு மாதிரியே பண்ணிண்டு இருந்ததா நெறயவே 'எவிடென்ஸ்' ராமாயணத்துலே தெரியறதால, தழையத் தழைய உடுத்திக்காம, மொழங்கா மட்டோட கட்டிண்டிருந்தாத்தான் ஸௌகர்யமா இருந்திருக்கும்.

"இதெல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும். கம்பர்—ங்கிற வரை வெச்சு விஷயத்தைப் பாத்தா, அவர் ராமரை முழுக்க முழுக்க மும்மூர்த்திக்கும் மேற்பட்ட பரமாத்மாவாவே பார்த்தவர்; அதே ஸமயத்துல அவர் மநுஷரா வந்து மநுஷாள் பண்ற மாதிரியே நடந்துண்டதையும் கம்பர் நன்னாப் புரிஞ்சுண்டு இருந்ததால அப்படியே தன்னோட காவியத்துல சொல்லும்படியாவும் இருந்தது. அப்ப அவருக்குச் சிலது எழுத மனஸு கஷ்டப்பட்டிருக்கும். 'பரமாத்மாவேயான ஸ்வாமியை, ஐயோ, இப்படி எழுதும் படியாச்சே!'—ங்கிற கஷ்டம்! ராமரோட பரம தர்மாசார

@Page 182

வழியை நன்னாப் புரிஞ்சுண்ட கம்பர், அவர் மாத்தினபடி ஆஞ்ஜநேயர் மாணியாப்

போனப்ப ராமரை நமஸ்காரம் பண்ணினதாவும் க்ஷத்ரியரான தன்னை அந்த ப்ராஹ்மண மாணி நமஸ்காரம் பண்ணப்படாதேன்னு ராமர் பதறினதாவும் சொல்லியிருக்கார். அப்படியிருக்கச்சே, ஆஞ்ஜநேயர் ஸந்நியாஸி வேஷத்துல போயிருந்தா ? அந்த ராமதே–ன்னா ஆஞ்ஜநேயர் காலில விழுந்திருப்பார் ? அப்படி எழுதக் கம்பருக்கு மனஸு வருமா ? தம் மாதிரியே, தம்மை விடவும் அந்த ஆஞ்ஜநேயரும் கஷ்டப்பட்டிருப்பாரேன்னும் நெனச்சிருப்பார்.

"நான் என்னவோ காரணம்னு பலது சொல்றேன். கம்பர் வால்மீகத்தை மாத்திச் சொன்னார்–னா.... அப்படி மாத்தலாமாங்கிறது இருக்கட்டும்... ஸம்ப்ரதாயத்திலேயும், ரிஷி வாக்கிலேயும் அவரும் ரொம்ப பய பக்தி வெச்சுக் கட்டுப்பாட்டோட இருந்தவர்தான். இந்தக் காலத்துத் தற்குறிகளாட்டமா தன்னிஷ்டத்துக்கு எதுல வேணுமானாலும் பூந்து என்ன வேணுமானாலும் பண்ணலாம்–னு இருந்தவரில்லை. பரமபக்திமான், வித்வான் – ஸம்ஸ்கிருதத்துலயுந்தான் – அதோட புத்திமானுமான அவர் மாத்தினார்னாலே போறும், அதை அப்படியே ஏத்துக்க வேண்டியதுதான். அதுக்கு நாம காரணம் தேடிண்டு போகவேண்டாம்! அவர் (மாறுதல்) பண்ணினாரா, ஸரி, அப்படியானா ரொம்ப காரணத்தோடதான் பண்ணியிருப்பார்–னு வெச்சுண்டுடலாம்!....

"ஆகக்கூடி ஏதோ ஒரு வேஷம்! அதாவது ஆஞ்ஜநேயர் ஜாக்ரதை பண்ணிண்டே ஸ்வாமிகிட்ட வந்திருக்கார். ஸ்வாமியும் அப்ப 'டிப்ளமாடிக்'காப் போக வேண்டியதுதானே ? அதனாலதான் செத்த (சிறிது) அப்புறமும் யஜமானம் ஸுக்ரீவனோட கிங்கரராவே அவர் வந்திருக்கார்னு தெரிஞ்சதன் பேர்ல, தானே

@Page 183

அவர்கிட்டப் பேசப்படாது ; யஜமானனாட்டம் இருக்கற தங்கிட்டக் கிங்கரராட்டம் இருக்கற லக்ஷ்மணர்தான் பேசணும்–ங்கற அளவுக்கு ராஜரீகம் பாத்து அப்படியே லக்ஷ்மணரைத்தான் பேசவிடறார்! இப்ப அதுக்கு முந்தியும் ராஜரீக ஜாக்ரதைப்படி ஆஞ்ஜநேயரைப் பத்தி மறைமுகமாவே லக்ஷ்மணருக்கு மட்டும் புரியறாப்பல சிலது சொன்னார். (சித்து) ஒரு விஷயம் : இந்த ஜாக்ரதை, டிப்ளமாடிக்காப் பேசறது–ல்லாமும் அப்படி எதிராளிக்குத் தெரிஞ்சுடப்படாது! ரொம்ப மனஸைவிட்டு friendly–யாப் பேசறாப்பலயேதான் அவனுக்குத் தோணணும்! இதுவும் அந்த ராஜதந்த்ரத்துல ஒரு அங்கம். அதனால வெளிப்பட லக்ஷ்மணர் கிட்ட ராமர் சொன்னதும் கமுக்கமா இல்லாம ரொம்ப வெளிப்படையா ஆஞ்ஜநேயரைப் புகழறதாவேதான் ஸ்வாமி பேசினார். நெஜமாவே அப்படிப் புகழும்படிதான் ஆஞ்ஜநேயர் இருந்ததால, நெஜப் புகழ்ச்சியையே ஸ்வாமி மனஸைத் தெறந்து கொட்டறதுக்கும் அது நல்ல வாய்ப்பா

இருந்தது. அப்படி அவரோட வாக்சதுரத்தை இவர் புகழ்ந்துண்டு போறச்சேதான் கம்ப ராமாயணப்படி 'சொல்லின் செல்வன்'–னது.

"அதுலதான் லக்ஷ்மணருக்கு மாத்ரம் புரியற மறைமுக விஷயம்! என்ன விஷயம்–னா, தூது அனுப்பறதுதான்! ஸீதை–ராவணன் ரெண்டு பேருக்கும் ஏத்தாப்பல தூது சொல்லக்கூடிய ஸாமர்த்தியசாலி கிடைக்கணும்னு ராமர் நெனச்சுண்டிருந்தாரோன்னோ? 'அந்த ஸாமர்த்தியசாலியா இதோ இந்த ஆஞ்ஜநேயனே கிடைச்சுட்டான்'னு லக்ஷ்மணருக்குத் தெரிவிக்கறதுக்கே ரொம்பச் சுருக்கமா, cryptic–ஆ code language மாதிரி, 'சொல்லின் செல்வன்'–ன்னார்!

"அதெப்படி அந்த வார்த்தைகள் அந்த அர்த்தத்தைக் காட்டும்–னா, அந்த wording–ஐ அப்படியே கொஞ்சம்

@Page 184

நீட்டிண்டாலே போறும். (ஸ்ரீசரணர் இலக்கணத் தமிழில் பேசுகிறார்:) 'ஆஞ்ஜநேயனிடம் தூது சொல்லியனுப்பினால் நமக்கேற்ற தூதுவனாக அவனே செல்வான்'–ன்னுதானே ராமர் லக்ஷ்மணருக்குத் தெரிவிக்கணும்? 'சொல்லின்' என்றால் 'சொன்னால்'–னும் அர்த்தம். 'இருந்தால்'–ங்கிறதை 'இருக்கின்', 'இருப்பின்'னு சொல்றமோன்னோ? அந்த மாதிரி 'சொன்னால்' என்கிறதை அந்த context–ல 'தூதுச் சேதி 'சொன்னால்', 'தூதுச் சேரி சொல்லி அனுப்பினால்'னு. நல்ல புத்திமானான லக்ஷ்மணர் ஈஸியாப் புரிஞ்சுக்கமுடியும். அண்ணாவையும் அவர் நன்னாப் புரிஞ்சுண்டவராச்சே!

" 'செல்வன்'–ங்கிறது? 'செல்வான்'தான்! 'இருப்பான்', 'இருப்பன்' (என்று) ரெண்டு தினுஸாவும் சொல்றமோன்னோ?

"அப்ப, 'சொல்லின் செல்வன்' என்றால், 'நாம் தூது சொல்லி அனுப்பினால் இவன் செல்வான்'–ன்னு அர்த்தமாயிடறதோல்லியோ?"

ஸ்ரீசரணர் பலபலவெனச் சிரிக்க உடனிருந்தோரிடமும் ஒரே ஆனந்த ரஸிப்புக் கலகலப்பு! அது அடங்கிய பின் தொடர்கிறார்.

"தான் தேடிண்டிருந்த கார்யத்துக்குத் தக்க யோக்ய தாம்சம் உள்ளவர் கிடைச்சாச்சு–ங்கிறதோட, அவர் தன் கிட்ட பவ்யப்பட்டு, தனக்காக பக்தியா தூது போகக்கூடியவர்–னும் அப்பவே ஸ்வாமி ஆஞ்ஜநேயரைப் பாத்த மாத்திரத்துல

கண்டுண்டுதான் 'செல்வன்'— அவர் தன் வார்த்தைக்குக் கீழ்ப்படிஞ்சு தூது போவார்னும் தெரிவிச்சுட்டார்.

"இதைப் பாக்கறப்ப, ஆஞ்ஜநேயர் மாத்திரமில்லே ; அவருக்கு 'சொல்லின் செல்வன்' டைட்டில் குடுத்த

@Page 185

ஸ்வாமியுந்தான் சொல்லின் செல்வர்னு தெரியரது. சொல்லை வளவளன்னு செலவழிக்காம, எத்தனை உள்ளர்த்தத்தை ரெண்டே ரெண்டு சொல்லுல அடக்கிச் சொல்லி, செல்வமாப் பொத்திக் காப்பாத்தினவர் அவர்னு தெரியறது. ராமரும் சொல்லின் செல்வர்தான்!"

இப்படி விளக்கம் கொடுத்த பெரியவாள் மட்டும் என்னவாம் ?

இனி ராம மதுரம் பற்றி ஸ்ரீசரணர் குரல் கேளுங்கள்!

"ராம நாமம் அம்ருதம். ராமாயணம் அம்ருதம். ராமரே அம்ருதம். 'ராமாம்ருதம்'னே பேர் வைக்கறோமே! 'க்ருஷ்ணாம்ருதம்', 'சிவாம்ருதம்'னுல்லாம் (பேர்) உண்டா ? ராமர் கிட்ட மட்டும் என்ன அப்படி அம்ருத மாதுர்யம்—னா, அவர் பொறந்ததே பாயஸத்துனாலேதானே ? புத்ர காமேஷ்டில திவ்ய ப்ரஸாதமா வந்த பாயஸத்தைச் சாப்பிட்டுத்தானே அவரைக் கௌஸல்யை பெத்தா ? 'ராமநாம பாயஸகெ'—ன்னே (புரந்தர) தாஸர் பாடறார். 'ராம நாமமே கல்கண்டு'ன்னு நாம சொல்றோம். கருப்பஞ்சாறை இறுக்கிப் பிடிச்ச தித்திப்புக் கல்கண்டு!

"ராமர் விஷயமாவே, முழு ராமாயணமாவோ, அதன் அம்சமாவோதான் இந்தியாவில இருக்கற அத்தனை பாஷையிலேயும் ஏகப்பட்ட கவிகள் பாடியிருக்கா. ஏன் அப்படின்னா அதுக்குக் காரணமும், லட்டு, ஜாங்கிரி, ஹல்வா—ன்னுல்லாம் எத்தனை தித்திப்பு பக்ஷணம் இருந்தாலும் அத்தனைக்கும் ஒரே சக்கரையைத்தானே போடணும் ? ராமன்தான் அந்தச் சக்கரை!"

சர்க்கரை, கற்கண்டு கொடுத்துத்தானே விடையனுப்புவது ? அவ்வாறு ராம குணச் சர்க்கரையும் ராம

@Page 186

நாமக் கற்கண்டும் கொடுத்து ஸ்ரீ மஹா பெரியவாளைச் சொற் செல்வராகக் காட்டிய முதல் மஹா மஹா ஸாம்பிளுக்கு வந்தனோபசாரத்துடன் விடை தருகிறோம்.

இனி அப் பல்துறை மதுரர் வேறு விதங்களில் சொல்துறை நிபுணராகப் பெருக்கிய இனிமைகளுக்கு ஸாம்பிள்கள் பார்க்கலாம்.

## 11

சொல் மதுரத்தோடேயே சொல்லாத மதுரமும் சேர்ந்த ஒரு துறையில் அவர் 'ஸ்பெஷலிஸ்'டாகத் திகழ்ந்தார். அந்த 'ஸ்பெஷலைஸ்ட்' துறையை இப்போது காணலாம்.

செவியுறும் பண்கள் மதுரமாயிருக்கலாம் எனில் செவியுற முடியாத பண்கள் அவற்றிலும் மதுரம் என்று ஆங்கிலக் கவி கூறினான். அப்படி, நமது அருட்செல்வர் சொல்லால் மதுரம் படைத்ததோடு, சொல்லாமலும் மதுரம் படைத்தவர். அதாவது, வாயினால் சொல்லமாட்டார். ஆயின் அதைவிட விஷயத்தை வலியுறுத்தித் தெரிவிப்பதாகவும், அதோடு நம்மை இன்புறுத்துவதாகவுமுள்ள சைகையாலேயே சொல்லிவிடுவார்.

ஆம், அபிநய சதுரத்தில் அபிநவ நடராஜன்தான் அவர்.

சொல்லழகும், அபிநய அழகும் கலந்தாடும் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியுடன் தொடங்கலாம்.

"இனிமே(ல்) எல்லாம் நன்னாயிருக்கும். நாலு நா(ள்) போனா தை பொறந்துடறதே" என்று ஸ்ரீசரணரின்

@Page 187

சந்நிதியில் உடனிருந்த பணியாளர் ஏதோ ஒரு விஷயம் குறித்து இன்னொருவரிடும் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஸ்ரீசரணர் சொடக்குப் போட்டு அவர் கவனத்தைத் தம்மிடம் திருப்பிக் கொண்டார். அவரது சொடக்கும் ஓர் அபிநய நயம் கொண்டதுதான். அது அதிசய மிடுக்குடன் கனமான ஒலியாகவே கவனத்தை இழுக்கும்.

அவ்வப்போது திடீர் மௌனம் – சில சமயங்களில் சிறிது நேரத்திற்கு மட்டுங்கூட – பூணும் விசித்திர சித்தர் இப்போது அப்படித்தான் தம்மிடம் பாரிஷதரின் கவனத்தை இழுத்துக் கொண்டார். தரிசனத்திற்கு வந்து அருகே நின்று கொண்டிருந்த ஓர் அம்மாளை வெறுமே ஜாடையால் காட்டிவிட்டுப் பேசாதிருந்தார்.

பாரிஷதர் வெகு காலமாகப் பணி செய்து விசித்திர சித்தரின் விசித்திரங்கள் சிலவற்றையேனும் புரிந்து கொண்டிருந்தவர். எனவே தாம் பேசி முடித்திருந்த விஷயத்திற்கும் வந்திருக்கும் அம்மாளுக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது என்ற அளவுக்குப் புரிந்து கொண்டார். அதற்கு மேல் கேள்விக்குறிதான்!

"தை பொறந்துடறதுன்னு சொல்லிண்டிருந்தேன்" என்று மஹா பெரியவாளிடம் அவர் கூறி, கேள்விக்குறியைத் தேக்கியவராய் அவரை நோக்கினார்.

"அதுவேதான்!" என்பதைத் தலையாட்டலாலேயே தெரிவித்த 'மௌன சாமியார்' மறுபடியும் அந்த அம்மாளைக் காட்டினார்.

"ஆமாம், ஆமாம்" என்று பாரிஷதர் சொல்லிச் சிரிக்க, அந்த அம்மாளும் புரிந்து கொண்டு சிரித்து விட்டாள்.

"தையம்மாதானே ?" என்றார் பாரிஷதர். அது கேள்வியில்லை ; பதிலையே கேள்வியாகத் தெரிவிப்பதுதான்.

@Page 188

அந்த அம்மாள் பெயர் தையம்மாள். அதில் 'அம்மாள்' என்ற பொதுக் குறிப்பை நீக்கினால் 'தை'தானே ?....

'தையம்மா' விஷயமாகப் பிறிதொரு சமயம் ஸ்ரீசரணாளின் கருத்துக்கள் படாந்ததை இங்கேயே பார்ப்போம்.

வைத்தீச்வரன்கோயில் அம்மனுக்கு பாலாம்பிகை என்று பெயர். பாலையாகிய இளம்பெண்ணைத் தமிழில் தையல் என்பதால் தையல்நாயகி என்று அவளுக்கு தமிழ் மொழியில் பெயர். வினைச் சொல்லாகத் 'தைவது' என்று சொன்னால் அழகு செய்வது, அலங்கரிப்பது என்று அர்த்தம். அவ்வாறான அலங்காரங்களில் வெகு முக்கியமான ஒன்று உடுப்பதுதானே ? எனவே ஊசி நூல் கொண்டு துணியை உடையாக ஆக்குவதே 'தைப்பது', 'தையல்' என்றாயிற்று. பெண் குழந்தை அழகான

குழந்தையம்பாளின் உருவம், அதற்கு நன்றாக அலங்காரமும் செய்ய வேண்டும் என்ற கருத்திலேயே பாலையைத் தையல் என்பது. அதனால் தை மாதத்திற்கும் இந்தத் தையலுக்கும் தொடர்பு இல்லை.

தமிழிலுள்ள மாதப் பெயர்களை ஸ்ரீசரணாள் புட்டுப் புட்டுப் பொருள் கூறியுள்ளார். அவை யாவற்றுக்கும் மூலமானவை ஸம்ஸ்கிருதப் பெயர்கள். அம்மூலப் பெயர் அம்மாதம் பௌர்ணமி எந்த நக்ஷத்திரத்தில்தான் ஆதியில் வந்ததோ, தற்போதும் பெரும்பாலும் வருகிறதோ, அந்த நக்ஷத்திரத்தின் பெயராகவே இருக்கும்.

அம்மூலப் பெயர்களே 'genius of the language' எனப்படும் ஒரு மொழியின் தனிப் பண்புக்கு ஏற்பவும், அதோடு வெகு ஜனங்களில் வாயில் 'விழுந்து புறப்படுவதால்' ஏற்பட்ட கொச்சை உச்சரிப்புச் சேர்ந்தும்

@Page 189

தமிழில் மாற்றுருவங்களில் வந்துள்ளன. சில ரொம்பவுமே மாறுதலாகவுங்கூட!

முதல் மாதம் சித்ரா ; தமிழில் சித்திரை. இது ஸ்பஷ்டமாகவே உள்ளது. அம்மாதம் பௌர்ணமி நிகழ்வது சித்திரையில்தான். அல்லது அதற்கு முன்–பின் நக்ஷத்திரமாயிருக்கும்.

அடுத்தது வைசாகம் ; தமிழில் 'வைகாசி' ; 'மதுரை' 'மருதை' ஆவதுபோல! அநுஷ நக்ஷத்திரத்தைக் குறிப்பதான 'ஆநுஷீ' என்பதே 'ஆனி'. பூராடம், உத்திராடம் என்பவை பூர்வாஷாடம், உத்தராஷாடம் என்பவற்றின் தமிழ்த் திரிபு. அடுத்தடுத்து வரும் இவ்விரு நக்ஷத்ரங்களும் 'ஆஷாடம்' என்ற ஒன்றின் முன்–பின் பகுதிகள்தாம். ஆஷாடப் பூர்ணிமையின் தொடர்பு கொண்ட மாதம் 'ஆஷாடீ'. அதுவே தமிழ் 'ஆடி'. 'ச்ரவணம்' எனும் நக்ஷத்திரம் தமிழ் 'ஓணம்' ஆகிறது. 'ச்ரமணர்' என்பவர் 'சமணர்' என்று ஆகி அப்புறம் 'அமணர்' என்று ஆனாற்போல! அது ஸாக்ஷாத்திருமால் நக்ஷத்திரமானதால் அதற்கு 'திரு' சேர்த்துத் 'திருவோணம்' என்றே தமிழகத்தில் சொல்வது. மலையாள தேசத்தில் ஓணம் என்று மட்டுமே சொல்லி ச்ராவண மாதத்தில் அந்நக்ஷத்ரம் நிகழும் நாளில் விசேஷமாக ஓணம் பண்டிகை கொண்டாடுவது. அன்றுதான் மஹாபலியை வென்ற வாமனாவதாரனின் ஜயந்தி நன்னாள். ச்ராவணீ என்பதே நமது ஆவணி.

இங்கு சைவ–வைணவ சமரஸம் காட்டுவதாக ஓர் அரிய உண்மையை நமது சமரஸ ரூபர் காட்டுவார். இருபத்தேழு நக்ஷத்திரங்களில் இரண்டிற்கு மட்டுமே தமிழகத்தில் 'திரு' சேர்த்துச் சொல்கிறோம். ஒன்று திருவோணம், மற்றது திருவாதிரை. ஓணம் திருமாலுக்குரியதெனில் ஆதிரை சிவபெருமானுக்குரியதாக உள்ளது! 'ஆர்த்ரா' என்ற மூலப்பெயரே தமிழில் 'ஆதிரை' ஆனது.

@Page 190

அந்த 'ஆர்த்ரா'வைத் தப்பாக ஏதோ ருத்ரன் விஷயமான வார்த்தைபோல 'ஆருத்ரா' என்று சொல்கிறோம்!

'பாத்ரபதம்' எனும் நக்ஷத்திரத்திற்கு 'ப்ரோஷ்டபதம்' என்றும் ஒரு பெயருண்டு. 27 நக்ஷத்ரங்களில் 25–வது 26–வதாகவுள்ள இந்நக்ஷத்திரத்தின் முன்–பின் பகுதிகளைப் பூர்வ ப்ரோஷ்டபதீ, உத்தர ப்ரோஷ்டபதீ என்பர். முன்னது தமிழில் 'பூரட்டாதி' என்றும் பின்னது 'உத்திரட்டாதி' எனவும் விசித்ர உருமாற்றம் கண்டுள்ளன. மாஸப் பெயராக வரும்போதோ இவ் விசித்ரம் மேலும் விசித்ரமாகி 'பூரட்டாதி'யே 'புரட்டாசி' ஆகியுள்ளது!

அச்விநி நக்ஷத்திரத்தின் அடியாக 'ஆச்விநி' எனப்படும் அடுத்த மாதமோ 'ஐப்பசி'யாகிவிட்டது! இப்படிப் பல மாதப் பெயர்கள் பெரும் உருமாற்றம் பெற்றபின் க்ருத்திகா நக்ஷத்திரத் தொடர்புள்ள 'கார்த்திகா' மட்டும் ஸ்பஷ்டமாகவே 'கார்த்திகை' என இருக்கிறது. அடுத்து ம்ருகசீர்ஷ நக்ஷத்ர சம்பந்தப்பட்ட 'மார்க்கசீர்ஷீ' என்பது 'மார்கழி' ஆயிற்று. அப்புறந்தான் இவ்வத்தியாய ஆரம்பத்தில் வந்த தை. அதைக் கடைசியாய்ப் பார்ப்போம். அதற்கடுத்த 'மக' நக்ஷத்ர ஸம்பந்தமுள்ள 'மாகீ' மாஸம் 'மாசி' ஆகியுள்ளது. மஹாமகத்தைக் குறிப்பிடும்போது Makham, Maham என்றெல்லாம் தப்பாக ஆங்கில ஏடுகள் குறிப்பிடுகின்றன. Makham என்றால் வேள்வி. 'மஹஸ்' என்றால் ஜ்யோதி. இரண்டுமே இங்கு தப்பு. நக்ஷத்திரத்தின் பெயர் Magham என்பதே.

'பல்குனம் என்பது இரு பிரிவுகளாக பூர்வ பல்குனி, உத்தர பல்குனி' என்று உள்ளது. 'பூர்வ பல்குனி' தமிழில் அதில் முக்யமான பாகமான 'பல்குனி'யையே தள்ளிவிட்டு 'பூர்வ'த்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அதையும் திரித்துப் 'பூரம்' என்ற நக்ஷத்திரப் பெயராகியிருக்கிறது. உத்தர பல்குனியும் வெறும் 'உத்தர'மாகவே

நிற்கிறது. மாதப்



பெயராகவோ 'பல்குனி'யே 'பங்குனி' என வேறொரு விதத்தில் உருமாற்றம் கண்டுள்ளது.

தையின் கதை பார்ப்போம். இங்கேயும் ஒரு விசித்ரம். 'புஷ்யம்' என்ற நக்ஷத்திரத்திற்கு 'திஷ்யம்' என்றும் பெயருண்டு. 'பூச' நக்ஷத்ரம் என்பது 'புஷ்ய'மே. இதில் அவ்வளவாக விசித்ரமில்லை. மாதப் பெயராக வரும்போதுதான் விசித்திரம். இங்கு புஷ்ய ஸம்பந்தமுள்ள 'பௌஷீ'யை வைத்து நமது மாஸப் பெயர் ஏற்படவில்லை. 'திஷ்ய'த்தின் அடி வந்த 'தைஷ்யீயையே எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதில் ஆநுஷீ, ஆஷாடீ ஆகியவற்றில் போல, 'ஷ' காரமான இரண்டாம் அக்ஷரத்தை அடியோடு அகற்றி, 'தை' என்று மட்டுமே வைத்துக் கொண்டிருக்கிறோம்!

மாதத் தைக்கும் பாலையான தையலுக்கும் தொடர்பில்லை. அதேபோல் ஊசி–நூலால் செய்யும் தையல் பாலையாகிய தையல் செய்யும் சிறப்புத் தொழிலும் இல்லை. அழகாக அலங்கரிக்கப்பட வேண்டியவள் என்பதாலேயே பாலைக்குத் தையல் என்று பெயர்.

"தைக்கிறது, தையல் வேலைங்கிறோமோ, அதுக்கும் செறு (சிறு) வயஸுப் பொம்மனாட்டியைத் 'தையல்'–ங்கிறதுக்கும் சம்பந்தமில்லே. 'பருத்திப் பெண்டிர்'னு பழைய இலக்கியத்துல இருக்கிறதுக்கும் இவாளுக்கும் 'ஸம்பந்தமாக்கும் ; அதனால tailoring–தையல் பேரே இவாளுக்குமாக்கும்–னு நெனச்சா, அது பெசகு. 'பருத்திப் பெண்டிர்' என்கிறது கைம்பெண்ணைக் குறிப்பிடுகிற வார்த்தை. தமிழ் தேசத்திலே ஆதியிலேயே, பிற்காலத்துல காந்தி 'நூல்' நூத்துக்கிண்டே ஸ்தோத்ரம் சொல்லுங்கோ'–ன்ன மாதிரி கைம்பெண்ணாயிருக்கறவா, 'தங்களால குடும்பத்துக்கு ஓத்தாசையாயிருக்கட்டும், தானும் வம்பு தும்புனு போகாம, தனக்கும் உபகாரமா பிறத்தியாருக்கும் உபகாரமா, தன்னோட ஆத்ம க்ஷேமத்துக்காக துதிப் பாடல்களைச்



சொல்லிக்கிண்டு பிறத்தியாருக்கு உதவியா நூல் நூத்துக்கிண்டு இருப்போம்'–ன்னு ஒரு வ்ரதாநுஷ்டானம் மாதிரிப் பண்ணிண்டிருந்தா. அதனால அவாளையே பருத்திப்

பெண்டிர்—ங்கிறது. இதே மாதிரி வெள்ளைக்கார தேசங்கள்லயும் பொம்மனாட்டிகள்தான் ஸதாவும் நூல் நூத்துண்டு அதனால spinsters—னே பேர் பெத்திருக்கா. ஆனா அவா விதந்துக்கள் இல்லை. கலியாணமே வேண்டாம்னு கன்னிகைகளா இருந்துண்டிருந்தவா, இன்னிக்கும் அப்படியிருக்கிறவாளை 'ஸ்பின்ஸ்டர்ஸ்'னுதான் சொல்லிண்டிருக்கோம். இவாதான் வயஸுல சின்னவா, ஸுரதம் (தாம்பத்ய சுகம்) தெரியாதவா—ங்கறதால நம்ம பாலை—தையலுக்குக் கிட்ட வரா. நூல்—வஸ்த்ரம் ஸம்பந்தமான வேலைல ஈடுபட்டிருந்ததாலே tailoring-தையலுக்கும் கிட்ட வரா!

"தமிழ்த் 'தைய'லும் மேற்கத்திய பாஷை 'tailoring'—ங்கும் ஒரே மாதிரி தொனிக்கிறது. இதுல என்னோட ஒரு pet theory-க்கும் ஆதரவு கெடைக்கிறது. (அந்த 'pet theory' : பெரியவாளுக்கு இஷ்டமான செல்லக் கொள்கை) என்னன்னா : 'ஸம்ஸ்க்ருதமும் மேற்கத்தி பாஷைகளும் Indo-European group—ஐச் சேர்ந்தவை ; தமிழ் அதுக்கு முழுக்க வேறேயான Dravidian பாஷை. அதுகள் வெவ்வேறே 'ரேஸை'ச் சேர்ந்தவாளோட பாஷைகள்'னுதானே வெள்ளைக்காரா நன்னா கதை கட்டிவிட்டு – 'கதை'ன்னு இல்லாம 'Philology'—ன்னே ஒரு ஸயன்ஸ் பேர் சூட்டி ப்ரஸித்தி பண்ணி – நம்ம தேசத்துல ஆர்ய—த்ராவிட இனபேதம் உண்டாக்கறதுக்கு அதையும் ஸாதகமாப் பண்ணியிருக்கா? அது அடியோட தப்பு. ஆரிய பாஷை, த்ராவிட பாஷை—ன்னு இவா சொல்ற எல்லாமே ஒரே மூலத்திலேந்து வந்த பாஷைகள்தான். அதைப்

@Page 193

பேசினவாளும் ஒரே எனந்தான் (இனம்தான்). இதுதான் என்னோட pet theory."

ஸ்ரீ மஹா பெரியவாள் இக்கொள்கைக்கு ஆதரவாக ஏராளமான வார்த்தைகள் சான்று காட்டியிருக்கிறார். அதாவது, தற்போது 'ட்ராவிடியன்' என்றும் 'இன்டோயூரோபியன்' என்றும் பிரிக்கப்பட்டுள்ள மொழிகளுக்குள்ளேயே ஒன்றின் சொற்கள் பிறிதில் திரிந்து வந்திருப்பதாக எடுத்துக்காட்டியிருக்கிறார். அவற்றிலொன்றே தையல்—டெய்லரிங்.

பாலாம்பிகை—தையல்நாயகி விஷயமாக மேலும் தெய்வத்தின் குரல் இதோ : "பாலாம்பா என்கிறது தமிழ்ல தையலம்பா. அது பேச்சு வழக்குல 'தைலாம்பா'—ன்னு ஆயிடுத்து. தலைக்குத் தேச்சுக்கறமே, அந்தத் தைலம் ஸம்பந்தமுள்ள அம்பாளாட்டம்! 'தையலம்மா'—னும் தையலம்பாவைச் சொல்லலாமோல்லியோ? அதுதான் 'தையம்மா', 'தையம்மா'—ன்னே தஞ்சாவூர்ச் சீமையிலே அந்த அம்பாள்

பேர் உள்ள பொண்டுகளைக் கூப்பிடற பேரா ஆயிடுத்து. 'தைலா'–ன்னும், இன்னும் 'தையூ'ன்னும் கூடக் கூப்பிடறதுண்டு."

அவர்களில் ஒரு தையம்மாவைக் காட்டித்தான் அன்று ஸ்ரீசரணர் பேசியது.

அவளைத் தை மாதத்துடன் தொடர்புறுத்தி அவர் சைகை மொழியில் சொன்னதைக் கேட்டு அவளும் பாரிஷதருடன் சேர்ந்து சிரித்தாளல்லவா ?

அதன்பின் ஸ்ரீசரணர் அவளிடமே அந்த மௌன பாஷையைத் தொடர்ந்தார்.

சொல்லின் செல்வரான ஸ்ரீசரணர் 'சொல்லற' 'சும்மா' நின்ற மோன தத்துவனே! அவர் சைகையும் காட்டாது, பட்ட கட்டையெனக் காஷ்ட மௌனம்

@Page 194

கொள்கையில் மௌனத்தாலேயே தக்ஷிணாமூர்த்தி வேதாந்தத்திற்கு விரிவுரை அளிப்பது போல் மெய்யாலுமே நடக்கும். 'Silence more eloquent than speech' – 'வாய்ப் பேச்சிலும் புஷ்டியாகப் பொருளை உணர்த்தும் மௌனம்' எனச் சொல்வதற்கு உதாரணமாக அது இருக்கும். அவ்வளவு கடும் மௌனமாயின்றி சைகைகள் காட்டும்போதோ, ஆஹா, என்ன அபிநயத்திறன், என்ன அபிநயத்திறன்! பேச்சையும்விடப் புஷ்டியாக அபிநயமே விஷயத்தைத் தெரிவித்துவிடும்! சில ஸமயம், தேர்ந்த ரஸிகர்களுக்கே புரிவதாக ஒரு நடீ சில அபிநயப் பிடிகள் பிடிப்பதுபோல ஸ்ரீசரணரும் சூட்டிகையுள்ளவரே புரிந்துகொள்ளும் விதத்தில் சைகை புரிவதும் உண்டு. மிகவும் வேடிக்கையாகக்கூடி அநேகச் சைகைகள் செய்யும் விசித்ர சித்தர் அவர்! ஒரு சமயம் மூக்கை அறுத்துக் கொள்வதுபோல் ஜாடை செய்தார். மற்றவர்களுக்கு அடியோடு புரியாவிட்டாலும் உடனிருந்த அணுக்கத் தொண்டர் உடனே அது 'முகர்ஜி' என்ற ஒருவரைக் குறிப்பிடுவதாகப் புரிந்து கொண்டு பதில் சொன்னார். எப்படி அவ்வளவு லகுவாக அவர் பொருள் தெரிந்து கொண்டாரென்று அப்புறம் விசாரித்தபோது, முகர்ஜி என்பதை ஒரு பணியாளர் 'மூக்கருஜி' என்பார் எனவும் அதை 'மூக்கறுஜி' – 'மூக்கு அறுஜி'யாக்கியே பெரியவாள் எப்போதும் அபிநயம் புரிவது வழக்கம் என்றும் அவர் விளக்கினார். வேடிக்கை விளையாட்டு விநோத மதுரமுந்தான் நமது மதுர மதுர மஹாஞானி!

தையம்மாவை நோக்கிப் பெரியவாள், ஒரு கல்லைக் காண்பித்தார்.

"ஆமாம், கல்லூர்த் தாத்தா பேத்திதான்" என்றாள் புத்திசாலினியான அந்த மாது.

பக்கத்தில் துழாவி ஒரு மஞ்சளை எடுத்து அவளிடம் பெரியவாள் காட்டினார்.

@Page 195

அம்மாள் : "மஞ்சுப் பாட்டி ரொம்பத் தள்ளாமையாத்தான் இருக்கா. வயஸு ரொம்ப ஆயிடுத்தே!"

பெரியவாள் தலையைத் தொட்டுக் காண்பிக்கிறார்.

அம்மாள் : "அவளுக்குத் தலையூர்தான்."

பெரியவாள் எப்போதும் உடன் வைத்திருந்த கடிகாரத்தைக் காட்ட அதிசூட்டிகை அம்மாள் அதையும் அர்த்தம் செய்து கொண்டுவிட்டாள். "ஆமாம், ஆமாம். அவ பொறந்தாத்துக் குடும்பம் பரம்பரை மணிகாராதான் (மணியக்காரர்கள்தான்)" என்றாள்.

பெரியவாளுக்கு ரொம்ப ஸந்தோஷம். இதையெல்லாம்விடப் புரிந்து கொள்ள இயலாத குறிப்புக் காட்டி அவளை 'டெஸ்ட்' செய்ய ஆசைப்பட்டார் போலும். தம் வயிற்றைத் தட்டிக் காட்டிக் கொண்டார்.

சளைக்கவில்லை ஸூக்ஷ்ம புத்திசாலினி அம்மாள்! வயித்தீச்வர (வைத்தீச்வர) ஐயர் என்பவரைப் பற்றி ஏதோ உறவு சொன்னாள்.

இப்படித் தொடர்ந்து பலப்பல நிமிஷம் வாய்ச்சொல்லின் செல்வர் அபிநயம் எனும் அதிரஹஸ்யச் சொல்லின் செல்வராகச் சிறப்புக் காட்டினார்.

சொல்லின் செல்வர் மௌனச் செல்வருந்தான். அடுத்தப் பகுதியில் பார்க்கலாம். காஷ்ட மௌனம் என்பதாக மரக்கட்டைபோல் எவ்வித உணர்வும் காட்டாமலிருக்கும் உண்மையான மௌத்தையே செல்வமாகப் பெற்றிருந்த அவர் நம்மில் பலர் போல வாய்மௌனம் மாத்திரம் பூண்டு எழுதியும் சைகை காட்டியும் விஷயங்கள் தெரிவிப்பதுபோன்றே அடிக்கடிச் செய்ததுண்டு. தொடர்ந்து பல நாட்கள் இப்படிப்பட்ட அரை மௌனம் பூண்டதுண்டு. மனித வாழ்வின் குற்றமற்ற துறைகளில் அவர் எதைத்தான் விட்டுவைத்தார்? அப்படி

@Page 196

சாதாரண சாதகர்கள் போல இச் சைகை மௌனமும் மேற்கொண்டு காட்டினார்.

ஆனால் நம் போலவே அவரும் பல செய்தாலும் அதிலேயே அவருக்கென உரித்தான ஒரு முத்திரையும் பதித்திருப்பார்! அப்படித்தான் இங்கேயும் நாம் செய்யும் அப்பட்டமான 'சைகை'யை அவர் அதிநயமான 'அபிநய'மாக்கியிருந்தார்!

இந்த அபிநய மௌனத்தில் ஒரு தனியழகு. முக்கியமாக நகைச்சுவை அழகு. சில சமயம் அவர் பலவிதமாகச் சைகை காட்டியும் புரிந்து கொள்ளாமல் நாம் பொறுமை இழப்பதும், அதில் அவருமே பொறுமை இழப்பதுங்கூட ஒருவிதமான அழகாக இருக்கும். ஆம், அடித்துப் போட்ட சிலைபோல் மௌனமாக இல்லாததோடு, பொறுமையை இழக்குமளவுக்கு புலனோட்டம் உள்ள ஒன்றாகக்கூட மௌனம் அவரிடம் விளையாடியதுண்டு, அல்லது மௌனத்திடம் அவர் விளையாடியதுண்டு!

இந்நகைச்சுவை அழகுக்கு அவர் தையம்மாவிடம் மௌனமாக 'சம்பாஷித்த'தையே உதாரணம் காட்டலாம். ஆயின் இங்கு அசல் அபிநயம் என்று சொல்வதற்கில்லாமல் ஸ்தூலமான கல், மஞ்சள், கடிகாரம், தமது தலை–வயிறு ஆகியவற்றைக் காட்டியே விஷயம் தெரிவித்தார். அப்படியின்றி அபிநயமாகவே முகர்ஜியை மூக்கறுஜியாக அவர் காட்டியதையும் கண்டோம்.

இதேபோல, கண்ணன் என்ற பெயருள்ளவரைத் தெரிவிக்கக் கண்களைத் தொட்டுக் காட்டுவார். கணபதி–கணேசன் போன்ற விநாயகப் பெயர்க்காரர்களைத் தும்பிக்கை அபிநயத்தால் புரியவைப்பார். மீனாக்ஷிப் பெயர் பெண்மணிக்கு அவர் சுகபாணியாகக் காட்டும் அந்த அபிநயத்தின் ஸூகம், ஆஹா! வீரராகவன் என்ற ஒருவரைத் தெரிவிக்க அவர் விசையாக வில்லெய்து காட்டிய காம்பீர்யம் உண்டே, அடேயப்பா!

@Page 197

பல்லாண்டுகள் அவருக்கு அணுக்கமாக இருந்த ஆஞ்ஜநேய ஸ்வாமிகளைக் குறிப்பிடத் தமக்குப் பின்புறத்திலிருந்து வால் புறப்பட்டு வளைந்து தலைக்கு மேல் வருவதாக, ரப்பரில் செய்தது போன்ற தமது குழைந்த அவயங்களால் சடுதியில்

காட்டும்போது நம்மால் சிரித்துக் களிக்காதிருக்க முடியாது.

வயிறு வலிக்கச் சிரிக்கச் செய்த ஒன்று. ஒரு பக்தல் வந்தார். ஸ்ரீசரணர் 'தும்பிக்கை அபிநயம்' பிடித்தார். ஆனால் வந்தவருக்கோ விநாயகப் பெயர் இல்லை. அவர் ஸுப்ரமண்யப் பெயர்க்காரர். ஏன் பெரியவாள் இப்படி அபிநயித்தார் என்ற கேள்வி நமக்கு முழுசாக எழுமுன்பே பாலஸரஸ்வதியையும் விஞ்சும் கலைநயத்துடன் ஓர் அபிநயம்! அக் கையசைவில் ஆனையைப் 'பின்னே' தள்ளினார். 'முன்னே' என்பதை அவ்வாறே மின்வெட்டாகப் பேசுகிற இன்னோர் அபிநயம். உடனே கையில் மணி பிடித்து அடிப்பது போன்ற பாவனை காட்டினார்.

அப்போது வந்திருந்த அப் பக்தரை மணி என்றே கூப்பிடுவது.

அவர் ஆனைமுகனின் பெயர்களில் ஒன்றைக் ரொண்ட ஒரு பெரிய மனிதரின் ஊழியர். அப் பெரிய மனிதருடனேயே வருவார். முதலில் இவர் வந்து தமது யஜமானர் வருகையைப் பெரியவாளுக்குத் தெரிவிக்க வேண்டும் ; அப்புறமே அந்த யஜமானர் வருவார். அப்படியொரு பந்தா.

இன்றும் அப்படித்தான் நடந்தது.

அதைத்தான் 'ஆனை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே!' என்ற பழமொழியை அபிநயித்து நம் கண்முன்னே காட்டியிருக்கிறார் இப் பரதமுனி!

இன்னொன்று : ஓர் ஊரை அபிநயத்தால் தெரிவிக்கிறார். எப்படி ? மாவுருண்டையைக் கையால் வட்டமாகத்



தட்டி, 'பும்' என்று பொறித்தெடுத்து! என்ன கிறுகிறு வேகத்தில் பூரி தயாரித்துவிட்டார்! ஜகந்நாதபுரியை நாம் பூரி என்றுதானே சொல்கிறோம்! அவ்வூரைத்தான் தெரிவித்தார்!

ஸ்ரீசரணரின் அபிநயத்தில் வீணை சொகுஸாக இசை பாடும். டமாரம் டமால் டமால் என முழங்கும். மான் மருண்டு ஓடும். புலி சீறிப் பாயும்.

ஒரு முறை அவர், அச்வமேத யஜ்ஞ சாலையில் அனைத்து வன விலங்குகளும் கொண்டு வந்து கட்டப்பட்டிருப்பதாக வாயால் சொல்லி, உடன் அபிநயத்தால் ஒவ்வொரு மிருகத்தையும் கண் முன் கொண்டு வந்து காட்டினார். அப்போது புலி–சிங்கங்களைக் 'காட்டி'விட்டு, "உர் உர்" என்று அறையே அதிரும்படி உறுமியதுண்டே! அக் குழந்தையெழில் இன்றும் ஜீவ சித்ரமாகக் கண்முன் நின்று சித்தத்தைச் சொக்க வைக்கிறது! பாருங்கள், ஒரு சாந்த முனியின் சங்கத்தினால் சிங்கத்தின் கர்ஜனையும் சொக்கவைக்கும் குழந்தை மழலையாக இனிக்கிறது!

எவ்வளவோ அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த விநோத மௌன மதுரத்திற்குத் திருஷ்டாந்தங்களாக!

புனிதம் செறிந்த, சின்னஞ்சிறு சைகைப் பேச்சொன்றுடன் இப்படலத்தை முடிக்கலாம். அபிநய படலத்தை ஆடவல்லானுடன்தானே முடிக்கவேண்டும்?

மஹாப் பிரதோஷ மாலையொன்றில் ஸ்ரீசரணாள் நீராடி, நீறு பூசி, மேனி மறைய ருத்திராக்ஷ மாலைகள் பூண்டு சிவப் பழமாக சிவ ரஸம் பெருகவிட்டுக் கொண்டிருக்கிறார்.

புனிதத்தைப் பின்னரும் கூட்டுவதேபோல் சிதம்பரத்திலிருந்து தீக்ஷிதர் பிரஸாதம் கொண்டு வந்து ஸமர்ப்பிக்கிறார்.

@Page 199

கூத்தப்பிரான் பிரஸாதத்தை கூத்தறியா உள்மோன நிலையில், அம் மோனம் கலையாமலே அதில் கலந்த ஞான பக்தியின் உருக்கத்துடன் ஸ்ரீசரணர் சிரஸில் சூட்டிக்கொள்கிறார். பிறகு நடராஜ–சிவகாமியரின் விபூதி–குங்குமங்களை அணிகிறார்.

புனிதத்தை மேலும் ஒரு படி உயர்த்துவதே போல அப்போது வந்த வைதிகோத்தம கோஷ்டியினர் 'ருத்ர க்ரமம்' சொல்லலாமா என விண்ணப்பிக்கின்றனர்.

மாமறையின் மந்திர வாசகங்களைப் பலவிதங்களில் கோத்து அடுக்கி ஆனந்த கம்பீரம் சூழலில் ததும்புமாறு பாராயணம் செய்வதில் 'க்ரமம்' என்பது ஒரு விதம்.

அவர்கள் கேட்டதற்கு விடை கூறவேண்டிய பெரியவாள் மௌனமாக ஸ்ரீமந் நடராஜ மூர்த்தியின் பிரஸாதத்தைத் துழாவுகிறார். அதிலிருந்து அவர் எடுத்து அவர்களுக்கு முன் நீட்டிக் காட்டியது... ஏதோ நீளமான துரும்பு போலல்லவோ காண்கிறது ?

துரும்பல்ல. வெட்டிவேர் இழையில் ஒன்றுதான் அது.

வேதிய சிரேஷ்டரொருவர் உடனே இச் சிறு அபிநயம் தெரிவித்த பெரிய விஷயத்தைப் புரிந்து கொள்கிறார். முகமெலாம் ஆனந்தம் பரவ அதனை மற்றோருக்கும் தெரிவிக்கிறார்.

அவ்வளவுதான்! அவ்விடத்தைக் கைலாஸமாக உறுதிப்படுத்திக்கொடுக்கும் ஸ்ரீருத்ர பாராயணம், அதன் பலவிதப் பாட முறைகளில் ஒன்றில் கோஷமாகத் தொடங்குகிறது.

அம்முறைக்கு 'ஜடா', ஜடை என்று பெயர்.

அவர்கள் கேட்டுக் கொண்டது 'க்ரமம்'. அதைவிடவும் சொற்களை அதிவிசேஷமாக அடுக்கிக்

@Page 200

கோத்து ஆனந்த கம்பீரத்தைக் கைலாஸ உச்சிக்கு ஏற்றுவது 'ஜடை'.

சரி, வெட்டிவேருக்கும் அதற்கும் என்ன சம்பந்தம் ?

தில்லையம்பலவனுக்கு வெட்டிவேர் கற்றையைத்தான் செஞ்சடைபோல் சூட்டி அலங்கரிப்பார்கள் அதிலிருந்து ஸ்ரீசரணருக்கு வந்த பிரஸாதந்தான் அவர் காட்டிய அந்த இழை!

இனி சொல்லின் செல்வராகவே – அதன் உட்சாரமாக, சிந்தனைச் செல்வராகவும் – அவரது மாதுரியத்தைக் கொஞ்சம் ருசிப்போம். ஒரு செல்வத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வது போல் தாம் சொற் செல்வத்தைச் செய்யாமல், வளவள என்று ஏகமாகச் செலவழிப்பவர் என்று அவர் குறை சொல்லிக் கொண்டாரே, அது சற்றும் சரியில்லை என்பதை இவற்றில் பல நிரூபிக்கும்.

ஒரு தினம் குருதேவர் சில அடியரிடம் ஆத்யாத்மிக விஷயங்கள் அத்யத்புதமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது சொல்கிறார் : "ஸதா ஸர்வதா இந்த்ரியங்களுக்கு அகப்படுகிற ஸமாசாரங்களிலேயே நாம் மனஸைச் செலுத்தி அதுகளின் அநுபோகத்தையே ஸம்பாதித்துக் கொண்டு போகிறோம். இப்படி இந்த்ரியங்களுக்கு அகப்படுவதாகவும் இந்த லோகத்தோடு மட்டுமே ஸம்பந்தப்பட்டதாகவுமிருக்கிற சமாசாரங்களுக்குத்தான் 'விஷயம்' என்று தத்வ சாஸ்திரத்தில் பெயர். அந்த 'விஷய'ங்களை அநுபவிக்கிறதை விஷயாநுபோகம் என்பார்கள். இந்த விஷய அநுபோகங்கள் நமக்குள்ளே

@Page 201

மனஸிலே விஷ வேர் விட்டுக் கொண்டு ஊன்றிப் போய் கப்பும் கிளையுமாகப் படர்ந்து விடுகின்றன. அதனால் நித்ய ஸுகமாக இல்லாமல், ஏதோ துளி ஸுகம் என்றால் மூட்டை துக்கமாக இருக்கிற இந்த்ரிய அநுபோகங்கள் மட்டுமே நமக்குத் தெரிந்தவையாயிருக்கின்றன. அதிலேயே போய்ப் போய் விழுந்து அநுபோகித்துக் கொண்டிருக்கணும் என்ற ஆசையையும் வெறியாக அவை உண்டாக்கிவிடுவதால், அதற்கானதையே செய்வதில் மனஸ் நம்மை க்ஷணம் சாந்தி காண விடாமல் பிய்த்துப் பிடுங்கினபடி இருக்கிறது. நின்று நிலைத்த ஸுகம் என்ன, துக்கக் கலப்பேயில்லாத ஸுகம் என்ன, பிக்கல்–பிடுங்கல் இல்லாத சாந்தி என்ன – (எதுவும்) நமக்குத் தெரியாமலே இது பண்ணி விடுகிறது.

"இந்த 'விஷய'த்துக்கு மாற்று மருந்து, antidote, என்ன என்றால், இப்போது ஓயாமல் இந்த்ரிய ஸம்பந்தமான லோக ஸமாசாரங்களிலேயே விட்டுக் கொண்டிருக்கிற மனஸை இழுத்து இழுத்துப் பிடித்து ஆத்ம ஸம்பந்தமான ஸமாசாரங்களில் செலுத்துகிறதுதான். அப்படி இடைவிடாமல் ஈடுபட்டு ஈடுபட்டு, விஷ வேரை அறுத்து, நம்முடைய பிறவிக்கே வேரறுக்கிற பேரின்பப் பயிர் நமக்குள்ளே வேர் விடப் பண்ண வேண்டும்."

இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கையில் ஸ்ரீ மடத்தின் ஊழியரொருவர்

அங்கு வந்து தம் பாட்டுக்கு நிறைய ஊதுவத்திகளை ஏற்றி வைத்துவிட்டுத் தம் பாட்டுக்குப் போய்விட்டார். அவ்விடத்திற்கு அருகில் வெளியே ஏதோ குப்பை கூளங்களைப் போட்டிருந்தது. உள்ளேயும் அந்த துர்கந்தம் சற்று வீசிக் கொண்டிருந்ததால்தான் அவர் அப்படிச் செய்தது.

பெரியவாளின் திருமுகத்தில் மோஹனமான ஒரு சிரிப்பு நெளிந்தது. தொடர்ந்தார் : "ரொம்ப நேரமாத்

@Page 202

தொண தொணத்துட்டோம்–ன்னு இப்போ சட்னு விஷயத்தை 'ஷார்ட்–கட்'ல முடிக்கப் பாத்தேன். அதுல நான் விட்டுட்டதைத்தான்... (ஸ்ரீ மடத்து ஊழியர்) ஊதுபத்தி ஏத்தி வெச்சுக்காட்டி 'டெமான்ஸ்ட்ரேட்' பண்ணிப்பிட்டான்.

"விட்டுட்ட ஸங்கதி என்னன்னா, விஷயாநுபோகம் என்கிறது அதே விஷயங்களை நாம் மறுபடி மறுபடி தேடிப் போய் ஸம்பாதிச்சுக்கணும்னு ஆசை வெறியைக் கிளறிடுறது–ன்னேனே அதைப் பத்தினதுதான். அநுபோகம்னு 'ஆக்சுவ'லா ஒரு வஸ்துவிலிருந்து ஒரு ஸமயத்துல மட்டும் பெறுகிற ஒண்ணு அந்த ஸமயத்தோட முடிஞ்சு போனாலும் மானஸிகமாக அதைப் பத்தின நினைவை உண்டாக்கிவிட்டே போறது. அந்த நினைவு போகவே மாட்டேன்னு உள்ளேயிருந்து கொண்டேயிருக்கிறது. இதை 'விஷய வாஸனை'ன்னு சொல்லுவா. வெறுமே 'வாஸனை'–ன்னும் சொல்லுவா. 'பெருங்காயம் வெச்ச பாண்டம்'னு வசனம். பெருங்காயம் என்ன பண்ணும்னா அதை வெச்சிருந்த டப்பா, அஞ்சலை(றை)ப் பெட்டி, ஏதோ ஒண்ணு, அதுலேந்து காலி பண்ணினவிட்டும், 'ஆக்சுவ'லா அது அங்கே இல்லாவிட்டாலும் இருக்கிறாப்பலயே அதனோட நெடியை வீசிக்கிண்டிருக்கும். பாண்டத்தை அலம்பி, கிலம்பிப் பண்ணினாலும் வேசில நெடி போகாது. அதுதான் 'பெருங்காயம் வெச்ச பாண்டம்'! அந்த மாதிரி விஷயத்தை நேரிலே அநுபவிக்காட்டாலும், அந்த அநுபோகத்தோட நெடி மனஸுக்குள்ளே தேங்கி வேர் விட்டுப் படர்ந்துண்டு இருக்கிறதைத்தான் – வஸ்து போன விட்டும் இருந்துண்டிருக்கற அதனோட நெடியைத்தான் 'வாஸனை', 'வாஸனை' என்கிறது....

"வாஸனை, நாத்தம் (நாற்றம்)னு ரெண்டு வார்த்தை சொல்றோம். வாஸனை – ஸம்ஸ்க்ருதம் ; நாத்தம் – தமிழ்.

@Page 203

ரெண்டுக்கும் ஸரியான அர்த்தம் என்னன்னா மூக்குக்கு ஆப்படற (அகப்படுகிற) ஒரு பொதுப்படை உணர்ச்சிதான். நல்லது, கெட்டது வித்யாஸமில்லாம, பொதுப்படையா 'ஸ்மெல்'—ங்கிறதுதான். ஆனாலும் நடைமுறைல எப்படி அர்த்தம் பண்ணிக்கிறோம்—னா 'வாஸனை'—ன்னா நன்னா மணந்துண்டிருக்கிற ஸுகந்தம், 'நாத்தம்'னா (மூக்கைப் பிடித்துக் கொள்கிறார். அதாவது அப்படிச் செய்யவைக்கும் துர்கந்தம் என்று தெரிவிக்கிறார்)— இந்த மாதிரி அர்த்தம் பண்ணிக்கறோம்! பேச்சு வழக்குலே இப்படி இருக்கு—ன்னா இலக்கிய ரீதியிலேயும் வேதாந்த பாஷையிலேயும் நேர்மாறா இருக்கு. இலக்கியத்துல நாத்தம்—னா ஸுகந்தந்தான்! 'பொன்மலர் நாற்றமுடைத்து'—ன்னு இருக்கே! அதே மாதிரி வேதாந்த சாஸ்த்ரங்களில் வாஸனை—ன்னா துர்வாஸனைதான்! 'விஷய வாஸனை'—ங்கிறபோது அப்படித்தான் இருக்கு. விஷயவாஸனை கெட்டதுதானே ? நல்லதே இல்லையே!

"விஷய வாஸனைதான் கெட்டதுக்கு மூலமா, ஒரு தரம் ஸம்பாதிச்சுண்ட விஷயாநுபோகத்தையே நாம மறுபடி மறுபடி ஸம்பாதிச்சுக்கணும்னு நம்மைக் கௌறி விட்டு குட்டிச் சுவராக்கறது. நான் 'ஷார்ட்—கட்'ல இந்த வாஸனை ஸங்கதியை விட்டுட்டேன். (சிரித்து) நெறய்ய 'ஸங்கதி' போட்டுப் பாடற கீர்த்தனமாயிருந்தாலும் 'டயம்' போறல்லேன்னா பாடறவா ஒண்ணு ரெண்டை விட்டுட்டுப் பாடற மாதிரி!

"விட்டேனா பார்"—னு அதுதான் இந்த ஊதுவத்தியா வந்து ஒக்காந்துண்டு அதைப் பத்திச் சொல்லப் பண்ணியிருக்கு.

"இதுவரை இங்கே என்னமோ துர்வாடை வீசிக்கிண்டிருந்தது. இப்ப அது இல்லே. எப்படிப் போச்சு—ன்னா இந்த வத்தியோட ஸுகந்தத்துலதான் அது

@Page 204

அடிபட்டுப்போயிடுத்து. அந்த மாதிரி 'வாஸனா க்ஷயம்' — வாஸனையின் அழிவு — என்று விசேஷமாகச் சொல்ற விஷயாநுபோக நெடிங்கிற உத்பாத மூலம் மனஸை விட்டு அழிஞ்சு போகணும்னா... 'மூலம்'னா வேர் ; அந்த வேரை அறுக்கணும்னா.... தெய்வ விஷயமா, ஆத்ம விஷயமா மனஸைச் செலுத்திச் செலுத்தி அதனோட ஸுகந்தத்தை மனஸிலே ஏத்திக்கறதொண்ணுதான் வழி. இந்த வத்தி அதுக்குத்தான் டெமான்ஸ்ட்ரேஷன் கைங்கர்யம் பண்றது!

"இங்கே வாடை வீசித்துன்னேன். 'வாடை'ங்கறதும் பொதுப்படையா 'ஸ்மெல்'னு அர்த்தம் குடுக்கற வார்த்தைதான். ஆனா அதையும் கெட்ட

'ஸ்மெல்'ங்கிற மாதிரியேதான் ஜெனரலா நினைக்கிறோம். இதுக்கு ஒரு காரணம் உண்டு. நாத்தம்—னா ஏன் துர்நாத்தம்னும், வாஸனை—ன்னா ஏன் நல்ல வாஸனை—ன்னும் எடுத்துக்கறோங்கறதுக்குக் காரணம் சொல்லத் தெரியலை. காரணம் பாக்கப் போனா, எங்கே ஸம்ஸ்க்ருதம் 'வெர்ஸஸ்' தமிழ், அதுலேந்து ப்ராமணாள் 'வெர்ஸஸ்' அப்ராமணாள், 'ஆர்யன் வெர்ஸஸ் ட்ராவிடியன்'—ங்கிற வரையில் கட்சி—ப்ரதி கட்சி கட்டிண்டு சண்டை வந்துடுமோன்னு இருக்கு! இப்ப நான் இப்படி சொன்னதே வெளில போனா (பரவினால்) அந்த மாதிரி ஏதாவது கௌம்பப் போறதே—ன்னு இருக்கு!.... 'வாடை'ன்னா ஏன் துர்வாடை—னு நினைக்கறோம் – கறதுக்குக் காரணம் சொல்றேன். 'வாடை' என்கிறது 'வட', 'வடதிசை' என்கிறதோடு ஸம்பந்தப்பட்டது. வடக்கேந்து வர காத்து வாடை. வடதிசைக் காத்து எப்ப வரும்னா பெரும்பாலும் நம்மோட – அதாவது இந்த தமிழ் தேசத்தோட – மழைக்காலமாயிருக்கிற அப்பிசி, கார்த்திகை மாதிரியான மாஸங்களிலதான். அப்ப மழையில் குப்பை கூளங்கள் எங்கே பார்த்தாலும் அழுகிப் போயிருக்குமானதுனால அந்தக் காத்துல அந்த துர்வாஸனை கலந்து வரும். அதனாலதான் 'வாடை'ன்னாலே

@Page 205

கெட்ட வாஸனை—ன்னு ஆயிடுத்து. 'தென்றல்'—ங்கிறது 'தென்'னுதானே ஆரம்பிக்கிறது? தென்றல்—னா தென் திசையிலேந்து வர காத்து, அது கோடை காலத்துலதான் வரும். அப்ப பூமியும் பூமி மேலே கெடக்கற எல்லாமும் மொரமொரக்க வத்திப் போயிருக்குமானதுனால அழுகல்—ங்கிறது இருக்காது. அதனால் அந்தக் காத்துலயும் அழுகல் நெடி கலக்காது. தென் திசைக் கோடியில இருக்கற மலய பர்வதத்தின் வழியா அந்தக் காத்து வருமானதால அங்கே வளர்ந்திருக்கிற சந்தன மரங்களோட வாஸனையை ஏத்திண்டு வரதுன்னு கவிகள் அலங்காரமா சொல்லுவா. சந்தனமானதால, வாஸனையோட குளிர்ச்சியும் இருக்கும்....

"இங்கே துர்வாடை வீசித்தே. அதைப் போகப் பண்றதுக்கு நேரே அதைப் போக்கி, அமுக்கி, கிமுக்கி, ஏதாவது பண்ண முடிஞ்சிருக்குமா என்ன? ஒண்ணும் பண்ணிக்க முடியாதுதான்! அப்ப அந்த நாத்தத்துக்கு 'ஆப்போஸிட்'டா வத்தியை ஏத்தி வெச்சுட்டதுல, அது (சிரித்து) நாத்தத்துக்கு வந்தி வெச்சுடுத்து....

" 'வத்தி வச்சுடறது'—ங்கிறது ஊது வத்தியை வெச்சு ஏற்பட்டதில்லே! 'வர்த்தனம்'னா உருள்றது. உருட்டிப் பண்ற எதுவும் 'வர்த்தி'. அதுதான் 'வத்தி'—ன்னு வந்துடுத்து. ஒரு குச்சியைச் சுத்தி வாஸனைக் கலவையை உருட்டிப் பண்றது 'ஊதுவர்த்தி'. அதோட நுனியில் வைக்கற பொறியைக் காத்து ஊதிவிட்டுத்தானே வாஸனை பரவறது! அதனால 'ஊது'வர்த்தி. 'வர்த்தி'க்கே இன்னொரு அர்த்தம் 'திரி'.

திரியிலேயும் நுனியில நெருப்பு நின்று நிதானமா ஊதுவர்த்தியாட்டமே எரிஞ்சுக்கிண்டிருக்கு. ஒருவேளை அந்த வர்த்தி (திரி எனும் வர்த்தி) மாதிரியே இதுலயும் நுனியில பொறி நின்னு எரியறதாலதான் ஊதுவத்திக்கும் அப்படிப் பேர் வந்துதோ, என்னவோ?.... 'வத்தி வைக்கற'தை விட்டுட்டேனே! இங்கே 'வத்தி'ங்கிறது,

@Page 206

பட்டாசுல திரி இருக்கோன்னோ? அந்தத் திரியைச் சொல்றது. அந்த வத்தில துளி பொறி வெச்சுட்டா டமால்னு வெடிக்கற மாதிரி, ஏதோ ஒரு ஸமாசாரத்தைத் தந்த்ரமா துளி சொல்லியே விபரீதமா ஒரு ரிஸல்ட் வெடிக்கும்படிப் பண்றதுதான் 'வத்தி வெக்கறது'!.....

"என்ன பண்ணி எப்படிப் போக்கடிக்கறது–ன்னு தெரியாத துர்வாடை வீசிக்கிண்டிருந்தப்ப அதையே நேரே 'டாக்கிள்' பண்ணி குஸ்தி, கிஸ்தி போடாம, ஒரு ஊதுவத்தியை ஏத்தி வெச்சா தன்னால அது பிடிச்சுத் தள்ளின மாதிரி ஓடியே போயிடறது! அப்படித்தான் விஷய வாஸனையையும் நேரா அமுக்கி நெரிச்சு, இல்லாட்டா அடிச்சுத் தொரத்தி, இல்லாமப் பண்ணிக்க முடியாது. அப்படி ஏதாவது ப்ரயத்னம் பண்ணினா அது இன்னும் திமிறிண்டு இன்னும் பலமா 'மைன்டை' பிடிச்சுண்டு ஹானி பண்ணும். அதுவே, நேரே அதோட வம்புக்குப் போகாம, இஹ லோகத்திலேந்து பரலோகத்துக்குத் திருப்பற ஸத்விஷயம் எதுவோ ஒண்ணுலே – நாம ஜபம், பஜனை, உபந்யாஸம் கேக்கறது.... இன்னும் எத்தனையோ இல்லையா, த்யானம், யோகம், பூஜை–ன்னெல்லாம்? அதுல எதிலோ ஒண்ணுலே மைன்டை டைவர்ட் பண்ணிட்டா தன்னால விஷய வாஸனையின் பேரில ஓடறதை விட்டுட்டு ஸௌக்யமா இன்னூணைப் பிடிச்சுண்டதா ஆயிடும். இதைத்தான் 'யோக ஸூத்ர'த்துல 'ப்ரதிபக்ஷ பாவனை'–ன்னு சொல்லியிருக்கு. தப்பா ஒரு எண்ணம் வரச்சே அதுக்கு நேர் எதிரா இருக்கற எண்ணத்தை உண்டாக்கிறதுதான் ப்ரதிபக்ஷ பாவனை. இதுல ரெண்டு தினுஸா ஆதாயம். கெட்டது போச்சுங்கறது ஒண்ணு. அப்பறம், கெட்டது போனதுனால ஏதோ வெறிச்சுனு vaccum–ஆயிடாம, அதன் எடத்தில ஒரு நல்லது வந்து சேர்ந்திருக்கு–ங்கிறது ரெண்டாவது ஆதாயம்."

@Page 207

எப்பேர்ப்பட்ட சிந்தனை வளமிக்க அறிவு! ஓர் ஊதுவர்த்தியைக் கொண்டு வேதாந்த விளக்கத்திற்கு மணமூட்டி விடுகிறார்! ஒன்றைத் தொட்டு ஒன்றாக எத்தனை விஷயங்கள்! எப்பேர்ப்பட்ட நகைச்சுவை நகாசு! அச்சிந்தனைச் செல்வம்

சொற்செல்வமாக எத்தனை எளிமையுடன், தெளிவுடன் சிக்கலான கருத்துக்களையும் கோது களைந்து கொடுத்துவிடுகிறது ?

இப்படி சர்வ சகஜமாக, அன்றன்றும் அவர் செய்த ஸம்பாஷணையில் எத்தனை நடந்திருக்கிறது ?

இன்னும் எடுத்துக்காட்டுகள் பார்ப்போம். குழந்தையின் விளையாட்டுப் பொருள்களிலும் குருநாதர் வேதாந்தப் பொருள்களைக் காட்டியதில் தொடங்கலாம்.

ஸ்ரீமடத்தில் நெடு நேரம் செலவிடும்படி நேரலாம் ; அப்போது குழந்தை அலுப்புறாமல் விளையாடிக் கொண்டிருக்கட்டுமென ஒரு பெற்றோர் அதன் எல்லா விளையாட்டு பொருட்களையும் உடன் கொண்டு சென்றிருந்தனர்.

ஸ்ரீ பெரியவாளின் த்ருஷ்டி படுகிற தூரத்தில் அதுவும் பலவிதமாக விளையாடிக் களித்துக்கொண்டிருந்தது.

தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையை வைத்துக் கொண்டு அது அப்பொம்மையை இந்த பக்கம் அந்தப் பக்கம் அமுக்கி, அது அமுக்கினபடி அமுங்கி, அமுங்கின வேகத்திலேயே நிமிரும் வேடிக்கையைக் கண்டு கை கொட்டிச் சிரித்தவாறிருந்தது.

மாபெரியோனும் குழந்தையாய்ச் சிரித்தான். ஞானியர் பற்றிய மாதத்துவமொன்று ஞானத்தினால் என்றும் குழந்தையாயிருந்த ஸ்ரீசரணரின் அதரத்திலிருந்து உதிர்ந்தது. "இப்படித்தான் ஞானி! எவர் எந்த ஸ்டேஜிலிருந்து கொண்டு அவனைப் பிரார்த்தித்தாலும்,



அவனுடைய எல்லையில்லாத அநுதாபத்தினால் மாயையிலேயே உள்ள அவர்கள் பக்கம் சரிந்து சாய்ந்து அவர்களுடைய முறையீடு தன்னை அவர்கள் நிலைக்கே பிடித்து அமுக்கின மாதிரி அதை 'ஷேர்' பண்ணிக்கொள்வான். ஆனால் அந்தப் பிரார்த்தனை முடிந்ததோ இல்லையோ தன்னுடைய ஞான நிலையிலே, இந்தப் பக்கம் – அந்தப் பக்கம் சாயாமல் நேராக, நடுநிலையில், ஸமநிலையில், அசலமாக நிற்பான். அவன் மாயையில் சாய்கிறது அவர்களுக்காக, அவர்கள் கொடுக்கிற ப்ரெஷருக்காக அவன் பண்ணும் காருண்ய லீலைதான். லீலை என்றால் விளையாட்டுக்காகப் பண்ணுகிறது. அதாவது அது நிஜமில்லை. அப்படி அவன்

சாய்கிறது (சிரித்து) குழந்தை பாணியிலேயே சொல்கிறேன் – உள உளாக்கட்டைக்குத்தான்!...."

('உள உளாக்கட்டை'க்கு என்பதே தத்வார்த்தம் கொண்டதுதான். நிஜமாக உள்ள ஒன்றை மறைத்து மாய விளையாட்டு செய்வதைத் தான் அது குறிக்கிறது என்று நூலாசிரியனின் தந்தையார் கூறுவார், எப்படி ? 'உள இலவாக் காட்டி' அல்லது 'இல உளவாக் காட்டி' என்பதே அப்படி ஆயிற்று என்பார். மாயா சக்தி என்ன செய்கிறது ? உள்ள ஒன்றேயான பிரம்மத்தை இல்லாததாகக் காட்டுகிறது. – அதாவது நமது அநுபவத்துக்கு வராததாக ஆக்குகிறது. இதுவே 'உள இலவாக் காட்டி'. அதோடு ப்ரம்மத்தின் இடத்தில் உண்மையில் இல்லாத ஜீவ–ஜட உலகையே உள்ளதாகக் காட்டுகிறது. இது 'இல உளவாக் காட்டல்'. விளக்கம் கண்ட தந்தையார் அதிகார தோரணையுள்ளவரேயாயினும் ஸ்ரீசரணாளிடமோ ஒரே அடக்கமாக அடங்கி, அத்தியாவசியத்திற்கன்றி எதுவும் பேசமாட்டார். நூலாசிரியன்தான் இவ் விளக்கத்தை ஸ்ரீசரணர் செவிக்குச் சேர்த்தான். அவர் ஏகமாக ஸந்தோஷித்து, "அப்பா சொன்னாரா ? அப்பா சொன்னாரா ?" என வியந்தார்.)

@Page 209

மாயையில் ஞானி சாய்வது (போலிருப்பது) உள உளாக்கட்டைக்குப் பிறரது அழுத்தத்திற்கு இடம் கொடுத்து (கொடுப்பது போல) அவன் செய்வதுதானெனக் கூறிய அநுதாபக் கருணாமூர்த்தமான நமது ஞானி தொடர்ந்து, "பிறத்தியாருக்காக இல்லாமல், தன்னில் தானாக அவன் இருக்கிறபோது ? இந்தக் குழந்தை பொம்மை மேலிருந்து கையை எடுத்தவுடனே என்ன ஆகிறது ? பட்டென்று அது நிமிர்ந்து நின்று ஆடாமல் அசையாமல்தானே இருக்கிறது ? எந்த அமுத்தலும் இல்லாவிட்டால் அது அப்படியேதானே இருக்கிறது ? அப்படி ஆடாமல் அசையாமல் ஸர்வகாலமும் இருப்பதுதான் ஞானியுடைய நிஜமான நிலை.

"அடியிலே நல்ல கனம், மேலே லேசு என்று இருக்கும்படிப் பொம்மையைப் பண்ணியிருப்பதால்தான் அது இப்படிப் பண்ணுவது. அப்படித்தான் ஹ்ருதயத்தில் அந்தராத்மாநுபவம் கனமாக இருக்கிற ஞானியும் அஹங்காரம் என்கிற தலைக்கனம் இல்லாததால் விளையாட்டுக் காட்டுகிறான்! எல்லாமே பொய், அல்லது எல்லாமும் நிஜமான பிரம்மமே என்று அவன் பார்ப்பதால் யார் எது சொன்னாலும் 'ஆமாம் ஆமாம்' என்று ஆமாம் பூசாரியாகத் தலையாட்டுகிறான்!" என்று கூறி முடித்தார்.

அப்புறம் அக்குழந்தை கிலுகிலுப்பை ஆட்டிக் கிளுகிளுத்தது.

"ஈச்வரன் மாயா சேஷ்டிதமாக இப்படித்தான் செய்கிறான். வெளியிலே ஒரு 'கவரிங்', உள்ளே சின்னச் சின்னதாய் உருண்டைகள் கொண்டதாகக் கிலுகிலுப்பை இருக்கிறது. மாயாலோகக் கவரிங்குக்குள் ஜீவலோகத்தைச் சேர்ந்த நம்மையெல்லாம் இப்படியே அவன் போட்டு வைத்திருக்கிறான். ஆட்டினால் கிலுகிலுப்பை உருண்டைகள் குலுகுலு என்று சப்திக்கிறது போல நம்மை

@Page 210

யெல்லாம் ஓயாமல் சளசளவென்று பேசிக் கொண்டும், அந்த உருண்டைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டும் ஒன்று சேர்த்துக் கொண்டும் இருக்கிற மாதிரி நாம் ஒருவரோடொருவர் மனோ வேகத்தில் மோதிக் கொண்டும் உறவு கொண்டாடி ஒட்டிக்கொண்டும் இருக்கும்படியாகவும் ஆட்டிக் கொண்டிருக்கிறான். ஸித்தர்கள் அப்படித்தான் உதாரணம் காட்டியிருக்கிறார்கள்" என்றார்.

கிலுகிலுப்பையைத் தூக்கிப் போட்டுவிட்டுப் பாப்பா பலூன் பறக்கவிட்டு, ஸந்தோஷத்தில் பலூனைவிட உப்பி பலூனுக்கு மேலே பறந்தது! பாப்பாவின் களிப்பு நம் தாத்தாவுக்குக் களியூட்டியது!

பாரிஷதரிடம் சொன்னார் : "பாரு, கொழந்தைக்கு எத்தனை ஸந்தோஷம்னு! பலூன்ல காத்துள்ள மட்டுந்தான் அந்த ஸந்தோஷம். காத்து போச்சோ... இன்னும் கொஞ்ச நேரத்துல போயிடும்... அப்ப, அது சுருங்கி 'பட்'டுனு வெடிச்சு விழறச்சே இத்தனை ஸந்தோஷத்தையும் சேத்து துக்கமாப் போய் அது அழ ஆரம்பிச்சுடும்.

" 'காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையனா!'—ன்னு ஸித்தாள் பாடினா. ச்வாஸக் காத்து இருக்கற மட்டுமே, ஆடி ஓடித் திரியறதுதான் இந்த மநுஷ காயம். அது ஓடி ஆடற மட்டும் பந்து ஜனங்களுக்கு ஸந்தோஷம். அந்தக் காத்துப் போனா ஆள் 'அவுட்'தான். அப்ப அவாளுக்கும் ஸந்தோஷம் முழுக்கப் போய் ஒரே அழுகையா ப்ரலாபிக்கிறா!"

பாப்பாவிடம் ஓர் அநுதாபக் கருணை பிறந்தது போல் தாத்தா, "தனிய்...யா வெளயாடறது. கூட வெளயாட யாருமில்லாம அது பாட்டுக்கு வெளயாடிண்டிருக்கு...." என்றார். ஏதோ ஒரு சிந்தனை உள்ளே துள்ள, அதன் மகிழ்ச்சி மலர்ச்சியுடன் மேலே சொல்லலானார். "கூட வெளயாட்டுக்கு ஸகாக்கள் இருந்தும் அவா தங்களை ஒரு

@Page 211

கொழந்தை பாக்க முடியாம வேடிக்கை பண்ணுகிற வெளயாட்டும் இருக்கு!

கண்ணாமூச்சியைத்தான் சொல்றேன். அப்ப ஒரு கொழந்தையோட வெளயாட்டு ஸகாக்கள் அதன் கண்ணைத் துணியால் கட்டிப்பிட்டு ஒளிஞ்சுக்கறா. அது கண்கட்டோடேயே அவாளைத் தேடித் தொட்டுப் பிடிச்சுட்டா ஜயிச்சுடுத்துன்னு அர்த்தம். (அப்போது) கட்டை அவுத்துடறா! ஈச்வரனும் இப்படித்தான் நம்மையெல்லாம் வெச்சுக் கண்ணாமூச்சி ஆடிண்டிருக்கான். மாயையினாலே நம்ம கண்ணைக் கட்டி லோகத்துல திண்டாட விட்டிருக்கான். அந்த மாயத்திலேயே அவனைத் தேடிப்பிடிக்கணும்னு அலைஞ்சு திரிஞ்சு அப்படியே துளி தொட்டுட்டாப் போறும் ; கட்டைப் பட்டுனு அவுத்து, தன்னோட பூர்ண ஸ்வரூபத்தை ஸ்வச்சமாக காட்டி அநுக்ரஹம் பண்ணுவான். வெளயாட்டு ஸகாக்கள் பண்ணாத ஒண்ணும் அவன் பண்ணுவான். அவனைத் தேடறது–ன்னு ஒரு ஜீவன் ஆரம்பிச்சவிட்டு இவன் தேடிண்டு ஒரு அடி போறான்னா அவனும் மறைவிடத்திலேந்து வெளில வந்து நாலடி இவன் பக்கம் வருவான்.

"கண்ணைக் கட்டிண்டு தேடறதுக்கு இன்னொரு விதமாகவும் அர்த்தம் சொல்றதுண்டு. வெளி விஷயம் எதுலயும் மனஸை விடாம, வெளி விஷயங்களுக்குள்ளே காட்சி–ங்கிறதுதான் மனஸை ரொம்ப இழுத்துக்கறதா இருக்கிறதால கண்ணை மூடிண்டு த்யானம் பண்ணணும். அப்படிப் பண்ணினா அகக்கண்–ங்கிறது தெறந்து அவரோட தர்சனம் கெடைக்கும்னு அர்த்தம் பண்றது. (அநுபவம் கனம் அடர்ந்த குரலில் சொல்கிறார்:) அதுக்கப்புறம் புறக்கண்ணையே தெறந்தாலும் பாக்கறதெல்லாம் அவனொருத்தனாகத்தான் தெரியும்."

ஆதியில் பிரம்மதேவரைக் குறித்துத்தான் அமரர், அஸுரர் ஆகியோரில் பலரும், ரிஷிகளில் சிலருங்கூடத்

@Page 212

தவமிருந்து அவரது பிரஸாதத்தால்தான் விசேஷ பலன்கள் பல பெற்றிருக்கிறார்கள். ஆயின் பிரம்மனுக்கு வழிபாடில்லை என்று பின்னாளில் ஆகிவிட்டதால் மும்மூர்த்திகளில் ஒருவராக இன்றுமுள்ள அவரது பிரஸாதம் கிடைக்க வழியே இல்லாமலாகிவிட்டது என்று ஓர் அடியார் ஸ்ரீ பெரியவாளிடம் குறைப்பட்டுக்கொண்டார்.

"அப்படியா சொல்றே ? ப்ரஹ்ம ப்ரஸாதம் நமக்குக் கிடைக்கவே வழியில்லை–ன்னா சொல்றே ?" என்றால் ஸ்ரீசரணர்.

"அப்படித்தானே ஆயிருக்கு ?" என்றாரவர்.

"ஓஹோ!" என்றார் பெரியவாள். அந்த 'ஓஹோ'வில் 'அப்படியில்லையே!' என்ற பொருள் பொதிந்தாற் போலிருந்தது.

சரியாக அச்சமயம் சிஷ்டரான ஒரு பிராம்மணர் வந்தார். பெரியவாளை நமஸ்கரித்து, தாம் கொண்டு வந்திருந்த பிரஸாதங்களை அவருக்குச் சமர்ப்பித்தார்.

பெரியவாள் பக்தி புஞ்ஜிதமாக அதை முதலில் சிரஸில் வைத்துக்கொண்டு அப்புறம் எடுத்துக் கரத்தில் வைத்துக் கொண்டார். அவரது கண்களில் ஓர் ஒளி மிளிர்ச்சி, 'ஓஹோ'வில் பொதிந்த விஷயம் நிரூபணமாகிறதோ ? குறைப்பட்டுக் கொண்ட பக்தரிடம் மோஹன முறுவலுடன், "நீ கிடைக்கவே கிடைக்காது–ன்னு சொன்னியே அந்த ப்ரஸாதம் இதோவே ஒனக்குக் கிடைக்கிறது பார்!" என்று சொல்லி அதை ஒரு மரத்தட்டில் வைத்து அவரிடம் நகர்த்தினார்.

ஒரே ஆனந்தமாக அவர் நமஸ்கரித்து அதனை எடுத்துக் கொண்டார். ஆனாலும் விஷயம் புரியாத கேள்விக்குறிக்காரராக, "அதெப்படி இவர் ப்ரம்மா ப்ரஸாதம் கொண்டு வந்திருக்கார் ? எங்கேயோ புஷ்கர்

@Page 213

ஷேத்திரத்திலேயும், தமிழ்நாட்டில் ஒண்ணோ ரெண்டோ ஊர்லேயுந்தானே ப்ரம்மாவுக்குக் கோயில் இருக்கு ?" என்று கேட்டார்.

ஸ்ரீசரணர், "இன்னிக்கு அமாவாஸையும் ஸோமவாரமும் சேந்து வந்திருக்கோன்னோ ? அச்வத்த ப்ரதக்ஷிண தினம் இல்லியா ? ப்ரதக்ஷிணம் பண்ணி அந்த ப்ரஸாதம் தான் கொண்டு வந்திருக்கார்" என்றார். அதற்கு மேல் சொல்லவில்லை. பொல்லாதவர்!

"நான் கிடைக்காது–ன்னு சொன்னது ப்ரம்ம ப்ரஸாதம்–னா ?" என்றார் அடியார்.

"ஆமாம், அதுதான் கிடைச்சிருக்கு. இந்த ப்ரஸாதத்துல மூணுல ஒரு பங்கு அதுதான்" – மேலும் அவருக்குப் புதிரை உண்டாக்கினார் விநோதர்.

"மண்டு மூளை, புலியலியே! குருநாதாள்தான் புரியப் பண்ணணும்" என்று அடியார் அழமாட்டாக் குறையாகக் கூற, அருட்செல்வர், சொல்லின் செல்வர்

சொல்வார் :

"அச்வத்த வ்ருக்ஷம் த்ரிமூர்த்தி ஸ்வரூபமில்லையா ? 'மூலதோ ப்ரஹ்ம ரூபாய (வேர்ப்பகுதி பிரம்மா ஸ்வரூபமாயும்), மத்யதோ விஷ்ணு ரூபிணே (நடுவான மரப்பகுதி விஷ்ணு வடிவாயும்) அக்ரத : சிவ ரூபாய (முன்வந்து கவிந்துள்ள மேற்பகுதியான கிளைகள் சிவ ரூபமாயும் உள்ள) வ்ருக்ஷராஜாய தே நம: (மரங்களுக்கு அரசான, உனக்கு நமஸ்காரம்)–ன்னே ஸ்தோத்ரம் பண்றதாச்சே, ஒனக்குத் தெரியாதா என்ன ?"

அடியாருக்கு மகிழ்ச்சியும், ஸ்ரீசரணரைக் குறித்து வியப்பும் பெருகிற்று. "நன்னாத் தெரியும். நித்யம் சொல்லிண்டுந்தான் இருக்கேன். இப்ப நானும் ப்ரதக்ஷிணத்துக்குப் போறதாத்தான் இருக்கேன். ஆனாலும் ஸ்தோத்ரம் தெரிஞ்சாலும், குருநாதாள் ஒருத்தருக்குத்

@Page 214

தானே இந்த மாதிரி எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயங்களிலேயும் அவாளுக்குத் தெரியாத விசேஷமான அர்த்தமெல்லாம் பளிச்சுப் பளிச்சுன்னு தெரியறது ?" என்றார்.

(அச்வத்தம் குறித்து ஸ்ரீசரணரின் இன்னொரு சிந்தனைச் செல்வப் பரிசு : 'வ்ருக்ஷ ராஜன்' என்றால் மரங்களின் அரசன், தமிழில் அச்வதத்திற்கு அரச மரம் என்றே பேர் இருக்கிறது!)

"நாளைக்கு விடிகாலை ஊருக்குப் போறியா ? ஸ்ரீ ராமநவமியாச்சே! ஒண்ணு, வந்தது வந்தே, இங்கே மடத்துல ராமர் பூஜைக்கு இருக்கணும். இல்லாட்டா இன்னி ஸாயங்காலம் ரயிலுக்கே போயாவது இருக்கணும். அப்ப ஊருக்குப் போய்ச் சேந்து ஆத்துலயாவது பூஜை பண்ண முடிஞ்சிருக்கும். ஆத்தையும் கோட்டை விட்டுட்டு, இங்கேயும் இல்லாம, நாளை காலம்பர பஸ்ஸில போறேங்கறியே!" என்றார் ஸ்ரீசரணர் – ஓர் இரவு அவரிடம் ஒரு வெளியூர் அடியார் மறுநாள் அதிகாலை ஊருக்குப் புறப்படவிருப்பதாகச் சொல்லிப் பிரஸாதம் கேட்டபோது.

'அடியார்' என்று மரியாதையை உத்தேசித்துச் சொல்லப்பட்ட அந்நபர் ஒரு விதண்டாவாதி. மரியாதை முறை பாராது ஜகத்குருவிடமும் விதண்டை செய்பவர். அதற்கேற்பவே இப்போது, "நான் வேதத்துல ஸ்பஷ்டமா சொல்லியிருக்கறதுகளைத்தான் பண்ணுகிறது. வேதந்தானே நமக்கு எல்லாம் ?

அதுல இல்லாதது எதுக்கு? வேதத்துல ராமனை, க்ருஷ்ணனைப் பத்தியெல்லாம் எங்கே இருக்கு? வேதம் ஏற்பட்டு எத்தனையோ காலம் கழிச்சுப் பொறந்து அதைப் பின்பத்தினவாதானே அவாளும்? அதனால் ராமர், க்ருஷ்ணர் ஸமாசாரமெல்லாம் எதுவும் நான் எடுத்துக்கறதில்லே. ராமநவமியும் பண்றதில்லே. ராமர் படம்கூட ஆத்துல கெடையாது" என்றார்.

@Page 215

அப்படியானால் அவர் வேதோக்த கர்மாக்கள் செய்வாரா என்றால் அதுவும் மாட்டார்! இது ஸ்ரீசரணாளுக்கா தெரியாது?

'புரு புரு புரு' என்று ஒரு வேகம் ஏறி, பெரியவர் தானா பேசுகிறாரென வியப்புறுமாறு பெரியவர் விளாச ஆரம்பித்தார். "ஓ, வேதத்துல இல்லாத அந்த ஒண்ணும் ஒனக்குத் தள்ளுபடியாடாப்பா? ஸரி, அப்படி கார்த்தால எழுந்தவொடனே டூத்போஸ்ட், அப்புறம் காபி மூஞ்சில முழிக்கறயே, டூத் பேஸ்டும் காபியும் வேதத்துல சொல்லியிருக்கோ? அப்புறம் ஸோப்புத் தேச்சுண்டு குளிக்கறியே, அந்த ஸோப்பு? ஒன் ஆம்படையா க்ரைன்டர்ல அரைச்சு ப்ரஸ்டீஜ்–ல சமைச்சதைச் சாப்பிடறியே, அந்த க்ரைன்டரும் குக்கரும் வேதத்துல சொன்னதுதானாடாப்பா? எல்லாத்தையும்விட 'ஆஃபீஸ்'னு, அதைத்தான் ஜீவனோபாயத்துக்கே வழியா வெச்சுண்டு, போறியே, ஸூட் மாட்டிக்கிண்டு! ஸூட் வேதத்துல இல்லேங்கறது இருக்கட்டும். மொதலுக்கே மோசமா வேதத்துல இப்படித்தான் ப்ராம்மண ஜாதிக்காரனை ஆஃபீஸ் உத்யோகம் பாக்கச் சொல்லியிருக்கோ? ஆஃபீஸுக்கு ஸ்கூட்டரோ, பஸ்ஸோ, எலெக்ட்ரிக் ட்ரெயினோ எதிலோ ஒண்ணுல போறியே, அந்த வாஹனாதிகள் எந்த வேதத்துல இருக்கு?" என்றார். அதோடு விட்டாரா? மேலும் மேலும் மின் விளக்கு, மின் விசிறி, ஸினிமா, கிரிக்கெட் என்பதாக அடியாரது அநுபவத்திற்கு உரிய பலவற்றை அடுக்கிக் கொண்டே போய், அது ஒவ்வொன்றும் 'வேதத்தில் சொல்லியிருக்கா?' என்றோ, 'எந்த வேதத்தில் சொல்லியிருக்கு?' என்றோ முத்தாய்ப்பு வைத்தார்.

முடிவாக, "வேதத்துல எங்கேயும் 'டைரக்'டா இந்த மாதிரி ஒரு அத்வைத ஸந்யாஸி மடம்னு வெச்சுண்டு

@Page 216

'பப்ளிக்' பூஜை பண்ணிண்டு, பூஜை ப்ரஸாதம் குடுக்கலாம்னு இருக்கறதாத்

தெரியலே—ன்னுகூட உன் மாதிரி 'மேதை'களோட ஆராய்ச்சியில ஏற்படலாம்! அதனால நீ இப்ப எங்கிட்ட கேக்கற ப்ரஸாதமே வேதத்துல சொல்லாததுதான்—னு ஆகறது. போய்ட்டு வா!" என்றாரே பார்க்கலாம்!

விதண்டாவாதி ஆடியே போய்விட்டார்! தடாலென்று தண்ட நமஸ்காரம் செய்து ஸ்ரீசரணரிடம் தம்மை க்ஷமித்து, நல்லறிவு தர வேண்டினார்!

கோபப் புயலாயிருந்த ஸ்ரீசரணாள் அக்கணமே அருட்தென்றலாகிக் கூறலானார்.

வேத காலத்திற்குப் பிறபட்டும் அதில் நேராக உள்ளவற்றை அநுஸரித்தே, அந்த விருக்ஷத்துடைய புதுப் புதுக் கிளை, இலை என்றெல்லாம் காலம் தோறும் அநேகம் ஏற்பட்டு வைதிக ஸம்ப்ரதாயத்தில் அங்கமாகக் கலந்துவிட்டன. அதெல்லாமும் வேதமாகவே மதித்து, போற்றி, நாமெல்லாம் அநுஸரிக்க வேண்டியவைதான். மூலமாக ஒரு 'தியரி' இருந்து அதை அப்புறம் காலம் தோறும் 'அடாப்ட்' பண்ணிப் புதுப் புது 'டிஸ்கவரி'கள் செய்தால் அதெல்லாவற்றையுங்கூட அந்தத் துறையைச் சேர்ந்ததாகவேதானே எடுத்துக் கொள்கிறோம்? அப்படியும் வேத தாத்பர்யங்களை ப்ரயோஜனப்படுத்திப் பிற்காலங்களில் அநேகம் சேர்ந்து தற்போதுள்ள ஹிந்து மதம் என்கிறதை ரூபம் பண்ணியிருக்கிறது – என்பதை தீர்க்கமாக விளக்கி விட்டுத் தொடர்வார்:

"இது ஒரு அம்சம். இன்னொரு அம்சம், வேதத்தில் என்னென்ன கார்யம் சொல்லியிருக்கோ, அநுமதிச்சிருக்கோ அந்தக் கார்யங்களுக்காகவே, ஆனா வேதத்தில் சொல்லாத உபகரணங்கள் பிற்காலங்களில் கண்டு பிடிச்சுண்டே வந்திருக்கா. அத்யயனம், யஜ்ஞம், பூஜை,

@Page 217

ஜபம், தியானம் முதலான அநுஷ்டானங்கள் பண்றதைப் பத்தி மட்டும் வேதத்தில சொல்லி நிறுத்திடலை. எழுந்ததும் தந்த தாவனம்—னு பல் தேச்சுக்கறது, அப்புறம் ஸ்நானம் பண்றது, சாப்படறது, பானம் பண்றது, ஸ்வதர்ம கர்மா பண்ணி ஸம்பாதிக்கிறது, வாழ்க்கை—னு ஏற்பட்டிருக்கறதுல அங்கே இங்கே ஓடறது, ப்ரயாணம் பண்றது, ரிக்ரியேஷன்—னு கொஞ்சம் உல்லாஸமாயிருக்கறது – எல்லாமே

வேதத்துல சொன்ன, அநுமதிச்சிருக்கற கார்யந்தான். ஆனா அந்தக் கார்யம் நடத்திக்க அன்னிக்கு இருந்த உபகரணம் போய் இன்னிக்கு வேறே வந்திருக்கலாம். அன்னிக்குக் குதிரை மேலேயோ மாட்டு வண்டியிலேயோ ப்ரயாணம் பண்ணினா–ன்னா இன்னிக்கு ஸ்கூட்டர், எலெக்ட்ரிக் ட்ரெய்ன் வந்திருக்கலாம். இதுகளை வேதத்துல சொன்னபடியே இருந்தாத்தான் ஏத்துக்கிறதுன்னு ஒரு 'பாலிஸி'யா வெச்சுண்டு தள்ளுபடி பண்ண வேண்டியதில்லே. இந்த உபகரணங்களில் எது எது வேதத்தின் 'ஸ்பிரிட்'டுக்கு விருத்தமாயிருக்கோ (விரோதமாக இருக்கின்றனவோ), அநாசாரத்தை உண்டாக்கறதோ அதையெல்லாந்தான் தள்ளுபடி பண்ணணும். டூத் பேஸ்ட்லேந்து, காபியிலேந்து ஆரம்பிச்சு அநாசாம் கலந்ததையெல்லாந்தான் நிஷேதிக்கணும் (விலக்க வேண்டும்). சிலது ஸந்தர்ப்பக் கொடுமையால சேந்த தவிர்க்க முடியாத அநாசாரமாயிருக்கு – ப்ராம்மணன் வைதிக வ்ருத்தியை (தொழிலை) விட்டுட்டு, ஆஃபீஸ், கம்பெனி–ன்னு உத்யோகம் பாக்கறது இப்படி ஏற்பட்டு விட்டதுதான். இது பெரிய்ய அநாசாரந்தான் ; பெரிய அபசாரமே! ஆனாலும் என்ன பண்ணலாம்? தவிர்க்க முடியாததா ஆயிருக்கே! அதனால, பெருமை பெருமையா, 'நாமாக்கும் பெரிய உத்யோகம் பண்ணி, வாரி வாரிக் குவிச்சுக்கறோம்! இன்னும் பெரிசாப் பண்ணி,

@Page 218

ஜாஸ்தியா குவிச்சுக்கணும்'னு பறக்காம, பகவான்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிண்டு, இப்படி இருக்கே–ன்னு தாபப்பட்டுண்டுதான், வாழ்க்கையோட அத்யாவச்யத் தேவைக்கானதை மட்டும் உத்யோகம் பண்ணி ஸம்பாதிச்சுக்கணும். நெறய 'டயம்' ஒழியும்படிப் பண்ணிண்டு அந்த் டயத்துல வேதாத்யயனாதிகள், அநுஷ்டானாதிகள் பண்ண ஆரம்பிக்கணும். ரிடயர் ஆனவிட்டு வேதத்துக்கே வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணணும். அப்படி இப்பவே ஸங்கல்பம் பண்ணிக்கணும்.

"ராமநவமி, கோகுலாஷ்டமி, இன்னும் இப்ப இருக்கிற ரூபத்துல ஹரிகதை, பஜனை–ன்னெல்லாம் வேதத்துல இல்லாததுகளும் வேதவழியில நாம சேர்க்கிறதற்கு ரொம்ப ஒத்தாசை பண்றவைதான். வேத காலத்துப் புருஷ ஸிம்ஹங்களா இல்லாமப் பூஞ்சையா வந்திருக்கிற பின்தலைமுறைக்காராளை அவர் மனஸுக்கு ரஞ்ஜகமான மொறையிலேயே வேத வழிக்குக் கொண்டு சேத்துப் பரமோபகாரம் பண்ணிண்டு வந்திருக்கிறது இதுகள்தான்... ஸங்கீதக் கச்சேரியில பல்லவி பாடறதுன்னு சன்ன பின்னலாத் தாளத்தை விந்யாஸப்படுத்தறதைத் தேர்ந்த வித்வான்கள்தான் ரொம்பவும் ரஸிச்சுத் தாங்களும் பங்கு எடுத்துப்பா. மத்தவாளுக்கு அது கடபுடாதான்! வைதிகா நுஷ்டானங்கள் பூஞ்சையான நமக்குக் கொஞ்சம் அப்படி இருக்கறதுதான்! பல்லவிக்கு முன்னாடி ஸர்வ ஜன ரஞ்ஜகமா அநேக

கீர்த்தனைகள், பல்லவியிலேயே ராகமாலிகை ஸ்வரம், அப்பறம் துக்கடா—ன்னு கச்சேரி பத்ததியில நன்னா இளக்கிக் குடுத்து லேசு பண்ணி எல்லாரையும் 'ப்ளீஸ்' பண்ணிட்டா அதனாலேயே அவாளும் 'இந்தப் பல்லவி ஸமாசாரம் என்னன்னு நாமுந்தான் தெரிஞ்சுப்போமே!'ன்னு 'இன்ட்ரெஸ்ட்' எடுத்துக்கிறாளோல்லியோ? அந்த மாதிரிதான் ராம நவமியும், ஜன்மாஷ்டமியும், பஜனையுமே நமக்கெல்லாமும்

@Page 219

ரஞ்ஜகமாயிருந்துண்டு, அதோட, 'இதுக்கெல்லாமும் வேதந்தானே மூலம்—கிறா? அதுலயுந்தான் நமக்குப் பரிசயம் வேணும்'னு நம்மை உத்ஸாஹப்படுத்தற 'இன்ஸென்டிவ்'கள்! பல்லவியானாலும், துக்கடாவானாலும் எல்லாம் ஸங்கீதந்தானே? அந்த மாதிரி வாஜபேய யாகத்துலேந்து 'ஹரி போல்!' வரை எல்லாமே ஒரே ஸநாதன தர்மத்தின் ஸ்பிரிட்டில் தோணினதுதான். துக்கடா கேக்கறதுலயே ஆரம்பிச்சவா அப்பறம் கொஞ்சம் கொஞ்சமா ஈடுபாடு ஜாஸ்தியாயிண்டே போய் ராகம் கண்டுபிடிக்கறது, தாங்களே பாட்டுக் கத்துக்கறதுன்னு போய், பல்லவி பாடறதுலயே எக்ஸ்பெர்ட்டா ஆனதாக்கூட ஒண்ணு ரெண்டு கேஸ் நானே பாத்திருக்கேன். கச்சேரி—ன்னா அதுக்கு நடுநாயகம் பல்லவிதான். 'இன்னிக்கு என்ன 'மெயின்'னு?' அதைத்தான் மெய்னாவே வெச்சிருக்கிறதாத் தெரியறது? அப்படி வேத ஸம்ப்ரதாய பத்ததின்னா அதுக்கு வேத யஜ்ஞாதிகள்தான் மெய்ன். அதுதான் நமக்குப் பூர்த்தி ஸ்தானம்.

"அந்த யஜ்ஞாதிகளைப் பண்ணணுமே தவிர, அதுதான் எல்லாம்—னு சும்மா வாயால சொல்லிண்டு, ஆனா அதையும் பண்ணாம, அதுக்கு அழைச்சுண்டு போறதுகளையும் பண்ணாம விட்டுடறது தனக்குத் தானே ஹானி உண்டாக்கிக்கிறதுதான். இப்படி அழைச்சுண்டு போறதுகளும், எந்த லக்ஷ்யத்துல கொண்டு சேர்க்கிறதோ அந்த லக்ஷ்யத்தின் 'ஸ்பிரிட்'டிலேயே பொறந்ததுதானானதால, இதுகளையும் ஒருபோதும் தள்ளாம யஜ்ஞாதிகள் பண்றவாளும் அநுஷ்டிக்கத்தான் வேணும். மத்த ஸமூஹத்துக்கும் அப்பத்தான் தடுமாத்தம் உண்டாகாம வழிகாட்டினதா இருக்கும். இன்னிவரைக்கும் நல்ல சிஷ்டாசாரத்தோட இருக்கிறவா அப்படித்தான் ரெண்டையும் அநுஷ்டிச்சுண்டும் வரா.

@Page 220

"நீயும் ஸ்ரீ ராம நவமி பூஜை மாதிரி சின்னதா ஒரு பூஜைல ஆரம்பிச்சு வாஜபேயி ஆற வரைக்கும் மேலே மேலே அபிவ்ருத்தியா (வாயாக)! நாளைக்கு

இங்கேயே வழக்கமான மடத்துப் பூஜையோட ராமர் பூஜையும் பாரு ரெட்டை ப்ரஸாதமும் தரேன். ஸந்தோஷமாப் போய்ட்டு வா!"

உருகிவிட்டார் உருகி, மாஜி விதண்டாவாதி!

அருட்செல்வம் சிந்தனைச் செல்வமாகவும், சொற்செல்வமாகவும் அலர்ந்ததற்கு ஓர் அழகான உதாரணம்!

இங்கே ஸங்கீத உதாரணம் காட்டியுள்ளார். ஸங்கீத விஷயமாக வேடிக்கை விநோதச் சொல் விளையாடல்கள் பார்ப்போம். 'சங்கடமான சமையலைவிட்டு ஸங்கீதம் பாடப் போறேன்!' என்று ஆதிகால ஸினிமாக் காமெடியன் ஒருவரின் பாட்டு உண்டு. அச் சமையல் விஷயமாகவும், சங்கடமாக இல்லாமல் நம் அறிவுக்குக் கிளுகிளுப்பூட்டுவதாகப் பல சிந்தனை விளையாடல்கள் பார்ப்போம்!

## 13

மதுரம் என்பதை உணவு விஷயத்திற்கு அடுத்தபடியாக, ஒரு வேளை முன்படியாகக்கூடக் குரலுடன்தான் பொருத்திப் பேசுகிறோம். மதுரமான சாரீரம், மதுரமான ஸங்கீதம் என்கிறோம். பெரியவாளே ஒரு மதுர ஸங்கீதமாகத்தான் ஏழு ஸ்வரங்களுக்குப் பதிலாக எண்ணி முடியா ரஸ பாவங்களை அற்புதமாக ஒன்றோடொன்று இசைவித்து வாழ்ந்தவர். எனவே அவரது பீடாதிபத்தியம் 'ஆதிபத்தியம்' என்பதன் கடுமையைக் கொண்ட தர்பாராக

@Page 221

இல்லாமல் இனிமையானதோர் இசை விநிகையாகவே இருந்தது.

மடாதிபதி என்றாலே, அவரது யோக்யதாம்சம் எப்படியிருப்பினும் மற்றோர் கை கட்டி வாய் பொத்தி, 'மஹா ஸந்நிதானம்', 'மஹா ஸந்நிதானம்' என தண்டனிட்டுத் தொண்டு செய்துகொண்டிருக்கும் கெடுபிடி தர்பாரே நடப்பதுதான் அநேகமாகப் பொதுவழக்காக இருக்கிறது. அதற்கொரு நூற்றெண்பது டிகிரிப் புரட்சையைப் 'புரட்சி' என்பதன் சாயலும் தெரியாதபடி அன்பால் இளக்கி, மடம் என்பது தர்பார் நடத்தும் அரண்மனையல்ல, அன்பினிமை சொரியும் சொந்த வீட்டுக்கு மேலான அதி சொந்த வீடு என்றும், மட அதிபர் என்பவர் அன்னை போன்ற ஹ்ருதய பந்து என்றும் ஆக்கிய அற்புதச் சாதனையாளர் நமது ஸ்ரீசரணர்.

இதில் ஆச்சர்யம், ஒருவர் அறநெறிகளைத் தீவிரத்துடன் வற்புறுத்துபவராக

இருந்தாலோ, ஆசார வழக்குகளைச் சின்னச் சின்ன விஷயங்கள் உள்பட வலியுறுத்துபவராகவோ இருந்தால் அவரிடம் அச்சத்திற்குரியதான ஒரு கடுமையே இருக்கும். ஸ்ரீசரணரோ இவ்விரண்டிலுமே இமயமாயிருப்பினும் எவ்வாறோ அதே போதில் இனியரிலும் இனியராகவும் இருந்தார்! எவ்வாறோ என்ன ? அனைவரிடமும் பொங்கும் அன்புப் பாங்கால்தான்! குறிப்பாக அவ்வன்பின் அநுதாபக் கண்ணோட்டத்தில், அறவழி. ஆசார நெறிகளுக்கு வர முடியாதோரிடமும் பரிவு கொண்டிருந்தால்தான்! அதன் முதில் நிலையான மன்னிப்புப் பாங்கில், அறவழி – ஆசார நெறிகளிலிருந்து அறவே நீங்கிப் பிழை புரிவோரையும் துலக்க வேண்டி, 'மன்னிக்கிறோம்' என்று கூறக் கருதாமல், சேய்க்கு வரு நோய்க்குத் தாய் மருந்துண்ணுவது போல் தம்மையே இன்னும் தீவிர அநுஷ்டானத்தால் 'தண்டித்து'க் கொண்டு அவர் தவமிருந்தாலுந்தான்!

@Page 222

மீளவும் ஆச்சர்யம்! தபஸ், தீவிர அநுஷ்டானம் என்றாலே பிகு உணர்ச்சியும் கை கோத்து வந்துவிடும்! இங்கோ இளக்கத்திலும் இளக்கமாக அல்லவா இருந்தது!

ஒரு முன்னிரவில் பெரியவாள் அநுஷ்டானம் முடித்து நாலைந்து அடியாருடன் ஓர் அறையில் அமர்ந்திருந்தார். அடியார்களில் அவரிடம் மனசு விட்டுப் பேசும் ஒருவர் அவரிடம் மடாதிபதிக்குரிய தர்பார் தோரணை சிறிதும் இல்லாததையும், ஆயின், துரத்ருஷ்டவசமாக அவரது அணுக்கத் தொண்டர் சிலரோ அட்டஹாஸமாக தர்பார் பண்ணுவதாகவும் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதை இள நகையுடந் கேட்டுக் கொண்டிருந்த பெரியவாள், அப்போது அவருடனிருந்த இளைஞனான தொண்டனைக் கனிவோடு பார்த்தார். அப்பார்வையிலேயே லேசான குறும்பும்! ஸமீபத்தில்தான் அவரது தொண்டுக்கு வந்திருந்த அந்த ஸாதுப் பையன் மேற்சொன்ன தர்பாருக்கு விசேஷமாக ஆளாகி அவதிப்படுபவன் என்று அவரது பார்வையிலேயே புலனாயிற்று.

அவனிடம் அவர், "வெளில போய்ப் பாரு! தர்பார்தான் நடந்திண்டிருக்கு" என்றார்.

அவன் போய்ச் சுற்று முற்றும் பார்த்தான். ஸ்ரீசரணர் சொன்னாற்போல் அங்கு எவரும் அதிகாரம் தூள் பரப்பிக் கொண்டிருக்கவில்லை. சற்றுத் தள்ளி யாரோ ஒருவர் இனிமையாகப் பாடிக்கொண்டுதானிருந்தார். அவரைச் சுற்றிச் சிலர் கேட்டு ரஸித்துக்

கொண்டிருந்தார்கள்.

எனவே அவன் திரும்பி வந்து, "பெரியவா சொன்னாப்பல ஒண்ணும் காணும், யாரோ பாடகர் போல இருக்கு. பாட்டுதான் பாடிண்டிருக்கார். அதுகூட கனத்த கொரலாவோ, தாட் பூட்னு தோரணையோடயோ



இல்லாம ஸௌக்யமாதான் பாடறாதத் தோணறது" என்றான்.

"ஸரி, அங்கே போய், பாட்டு கேட்டுண்டிருக்கறவாளிடம், 'தர்பார் நடக்கறதா ?'ன்னு கேட்டுப் பாரேன்" என்றார் பெரியவாள்.

ஒன்றும் புரியாவிட்டாலும் அவன் மறுபடியும் போனான். திரும்பி வந்தபோது அவன் முகத்தில் முன்னிலும் ஆழமாகக் கேள்விக்குறி பதிந்திருந்தது. "கேட்டேன், 'தர்பாரேதான் நடக்கறது'ன்னு சொன்னா. எப்படின்னுதான் புரியலை" என்றான். பெரியவாளே புரியவைக்கணும் என்ற வேண்டுகோள் பிரதிபலிக்கும் முகத்துடன் அவரைக் கெஞ்சுதலாகப் பார்த்தான்.

"அப்படியா ? பாட்டு முடிஞ்சுடப் போறது ; அதுக்குள்ள நீ சட்னு போய் பல்லவி என்னன்னு கவனமாக் கேட்டுண்டு வந்து சொல்லு. முழுப் பாட்டும் பாடினவிட்டுப் பல்லவியில் தான் முடிப்பா–ன்னு தெரியுமோல்லியோ ?" என்றார் பெரியவாள்.

"தெரியும்" எனச் சொல்லி வேகமாய் வெளியேறிய பையன் திரும்பி வந்து, "பல்லவி 'யோசனா கமல லோசன'ன்னு வரது" என்றான்.

பெரியவாள் அப்போது தம்முடனிருந்தவரில் ஒருவரை அவனுக்குக் காட்டி, "ஒனக்கு விஷயத்தைப் புரியவைக்கும்படி அவரைக் கேட்டுக்கோ" என்றார்.

கிழவனார் எப்படியெல்லாம் நாடகம் ஜோடிக்கிறார்! ப்ரபஞ்ச நாடககர்த்தனின் அவதாரமாகவே தானிருக்க வேண்டும்!

பையனும் அவ்வாறே கேட்க, கேட்கப்பட்டவர் சிரிப்பை அடக்கிக்கொண்டு, "அந்தப் பாட்டு தர்பார்

ராகம்" என்று நாலே வார்த்தைகளில் இந்தக் குட்டி நாடகப் புதிரை அவிழ்த்துக் கொடுத்தார்!

ராஜ தர்பாரை வைத்து ராக தர்பாரை இங்கு குறிப்பிட்ட ஸ்ரீசரணர் இதற்கு எதிர்வெட்டாகவும் செய்ததுண்டு.

ஒருமுறை வித்வானொருவர் அவரிடம் தர்பார் ராகத்திலுள்ள 'ராமாபிராம' பாடிக் காட்டியபின் அவருக்கும் ஸ்ரீசரணருக்கும் உரையாடல் நடந்தது. பேச்சின் இடையில் எவரோ ரொம்பவும் அதிகார தோரணை காட்டுவது பற்றி ஸ்ரீசரணர் சொல்லவேண்டியிருந்தது. "நீ சித்த முந்தி பாடினயே, அந்த ராகம் பண்ணிண்டிருக்கான்!" என்றார்.

ஒரு பெயரெடுக்காத பாடகர் தாம் முன்னுக்கு வருவதற்காக ஸ்ரீசரணரின் பக்தரும் ஸங்கீத உலகில் நல்ல பரிசயமுள்ளவருமான பெரும்புள்ளி ஒருவரின் ஆதரவைக் கோரலாமா என்று கேட்டார்.

ஸ்ரீசரணர், "அவரோட ஸம்ஸாரத்தை யார் மூலமாவது பிடி. இன்னும் ஸுலபமாக் கார்யம் முடிஞ்சுடும்" எனப் பதில் சொன்னார்.

"அவர் ஸம்ஸாரத்தையா? அவர்தானே ஸபா செக்ரடரி மாதிரியானவாகிட்ட சொல்லக்கூடியவர்? அந்த அம்மா....?" என்று ஐயப்பாட்டுடன் வினா எழுப்பினார் அடியார்.

"இதோ பாரு! அவர்தான் இன்ஃப்ளுயன்ஸ் உள்ளவர்னாலும்... வேறே என்ன, உதய ஸூர்ய சந்த்ர ராகப் பாட்டுப் பல்லவியிலேயே த்யாகையர்வாள் சொல்லியிருக்காரே, அதுதானே அநேக இடத்துல நடைமுறையாயிருக்கு? அதனால அந்த அம்மா தயவையே மொதல்ல ஸம்பாதிச்சுக்கோ" என்று புதிர் போட்டார்

@Page 225

ஸ்ரீசரணர். அதோடு ஒவ்வொருவருக்கும் குடும்ப பந்து போன்ற அந்த அன்புறவர் அந்த அம்மாளிடம் அவருக்காகப் பரிந்துரை செய்யக்கூடிய ஒருவருடைய பெயரையும் சொல்லி அவரிடம் தாம் சொன்னதாகச் சொல்லி 'ரெகமன்டேஷன்' பெறுமாறும் வழி கூறினார்.

அது இருக்கட்டும், உதய ஸூர்ய சந்திர ராகக் கிருதி என்றாரே, அது என்ன ? தமது பிரச்னையை ஸ்ரீசரணர் முடித்துத் தந்துவிட்டார் என்று திருப்தி கொண்ட பாடகருக்கும் அக் கிருதி விஷயம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமிருந்தது.

"பெரியவா எந்த க்ருதி சொல்றா தெரியலை. உதய ஸூர்ய சந்த்ர ராகம்–னதே என்னன்னு தெரியலை. பூபாளம், பௌளி, மலயமாருதம், பிலஹரி மொதலானதுகளை உதய கால ராகங்கள்–ங்கிறது. அது ஸூர்யோதயந்தான்–னு நெனச்சுண்டிருக்கோம். சந்த்ரோதய கால ராகம்–னு கேள்விப்பட்டதில்லே. ஸாயங்காலத்துக்குப் பூர்விகல்யாணி–ன்னு சொல்லுவா."

பெரியவாள் இடைமறித்தார். "ஸூர்ய ராகம், சந்த்ர ராகம்னு ரெண்டு நான் சொல்லலை. ஒரே ராகத்தின் பேரிலேயே மொதல்ல உதயஸூர்யனும் அப்புறம் நெலா (நிலா)வும் சேந்திருக்கு. யோஜிச்சுப் பாரு. புரியும்! ஸூர்யனுக்கு இன்னும் என்னல்லாம் பேரு ?"

"ஆதித்தன், ரவி, பாஸ்கரன்..."

"ரெண்டாவதா சொன்னயே அதை 'உதய'த்தோட சேத்து எடுத்துக்கோ".

"உதயரவி" என்ற பாடகர் சட்டென்று விஷயம் புரிந்து கொண்டு, "உதயரவிசந்த்ரிகாதானே ?" எனக்கேட்டார்.

@Page 226

"அதுவேதான்!" என்றார் பெரியவாள். "அதுல ஐயர்வாள் க்ருதி பல்லவில என்ன வரது ? ஒனக்குத்தான் தெலுங்கு தெரியுமே!" என்றார்.

அப் பல்லவியைப் பாடகர் வாய்விட்டே வசனமாகச் சொல்லிப் பார்த்துக்கொண்டார். "எந்த நேர்ச்சின, எந்த ஜூசின, எந்த வாரலைந காந்ததாஸூலே."

அதன் பொருளை நினைத்துத்தானிருக்கவேண்டும், அவர் முகத்தில் சிரிப்புப் படர்ந்தது.

என்ன அப் பொருள்? "எவ்வளவு கற்றவராயினும், எவ்வளவு கண்டவராயினும், எப்படிப்பட்ட நிலைகளில் உள்ளவராயினும் பெண்டாட்டி தாஸர்களாகவே உள்ளனர்" என்பதுதான்!

தாம் சிபாரிசு பெற விரும்பிய சாய்கால் மிக்க பிரமுகர் அப் பல்லவி சொல்லும் கோஷ்டியைச் சேர்ந்தவர் என்பதைத்தான் பெரியவாள் ஸங்கீதப் புதிரில் ஸங்கேதமாகத் தெரிவித்திருக்கிறார் என்று பாடகர் புரிந்துகொண்டு, அதை அப் பெரியவாளிடமும் வெளியிட்டு மகிழ்ந்தார்.

சொல்லின் செல்வர் செய்த சொல் விளையாடல்களில் இப்படியும் ஒன்று! இதே மெட்டில் – அதாவது இசைத் தொடர்புள்ளதாகவே – இன்னும் சில :

சாத்தூர் ஸ்ரீ ஸுப்ரமண்யம் என்று ஏறக்குறைய முன்னணி வித்வத் கோஷ்டியிலேயே இடம் பெற்றுவிட்ட ஒருவர் தீர்க்காயுள் பெறாததாலேயே அந்த ஸ்தானத்தை முழுமையாய்ப் பெற முடியாமலாயிற்று. அவர் ஸ்ரீசரணரின் பரம பக்தர். ஸ்ரீசரணரும் அவரிடம் மிக்க பரிவு காட்டி அவரை நிறையப் பாடச் சொல்லிக் கேட்டு, அவரோடு ஸங்கீத நுட்பங்கள் குறித்து நெடுநேரம் உரையாடல் செய்வதுண்டு. 1950–ல் ஸ்ரீசரணர் திருவிடைமருதூரில்

@Page 227

திருப்பாவை – திருவெம்பாவைப் பேரியக்கத்திற்குக் கொடியேற்று விழா போன்ற முதற் பெரும் மகாநாடு நடத்தியபோது அதில் பாவைப் பாடல்கள், மற்றும் தேவார, திருவாசக, திவ்வியப் பிரபந்தப் பாடல்களை மட்டுமே கொண்ட கச்சேரிகள் செய்ய இருவரை அழைத்திருந்தார். அவர்களில் ஒருவர் அன்று இசையுலகில் தலைமை கொண்டிருந்த ஸ்ரீ அரியக்குடி அவர்கள். மற்றவர் நமது சாத்தூர் ஸுப்ரமண்யம் என்பதிலிருந்து பெரியவாளுக்கு அவரிடமிருந்த நல்லபிப்ராயத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அவரிடம் ஒரு தினம் பெரியவாள், "நான் எத்தனை சொன்னாலும் கேக்காம எல்லாரும் ஆசை ஆசையா ஒண்ணு குடிக்கறாளே, அந்த ராகத்திலே தாஸர் பதம் பாடேன்" என்றார்.

உடனே சாத்தூரார் காபி ராகத்திலுள்ள புரந்தர தாஸரின் பாடலாகிய 'ஜகதோத்தாரணா' பாடி ஸ்ரீசரணரின் மனம் குளிர்வித்தார்.

"எல்லாரும் வாயால குடிச்சு ஸந்தோஷப்படறதை நான் காதால குடிச்சு ஸந்தோஷப்படும்படி பண்ணிட்டே!" எனச் சொல்லின் செல்வர் கூறி அவ் வித்வானை உச்சி குளிரச் செய்தார்.

ஒரு தேர்ந்த கர்நாடக ஸங்கீத ரஸிகர் : முன்னேயெல்லாம் கச்சேரில தவறாம மஹான்களோட பாடல் ஏதாவது ராகமாலிகை விருத்தமாப் பாடுவா. அதுல கேதாரகௌளைதான் அநேகமா மொதலாவதா இருக்கும். மனஸை ஒரு தூக்குத் தூக்கற வசியம் அந்த ராகத்துக்கு விசேஷமாயிருந்தது. இப்ப அதெல்லாம் போயிடுத்து. தேஷ் மாதிரி திராபையான வடக்கத்தி ராகங்களுக்குத்தான் மவுஸாயிருக்கு!

ஸ்ரீசரணர் : நீ இப்டி சொல்றே! ஆனா, 'தேஷும் கேதாரகௌளையும் ஒரே 'ஸ்கேல்'தான் (ஒரே ஆரோஹண

@Page 228

– அவரோஹணம் உடையவைதான்) ; ஒரே ஒரு வித்யாஸம் ஆரோஹணத்துல நிஷாதம் மட்டும் வித்யாஸப் படறது'ன்னு கேள்விப்பட்டாப்பல இருக்கே.

ரஸிகர் : (லேசாக முனகிப் பார்த்துவிட்டு, ஆச்சர்ய உணர்ச்சியுடன்) ஆமாம், பெரியவா சொன்னாப்பலதான்! ஆனா ஹிந்துஸ்தானிப் பாடகாள் ஸ்வரங்களைப் பிடிச்சு நிறுத்திப் பாடறதுக்கும் நம்மவா போன தலைமுறை வரை பண்ணிண்டிருந்ததுக்கும் இருந்த வித்யாஸத்தாலே ஒண்ணு லைட்டாவும், இன்னொண்ணு புஷ்டியாவும் ஆயிருக்கு.

ஸ்ரீசரணர் : (அவரையும் விஞ்சிய ரஸிகராக, ஆயினும் அடக்கத்துடன்) : லைட், புஷ்டி அந்த 'டிஸ்டிங்க்ஷன்'லாம் எனக்குத் தெரியாது. ரெண்டுல ஒவ்வொண்ணுலயும் ஒரு தினுஸு அழகு இருக்கறாதாத்தான் என் லெவலில தோணறது. நாம 'ஸிந்து பைரவி'ன்னு சொல்ற அவா பைரவி கூட முழுக்கவே நம்ம தோடி ஆரோஹண – அவரோணம்தானே ? கமக மயமா எழைச்சு எழைச்சு நாம தோடி பாடறதுல ஒரு கம்பீரமான அழகு இருக்குன்னா, அவா ஸிந்துபைரவின்னு ஸ்வரங்களைப் பிடிச்சு வின்யாஸப்படுத்தறதுலேயும் மனஸைத் தொடற ஏதோ ஒண்ணு இருக்கறதாத்தான் என் மாதிரியானவாளுக்குத் தோணறது. தீக்ஷிதர்வாள், ஐயர்வாள் மாதிரியான நம்ம பெரியவாள்ளாமும் ஹிந்துஸ்தானி ராகங்களை 'அடாப்ட்' பண்ணிண்டிருக்காளே! ஒரே ஸ்கேல், ஆனாலும் ஸ்வரங்களைக் கையாளற விதத்தினாலேயே ரொம்ப வித்யாஸமாயிருக்குன்னா ஆச்சரியமாத்தான் இருக்கு.

ஆனாலும் வடக்கத்தி – தெற்கத்தி ஸங்கீதங்களில் இது ஸஹஜமாகவே 'ப்ரூவ்' ஆறது.

ரஸிகர் : கர்நாடக ஸங்கீதத்துலேயேகூட அப்படி உண்டு. தோடியையேதான் மத்திமம் பண்ணி நிஷாதாந்தமா பாடினா அது புன்னாகவராளி ஆயிடறது!

@Page 229

ரெண்டும் ரொம்ப வித்யாஸமான வெவ்வேறே ராகம் மாதிரிதானே தோணறது ?

ஸ்ரீசரணர் (வியப்புடன்) : அப்படியா ? தோடி – புன்னாகவராளி ஒரே ஸ்வரங்களா ? நான் 'நோட்' பண்ணினதில்லையே ! கொஞ்சம் பாடிக் காட்டறியா ? ஆலாபனையாவும் பண்ணு ; க்ருதியாவும் பாடு. 'கமலாம்பிகே' (தோடி)யும், 'கனகசைல' (புந்நாகவராளி)வும் பாடு.

ரஸிகர் நன்றாகப் பாடவும் கூடியவர். ஸ்ரீசரணர் கூறிய விசேஷம், வெகு சிறப்பாகப் பாடினார். அதில் சின்னச் சின்ன நுட்பங்களையும் ஸ்ரீசரணர் அநுபவித்து ரஸித்ததுண்டே!

ஹாஸ்யம் கலந்த அவரது அறிவுத் திறனுக்கும் அவருடைய இசையறிவு வழிவிட்டது. அநேக ராகங்களின் பெயரைச் சொல்லாமலே அவர் நகைச்சுவை ததும்ப சங்கேதமாகச் சொன்னவையே சங்கீதமாக இனிப்பவை ! அப்படியொன்று முன்பே பார்த்தோம். மேலும் அதே தடத்தில் ஒரே ஓர் உதாரணத்துடன், 'விரிவஞ்சி விடுத்தனம்' செய்வோம் !

ஒரு பாடகர் : ஏகப்பட்ட தொல்லை, ரொம்ப விசாரமாயிருக்கு. மீளறதுக்கு பெரியவாதான் வழி சொல்லணும்.

ஸ்ரீசரணர் : நீதான் ஸங்கீதக்காரனாச்சே, ஓங்கிட்டயே வழி இருக்கே ! தன்னை மறந்து பாடிக்கிண்டிரு! அதைவிட வழி, மருந்து வேண்டாம். இப்பவே பாடு. ஸூர்ய–சந்திராள் ராகத்துல ஐயர்வாள் கிருதி இருக்கே! அதைப் பாடு.

பாடகர் : ஸூர்யசந்திராள் ராகமா ? பெரியவா எதைச் சொல்றாள்னு

தெரியலியே!

@Page 230

ஸ்ரீசரணர் : ஸூர்யனுக்கு இன்னும் என்ன பேரெல்லாம் உண்டு ?

பாடகர் : ஆதித்யன், பாஸ்கரன், ரவி...

ஸ்ரீசரணர் : அதுதான்!
பாடகர் : (சிரிப்பை அடக்க முடியாமல்) ஓ! ரவிசந்த்ரிகாவா ?

ஸ்ரீசரணர் : ஆமாம். அதுல ஐயர்வாள் பாட்டுத் தெரியுமோன்னோ ? 'நிரவரி ஸுகத' இல்லே ; இன்னூணு (இன்னொன்று). அதைப் பாடு.

விசாரம் என்று விண்ணப்பித்த வித்வான் பாடிய அப்பாடல் 'மாகேலரா விசாரமு ?'தான்! 'நமக்கென்ன விசாரம் ? ராமனொருத்தன் இருக்கிறானே!' என்று தெம்பூட்டும் பாடல்!

நகைச்சுவை, இசையறிவுடன் இங்கே மனசு இசைந்து ஒட்டும் ஸிம்பதியும்தான்!

பெரியவாளின் தந்தை ஸ்ரீ ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகள் பெரிய ஸங்கீத ரஸிகர். ஸதா காலமும் பாடிக்கொண்டேயிருப்பார். அவருக்கு ஸங்கீத வித்வான்களான நண்பர்களும் உண்டு. எனவே நமது ஞானமலை பிஞ்சுப் பருவத்திலிருந்தே கானமழையில் நனைந்து ஊறியவர். 'கினி' என்று கன்னட மொழியில் கிளிக்குப் பெயர். மதுரக் குரல் படைத்த பிள்ளையை அக் கிள்ளையின் பெயரிலேயே அழைத்து வந்த தந்தை அச் சின்னஞ்சிறு 'கிளி'க்கும் பாட்டுக்கள் புகட்டியிருக்கிறார்.

மாடாதிபத்தியம் பெற்ற பின் ஆதிசங்கரர் போலவே ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் மேதையாக ஸ்ரீசரணர் தேர்ச்சி பெற்றதில் ஆழ்ந்த இசைப் புலமையும் பெற்றார்.

@Page 231

செவிக்கு உண(வு) இல்லாதபோழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

என்றார் தெய்வப்புலவர். இனிமைகள் யாவும் ஒருங்கிசைய அமுத இசையாகவே வாழ்ந்த ஸ்ரீ பெரியவாளுடன் 'செல்வத்துள் செல்வமாம் செவிச் செல்வ'மாகிய இசையை தொடர்புறுத்திச் செவிக்கு உணவாகப் பெரிய காவியமே பாடலாம். எனினும் 12–ம் அத்தியாய முடிவிலேயே சமையல் விஷயமாகவும் அவரது தொடர்பைச் சொல்வதாகச் சொல்லிச் சாப்பாட்டு ருசிக்கு மோப்பம் காட்டி விட்டதால், மஹா காவியத்திற்குரிய சங்கீத விஷயங்களில் சிலவற்றை இனி வரவிருக்கும் அத்தியாய மொன்றுக்கு ஒதுக்கிவிட்டு இப்போது 'வயிற்றுக்கும் ஈயப்படும்'.

## 14

"சத்து உள்ளது எதுவோ அதுவே சாதம்" எனச் சமையல் கச்சேரியில் 'மெய்ன்' பாடகராகவுள்ள அன்னம் பற்றி பெரியவாள் கூறி, தொடர்வார் : "ஸத்தானவர்களை 'ஸாது' என்கிற மாதிரியே நம் சாப்பாட்டில் முக்யமான பண்டமாக இருந்துகொண்டு நிறைய ஸத்துத் தரும் சோற்றை 'ஸாதம்' என்கிறோம். "இன்னொரு தினுசாகவும் அர்த்தம் கொடுக்கலாம். 'ப்ரஸன்ன'த்தால் உண்டாவது 'ப்ரஸாதம்'. நிவேதனத்தை அங்கீகரிப்பதற்காக ஸ்வாமி ப்ரஸன்னமாக வந்து அதை ஏற்றுக்கொண்டு, நாம் 'நைவேத்யம்' என்று அவருக்குப் படைப்பதை 'ப்ரஸாதம்' என்பதாக நமக்குக் திருப்புகிறார். மநுஷரான நாம் சாப்பிடும் சோற்றுக்கு தெய்விகப் பெருமை சேர்க்கிற அடைமொழியான 'ப்ர'வைச் சேர்க்கிறதற்கில்லைதானே ? அதனால் 'ப்ரஸாத'த்திலிருந்து 'ப்ர'வைக் கழித்து வெறும்



'ஸாதம்' என்று பேர் ஏற்பட்டிருப்பதாகவும் வேடிக்கையாகச் சொல்லலாம்."

ஸாது ச்ரேஷ்டர் சாதம் பற்றிக் கூறியதோடு நிறுத்தவில்லை. நவரஸ பரிதராயிற்றே! சப்பென்று இருக்கும் சாதத்துடன் விஷயத்தையும் சப்பென்று முடிப்பாரா ? சாதத்துக்கு ருசி கூட்டும் 'பக்க வாத்தியங்கள்' பற்றிக் கூறலானார். சமையல் குருவுமாக இருந்த சமயகுரு!

" 'ரஸம்' என்றால் சாறு. அதுவே கடைந்தெடுத்த ருசிக்கும் பெயர். " 'ரஸ'மாக இருந்தது' என்று பேச்சு, பாட்டு எதுவுமே நல்ல ருசியோடு இருந்தால் சொல்கிறோம். வைஷ்ணவர்களுக்குத் தமிழபிமானம் அதிகம். அவர்கள் 'சாத்தமுது' என்று ரஸத்தைச் சொல்வார்கள். அதற்கு 'சாதத்துக்குப் போட்டுக் கொள்ளும் அமுது' என்று அர்த்தமில்லை. 'சாறான அமுது' தான் 'சாற்றமுது'. அதுவே பேச்சு மொழியில்

'சாத்தமுது'.

"சாப்பாட்டுத் தினுஸு எல்லாவற்றையும் அவர்கள் 'அமுது' சேர்த்து, மதுரமாக்கி, 'கறமுது', 'திருக்கண்ணமுது' என்றெல்லாம் சொல்வார்கள்.

"பாயஸத்தைத்தான் அவர்கள் 'திருக்கண்ணமுது' என்பது. அதென்ன 'திருக்கண் ?' 'ருத்ராக்ஷம்' என்றால் 'ருத்ரனின் கண்' என்கிற மாதிரி 'திருக் கண்' என்பது 'லக்ஷ்மியின் கண்'ணா ? சாப்பாட்டு வஸ்து எதற்கோ அப்படிப் பேரா ? அதை அவர்கள் பாயஸத்தில் சேர்ப்பார்களா ? – என்றால், அதெல்லாம் இல்லை. 'திருக்கன்னலமுது' என்பதுதான். 'திருக்கண்ணமு'தாயிருக்கிறது. கன்னல் என்றால் கரும்பு சர்க்கரைப் பொங்கலுக்கு முக்யமான சர்க்கரை, வெல்லம் கரும்பிலிருந்து உற்பத்தி பண்ணுவதுதானே ?... ரஸத்தைப் பற்றிச் சொன்னேனே....

"ஒன்று பிழிந்தெடுத்த ருசியோடு இருக்கும்போது அதிலிருந்து கசடு, கசண்டு எல்லாம் போய் அது ஒரே

@Page 233

தெளிவாய்த் தெளிந்துதானே இருக்கும் ? அதனால் ரஸமான விஷயம் எதுவானாலும் அது கன – நயம் என்கிறதில் கனமாகக் கெட்டியாக இல்லாமல் நயமாக, லேசாக, நீர்க்க இருக்கும். நம் சாப்பாட்டில் எடுத்துக் கொண்டாலும் அதில் ஓட ஓட இரண்டு வகையறாக்கள். ஒன்றுதான் ரஸம். அது சாப்பாட்டில் இரண்டாம் கட்டத்தில் வருவது. இன்னொன்று, முதலில் சாப்பிடும் சாதத்திலேயே சேர்த்துக் கொள்ளும் குழம்பு. குழம்பிலே புளியைக் கரைத்துக் கெட்டியாகக் கொட்டி, கறிகாய்த் 'தான்' வேறு போட்டிருப்பதால் அதற்குள்ளே என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாமல் குழம்பிக் கிடக்கிறது. குழம்பியிருப்பதாலேயே 'குழம்பு'. ரஸத்தில் அப்படி இல்லை – அந்த அளவுக்குக் குழம்பியில்லைதானே ? அதோடு குழம்பு மாதிரி கெட்டியாயில்லாமல் நீர்க்க லேசாகவும் இருக்கிறதோல்லியோ ?"

'தான்' என்ற அகங்காரம் கலந்தால் குழப்பம். 'தான்' இல்லாதிருந்தாலே தெளிவு. அதைத்தான் கறிகாய்த 'தான்' போட்டுள்ள குழம்பும், தான் போடாத ரஸமும் குறிப்பிடுகின்றன என்று தமிழ்ப் பேறிஞர் கி.வா.ஜ சொல்வார். இது பெரியவாள் செவியடைந்தபோது அவர் இந்த விளக்கமும் 'ரஸ'மாயிருக்கிறதென்று கூறி ரஸித்தார். ஆயின் பிறகு ஒருநாள் அதுவுங்கூட வேதாந்தத் தமிழ் மொழி நுட்பப்படி சரியில்லை எனக் கண்டு தாம் கண்டதை கி.வா.ஜவுக்குச் சொல்லியனுப்பினார். அதைக் கேட்ட தமிழ்ப் பேறிஞர் பெரியவாளின் மொழியறிவை வியந்து போற்றினார். அவ்விஷயம்

என்ன என்று பெரியவாளின் புலமை பற்றிக் கூறும் பின்னத்தியாய மொன்றில் காண்போம்.

" 'வெஜிடபிள்' என்கிறதற்குப் பொதுப்பேர் காய்கறி. அதை வைத்து, ஏதாவது ஒரு காயைப் போட்டு

@Page 234

சாப்பாட்டுக்கு வியஞ்ஜனமாகச் சமைக்கப்படும் வகையறாவுக்கே 'கறி' என்ற பேர் ஏற்பட்டுவிட்டது. இன்னொரு காரணமும் சொல்லலாம். குழம்புத் 'தான்', கூட்டு, பச்சடி போன்றவற்றிலும் காய்கறிகள் சேர்த்துச் சமைக்கப்பட்டாலும் கறியிலே அவை கருகிக் கறுப்பாகப் போகிற அளவுக்கு வேறே எதிலும் ஆகாமல்தானே இருக்கிறது ? அந்த கறுப்புக் கலர், கரிவது என்கிறவற்றாலும் கறி என்ற பேர் வந்திருக்கலாம்!"

'உப்புமா' என்ற பெயர் அந்த உண்வகைக்கு ஏன் வந்தது என்று அந்த விநோத வித்தகர் கேள்வி எழுப்புகிறார். "உப்புச் சேர்ப்பதால் அப்படிப் பேர்–னா, இட்டிலி, தோசை, பொங்கல் இத்யாதிகள்லயும் இதுக்குக் குறைச்சலில்லாம உப்புப் போட்டுத்தானேயிருக்கு ? இதிலே ஒண்ணும் ஜாஸ்தி உப்புமில்லியே!" என்ற அயனான உபகேள்வியும் போடுகிறார். எவராலும் 'கன்வின்ஸிங்'காகக் காரணம் சொல்ல இயலவில்லை. முடிவாக அவரே முடிச்சவிழ்க்கிறார் : "Uppuma இல்லே ; Ubbuma! ப(pa)–காரத்தை ப(ba)–காரமாச் சொல்லணும். அதுல ரவை வாணலி பூரா உப்பிடறதோல்லியோ ? சாதம் வடிக்கறச் சேயுந்தான் அரிசி உப்பறது. ஆனா அதுக்கு ரொம்ப நாழி ஆறது. நொய்யும் ரவையுமோ சட்னு பாத்ரம் பூரா உப்பிடறது. அதனாலதான் 'உப்புகிற மாவு'–ங்கிற அர்த்தத்துல அந்தப் பேர் ஏற்பட்டிருக்கு."

ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின் ஆழ்ந்த ஆராய்ச்சியாளர் 'இந்த லோக வாழ்க்கையிலே இருக்கிற எதுவுமே தள்ளுபடி இல்லை' என்ற அநுபவ நிலையில் இட்டிலி, இடியாப்பம் இத்யாதி குறித்தும் ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிறார்!

" 'இட்டு இலி' – அதாவது இலையிலே அதை இட்டவொடனேயே அது இல்லாம 'இலி'யாகச் சாப்பிடறவா வயித்துக்குப் போயிடறது ; அத்தனை

@Page 235

ஆர்வமா மநுஷனைச் சாப்பிட வைக்கிற பதார்த்தம் அது'ன்னு ஒத்தர் சொன்னார்.

அது சமத்காரத்துல சொன்னது. வாஸ்தவத்திலே, 'இடுதல்'ங்கிறதுக்கு ஒண்ணைத் தொடாம அப்படியே வெச்சுட்டு இருந்துடறதுன்னு ஒரு அர்த்தம் உண்டு. 'இடுகாடு'ங்கிறோம். அதுல ம்ருத சரீரத்தைச் சிதையிலே அப்படியே வெச்சுட்டுத் திரும்பி வந்துடறதா இருக்கு. புடம் போடறதுக்காகத் தங்கத்தை நெருப்பிலே அப்படியே ரொம்ப நேரம் வெச்சிருப்பா. அந்தத் தங்கத்துக்கு 'இடுதங்கம்'னே பேர். 'மருந்து வைக்கிறது'ன்னு சொல்லி, வசிய மருந்தை ஒரே ஒரு தரம் குடுத்துட்டு, அப்பறம் 'டோஸ்' இல்லாம விட்டுடுவா, அதுக்கு 'இடு மருந்து'ன்னே பேர்! அதே ரீதியில, பாத்ரத்துக்குள்ளேயிருக்கற பதார்த்தத்தைக் கிண்டிண்டு, திருப்பி விட்டுண்டு–ல்லாம் இல்லாம அப்படியே ஸ்டீம்ல வெச்சு மூடிட்டு, அதுவே பக்குவமாகட்டும்னு பேசாம ஒக்காந்திருக்கறதும் 'இடுதல்'தான். அதை இடல், இட்டல்னும் சொல்லலாம். அந்த மாதிரித் தயார் பண்ணினதே 'இட்டலி'. பேச்சுல 'இட்டிலி' ஆயிடுத்து.

"அதே போல ஸ்டீம்ல 'இட்டது'தான். 'இடுதல்' செஞ்சதுதான், ப்ராம்மணாள் 'ஸேவை'ன்னும் மத்தவா 'இடி'யாப்பம்னும் சொல்றது. அது அப்பம் மாதிரியில்லாம எழை எழையாயிருக்கேன்னா, இது அப்பம் இல்லையே! ஆப்பம்னா! 'அப்' என்கிற ஜலத்தின் ஸம்பந்தமுள்ளது 'ஆபம்'. அதுவே 'ஆப்பம்' ஆயிடுத்து. இடியாப்பம் நீராவியிலதானே வேகறது ?

" 'ஆபூபம்'–னு ஸம்ஸ்கிருதத்துல சொல்றதையே நாம அப்பம்–ங்கிறோம். 'ஆபூப்யம்'–னு ஆபூபத்துக்கு மூலச் சரக்காயிருக்கற மாவுக்குப் பேர். இங்கே ஒரு வேடிக்கை. மாவுலேந்துதான் அப்பம் வரது. ஆனா பேர் வெச்சிருக்கறதைப் பாத்தா 'அபூபம்'–கிறதுலேந்துதான்

@Page 236

மாவுக்குப் பேர் வரது. 'ஆபூப்யம்'னு! 'ஆபூப்யம்'தான் தமிழ் 'ஆப்பம்' ஆயிடுத்து.

" 'அப்பளாம்'–னு ஒண்ணு சொல்றோம். இலக்கணமாச் சொன்னா 'அம்மபளம்'. 'ள'–வும் 'ல'வும் கிட்டக்கக் கிட்டக்க இருக்கற சப்தங்கள். ஒண்ணுக்குப் பதிலா இன்னொண்ணு வரும். தமிழ்ல நாம 'மங்களம்', 'நளினம்'–னெல்லாம் சொல்ற வார்த்தைகளை ஸம்ஸ்க்ருதத்திலே 'மங்கலம்', 'நலினம்'–னெல்லாந்தான் சொல்றது. ஹிந்திக்காரா, பஞ்சாபிகள், பெங்காலிகள், ராஜஸ்தானிகள் எல்லாரும்... வட தேசம் பூராவிலுமே 'ள' உபயோகிக்கிறதேயில்லை ; 'ல'தான்! தெலுங்கிலேயேகூட 'ல'தான் ஜாஸ்தி. மஹாராஷ்ட்ரால மாத்திரம் நம்மையும்விட ஜாஸ்தியா 'ல'கர வரிசை போட்டுப் பேசறா.... 'ள'வை 'ல'வா வெச்சுக்கலாம்னு

சொல்ல வந்தேன். அதனால் 'அப்பள'த்தை 'அப்பலம்'னு வெச்சுக்கலாம். அதுவும் அப்பம் மாதிரி மாவைப் பிசைஞ்சு ரவுண்டாப் பண்றதுதான். அதனால அப்பம். இருந்தாலும் மத்த அப்ப வகைகளை விட அது ருசின்னு அதுக்குச் செல்லம் குடுத்துத்தான் 'அப்பலம்'னு பேர் வைச்சிருக்கு. 'அப்ப'த்தோட 'ல' சேத்து அப்படிப் பண்ணியிருக்கு. இந்த மாதிரி 'ல' சேத்தா அது செல்லத்தைக் காட்றது. (சிரித்து) Particle of endearment!"

ஒரு தினம் கல்யாண சீர் பக்ஷணங்கள் பற்றிப் பேச்சு வந்தது. அந்த ஸந்நிதானத்தில் பேச்சுக்கு வராத 'டாபிக்' என்னதான் பாக்கியிருந்தது? குரவர் என்பது போய் உறவர் என்று ஆகிவிட்டதால் ஒரு விஷயம் மில்லமில்லாமல் அச்சந்நிதியில் அத்துபடி செய்பவர்கள் ஏற்பட்டு, ஸந்நிதி நாயகமான அப் பொன் நிதியும் எல்லாவற்றையும் பரம அக்கறையுடன், ஈடுபாட்டுடன் கேட்டுக் கொண்டது! அப்படித்தான் அன்று சீர் வரிசைப் பணியாரங்கள் பற்றிப்

@Page 237

பேச்சு வந்தது. அதோடு விடாமல் கல்யாண விருந்தில் பரிமாறப்பட்ட உணவு வகைகள் பற்றியெல்லாமும் அவராகவே வேறு கேட்டுத் தெரிந்து கொண்டார்! அப்போது லட்டு, பொறிவிளங்காய் உருண்டை, ஜாங்கிரி, ஹல்வா, ஸொஜ்ஜி, வடை, 'மனோப்பு' எனப்பட்ட முள்ளுத் தேன்குழல் முதலியவை பற்றி சயைல் குரு செய்த பாஷ்யம்.

" 'லடனம்' என்றால் விளையாடுவது. 'லடகம்' என்றால் விளையாட்டுக்கு உதவுகிற sports goods. ஆட்டங்களில் முக்யமாகப் பந்தாட்டத்தைத்தான் சொல்வது. இப்போது ஃபுட் பால் மட்டுமில்லாமல், வாலி பால், எல்லாருக்கும் மோஹமாயிருக்கிற கிரிக்கெட், டென்னிஸ், பாஸ்கெட் பால் முதலான எல்லாவற்றிலுமே பந்தை வைத்து விளையாடுவதாகத்தானே இருக்கிறது! அதனால் பந்துக்கே 'லடகம்' என்பது பேராகிவிட்டது. லட்டு பந்து மாதிரிதானே இருக்கிறது? அதனால் அதுவும் 'லடக'ப் பேர் பெற்று அதுவே 'லட்டுகம்' என்றாகிவிட்டது. பேச்சு மொழியிலே 'லட்டு', 'லாடு' என்றும் சொல்கிறதுண்டு. லட்டுக்கே 'குஞ்ஜாலாடு' என்றும் பேர் சொல்கிறோம். அதென்ன 'குஞ்ஜா' என்றால் 'gunja' என்றால் குந்துமணி... அம்பாள் காமாக்ஷியையே 'மூக பஞ்சசதி ஸ்தோத்திரம்' பண்ணினவா அதன் முதல் சதகத்தில் பராசக்தியுடைய இதர ரூப பேதங்களாகவும் ஸ்தோத்திரித்திருக்கிறார். அதிலே 'மாதங்கி' என்ற ரூபத்தில் அவட் வேட ஜாதி அவதாரம் பண்ணின அவஸரத்தையும் (திருக்கோலத்தையும்) அவர் வர்ணித்திருக்கிறார். அந்த வர்ணனையில் அவளை 'குஞ்ஜாபூஷா' என்று

சொல்கிறார். குந்துமணியாலான சங்கிலி, வளையல் முதலான பூஷணங்களைப் போட்டுக் கொண்டிருப்பவள் என்று அர்த்தம். குந்துமணி, குந்துமணியாகச் சின்னச் சின்ன பூந்தி

@Page 238

பண்ணி அதைச் சர்க்கரை பாகோடு சேர்த்துப் பிடித்த உருண்டைதானே லட்டு? அதனால் அது gunjaladu ; kunjaladu இல்லை!"

" 'பொருள் விளங்கா உருண்டை' என்பதுதான் 'பொறி விளங்கா உருண்டை' ஆகிவிட்டது என்று யாரோ எழுதியிருக்கிறார். (சிரித்து) அவர் அப்படி அர்த்தம் பண்ணினது எனக்குப் பொருள் விளங்காமலிருக்கிறது! அந்த உருண்டை அத்தனை கெட்டியாயிருப்பதைப் பார்த்துச் சமையல் விஷயம் தெரிந்த எவரும் வெல்லப் பாகுதான் நெய், கிய் அதிகம் சேர்க்காமல் மாவோடு சேர்த்துப் பிசைந்ததால் அப்படிக் கெட்டிப்பட்டிருக்கிறது என்று 'ஈஸி'யாகவே பொருள் விளங்கிக் கொண்டுவிடுவார். சமையல் விஷயம் தெரியாதவருங்கூட அதில் கொஞ்சம் ருசி பார்த்தாலும் போதும், வெல்லம், அரிசிமாவு, சுக்கு இத்யாதி போட்டுப் பண்ணினது என்று பொருள் விளங்கிக் கொண்டுவிடுவார். அப்படிப் பார்த்தால் ஜாங்கிரி, கூச்மாண்ட ஹல்வா மாதிரியானதுதான் நன்றாக ஒரு மொக்கு மொக்கினால்கூட அதுகளுக்கு மூலச் சரக்கு உளுந்து, பூசணி இத்யாதி என்று பொருள் விளங்கிக் கொள்ள முடியாமலிருப்பது. 'பொறிவிளங்கா உருண்டை' என்று எல்லாரும் சொல்கிறதே ஸரியான பேர்தான். ஸரியான காரணத்துக்காகத்தான் அப்படிப் பேர் வைத்திருக்கிறது. அந்த உருண்டை விளங்காய் ஓடு மாதிரி கெட்டியாக, கனமாகத்தான் இருக்கிறது? முன்நாளில் பொறி மாவைப் போட்டே அதைப் பண்ணியிருந்திருப்பார்கள். பொறி மாவு, அரிசி மாவை விட ஸத்துக்கும் ஸத்து, ஜீரணிக்கவும் ஸுலபம். ருசிக்கும் ருசி. அதனால் அப்படிப் பண்ணியிருப்பார்கள். அப்புறம் அவ்வளவு உழைப்பதற்குப் பிரியப்படாத பிற்கால பரம்பரை ஏற்பட்டபோது, 'யார்' பொறி பொறித்து இடித்து கஷ்டப்படுவது?

@Page 239

அதோடு அமுக்கிப் பிடித்தால் பொறிமா உருண்டை ரொம்பவும் சின்னதாகி விடுகிறதே!' என்று நினைத்து அரிசி மாவைப் போட்டுப் பண்ண ஆரம்பித்திருக்கலாம். அப்படி ஆன அப்புறமும் பழைய 'பொறி'ப் பெயரே நீடித்து வந்திருக்கிறது."

ஜாங்கிரிப் பிரஸ்தாவம் மேலே வந்தது. என்றாலும் அதைப் பற்றிய ஒரு Key–விஷயம் அப்புறமே வரும். காக்க வைத்துப் படைக்கவேண்டிய பக்ஷணமல்லவா அது ?

"துருக்கர்கள் ஆதிக்கம் இந்த தேசத்தில் ஏற்பட்ட பின் அவர்களுடைய ஸமாசாரங்களில் பல இங்கே சேர்ந்தன. அப்படி வந்ததுதான் 'ஹல்வா' அதற்கு பஹு காலம் முன்னாலிருந்தே இங்கு மாவு, நெய், சர்க்கரை சேர்த்துக் கிளறும் பதார்த்தம் உண்டுதான். 'பைஷ்டிகம்' என்று அவற்றைச் சொல்வது. ஆனாலும் துருக்கர்களுடன்தான் இன்னும் புதிசு புதிசாக பாதாம் ஹல்வா மாதிரிப் பல வந்தன. அப்போது அந்த வகையராவுக்கு அவர்கள் சொன்ன பேரான 'ஹல்வா' என்ற அராபிய பாஷைப் பெயரும் இங்கே வந்து விட்டது!

" 'ஸூஜி' என்பதும் அப்படி வந்த ஒரு பேர். அது தான் 'ஸொஜ்ஜி'யாகிவிட்டது. அதை இப்போது 'கேஸரி' என்றே அதிகம் சொல்கிறதாகத் தெரிகிறது. 'கேஸரம்' என்றால் பிடரி மயிர். 'கேஸரி' – கேஸரத்தைக் கொண்ட சிங்கம். எந்த 'ஃபீல்'டிலும் 'டாப்'பில் இருப்பவரைக் 'கேஸரி' என்று பட்டம் சூட்டிச் சொல்கிறது வழக்கம். வீரகேஸரி, அரி கேஸரி என்றெல்லாம் தமிழ் தேசத்திலேயே ராஜாக்கள் பிருதம் (விருது) போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானிய கெய்ஸர், ரோம ஸாம்ராஜ்ய ஸீஸர், ரஷ்ய ஜார் (Czar) உள்பட எல்லா ராஜப் பெயர்களும் நம்முடைய கேஸரியிலிருந்து வந்தவைதான்! வார்த்தைகள் எப்படி உண்டாயிற்று என்று 'எடிமாலஜி' போட்டிருக்கிற எந்த 'டிக்ஷனரி'யைப் பார்த்தாலும் தெரியும்.

@Page 240

"சிங்கம் என்ன கலராக இருக்கிறது ? ஒரு விதமான பழுப்புச் சிவப்பாகத்தானே ? ஆரஞ்ஜாகவுமில்லாமல், சிவப்பாகவுமில்லாமல் ஒரு 'ஷேட்'. அதுதான் கேஸரவர்ணம். அப்படி இருக்கிற கல்லின் பொடியைக் கேஸரிப் பவுடர் என்கிறோம். சிட்டிகை அந்தப் பொடியைப் கலந்து ஸொஜ்ஜியைக் கிளறிவிட்டால் ஸொஜ்ஜி முழுவதும் அந்தக் கலராகி விடுகிறது. அதனால் அதற்கே கேஸரி என்ற பேரும் ஏற்பட்டு விட்டது.

"வடை பற்றி ஒரு தமிழறிஞர் சொன்னதைச் சொல்கிறேன். ஆதியில் தமிழ்நாட்டில் தித்திப்பு அப்பம் மாதிரி எதுவும் உப்பு வகையில் செய்து எண்ணெயிலோ, நெய்யிலோ போட்டுப் பொறித்து எடுத்ததாகத் தெரியவில்லையாம். அப்பமேகூட சப்பாத்தி மாதிரி அப்படியே நேராக அடுப்பில் போட்டுப் பக்குவம்

செய்ததாகத் தானிருக்கவேண்டும் ; அதனால்தான் 'அப்பம் சுடுவது' என்றே சொல்வதாயிருக்கிறது என்றார். அப்போது நான் குறுக்கே கேள்வி கேட்டேன். 'இட்டிலி–தோசைகள் கூடச் சுட்டதாகத்தானே இப்போதும் சொல்கிறார்கள் ? அது எப்படி ?" என்று. உடனே அவர் சட்டென்று 'எதுவானாலும் சுடப் பண்ணிப் பக்குவமாக்குவதால் அப்படியிருக்கலாம்' என்று சமாளித்துவிட்டு, அப்புறம் எப்படியானாலும் எண்ணெய்க்குள்ளேயே பண்டத்தைப் போட்டுப் பொறிக்கிற உப்புப் பலகாரம் எதுவும் பழங்காலத்தில் குறிப்பிடப்படத்தான் இல்லை என்று தீர்மானமாகச் சொன்னார். அப்புறம் வட தேசத்திலிருந்து அப்படி வடை வந்து சேர்ந்தது... 'மாஷாபூபம்' என்று அதற்குப் பேர். 'மாஷம்' என்கிற உளுந்தைப் போட்டுப் பண்ணின 'அபூப'மான அப்ப வகை வட நாட்டிலிருந்து வந்ததால் அதை 'வடை' என்றே சொல்வதாக ஆயிற்று" என்றார்.

'மனோப்பு' என்பதை இப்படி விளக்கினார். "மனகொப்பு' என்றும் இதைச் சொல்வார்கள். 'மணல்

@Page 241

கொம்பு'தான் அப்படியெல்லாம் வேறே பெயர்கள் எடுத்திருப்பது. அதை உடைத்தால் சுருட்டையாய், கொம்பு கொம்பாகத்தான் வரும். அதிலே மணல் மாதிரிச் சின்னச் சின்ன உருண்டைகள் ஒட்டிக் கொண்டிருக்கோல்லியோ ? பிழிகிற குழலில் உள்ள நக்ஷத்ரம் மாதிரியான த்வாரம்தான் இப்படி அதில் மணல் மாதிரி இருப்பதற்குக் காரணம் மணலும் கொம்பும் சேர்ந்து மணற்கொம்பு, மனகொப்பு, மனோப்பு.

"மணல் என்றதை முத்தாகி அதை 'முத்துஸாரி' என்றும் சொல்கிறவர்கள் உண்டு. ஸாரமுள்ளமுத்து, அல்லது சாரி சாரியாயுள்ள முத்து – முத்துஸாரி!"

பிறிதொரு சமயம் வேறு சில சாப்பாட்டு சமாசாரங்கள் சொன்னதில் சில கவளங்கள் :

" 'தத்யாராதனை' என்று ஒன்று வைஷ்ணவர்கள் சொல்கிறார்கள். 'ததி' (dadhi) என்றால் தயிர். அதனால் அது தயிர் சாதம் நைவேத்யம் பண்ணி பக்தர்களுக்குப் போடுவதாக்கும் என்று ஒருத்தர் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனாலும் அப்புறம் அந்த மாதிரியில்லை ; முழு ஸமாராதனைச் சாப்பாடும்தான் போடுகிறார்கள் என்று தெரிந்து கொண்டார். என்னிடம் வந்து, ஏன் அதை 'தத்யாராதனை' என்று மட்டுமே சொல்கிறார்கள் ?" என்று கேட்டார்.

" 'தத்யாராதனை' என்று பேச்சிலே வந்துவிட்டாலும் அது ஸரியான ரூபத்தில் 'ததீயாராதனை', அதாவது 'ததீய (tadeeya) ஆராதனை'. 'அவனைச் சேர்ந்தவர்களுடைய', அதாவது 'பெருமாளைச் சேர்ந்தவர்களுடைய' என்று அர்த்தம். பகவானைச் சேர்ந்தவர்களான பாகவதர்களுக்குச் செய்கிற ஸமாராதனையே 'ததீயாராதனை' என்பது" என்று அவருக்குச் சொன்னேன்.

@Page 242

"வைஷ்ணவர்கள் அவசரத்தில் பேசுகிற மாதிரி, பொதுவாகவே வார்த்தைகளில் இருக்கும் அக்ஷரங்களில் பலதை 'சாப்பிட்டு' விட்டுச் சுருக்கிச் சொல்வார்கள். 'சாப்பிட்டு விட்டு' என்பதையே மற்றவர்கள் 'சாப்டுட்டு' என்று சுருக்குகிறோமென்றால், வைஷ்ணவர்களோ இன்னும் சுருக்கி 'ஸாட்டு' என்பார்கள். 'திருப்பக்ஷி' என்று தநுர்மாஸம் உஷக் கால பூஜை பண்ணி ஸமர்ப்பிக்கிற பொங்கல் இத்யாதிகளைச் சொல்கிறார்களே, அது இப்படிச் சுருக்கி, அந்தச் சுருக்கலைத் திரித்து உண்டான வார்த்தை தான். 'திருப்பள்ளியெழுச்சி' என்று பகவானை அந்த வேளையிலே எழுப்புவதையேதான் பூஜா நைவேத்தியத்திற்கும் பேராக வைத்திருக்கிறார்கள். அது 'திருப்பழுச்சி'யாகி, 'திருப்பழ்ச்சி'யாகி, அப்புறம் 'திருப்பக்ஷி'யாக க்ஷகார ஸம்ஸ்கிருத, அக்ஷரம் போட்டுக் கொண்டு முடிந்திருக்கிறது. (சிரித்து) வெஜிடேரியன் ப்ரஸாதந்தான் ; பக்ஷியுமில்லை. பறவையுமில்லை.

"பக்ஷிப்பது (bhakshippadu) என்றால் சாப்பிடுவது. அதை வைத்து இந்தப் 'பக்ஷி' உண்டாயிருக்குமோ என்று ஒரு சமயம் நினைத்தேன். அப்புறம் அவர்களுடைய தமிழபிமானம் விசேஷமானதால 'திருப்பள்ளியெழுச்சி' என்பது தான் இப்படி ஆகியிருக்க வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன்.

"தநுர்மாஸம் என்றவுடன் ஆண்டாள்–பாவை நினைவு தன்னால் உண்டாகிறது. அதிலே இருபத்தேழாம் பாட்டில் அவளே பகவானுக்கு திருப்பள்ளியெழுச்சி நைவேத்தியம் பால் சர்க்கரைப் பொங்கலாகப் பண்ணி, அவனோடு தானும், தன்னோடு பாவை பாடிக் கொண்டு பாவை நோன்பு நோற்ற எல்லாப் பெண்களும் ஆனந்தமாய் கூட்டாஞ்சோறு சாப்பிடுவதை அழகாக வர்ணித்திருக்கிறாள். அன்றைக்கு 'கூடாரவல்லி' என்று பண்டிகை

@Page 243

கொண்டாடி, அதே மாதிரி பால் சர்க்கரைப் பொங்கல் பண்ணுவது வைஷ்ணவர்களின் ஸம்ப்ரதாயம். 'கூடார வல்லி' என்றால் கூடாரத்தின் மேலே படர்ந்திருக்கிற கொடி இல்லை! அந்த இருபத்தேழாம் பாட்டின் ஆரம்பம் 'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா!" என்பது. அதிலே வரும் 'கூடாரை வெல்லும்'தான் 'கூடார வல்லி'யாக விசித்ர வேஷம் போட்டுக்கொண்டு விட்டது!....

" 'நெய் சொட்டச் சொட்ட' என்று நாம் 'பணிக்கு'ச் சொல்கிறது. ஆண்டாளோ இன்னும் ஒரு படி மேலே போய் 'பாற் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார' என்று அந்தப் பாட்டில் சொல்லியிருக்கிறாள். பொங்கலில் விட்டுக் கிளறின நெய் அதைப் பண்ணி (அடுப்பிலிருந்து) இறக்கினவிட்டு அந்தச் சாதத்தில் ஊறினது போக, அதற்கும் மித மிஞ்சி இருந்ததில் அந்த மிஞ்சின நெய்யைச் சாதம் கக்கி, சாதத்துக்கு மேலே அப்படியே மூடிக் கொண்டு தோய்ந்திருக்கிறதாம்! பொங்கலை இவர்கள் பரிமாறிக்கொண்டு சாப்பிடுகிறபோது புறங்கை, மணிக்கட்டு எல்லாவற்றிலும் நெய் வழிந்து முழங்கை வழியாகச் சொட்டுகிறதாம்! அப்படி வர்ணிக்கிறாள்.

"இங்கே ஆண்டாள் 'பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார' என்கிறதில் பால், அரிசி, நெய் இருக்கிறதே தவிரக் கன்னலை, 'சர்க்கரையை'ப் பற்றி இல்லையே" என்று ஒருத்தர் கேட்டார். (சிரித்து) 'ஷுகர் பேஷன்ட்' என்கிறார்களே, அந்த மாதிரியானவர்களுக்குப் பண்ணின மாதிரி அல்லவா சப்பு–சவுக்கு என்று இருக்கும் என்று அவருக்குத் தோன்றிற்றுபோல் இருந்தது! நான் சொன்னேன் : 'அவர் நினைக்கிறாற் போல் இல்லை. கன்னல்தானே அதில் முக்யமான அங்கம் என்பதாலேயே அதன் பேரைச் சொல்லாமல் விட்டிருக்கிறாள்... 'goes without saying' என்கிற மாதிரி அபிப்ராயத்தில்!" என்று.

@Page 244

சட்டென்று இன்னொன்றும் தோன்றிற்று. ஸம்ஸ்கிருதத்தில் 'பாயஸம்' என்கிறது இதைத்தான். இதே 'பால் சர்க்கரைப் பொங்க'லைத்தான்! ஆனால் இன்னும் கொஞ்சம் ஓட ஓட இருக்கும். 'பயஸ்' என்றால் பால். அந்தப் பாலிலே அன்னத்தை வேகவைத்து வெல்லம்–சர்க்கரை சேர்த்துப் பண்ணிகிறதுதான் அது. பிற்காலத்தில் பருப்புப் பாயஸம், ரவா பாயஸம், சேமியாப் பாயஸம் என்று பலது வந்துவிட்டது ; அதில் சிலதில் பாலே சேர்க்கிறதில்லை. ஆனாலும் மூலப் பாயஸம் பாலில் வெல்லமோ சர்க்கரையோ சேர்த்து வெந்த அரிசி பாயஸந்தான்!' ஆனால் 'பாயஸம்' என்கிற வார்த்தைக்குப் 'பயஸ் ஸம்பந்தப்பட்ட ஒன்று' என்றுதான் அர்த்தம். அதாவது அங்கே பாலை மட்டுந்தான் சொல்லியிருக்கிறதே தவிர அரிசி சர்க்கரை

இரண்டையும் விட்டிருக்கிறது! அரிசி–சர்க்கரை இரண்டுமே 'go without saying' ஆனதினாலே 'ஜலத்தை விட்டுக் கிளறிவிடப் படாது ; பாலிலேயே வேக வைக்கணும்' என்று சொன்னால் போதும் என்று அந்தக் காலத்தில் அப்படிப் பேர் வைத்தார்கள். ஆண்டாள் காலத்தில் பருப்புப் பாயஸங்களும் வந்து விட்டதால் அவள் பருப்பு கூடாது. அரிசிதான் என்றும் சேர்த்துக்கொண்டு 'பாற்–சோறு' என்பதாக அந்த இரண்டையும் சொல்லியிருக்கிறாள் என்று தோன்றிற்று. (இதையும்) அவரிடம் சொன்னேன்.

" 'அக்கார அடிசில்' என்றும் அதற்கு வைஷ்ணவர்கள் அழகான தமிழ்ப் பேர் வைத்தார்கள். 'அக்காரம்' என்பது 'சர்க்கரா' என்கிறதின் மரூஉச் சொல்தான். 'சர்க்கரை' என்பதற்கு மூலமான அந்த வார்த்தை நல்ல ஸம்ஸ்கிருதப் பதமே. அதுதான் பல ரூபத்தில் பல பாஷைகளில் திரிந்து சர்க்கரை–வெல்லம் சேர்க்கிற தித்திப்புப் பக்ஷணங்களுக்குப் பேராயிருக்கிறது. ஸம்ஸ்க்ருத 'ச' தமிழில் 'அ' வாக மருவுகிறதுண்டாதலால் 'சர்க்கரை' (என்பது) 'அர்க்கரம்'

@Page 245

ஆகி 'அக்காரம்' ஆகிவிட்டது. (சிரித்து) காரத்துக்கு ஆப்போஸிட் 'அ–காரம்', 'அக்காரம்'! 'சர்க்கரா'வேதான் 'ஷுகர்' (sugar) என்பதும். அராபிய 'ஸுக்கர்' (sukkar) என்பதிலிருந்து sugar உண்டானது. அந்த 'sukkar' ஸம்ஸ்கிருத 'சர்க்கரா'விலிருந்து உண்டானதுதான். அதுவே 'ஸாக்கரின்' (saccharine), 'ஜாக்கரி' (jaggery) என்ற ரூபங்களும் எடுத்துக்கொண்டது. 'ஜாக்கரி'யை வைத்துத்தான் ரொம்பவும் தித்திக்கிற ஒரு பக்ஷணத்திற்கே 'ஜாங்கிரி' என்று பேர் வந்துவிட்டது!"

ஒரே தித்திப்பாகத் திகட்டிப் போகுமளவிற்கு மதுரம், மதுரம் முறுகிவிடப் போகிறது! இந்தப் படலத்தை இதோடு 'இனிது' முடித்து மாற்றாகக் கொஞ்சம் புளிப்புக் காட்டுவோம். தித்திப்புக்கு மாற்றாக ஆசார்யாள் புளிப்பைத்தான் ஸௌந்தர்யலஹரியில் சொல்லியிருக்கிறார்! நூற்றாண்டுகளுக்கு முன் ஆதி சங்கரராக வந்து அவர் சொன்னதை இந்த நூற்றாண்டில் நாம், கண்முன் கண்ட அவரது அவதாரர் சொல்லிக் கேட்க வேண்டும்*!

நிலவைப் பருகியே உயிர் வாழும் சகோர பக்ஷி பற்றிக் கவிகள் கூறுகிறார்களே அது ஏன் நிலவைப் பருகுகிறது தெரியுமா? சந்திரனிலிருந்து வழியும் அவ்வம்ருதப் பெருக்கைப் பருகுகின்றனவாம். அம்பாளின் முக சந்திரனிலிருந்து பெருகும் காருண்ய–லாவண்யாம்ருதப் பெருக்கான நிலவை அவை பூர்வத்தே பருகினவாம். அது ஒரே இனிப்பாக இனித்ததில் அப்பக்ஷிகளுக்கு தெவிட்டிப் போய் அதைப்

பருகிய அலகே மரத்துப் போய் விட்டதாம்! மாற்றாகப் புளிக் கஞ்சி சாப்பிட்டால் தேவலையே என்று பார்த்தனவாம். அச்சமயத்தில் நிறை மதி உதித்து அதன் அம்ருத மயமான சந்திரிகை பரவத் தொடங்கியதாம். 'நாம்

---

*பார்க்க : ஆறாம் பகுதி 'தெய்வத்தின் குர'லில் 'ஸௌந்தர்ய லஹரி' என்ற பேருரையில் 'நிலவும் புளித்துப்போகும் புன்னகை' என்ற பிரிவு.

@Page 246

விரும்பிய புளிக் கஞ்சி கிடைத்துவிட்டது!' என்று பட்சிகள் மகிழ்ந்து அதைப் பருகத் தொடங்கிவிட்டனவாம்!

மதியத்தைப் பழிக்கும் மாதாவின் முகத்திலிருந்து அமுதத்தையே புளிக் கஞ்சியாக 'டிமோட்' செய்து விடும் அருளழகொளி பரவுகிறது என்கிறார் தெவிட்டாமலே அதைப் பருகி பருகித் திளைத்த சங்கர 'சகோரர்'.

பெரிய பெரிய பட்சணங்களைப் பற்றி விரிவுரையாற்றிய நமது சமையலாசாரியார் எளிய கஞ்சையும் ஈந்ததுண்டு.

யாரோ ஓர் ஆந்திர பக்தர் "கஞ்ஜி ஶ்ரீவாரு எக்கடவுன்னாரு ?" என்று கனத்த குரலில் கேட்டது ஶ்ரீவாருவின் காதிலேயே விழுந்துவிட்டது.
அவருக்கே உரிய குறுங்குறும்பு இதழில் நகையாக வெட்டியது.

கஞ்சி என்பதை பக்தர் கஞ்ஜி என்று சொன்னதை அவர் கவனித்திருக்கிறார்! குடிக்கும் கஞ்சியையும் நாம் 'சி' என எழுதினாலும் 'ஜி'யாகத்தானே உச்சரிக்கிறோம் ? எதிலும் பொருத்தம் காணும் அவரது இணையற்ற அறிவு இரண்டு கஞ்சியையும் – கச்சித்தலத்தையும் கஞ்சிப் பானத்தையும் – இணைத்தது.

தமக்குத்தாமே சொல்லிக் கொள்வது போலக் கூறினார் : "ஆமாம், சாமியார் கஞ்ஜி ஆஸாமியேதான்! எப்பப் பாத்தாலும் 'காப்பி சாப்டாதேள்! கஞ்ஜி குடியுங்கோ, கஞ்ஜி குடியுங்கோ!'–ன்னுதானே சொல்லிண்டிருக்கேன் ?"

ஆந்திர பக்தரை அழைத்து வரச் செய்து, அவருக்கு அருள் புரிந்து அனுப்பி வைத்தார். பிறகு மறுபடி கஞ்சி(ஜி)யை எடுத்துக்கொண்டு விட்டார்.

@Page 247

"காமாக்ஷியைக் கஞ்சி குடிக்க மாட்டா–ன்னு ஒரு புலவர் சிலேடையாப் பாடியிருக்கார். கஞ்சி குடிக்க மாட்டா ; கம்பைப் போட்டுப் பண்ற களி – கம்பஞ்சோறு – அதையும் சாப்பிட மாட்டா'ன்னுல்லாம் பாடிண்டு போயிருக்கார்."

குழந்தையும் வெட்கும் குழந்தைமையுடன் பாடவே செய்கிறார் :

"கஞ்சி குடியாளே! கம்பஞ்சோறுண்ணாளே!"

"ச்லேஷாலங்காரத்திலே (சிலேடையணியில்) இன்னொரு அர்த்தம், உள்ளர்த்தமான நிஜ அர்த்தம் என்னவென்றால் அவள் காஞ்சிபுரமாகிற கஞ்சியில் குடியிருப்பவள்தானே ? 'குடியாள்'–னா 'குடியிருப்பவள்'. மற்ற ஊரிலெல்லாம் முதலில் ஸ்வாமிக்கு நைவேத்யம் பண்ணிவிட்டு அப்புறம் அதையேதான் எடுத்துண்டு வந்து அம்பாள் முதலானோருக்குப் பண்ணுவது. அதாவது ஸ்வாமியின் ஆஹாரத்தை, அன்னத்தை, சோற்றைத்தான் அம்பாள் சாப்பிடறது. இங்கே (காஞ்சியில்) எப்படி ? ஸ்வாமி ஏகாம்ரேச்வரர் – ஏகம்பன்–னும் 'கம்பன்'னு மட்டுமேகூட சொல்லப்படறவர் – அவர் பாட்டுக்கு எங்கேயோ இருக்கார். இவளானா தனியா தானே ராணியா, காமகோஷ்டம்னு தனிக் கோவில் கட்டிண்டு அதுல ஒக்காந்துண்டு தனக்குன்னே நைவேத்யம் பண்ணி ஸமர்ப்பிக்கும்படியா தர்பார் பண்ணிண்டிருக்கா! கம்பனுடைய சோறை இவள் சாப்பிடறதில்லே. அதுதான் 'கம்பஞ் சோறுண்ணாளே'! *

---

*முழுப் பாடலின் விளக்கத்திற்கு 'தெய்வத்தின் குரல்' மூன்றாம் பகுதியில் 'கவி சாதுர்யம்' என்ற உரையிலுள்ள 'கஞ்சி குடிக்காத காமாக்ஷி' எனும் பிரிவு பார்க்க.

@Page 248

"அந்தப் புலவர் மட்டுந்தான்னு இல்லே! ஆசார்யாள்கூட அம்பாளைக் கஞ்ஜி ஸம்பந்தப்படுத்திப் பாடியிருக்கார்…"

முன்பு நாம் சுருக்கமாகக் கண்ட ஸௌந்தர்ய லஹரி ச்லோகக் கருத்தை விளக்குகிறார். முடிவாக அதிலிருந்து ஒரு புது விஷயம் சொல்கிறார் :

"ஆசாரியாள் மலையாள தேசத்தைச் சேர்ந்தவர்–ங்கிறதுக்கு இங்கே 'எவிடென்ஸ்' கெடைக்கிறது. 'காஞ்சிக–தியா' – 'கஞ்சியைக் குறித்த அறிவால்', அதாவது, 'கஞ்ஜி என்று அறிந்ததால்', 'சந்திரிகையில் வடிகிற அம்ருதம் வெறும்

கஞ்ஜியே என்று அறிந்ததால்' அந்தச் சகோரங்கள் புளிப்பா ஏதாவது தேவைப்பட்ட அப்போது அதைச் சாப்பிட ஆரம்பித்தன—ன்னு அவர் சொல்றார். 'கஞ்ஜியைக் குறித்த' என்பதற்குக் 'காஞ்ஜிக' என்றே போட்டிருக்கிறார். ஸம்ஸ்க்ருதத்தில் கஞ்ஜி என்று வார்த்தையே கிடையாது. தக்ஷிணத்தில் மட்டுமே வழங்கற வார்த்தை அது. அதுலயும் மலையாளத்துலதான் கஞ்ஜி விசேஷம். ப்ரபுக்களா இருக்கறவாளும் கார்த்தால கஞ்ஜிதான் குடிப்பா. 'மலையாளம் கஞ்ஜி'ன்னே அவா பண்ற 'வெரைட்டி'யைச் சொல்றது.

"காபி தேஹத்துக்குக் கெடுதி. வயித்துலே புண் வரும். அதோட 'ஸ்டிமுலன்'டா அது நரம்பைத் தூண்டறதும் வாஸ்தவத்துல தேஹத்துக்கும், தேஹத்தோட நிக்காம சித்தத்துக்குமே கெடுதிதான். இதெல்லாம் போறாதுன்னு அதுவும் மது மாதிரி, மறுபடி மறுபடி அதைப் பானம் பண்ணணுங்கிற மயக்கத்தை உண்டாக்கிக் கெடுதியை விருத்தி பண்றது. இத்தனையும் போறாதுன்னு இதனாலே எத்தனை செலவு வேறே ?

"கஞ்ஜி தேஹத்துக்கும் நல்லது, சித்தத்துக்கும் நல்லது, செலவும் மட்டு. ஒரு பிடி நொய்யைப் போட்டு மோரை

@Page 249

விட்டுச் சுக்கைத் தட்டிப் போட்டா நாலு பேர் தாராளமாக் குடிக்கலாம். திம்னு வயிறு ரொம்பித் தெம்பாவும் இருக்கும், தெளிவாவும் இருக்கும்.

"அந்த மோர் கொஞ்சம் புளிப்பா இருக்கணும். ஒரு கல் உப்பும் ஜாஸ்தியாவே போட்டுக்கணும். லேசான சுக்குக் காரத்தோட இந்த உப்பு—புளிப்பு சேருகிறச்சே வாய்க்கு ரொம்பவும் ஆரோக்யமாவும் ஸிதமான ருசியாவும் இருக்கும்.

" 'திந்த்ரிணீ—லவண—ஹீந போஜநம் வ்ருதா'—ன்னு 'நீதி சாஸ்த்ரம்'—க்ற புஸ்தகத்துலயே இருக்கு.

"பெரிய பெரிய நீதிகளை 'இன்டரிஸ்டிங்'கான முறையிலே சின்னச்சின்ன ச்லோகங்களாகச் சிறு வயஸுப் பசங்களுக்கும் சொல்லிக் குடுத்து அவா புத்தியிலே ஏத்திப் பிற்கால வாழ்க்கை பூராவும் நடத்திக் குடுக்கறமாதிரி உபகாரம் பண்ற புஸ்தகங்கள் பல பெரியவா எழுதியிருக்கா. அவா பண்ணின உபகாரத்துக்கு ஈடு இணையே இல்லை. தமிழ் தேசம் பண்ணின பாக்யம் அவ்வை பொறந்து அப்படி

அத்புதமா அநேகம் குடுத்துட்டுப் போயிருக்கா. 'ஆத்திசூடி' ரொம்ப சின்னக் கொழந்தைகளுக்கு. இன்னும் கொஞ்சம் மேலே போனா, 'கொன்றை வேந்தன்', 'வாக்குண்டாம்' என்ற 'மூதுரை', 'நல்வழி' முதலான நீதி நூல்கள். 'உலக நீதி'ன்னே ஒண்ணு. உலகநாதப் புலவனார்–ங்கிறவர் பண்ணினது. அதிவீரராம பாண்டியன்–னு கொற்கைப் பிராந்தியத்துல ராஜாவா இருந்தவரும் ரொம்ப அழகா 'வெற்றி வேற்கை'னு பண்ணியிருக்கார். இன்னும் கொஞ்சம் 'அட்வான்ஸ்'–டா, பாஷை, அபிப்ராயம் ரெண்டுலேயுமே 'அட்வான்ஸ்'டா சிவப்பிரகாச முனிவர்ங்கிற பெரியவர் 'நன்னெறி'–ன்னு பண்ணிக் குடுத்திருக்கார்.

@Page 250

"இப்ப 'நீதி சாஸ்த்ரம்'னது ஸம்ஸ்க்ருதத்துல பல பழைய பொஸ்தகங்களிலேந்து, தர்மத்தை அங்கங்கேயும் பொத்தி வெச்சுண்டு உதுக்கற (உதிர்க்கிற) மஹாபாரதம் மாதிரியானதுகள், தர்மம் சொல்லவே ஏற்பட்ட ஸ்ம்ருதிகள், பர்த்ருஹரியோட 'நீதி சதகம்' மாதிரி இருக்கப்பட்ட நூல்கள் மொதலானதுலேந்து ச்லோகங்களைப் பொறுக்கியெடுத்துக் கோத்துக் குடுக்கற ஒரு பொஸ்தகம். 'தொகை நூல்', 'ஆந்தாலஜி'ன்னு சொல்றது. அதைத் தமிழாக்கமாப் பண்ணி 'நீதி வெண்பா'ன்னே ஒண்ணும் இருக்கு. பண்ணினவர் யாரு ? யாரோ மஹான்! 'எந்தரோ மஹாநுபாவுலு'–ன்னு ஐயர்வாள் பாடினவாளில ஒத்தர்.

"அந்த நாளில் 'பேஸிக்'கான நீதி நூலா எல்லா வித்யார்த்திகளும் இந்த 'நீதி சாஸ்த்ரம்' மனப்பாடம் பண்ணிண்டிருந்தா. அதுலயே உப்பு–புளிச் சாப்பாட்டைப் பத்தி விசேஷிச்சு 'திந்த்ரிணீ லவண ஹீந போஜநம் வ்ருதா'ன்னு இருக்கு. 'திந்த்ரிணீ–ன்னா புரி. 'திந்த்ரி'ன்னு சொன்னாலும் போறும். திந்த்ரிவனம்தான் தென்னார்க்காட்டிலே 'திண்டிவனம்'–னு இருக்கே, அந்த பேராத் திரிஞ்சு வந்திருக்கு.

" 'நீரில்லா நெற்றி பாழ் ; நெய்யில்லா உண்டி பாழ் ;
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்"

–னும் இன்னும் மனஸொத்த ஸஹோதராள் இல்லாத ஜன்மா பாழ், க்ருஹிணி இல்லாத க்ருஹம் பாழ்னும் ரெண்டு சேர்த்து, அஞ்சு 'பாழ்' சொல்லிச் செய்யுள் இருக்காப்பல,* நாலு 'வீண்' சொல்ற ஒரு ச்லோகத்திலே மூணாவது 'வீணா' உப்பு புளி சேராத போஜனத்தைச் சொல்லியிருக்கு.

---

* 'நல்வழி'

@Page 251

மாத்ரு–ஹீந–சிசு–ஜீவநம் வ்ரதா ; காந்த–ஹீந– நவயௌவநம் |
திந்த்ரிணீ–லவண–ஹீந போஜநம், காந்தி–ஹீந–தபஸ:பலம் ||

தாயில்லாக் குழந்தை, பாத்தா இல்லாத இளமை (புருஷனானா 'காந்த ஹீன'வைக் 'காந்தா ஹீன'ன்னு நீட்டி, பத்னி இல்லாத இளமைன்னு வெச்சுக்கணும்). புளியும் உப்பும் இல்லாத போஜனம், மனஸடங்கி சாந்தமாயில்லாத தபஸ் இந்த நாலும் வீண், 'வ்ருதா'ன்னு அர்த்தம்.

"மொத மூணு ஓங்க மாதிரி க்ருஹஸ்தாளுக்குச் சொன்னது. நாலாவது என் மாதிரி பண்டாரங்களுக்குச் சொன்னது. நான் என்னடான்னா சாப்பாட்டைப் பத்தியே சப்புக் கொட்டிக்கிண்டு சொல்லிண்டு போறேன்!

"இந்த எடத்துல புளிப்பு, உப்பு ரெண்டையும் சொல்லியிருந்தாலும், இங்கே நாலு 'வ்ருதா' சொன்னாப்பல நாலு 'ப்ரதானம்' சொல்ற ச்லோகத்துல, உப்பை மட்டுமே சொல்லி, அதுதான் அறு சுவைகளிலேயே ப்ரதானம்னு ச்லாகிச்சிருக்கு. சரீரம் பூராவுக்கும் – அதாவது எல்லா அவயவத்துக்கும் – சிரஸே ப்ரதானம்... தமிழ்லயும் சொல்றோமே, 'எண் சாணுடம்புக்குச் சிரஸே ப்ரதானம்'னு, அந்த ஸமாசாரம்....; பஞ்சேந்த்ரியங்களில கண்ணே ப்ரதானம் ; ஷட் ரஸங்கள்–ல உப்பே ப்ரதானம் ; பானங்களிலே தீர்த்தமே ப்ரதானம்னு அந்த ச்லோகம்.

ஸர்வஸ்ய காத்ரஸ் சிர : ப்ரதாநம் ; ஸர்வேந்த்ரியாணாம் நயநம் ப்ரதாநம் |
ஷண்ணாம் ரஸாநாம் லவணம் ப்ரதாநம் ; பவேத் பாநீயான் உதகம் ப்ரதாநம் || "

உப்பின் பெருமை இப்போது வேண்டாம். புளிப்பை முடித்த பாடாயில்லையே !

@Page 252

ஓர் அம்மாள் ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு எலும்மிச்சம் பழ மாலை ஸமர்ப்பிக்கிறாள்.

சிரித்துக் கொள்கிறார் ஸ்ரீசரணர். "காலமேயிருந்து (காலையிலிருந்து) இது மூணாவது மாலை" என்கிறார். உச்சந்தலையில் கையால் தேய்த்துக் கொண்டு அவ்வாறு எலுமிச்சையை தேய்ப்பதை அபிநயத்தால் உணர்த்தி, அவ்வாறு

தேய்த்தால் "நெறய்ய தேவைப்படற சாமியார்னு தெரிஞ்சுதான் இப்படிக் கொண்டு வந்திண்டிருக்கா" என்கிறார்!

தொடர்வார் : " 'அம்பாளுக்குந்தானே இப்படிப் பண்ணிண்டிருக்கா ?'ன்னு கேட்டா, அவ மட்டும் வேறே என்னவாம் ? பித்தனுக்குப் பொண்டாட்டின்னா அவ மட்டும் வேறே என்னவா இருப்போ ? அவனைப் 'பித்தா'ன்னு ஆரம்பிச்சே ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பாடினார்–னா, அவளையோ ஸஹஸ்ரநாமமே 'மத்தா'ன்னு ஒரு பேர் சொல்லிக் கூப்பிடறது. 'மத்த'–ன்னா 'மதம் பிடிச்ச'ன்னு அர்த்தம். 'மத்த கஜம்'–கிறோமே! மதம் பிடிச்ச ஆனைக்கு புத்தி ஸ்வாதீனத்தில இருக்கவே இருக்காது. காம போதையில புத்தி கெட்டுப் போயிருக்கும். குடி போதையில சித்தம் கெட்டுக் கெடக்கிறதையும் 'மத்த'ன்னே சொல்றது. மத நீர்–ங்கிறதும் பித்த நீர்தான். மத்தமும் பித்தமும் ஒண்ணுதான். 'பித்தம்' ஜாஸ்தியானா உண்டாறதே 'பைத்யம்' – 'பைத்தியம்'னு நாம சொல்றது. பைத்தியம் பிடிக்கிறதைப் 'பித்தம் தலைக்கேறிடுத்து'ன்னே சொல்றோம். ஆனதுனால 'சித்தம்' கலங்கியிருக்கறதுதான் 'பித்தம்', 'மத்தம்' ரெண்டும். ஒரே எதுகை மயம்!

"ஊமத்தை இருக்கு. 'உன்மத்தம்'தான் தமிழ்ல அப்படி ஆயிருக்கு. 'உன்மத்த'த்தை 'மத்தம்'னு மட்டுமே சொல்றதும் உண்டு. 'உன்', 'உத்'–என்கிற prefix – 'முன்னடை'னு ஒரு வார்த்தைக்கு மொதல்ல சேக்கறது –

@Page 253

அது ஒரு தூக்குக் தூக்கிண்டு எழும்பறதை அல்லது இன்னொண்ணை மேலே தூக்கி எழுப்பறதைக் குறிக்கும். தாரம் (taram) – உத்தாரம், தரணம் (dharanam) – உத்தரணம் (uddharanam), மோசனம் – உன்மோசனம்–னு நம்மை ஒரே தூக்காத் தூக்கி ஈச்வரன் கடைத்தேத்தறதை, கரையேத்தறதை 'உன்' prefix சேத்துச் சொல்றது. அந்த மாதிரி ஒரேயடியா மதம், போதை, சித்தக் கலக்கம் தலைக்கேறிட்டா அதுதான் உன்மத்தம். அப்படியிருக்கறவன் 'உன்மாதம்', 'உம்மாதம்'னு பேச்சு வழக்குல சொல்றது. மத்தம், உன்மத்தம்–கிறதே தாவர வகையில ஒண்ணின் பேராவும் இருக்கும். ஏன்னா அதைத் தின்னுப்புட்டா, குறிப்பா அதன் விரையிலே கொஞ்சம் அரச்சுச் குடிச்சுட்டா போறும், சித்த வைகல்யம் (சித்தக் கலக்கம்) உண்டாயிடும். அது கசப்பான கசப்பு! கசப்புப் பண்டம் எதுவுமே ஓரளவுக்கு மேலே போனா கொஞ்சம் பித்தம் பண்ணத்தான் பண்ணும். ஆனா அப்படியிருக்கற அநேக காய்கறிகள்ல வேறே ஆரோக்யகரமான ஸமாசாரங்களும் இருக்கறதால பித்த சமனமா ஒண்ணை அதுகளோட சேத்துப் பக்குவம் பண்ணிச் சாப்பிடறது. ஊமத்தையோ அப்படி நல்லதா எதுவும் இல்லாம, ஓரளவுக்கு மேலே போனா

சித்தப்ரமைங்கறதோட நிக்காம ப்ராணஹானியே உண்டாக்கறது. அதை மத்தம்னு சொல்றது. அந்த வழக்குப்படிதான் அருணகிரிநாதர் 'மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்'னு பிள்ளையாரைப் பத்தின * திருப்புகழ்–ல அவரோட பித்து அப்பாவை 'ரெஃபர்' பண்ணியிருக்கார்.

"மத்தத்துக்கு அப்பறம் 'மதியம்'கிறாரே, அந்தச் சந்திரனும் சித்த பிரமை உண்டாக்கறவன்தான்! ஒரு பக்கம்

---

*'கைத்தலம் நிறைகனி' எனத் தொடங்கும் திருப்புகழ்

@Page 254

அவன் அம்ருதத்தைக் கொட்டறது : இன்னொரு பக்கம் ரொம்ப நாழி நெலால (நிலாவில்) படுத்துண்டு தூங்கினா நரம்புல பலம் போறாதவளோட புத்தியைக் கொஞ்சம் கலக்கவும் கலக்கிப்பிடுவான். Lunar–னு சந்த்ர சம்பந்தமானதைச் சொல்றது. லாடின்ல Luna–ன்னா சந்திரன். Lunatic–னா தெரிஞ்சதுதானே ?"

ஓதுவா மூர்த்திகள் வந்தால் அவர்களை ஸ்ரீசரணாள் ஏதேனும் பதிகம் பாடச் சொல்வதற்குத் தவறமாட்டார். அப்புறம் அப் பதிகத்தின் பொருட்சிறப்பு, சொற்சிறப்பு, அதைக் குறித்து ஏதேனும் கதை இருந்தால் அக் கதை ஆகியவற்றை ஓதியவருக்கு எடுத்துச் சொல்வார்.

ஒரு முறை பழுத்த பழமான ஓர் ஓதுவாமூர்த்தி அவர் முன் சிவ பெருமானே அடியெடுத்துக் கொடுத்து சுந்தரர் பாடிய முதற் பதிகமாக 'பித்தா! பிறைசூடி!'–ஐப் பாடத் தொடங்கினார். தொடங்கியவர், 'பிறை சூடி' என்ற இரண்டாம் பதத்தைப் பாடியவுடனேயே ஒரு விதமான பரவசத்துடன் நிறுத்திவிட்டார். நாத் தழுதழுக்க, "பெரியவங்களையேதான் பாடிட்டேன். 'பிறை சூடி'ங்கற சந்திர சேகரப் பேர் கொண்ட பெரியவங்க அதே சிவபெருமான்தானே ?" என்றார்.

அச் சந்திரசேகர ஸரஸ்வதியாரோ சிரித்து, பரவச பாவம் கொள்ளவைத்த பெருமையைப் பரிஹாஸ மொழியால் ஒதுக்கினார். "அதென்னமோ ? ஆனா அதுக்கு முந்தி ஆரம்பமா ஏதோ ஒண்ணு சொல்லிக் கூப்பிடறதா வரரே, அது இங்கே (தமக்கு) ரொம்பப் பொருத்தந்தான்!"

ஊமத்தை வியாக்யானத்திற்குத் திரும்பலம்.

"மதுவைச் சாப்பிட்டா மதி கலங்கறாப்பல தெய்வ விஷயமாகவும் ஆனந்த மதுவைச் சாப்பிட்டா திவ்ய போதை ஏறி அப்படி ஆகத்தான் ஆகும்! ஆனா அப்பறம்

@Page 255

அதுவே அம்ருதமா மாறிடும். யோக மார்க்கமா போறச்சே பூர்த்தி ஸ்தானமா தலைச் சக்ரத்துலேயிருக்கிற சந்திரனிலிருந்து அம்ருதம் கொட்டறதை நெறய்யச் சொல்லியிருக்கு. யோக மார்க்கம்னு போகாத பக்தாள், ஞானிகளுக்கும், ஓசந்த ஸ்டேஜ்ல அப்படி சிரஸ் சந்த்ரன்லேந்து அம்ருத மது கொட்டறதுண்டு.

"பகவானோட ஒரொரு அவயத்திலேந்து சந்த்ரன், ஸூர்யன், இந்த்ரன், அக்னி மொதலானவா உண்டானதாப் 'புருஷஸூக்த'த்துல வரது. அங்கே அவனோட மனஸ் என்கிற உள்ளவயவத்திலேந்து சந்திரன் உண்டானதா இருக்கு. அதனாலேயே சந்திரன் மனஸை நல்லதாவும் கெட்டதாவும் ரெண்டு தினுஸாவும் வெவ்வேற 'கன்டிஷன்'களில பாதிக்கிறான். தமிழ்ல 'மதி'ங்கிறது மனஸ், சந்திரன் ரெண்டையும் குறிப்பிடறது. ஸம்ஸ்கிருத 'மதி' மனஸ் ஸம்பந்தமானது மட்டுந்தான் ; சந்திரன்னு அர்த்தம் கிடையாது. 'மனஸ்'–ங்கிற 'மதி'யை வெச்சும் 'மத்தம்'–ங்கிற வார்த்தை உண்டாகும். அப்படி உண்டாகிற 'உன்மத்தம்' ரொம்ப உசந்த ஒரு பாரமார்த்திகமான அர்த்தம் கொண்டது. நாம தாறுமாறா எப்ப பாத்தாலும் எண்ணங்களை ஸ்ருஷ்டி பண்ணித் தத்தளிச்சுக்கிண்டும், ஸுக துக்கம், கோப தாபம்னு நூறாயிரம் உணர்ச்சிகள்ல மொத்துப்பட்டுக்கிண்டும் இருக்கறதுக்கு இந்த மனஸ்தான் காரணம். பரமாத்மாவுக்கு வேறேயா ஜீவாத்மான்னு நம்மைப் பிரிக்கறதே நம்ம ஒவ்வொருத்தருக்கும் இருக்கற தனி மனஸுதான். இந்த மனஸையே ஒரு தூக்குத் தூக்கித் தூரப் போட்டுட்டு மேலே எழும்பினா அதுதான் சாஞ்சல்யம்–தத்தளிப்பே இல்லாத பரம சாந்த, பரம ஸத்ய நிலை. மொத்துப்பட அங்கே வேறே ஸமாசாரமே இருக்காது! (குழந்தை போலக் 'களுக்'கென்று சிரித்து ரஸித்தவாறு சொல்கிறார் :) மெத்துதான் இருக்கும்!

@Page 256

மொத்து இல்லை. மத்தால கடையற மாதிரியான மத்தம்… உன்மத்தம் இல்லை. மெத்து மெத்து–னு இருக்கும். இந்த மாதிரி மனஸாகிற மதிக்கு மேலே, அதைக் கடந்து எழும்பறது 'உன்மனம்'–ங்கிற உசந்…த நிலை. அதுவும் 'உன்மாதம்', 'உன்மத்தம்'–னு வரும்….

" 'மத்தா'னு அம்பாளையும் பித்தனுக்கு ஏத்த பொண்டாட்டியா சொல்லியிருக்குன்னேன். அதுலேந்தே இத்தனை பேச்சும் வந்துடுத்து. 'மத்தா' பேச்சு வந்ததுக்குக் காரணம் இந்த எலுமிச்சைதான். 'இது பித்த சமனம்: பைத்தியத்தை குணப்படுத்தறதுல ப்ரயோஜனப்படறது. (சிரித்து) எனக்கு மாலையாவே பக்தாள்கிட்டேந்து வந்திண்டிருக்கு'ன்னு சொல்லிக்கிண்டிருந்தேன்.

"இது புளிப்பு, கசப்பு, பித்தம் பண்றது. புளிப்பு பித்த சமனம் – பித்தத்தைப் போக்கறது. எல்லாப் புளிப்பு வஸ்துவையும் அப்படிச் சொல்ல முடியாது. ஸ்வபாவமா புளிப்பா இல்லாத ஒண்ணு ரொம்ப நாழி ஃபெர்மென்ட் ஆயி, யீஸ்ட் உண்டானா புளிப்பா மாறிடும். அப்படி புளிச்சுப் போறச்சே பித்த சமனம் ஆகவே ஆகாது. புத்தியைக் கலக்கற கள்ளே அப்படிப் புளிச்சு உண்டானது தானே ? ஸ்வபாவமாவே புளிக்கறதுலகூட எல்லாமே பித்த சமனம் இல்லை. 'புளிப்பு'–ங்கிற வார்த்தைக்கே மூலமான புளியே பித்த சமனம்னு சொல்லும்படியில்லை. புளிப்பு வஸ்துக்கள்லேயே இந்த எலுமிச்சைக்குத்தான் அந்த குணம் ரொம்ப விசேஷமாயிருக்கு. அதுல வைடமின் ஸி இருக்குன்னு சொல்றா. இதெல்லாம் ஒரு பக்கம். தெய்வ ஸம்பந்தமாயும் ஸூக்ஷ்மமா அதுக்குச் சில விசேஷம் இருக்கறதாலதான் அம்பாளுக்கு மாலை சாத்தறது. ஸித்த லோகாதிகளிலே இருக்கறவா, ஸூக்ஷ்ம சரீரத்துல இருக்கற யோகிகள் மொதலானவாளோட 'கான்டாக்ட்' வெச்சுக்கக் கூடியவா எலுமிச்சம் பழத்தைக் கொண்டே அவா

@Page 257

சொல்றதைக் கேட்டுக்கிண்டு பதில் சொல்றதுண்டு. எலுமிச்சம் பழந்தான் அவாளோட டெலிஃபோன். (சிரிக்கிறார்).

(மேலும் சிரித்து) "நமக்குத் தெரிஞ்சது எலுமிச்சம் பழ ரஸமும், ஊறுகாயுந்தான். ரஸத்துலயே ரெண்டு தினுஸு, சக்கரை போட்டு ஜில்லுனு சாப்பிடறது ஒண்ணு. இன்னொண்ணு, அஞ்சலப் பொட்டி (ஐந்தறைப் பெட்டி)ச் சரக்கு போட்டு அடுப்புல ஏத்தி, அன்னத்துல சேத்துக்கறதுக்காகப் பண்ற ரஸம். ஊறுகாயும் ரெண்டு தினுஸு. ஒறைப்புப் போடாம ஸாதுவா ஒண்ணு : நன்னா வெச்சுத் தீட்டி இன்னொண்ணு."

மாலை கொண்டு வந்த அம்மாளிடம் ஸ்ரீசரணர் கேட்டார். "இந்த மாலை இருக்கே. இதுல இருக்கற பழத்தைப் போட்டு ரஸம் சாதத்துக்குப் போட்டுக்கற ரஸம் ஊறுகாய் ரெண்டும் பண்ணலாமோல்லியோ ?"

"பண்ணலாம்."

"அப்ப அந்த ரஸத்தையும் ஊறுகாயையும் என்ன பேர் குடுத்துச் சொல்வே ?.... நான் கேக்கறது புரியலையாக்கும்... இதைப் போட்டு ரஸம் பண்றே, ஊறுகா பண்றே (எனில்) அப்ப ஆத்தில இருக்கறவாகிட்ட என்ன ரஸம் பண்ணியிருக்கே, என்ன ஊறுகா போட்டிருக்கே–ன்னு சொல்லுவே ?"

"எலுமிச்சம் பழ ரஸம் வெச்சிருக்கே–ன்னுவேன். எலுமிச்சங்கா ஊறுகா போட்டிருக்கேன்–னுவேன். ஸரிதானே ?" – அம்மாள் சற்றே கலவரத்துடன் கேட்கிறாள். இம்மாதிரி அடுப்படி சமாசாரமா ஜகத்குரு கேட்டிருப்பார் ? தான் ஏதோ தப்பாய்ப் புரிந்துகொண்டு உளறுகிறோம் என்ற கலவரமாகத் தோன்றுகிறது.

"ஏம்மா பயப்படறே ?" என்று பரிந்து கேட்ட பெரியவர், அவள் மனத்தைப் புரிந்து கொண்டு சிரித்த

@Page 258

முகமாக, "ஸரியாத்தான் சொன்னே!... நான் அடுப்பங்கரைச் சாமியார்தான்!... ஸரி.... இந்தப் பழத்தையே ரஸமாப் பண்ணினா எலுமிச்சம் பழ ரஸம்–னு சொல்லுவே ; ஊறுகாயாப் பண்ணினா எலுமிச்சங்காய் ஊறுகாய்–னு சொல்லுவே ; அதாவது ஒரே வஸ்துவைப் போட்டு ரெண்டு தினுஸு பண்றப்ப ஒண்ணைப் பழம் போட்டுப் பண்ணினதாகவும், இன்னொண்ணைக் காய் போட்டுப் பண்ணினதாவும் சொல்லுவே! இல்லியா ?" என்கிறார்.

கலவரம் நீங்காத குரலிலேயே அம்மாள் : "என்னவோ அப்படித்தான் சொல்றேன் போல இருக்கு. தப்பானா...."

"தப்புமில்லே, தண்டாவுமில்லே. ஸரியாத்தான் சொல்றே. நீ மட்டுமில்லே. எல்லாரும் அப்படித்தான் சொல்றா. ஆனா ஏன் அப்படி ?"

கேள்விக்குப் பதில் எதிர்பார்த்ததுபோல் சில விநாடி நிறுத்துகிறார். பின் "ஒனக்குத் தெரியாது" என்றவர் உடனேயே அவள் அதற்காக பயப்படப் போகிறாளே என்ற கருணைப் பார்வையில், "பயப்படாதேம்மா, பயப்படாதே!" என்று பரம கனிவாக ஆறுதல் சொல்கிறார். தொடர்வார் : "ரொம்பப் பேருக்குத் தெரிஞ்சிருக்காதுன்னுதான் நெனைக்கிறேன். எங்கே, இங்கே யாருக்காவது தெரிஞ்சா சொல்லுங்கோ!"

பொதுவாகச் சொன்னது மாத்திரமின்றி, தர்சனத்திற்கு வந்திருந்தவர்கள், தம்முடனேயே இருப்பவர்கள் ஆகியோரில் அநேகமாக ஒவ்வொருவரையும் அடுப்பங்கரைச் சாமியார் இந்த மஹா தத்வம் பற்றி அலுக்காமல் விசாரிக்கிறார்.

எவருக்கும் விடை தெரியவில்லை. வேடிக்கையான ஆச்சரியமாக மட்டுமிருக்கிறது – ஏன் ஒரே பண்டத்தைக் கொண்டு செய்கிறவற்றில் ஒன்றில் அதைப் பழமென்றும் மற்றொன்றில் காயென்றும் கூறவேண்டுமென்பது ! அதோடு

@Page 259

ஸ்ரீசரணர் அந்தப் புதிரை அவிழ்க்கப் போகிறாரென்ற ஆர்வ எதிர்பார்ப்பும் சேர்கிறது.

அவரோ தமக்கும் தெரியாததால்தான் கேட்பது போல நடிக்கிறார். 'அதி விடம்பன்'–ஸரியான போலி ஆஸாமி' – என்று அவரே ஆதிசங்கரராயிருந்தபோது 'சிவாநந்த லஹரி'யில் வர்ணித்துள்ள அநாதி சங்கரனும் அவர்தாமே ?

ஸ்வாதீன பக்தர்கள் 'அவருக்கு விடை தெரியவே செய்யும் ; அதை எல்லாருக்கும் அவர் தெரிவித்தும் ஆகணும்' என்று பல விதமாகக் கேட்டுக் கொள்கிறார்கள்.

அவர் நாடக ரஸத்தைக் கூட்டுவதற்காகவே தெரியாததுபோல 'உள்ள' பிகுவும் பண்ணிக் கொண்டபின் முடிவாக இளகுகிறார். சொல்கிறார் :

"ரஸம் என்றால் ஜூஸ். சாறு. அந்த ரஸப் பேரை குழம்புஞ் சாதத்துக்கும் மோருஞ் சாதத்துக்கும் மத்தியில் வரும் சாற்றுக்குக் குடுத்திருக்கு. ஜூஸ்–னா பழுத்த பழத்தைப் பிழிஞ்சாதானே கெடைக்கும் ? காயைப் பிழிஞ்சு ஜூஸ் பண்றதுண்டா ? அதனாலதான் த்ராக்ஷைப் பழம், மாம்பழம் மொதலானதை சக்கரை சேர்த்து ஜில்னு பண்றப்ப பழரஸம்–கிறாப்பலவே இந்த எலுமிச்சையைப் பச்சை மிளகாய் சேத்து 'ஹாட்'டா பண்றதையும் எலுமிச்சம்பழ ரஸம்–னு சொல்றதா ஏற்பட்டிருக்கு.

"ஊறுகாய்–ங்கறப்பவோ அந்த வார்த்தையிலேயே 'காய்' ஒக்காந்திருக்கே! மா இருக்கு. அது காயா இருக்கச்சேதான் ஊறுகா போடுவா. பழுத்தா போடுவாளா ? அப்படியே திம்பா (தின்னுவார்கள்); இல்லாட்டா மாம்பழ ரஸம் – 'மாங்கோ ஜூஸ் – பண்ணிச் சாப்பிடுவா... எலுமிச்சம் பழத்தை போட்டு, நாள்பட ஊறவேற வெச்சு, ஊறுகாய் எப்படிப் பண்ண முடியும் ?

@Page 260

"ஆனதுனாலதான் ஒரே வஸ்துவைப் போட்டு பண்ணினதானாலும் ரெண்டு விதச் சாப்பாட்டு வகையராவுல ஒண்ணுல அதை காய்–னும் இன்னொண்ணுல பழம்–னும் சொல்றதா வந்திருக்கு. நம்ம பெரியவாள்ளாம் இந்த மாதிரிச் சின்னச் சின்ன விஷயங்களைக்கூட எத்தனை கவனமாப் பாத்து கவனமா வார்த்தையை போட்டிருக்கா–ங்கறது இந்த மாதிரி வார்த்தைகளைப் பார்க்கிறப்ப தெரியறது."

கேட்ட 'ச்ரோதா'க்களுக்கெல்லாம் மகிழ்ச்சி. சொன்ன 'வக்தா'வுக்கோ தத்வமஸி பாஷ்யம் தலை சிறக்கச் செய்தது போன்ற மகிழ்ச்சி! 'தான்' ஒன்றையே மெய்யெனக் கண்டதால் அது தவிரத் தத்வமஸி உபதேசத்திலிருந்து அடுப்பங்கரை ஸமாசாரம் வரை அனைத்தையுமே ஒரே போன்ற மாயா நாடகமாகப் பார்த்தவர், அல்லது அந்தத் 'தானா'கவே பார்த்தவர் – எவ்வாறாயினும் இரண்டையும் ஒன்றாகவே பார்த்தவர் – அல்லவா? அந்த ஸம த்ருஷ்டியால்தான் சின்னச்சின்ன விஷயங்களையும் கவனமாகப் பார்த்து நுட்பங்களை அறிந்து விளக்கவும் செய்தார். சொற்செல்வம் என்பதை மெய்யாலுமே செல்வமாய்க் கருதி நம் முன்னோர் கவனத்துடன் கையாண்ட விஷயத்தை மஹா பெரியவாளுந்தான் எத்தனை கவனமாகக் கருத்தில் கொண்டிருக்கிறார்!

புளிப்புப் பற்றி இன்னும் அவர் வைக்கும் விருந்து ; புளிப்பு மட்டுமின்றி ஷட்ரஸம் எனும் அறுசுவை பற்றியுமே அருஞ்சுவையுடன் ஆக்கிய விருந்து :

"தித்திப்பு, உறைப்பு, கசப்பு, 'உவர்ப்பு' என்ற உப்பு ருசி, புளிப்பு, துவர்ப்பு இப்படி ஆறு ருசி, 'ஷட்–ரஸம்' என்று. அவை எல்லாவற்றையுமே 'ரஸ'மாகச் சொல்லியிருக்கிறது. அதில் துவர்ப்பு ஒன்று தவிர பாக்கி ஐந்தையும் நம்முடைய 'ஃபீலிங்'கை – உணர்ச்சியை – ஸம்பந்தப் படுத்திச் சொல்கிறதாக இருக்கிறது.

@Page 261

"ஸாதாரணமாகவே துவர்ப்பு என்ற ருசியை நாம் தனிப்படுத்திக் கவனிக்கிறதில்லை. கசப்புடனேயே அதையும் சேர்த்துவிடுகிறோம். வாஸ்தவத்தில் அவை வேறே வேறே. ஸம்ஸ்கிருதத்தில் 'ஆறு ருசிகளுக்கும் பேர் சொல்கிறபோது கசப்பைத் 'திக்தம்' என்றும், துவர்ப்பை 'கடு' என்றும் சொல்லியிருக்கிறது. அதனால்தான் 'கடுக்காய்' என்றே தமிழிலும் ரொம்பவும் துவர்ப்பாக இருக்கிற பண்டத்தைச் சொல்கிறோம். 'பாகல்'தான் முழுக்கசப்பு மட்டும். ருசியில் நமக்கு (துவர்ப்புக்கும் கசப்புக்கும் இடையே) வித்யாஸம் தெரியாவிட்டாலும் குணத்தில்

இரண்டுக்கும் ரொம்ப வித்யாஸம் உண்டு. கசப்புப் பண்டத்திலேயே அநேகம் உடம்புக்கு ரொம்ப நல்லது. மருந்தாகக் கஷாயம் வைக்கிறோமே, அதிலே கசப்பு, உறைப்புப் பண்டங்கள்தானே ஜாஸ்தி ? பாகற்காய் சாப்பிட்டால் ஞானம் வரும் என்றே சொல்வார்கள். ஞானம் வந்தவன்தான் பாகற்காயையும் உள்ளே தள்ளுவான் என்று இடக்காகச் சொல்கிறதுமுண்டு. கசப்பைவிடவும் துவர்ப்பு ரொம்ப ஆரோக்கியகரமானது. புளிப்புக்கு ஆதாரமாக இந்த இரண்டும் இருக்கிறபோது துவர்ப்பை ஆதாரமாகக் கொண்ட புளிப்பு கெடுதி பண்ணாது ; கசப்பு – ஆதாரப் புளிப்புதான் 'அல்ஸர்' மாதிரிக் கெடுதல்களை உண்டு பண்ணும்.

"புளிப்புக்கு இந்த இரண்டு ருசிகளும் எப்படி ஆதாரமாயிருக்கின்றன என்று சொல்கிறேன். ஒரு தாவரத்துக்கு ஆதாரம் அதன் விரைதானே ? இப்போது (பார்ப்போம்!) புளிப்புப் பண்டங்களாக எலுமிச்சை இருக்கிறது. நெல்லியும் இருக்கிறது. இரண்டின் விரையையும் எடுத்துக் கொள்வோம். எலுமிச்சம் விரையைக் கடித்துப் பார்த்தார் எப்படி இருக்கிறது ? கசப்பாகக் கசந்து வழிகிறது. நெல்லி விரை ? கசக்கவில்லை. நமக்குங்கூட வித்யாஸம் தெரிகிற

@Page 262

விதத்தில் கசப்புக்கு வேறேயான துவர்ப்பாகவே தெரிகிறது. அல்ஸர்க்காரர்கள் எலுமிச்சை சேர்த்துக் கொண்டால்தான் தப்பு ; புளியைவிட அது தேவலை என்று சொல்லலாமாயினும் அதுவும் கொஞ்சம் அளவு ஜாஸ்தியானாலும் தப்புத்தான். ஆனால் அப்படிப்பட்டவர்களும் நெல்லி இன்னும் கொஞ்சம் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம். அது கெடுதி பண்ணாது. மாதுளம்பழமும் அப்படித்தான். விரை துவர்க்கும் ஆகையினால் சேர்த்துக் கொள்ளலாம். இங்கே இன்னொரு வித்யாஸமும் : எலுமிச்சம் சாற்றை ரொம்பப் பொங்கவிட்டால் கசப்பு உண்டாகிவிடும். மாதுளம் சாறோ பொங்கவிட்டாலும் அதன் ருசியான 'புளிப்புத் தித்திப்பு' கெடாமலே நன்றாக இருக்கும்.

"புளிப்பு ருசிக்கே பேரைத் தந்திருக்கிற புளியின் விரை துவர்ப்புதான். ஆனாலும் புளியங்காய், பழம் எல்லாம் அதி சூடு. புளியமரத்து நிழல்கூடத்தானே ? வற்றி, வறட்டி எடுக்கிற சூடு. அதனால்தான் குடல்புண்காரர்களுக்குப் புளி கூடவே கூடாது என்று வைத்தது. ஆனால் அதன் துவர்ப்பு விதைக்கு சில வியாதிகளில் மருந்து 'வால்யூ' உண்டு.

"ஷட்ரஸங்களையும் ஃபீலிங்குகளோடு இணைத்துப் பேசுகிறது என்பதில் ஆரம்பித்தேன். எப்படி ?"

இத்தொடரில் இது தொடர்பாக வேறொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீசரணர் கூறியது முதல் அத்தியாயத்திலேயே வந்திருக்கிறது. இங்கு மேலும் விரிவாகக் கூறுகிறார்.

"ஒருத்தர் நல்ல குணத்தோடு இருந்தால் 'மதுர'மான குணம் என்கிறோம். நல்ல சாரீரத்தை மதுரக் குரல் என்கிறோம். மதுரம்தான் தித்திப்பு, இனிப்பு என்கிறது. இனிய அநுபவம் என்கிறோம். ஈச்வராநுக்ரஹத்தையே இன்னருள் என்கிறோம். மனஸுக்கு இதமானதாக, உத்தமமாக உள்ள ஒன்றை இப்படித் தித்திப்பாகச்

@Page 263

சொல்கிறோம். இங்கிலீஷிலும்தான் sweet என்பதை இதே அர்த்தங்களில் சொல்கிறார்கள்.

"வேடிக்கை என்னவென்றால் தித்திப்புப் பிடிக்காதவர்கள் உண்டு. உப்பு – உறைப்பாக இருந்தால்தான் பிடிக்கும், புளிப்புதான் பிடிக்கும், ஒரு கல் உப்பு கூடப் போட்டால்தான் பிடிக்கும், கசப்பே பிடிக்கும் என்று இருப்பவர்களும் உண்டு. ஆனாலும் அப்படிப்பட்டவர்களும் தங்களுக்குப் பிடித்த உத்தமமான விஷயங்களை தங்களுக்குப் பிடித்த ருசியால் (குறிப்பிட்டு) அவை உப்புறைப்பாகவோ, புளிப்பாகவே, உப்பாகவோ (கசப்பாகவோ) இருப்பதாகச் சொல்வதில்லை! மதுரமாயிருப்பதாகத்தான் சொல்கிறார்கள்!

"இதே ரீதியில் பாக்கி ருசிகளையும் பார்ப்போம். " 'உப்பு–சப்பு' இல்லாமல் என்று உப்பை வைத்துத்தான் பொதுவாக ஆஹாரத்தின் தரத்தையே நிர்ணயம் பண்ணிச் சொல்கிறோம். உப்பு துளி சேர்த்தால் போதும், அப்போதுதான் தித்திப்புப் போடாத எந்த பண்டத்துக்கும் ருசி. போளியுடைய மேல் மாவு முதலானவற்றிலே தித்திப்பு ருசி கூடுவதற்காகவேகூடக் கொஞ்சம் உப்புத் தூள் போடுவதுண்டு. அதே மாதிரி கறி, குழம்புகளில் கொஞ்சம் வெல்லமோ, சர்க்கரையோ சேர்ப்பதும் ஸஹஜமாகவே இருக்கிறது. (சிரித்து) இப்போது 'உப்பு மாஹாத்மியம்' தான் சொல்லப் போகிறேன். உப்பு இல்லாவிட்டால் சப்புதான். சாப்பிடப் பிடிப்பதில்லை. அதனால் தான் சாப்பாடே உப்பை வைத்துத்தான் என்கிற அபிப்ராயத்தில் 'உப்பிட்ட வரை உள்ளளவும் நினை' என்றே சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது.

"இன்னொரு காரணமும் உண்டு. தினப்படி சமையலில் தித்திப்பு வகையரா கிடையாது. தித்திப்பு பண்ணுகிற போதும் பாயஸம், பக்ஷணம் முதலான

@Page 264

அவற்றுக்கு எவரும் குறைவாக சர்க்கரை, வெல்லம் போடுவதில்லை. அப்படியே கொஞ்சம் குறைவாகவோ, அல்லது ஜாஸ்தியாகவோ இருந்தாலும் விசேஷமாக வித்யாஸம் தெரியாது.

"தினப்படிச் சமையலில் வருகிற புளிப்பு, கசப்பு, உறைப்பு வகையராக்களில் அந்தந்த ருசி கூட–குறைய இருந்துவிட்டால் கூடுதலாக இருக்கிறதைக் குறைக்க முடியாது என்பது மட்டுமில்லை ; குறைவாக இருக்கிறதற்கும் மிளகாய்ப் பொடி, புளி மாதிரி தேவைப்படும் ருசியைத் தரும் வஸ்துவை இலையில் சேர்த்துக்கொண்டு ஸரிப்பண்ணிக்கொள்ள முடியாது. உறைப்பு ஜாஸ்தியானால் மட்டும் எண்ணெய், நெய் போட்டுக் கொண்டு கொஞ்சம் ஸரிப் பண்ணுவது. இந்த ருசிகள் ஓரளவு வரை ஏற–இறங்க இருந்தாலும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டும் விடலாம்.

"உப்புத்தான் கொஞ்சம் ஏற–இறங்க இருந்தாலும் ஒரே கரிப்பு, அல்லது ஒரே சப்பு. 'உவர்ப்பு' என்கிறதைப் பேச்சில் 'கரிப்பு' என்றே சொல்கிறோம். இலக்கண சுத்தமான வார்த்தையாக 'உவர்ப்பு'க்குக் 'கார்ப்பு' என்றும் பெயர் இருக்கிறது. அதுதான் பேச்சு வழக்கில் 'கரிப்பு' ஆகிவிட்டது. 'உப்புக் கரிக்க' என்கிறோம். அப்படி, உப்புப் போட்ட வியஞ்ஜனங்களில் அது கொஞ்சம் ஏறினாலும் ஒரே கரிப்பு, கொஞ்சம் குறைந்தாலும் ஒரே சப்பு என்று ஆகிவிடுகிறது. உப்பு ஏறிப் போய்விட்டால் ஒன்றும் பண்ணிக் கொள்ள முடியாது. ஆனால், குறைந்தால் மற்ற ருசிகளைத் தருகிற புளி, மிளகாய் முதலானதை இலையில் கலந்து கொள்ள முடியாமலிருக்கிற மாதிரி இங்கே இல்லை. உப்பு ருசி குறைந்தால் மட்டும் அந்த உப்பையே கொஞ்சம் இலையில் சேர்த்துக் கலந்து கொண்டால் போதும். க்ஷணத்திலே அது கரைந்து ஸரிப் பண்ணி விடும். இப்படி

@Page 265

நம் ஆஹாரத்தில் ருசித் தப்பு நேர்ந்தால் மூல வஸ்துவையே நேராகச் சேர்த்து, உடனே தப்பை ஸரியாகப் பண்ணிக் கொள்வது இது ஒன்றில்தான். ஆனபடியால் அந்த ஒரு குறைபாட்டை, சாப்பிடுபவர் தங்களிடம் சொல்லி, தாங்கள் பல பேருக்குப் பரிமாறிக் கொண்டிருக்கும்போது அவர்களைக் காக்க வைத்து, அல்லது அவர்களுக்காக பிறத்தியாரைக் காக்க வைத்து, அவர்களுக்கு போடுவதாக இருக்க வேண்டாமென்று நம்முடைய பூர்வகால முப்பாட்டிப் புத்திசாலி க்ருஹலக்ஷ்மிகள் நினைத்திருக்கிறார்கள். அதனால் சாப்பிடுபவரே உப்புப் போதாத குறையை நிவர்த்தி பண்ணிக் கொள்ள வசதியாக இலையில் மற்ற வயஞ்ஜனங்கள் பரிமாறுகிறதற்கு

முந்தி முதலிலேயே கொஞ்சம் உப்புப் பொடி வைத்துவிடுவார்கள். அதைக் குறிப்பாக மனஸில் கொண்டுதான் நமக்குச் சாப்பாடு போடுகிறவர்களிடம் என்றென்றும் நன்றியுடன் இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிறபோது 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்றார்கள்.

" 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' எனும்படி, தித்திப்பு சேர்க்காத தினப்படிச் சமையல் சாப்பாட்டில் அதற்கே ப்ரதான்யம். புளியங்காய், மிளகாய்ப் பொடி முதலானதுகளைவிட அளவில் ரொம்பவும் கொஞ்சமானதாக இருந்து கொண்டே ருசி கொடுப்பதில் உப்பு முதல் ஸதானமாக ஆகிவிடுகிறது. துளி உப்பிலேயே உவர்ப்பு அப்படி இறுகியிருக்கிறது. அதனால்தான் குண நலன்கள் எஸென்ஸாக இறுகி இருக்கும் ஸத் புருஷர்களை இங்கிலீஷில் 'Salt of the Earth' என்று சொல்கிறார்கள்!

"சொன்னால் ஆச்சரியமாயிருக்கும் : உப்பைப் பெருமைப்படுத்தணும் என்று, வாய்க்கு ரொம்ப ருசிக்கிற தித்திப்புக்குக்கூட 'உப்பு' என்று ஒரு பெயர் கொடுத்திருக்கிறது. தித்திப்பு மட்டுமில்லை. அழகுக்கும் உப்பு ஸம்பந்தம்

@Page 266

உண்டு. 'லவணம்' என்றால் உப்பு. லவணத்தின் மூலம் உண்டாவது 'லாவண்யம்'. 'லாவண்யம்' என்றால் அழகு, ஸௌந்தர்யம் என்று அர்த்தம் ; தெரிந்ததுதானே ?

"எல்லா ருசியிலுமே உப்பு இருக்கிறது. தித்திப்பு, புளிப்பு, உறைப்பு, கசப்பு, துவர்ப்பு என்கிறவையும் '(உ)ப்பு' என்றுதானே முடிகிறது ?

வெல்லம் காய்ச்சுகிற தினுஸைப் பொறுத்துச் சில தினுஸு வெல்லமே கொஞ்சம் உப்புக் கரிக்கும். இளநீரில் கூட உப்புக் கரிக்கிறதும் உண்டோல்லியோ!

"உப்பு மாஹாத்மியம் இத்தனை இருந்தும் ஃபீலிங்கோடு சேர்த்துச் சொல்கிறபோது ச்ருதி மாறுகிறது! உப்பின் குணமான கரிப்பை வைத்து 'கண்டாலே கரிக்கிறது', 'கரித்துக் கொட்டுகிறது' என்று சொல்லும்போது உத்தமமான உணர்ச்சிகளையா சொல்கிறோம் ?

" 'புளிச்சுப் போச்சு' எனும்போதும் அப்படியேதான், திரும்ப திரும்ப ஒன்று நடந்து அதனால் அலுத்துப் போய் ஆயாஸப்படுத்துவதை "கேட்டுப் புளிச்சுப் போச்சு" என்கிறோம். ரொம்ப நேரம் ஒன்றை ஊறப்போட்டு யீஸ்ட் உண்டாகி அது

புளித்துப் போவதிலிருந்து இப்படி வந்திருக்கிறது போலிருக்கிறது!

"கோபத்தை உறைப்பு ஸம்பந்தப்படுத்திச் சொல்கிறோம். 'ரொம்பவும் காரமாகப் பேசினான்' என்கிறோம். கோபம் கலந்தபோதிலும் அதில் ஒரு ரஸமிருந்தால் 'கார ஸாரமான பேச்சு வார்த்தை' என்கிறோம்.

" 'முகம் கசந்து போனான்', 'மனக் கசப்பு ஏற்பட்டது' என்றெல்லாம் கசப்பையும் வேண்டாத ஃபீலிங்குடனேயே ஸம்பந்தப்படுத்திச் சொல்கிறோம்.

@Page 267

"இங்கேதான் துவர்ப்பையும் கசப்போடேயே சேர்த்து, விட்டு விடுகிறோம். துவர்ப்பான ஃபீலிங் என்று எதையும் சொல்கிறதில்லை. ஆனாலும் அந்த ருசிதான் ஷட்–ரஸங்களிலேயே ஆரோக்கியத்திற்கு நிரம்பவும் நல்லது.

"மொத்தத்தில் ஆறு ருசியில் எது பிடித்தவரானாலும், எல்லாருமே மாதுர்யம் எனும் தித்திப்பு ஒன்று தவிர மற்ற எதையும் உசந்த அர்த்தத்தில் நம் மனோபாவங்க ளோடு சேர்ப்பதில்லை. 'மதுரம்' ஒன்றுக்குத்தான் இந்த உசத்தியை (சிரித்து) 'யுனானிம'ஸாகக் கொடுக்கிறதாக இருக்கிறது!"

பார்த்தீர்களா! மதுரமான மஹா பெரியவர் தொட்டுத் தொட்டு எப்படியோ அதிலேயே நம்மை கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார்!

மதுரம் எனும் இனிப்புக்கே ஆறு சுவைகளில் ஏனையவற்றை விரும்புவோரும் நன்மை, அழகு என்ற பொருளைக் கொடுப்பதற்கு ஸ்ரீ மஹா பெரியவாள் அழகான காரணம் கூறினார். "உமிழ்நீர் சுரந்தால்தான் உடம்புக்கு நல்லது. சாப்பிடுவது அப்போதே செரிமானமாகும். நாக்கு வற்றினால் எத்தனை கஷ்டமாயிருக்கிறது? ப்ரத்யக்ஷயமாகவே தெரிகிறதே! ஷட்ரஸங்களில் சர்க்கரை, வெல்லம், கல்கண்டு மாதிரித் தித்திப்புக்கு மூலச் சரக்காயிருப்பது மட்டுந்தான் நாக்கில் வைத்தவுடனேயே உமிழ்நீர் நன்றாகச் சுரக்கிறது. மிளகாய், மிளகு மாதிரியானது இருக்கிற உமிழ்நீரையும் சுர்ரென்று உறிஞ்சிக் கொண்டு விடும். 'நாக்கு பட்டை விட்டு விட்டது!' என்கிறோமல்லவா? புளியும் அந்தத் திசையில் போகிறதுதான். உப்பும் இதே லிஸ்டில் சேர்வதுதான். துவர்ப்பு, கசப்புச் சரக்குகள், இருக்கிற உமிழ்நீரை ஒரேயடியாக இழுத்துக் கொள்ளாவிட்டாலும், அது

@Page 268

சுரப்பதற்கும் உதவி பண்ணுவதில்லை. அதனால்தான் உயிரை ரக்ஷிப்பதற்கு அவச்யமான உமிழ்நீரின் சுரப்புக்குத் தித்திப்புதானே உதவுகிறது என்பதனால்தான் அதையே எந்தவிதமான 'டேஸ்டி'ல் 'டேஸ்ட்' உள்ளவர்களும் (தமது சொல் விளையாடலைத் தாமே ரஸித்துச் சிரித்துக் கொண்டு :) நல்லது, அழகானது என்பதற்கு உபமானமாகச் சொல்கிறார்கள்."

தர்ம நியாய நிரதரான ஸ்ரீசரணர் இவ்விஷயம் தொடருகையில் இனிப்புக்கும் இல்லாத ஒரு சிறப்பு கார்ப்புக்கு இருப்பதையும் எடுத்துக்காட்டி, 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பதுபோன்ற முதுமொழிகள் ஏற்பட்டதற்கு இதுவும் காரணம் என்றார் : "நாக்கில் நீர் சுரப்பதற்குத் தித்திப்பு மட்டுமே ஸஹாயம் பண்ணுவது வாஸ்தவந்தான். ஆனால் பல்லைக் கவனித்தால் அங்கே தித்திப்பு கொஞ்சம் ஹானி பண்ணுவதாகவே இருக்கிறது. பல்வலி, ஈறு வீக்கம் வந்தவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இங்கே ஸஹாயம் பண்ணுவது உப்புச் சேர்ந்த பண்டங்கள்தான்! அமெரிக்காக்கார 'டயடீஷியன்' (உணவியல் நிபுணர்) ஒருத்தரே நமக்கு இந்த விஷயத்தில் 'ஸர்டிஃபிகேட்' கொடுத்திருப்பதாக ஒருத்தர் சொன்னார். நாம் பக்ஷணம் பாயஸம் போட்ட பிறகு கடைசியாக மோர்சாதம், குடிப்பதற்கு மோர் என்று வைத்திருக்கிறோமல்லவா ? இதைத்தான் அவர் கொண்டாடிச் சொன்னாராம். 'தித்திப்புச் சாப்பிட்டதால் பல்லுக்கு ஏற்படக்கூடிய ஹானியை இந்த மோர் ரத்து பண்ணிவிடுகிறது. அது மாத்திரமில்லை. அது ஒரு நல்ல க்ருமி நாசினி. வெறும் புளிப்பு மோராயிருந்தால் ப்ரயோஜனமில்லை. அதுவும் பல்லைச் சேதந்தான் படுத்தும். அதிலே சேர்க்கிற உப்பினால்தான் அதற்கு இந்த (சிரித்து) குணப்படுத்துகிற குணம் உண்டாகிறது' என்று சொன்னாராம். 'உங்கள்

@Page 269

பெரியவர்கள் (முன்னோர்கள்) ரொம்பவும் தெரிந்தவர்களாக இருப்பதால்தான் இந்த மாதிரி விஷயங்களெல்லாமும் கவனித்துச் செய்திருக்கிறார்கள்' என்று ச்லாகித்துச் சொன்னாராம். வெள்ளைக்கார தேசங்களில் உள்ளவர்களில் இருபது, இருபத்தைந்து வயதுக்காரர்கள் கூடப் பல் சொத்தையாகி, பொய்ப்பல் கட்டிக் கொள்கிறார்களென்றால் அதற்குக் காரணமே அந்தத் தேசங்களில் போஜன முடிவில் கடைசி 'அயிட்ட'மாக dessert என்று தித்திப்பு பழமோ, பக்ஷணமோ கொடுப்பதுதான் ; அல்லது அவர்கள் ஓயாமல் சாக்லேட்டை வாயில் வைத்துச் சப்பிக் கொண்டு அதற்கு மாற்றுப் பண்ணிக் கொள்ளாமலிருப்பதுதான் என்றும் சொன்னாராம்.

"பல் வலி, ஈறு வீக்கம் என்றால் உப்புத் தண்ணீர் கொப்புளிக்கிறோமல்லவா ?"

தர்ம நியாய நிரதர் மீண்டும் மதுரத்திற்குத் திரும்பினார். "இங்கே ஒரு விதிவிலக்கைச் சொல்ல வேண்டும். வெல்லம், சர்க்கரை இத்யாதி பல்லுக்கு ஹானி தான். அதி தித்திப்பான தேன்? அது கெடுதியே இல்லை. எப்படி, புளிப்புடன் துவர்ப்பும் சேர்ந்திருக்கிற நெல்லி, மாதுளைகளுக்குப் புளிப்பின் கெடுதி கிடையாது என்று சொன்னேனோ, அப்படியே தித்திப்பினால் உண்டாகிற கெடுதிகள் எதுவும் தேனுக்குக் கிடையாது! பல் வலி, ஈறு வீக்கத்துக்குத் தேனை அந்தப் பல், ஈடு மேலே தடவினால், தித்திப்பாக இருந்தும் அதுவே அந்தக் கெடுதலை குணப்படுத்தும் மருந்தாக ஸஹாயம் பண்ணுகிறது.

"தேனுக்கு ரொம்ப விசேஷம்! தேனபிஷேகம் என்று ஸ்வாமிக்கே பண்ணுகிறோமே! மற்ற சர்க்கரைப் பண்டமானால் தொண்டைக்குக் கெடுதிதான். தேனோ அந்தக் கெடுதியைப் போகக்கடிக்கும் மருந்தாயிருக்கிறது!

@Page 270

தொண்டையிலிருந்து புறப்படும் குரல் ரொம்ப மதுரமாயிருந்தாலும் தேனான சாரீரம் என்கிறோம்!.... ஆயுர்வேத லேஹ்யங்களில் அநேகம் தேன் சேர்ந்ததுதான். சர்க்கரையை அங்கே கிட்டவே விடமாட்டார்கள்! சூர்ணமாக அவர்கள் கொடுக்கிற எல்லா மருந்தையுமே தேனில் குழைத்துத்தான் சாப்பிடச் சொல்கிறார்கள். இப்போது வெளி தேசங்களிலும் Honey Therapy என்றே தேனைப் பல வித நோய் நொடிகளுக்கும் பலவிதமாக ப்ரயோஜனப்படுத்திக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

"தேனைப் பற்றிய ஒரு ஆச்சர்யமான ஸமாசாரம் என்னவென்றால் ஒன்றுக்கொன்று நேரெதிரான கோளாறுகளுக்கும் அது மருந்தாக இருக்கிறதுதான். தூங்கி வழிபவன் சாப்பிட்டால் அவனுக்கு விருவிருப்பூட்டி உத்ஸாஹப்படுத்தும். 'தேன் குடிச்ச நரி' என்றே பழமொழி சொல்கிறோம்! தூக்கம் வராமல் அவஸ்தைப்படுகிறவன் சாப்பிட்டால் அவனுக்குத் தூக்கம் வரும்படிப் பண்ணும். பெருத்துப் போனவர்கள் எலுமிச்சஞ் சாற்றோடு சேர்த்துச் சாப்பிட்டால் இளைக்கிறதுக்கு உபகாரம் பண்ணும். இளைத்துக் கிடக்கிறவர்கள் பாலோடு சேர்த்துச் சாப்பிட்டாலோ நல்ல புஷ்டி பண்ணும். பொதுவாகத் தெரிந்தது, தேன் மலத்தைக் கட்டுவது என்றே. ஆனால் ஒரு நாட்டு வைத்யர் சொன்னார், ஏதோ ஒரு அளவில் ஏதோ சில சரக்குகளோடு சேர்த்துக் கொடுத்தால் அதுவே மலமிளக்கியாகவும் இருக்கிறது என்று. சீதள சரீரக்காரர்களுக்கு உஷ்ணம் தருவது, உஷ்ண சரீரிகளுக்கு அளவாகச் சேர்த்தால் உஷ்ணத்தைக் குறைப்பது என்பதாக இரண்டிற்கும் தேன் மருந்தாக இருக்கிறது.

"இதனாலெல்லாம்தான் ரொம்ப அநுகூலமாக, ப்ரேமையாக இருப்பதைத் தேனாய்க் கசிவது, தேனான மனசு என்று சொல்வதாய் ஏற்பட்டிருக்கிறது.
@Page 271

"சர்க்கரை வியாதிக்காரர்களுக்கும் கொஞ்சம்போறத் தேன் சேர்க்கலாமென்று அபிப்ராயமிருக்கிறது.

"சர்க்கரை வ்யாதி என்றேன். அதைச் சொன்னதில், ஷட்ரஸங்களில் விசேஷமானவை என்று சொன்ன தித்திப்பு, உவர்ப்பு இரண்டையும் டாக்டர்கள் எப்படி ஒரு பக்கத்தில் பலம் ஏற்றுவரற்கு ப்ரயோஜனப்படுத்துகிறார்கள், இன்னொரு பக்கத்தில் சில வ்யாதிக்காரர்களிடம் அதுகளைக் கிட்டேயே வரக்கூடாது என்று தள்ளுகிறார்கள் என்பது நினைவு வந்தது. 'டயபடீ'ஸைச் சர்க்கரை வியாதி என்றே சொல்கிறோம். (சிரித்தவாறு) சர்க்கரை கிட்டேயே வரப்படாத வியாதிக்கு அப்படிப் பேர்! தேஹத்தில் சர்க்கரை ஸத்து ஜாஸ்தி தேங்கிவிட்டதால் உண்டாகிற வியாதியானதாலேயே அப்படிப் பேர் வைத்திருக்கலாம்! B.P., 'ஹார்ட்' (இதய நோய்) என்றால் அதே மாதிரி உப்பைத் தள்ளச் சொல்கிறார்கள். 'அல்ஸர்' என்றால் புளிப்புக் கூடாது, உறைப்புக் கூடாது என்று! (சிரித்தவாறு) நாம் நாக்குக்குப் பிடிக்கவில்லை என்று தள்ளுகிற கசப்பு, துவர்ப்புக்களைத்தான் மெடிகலாகத் தள்ளாமல் வைத்திருக்கிறது! அனேக மருந்துகளே – இங்கிலீஷ் 'மெடிஸின்'களுந்தான் – கசப்புத்தான். அவற்றை நாம் தள்ளிவிடாமல் (மீண்டும் மனம் கவர் சிரிப்புடன்) உள்ளே தள்ளுவதற்காக 'ஷுகர்–கோட்'! சர்க்கரை–உப்புகளை இப்படி ஓரொரு வ்யாதிஸ்தர்கள் தள்ளும்படி வைத்தாலும், பொதுவாக எவராவது ஓரே சோகையாகப் போய் ஹீனமாகிவிட்டால், தேஹம் வற்றி 'டிஹைட்ரேட்' ஆகிவிட்டால் அப்போது அந்த இரண்டைத்தான் க்ளூகோஸ், ஸலைன் ஸொல்யூஷன்களாக நேராக ரத்தோட்டத்திலேயே drips என்று ஏற்றுகிறார்கள். க்ளூகோஸ் என்றால் கெமிகலாகப் பண்ணி விற்கிறதுதான் நமக்குத் தெரிகிறது. அந்த சர்க்கரை ஸத்து

@Page 272

இயற்கையாகவே பல பதார்த்தங்களில் இருப்பதுதான். த்ராக்ஷா ரஸம், தேன் என்ற இரண்டிலுமே விசேஷமாக இருக்கிறது. அந்த இரண்டையும்தான் மது என்றும் சொல்வது.

"மதுரம் என்ற வார்த்தை 'மது' என்பதை வைத்தே ஏற்பட்டது. 'மது'வின் தன்மைதான் 'மாதுர்யம்', 'மதுரம்' என்கிறவை. அந்த மதுவுக்கு நேர் அர்த்தம்

என்னவென்றால்… நாம் கள்ளு என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். தென்னை, பனையிலிருந்து எடுத்துப் பண்ணுகிற தப்பு ஸமாசாரம் அது. வாஸ்தவத்தில் மது என்பது இப்படி நாம் 'பண்ணுகிற' எதுவாயுமில்லாமல், புஷ்பங்கள் தாமாகவே சுரக்கிற தேன்தான். மதுவுக்கு முதல் அர்த்தம் தேன்தான்.

"தித்திப்புச் சரக்குகளிலும் எதில் கொஞ்சங்கூடக் கெடுதி இல்லாமல் ருசிக்கு ருசி, மருந்துக்கு மருந்து, இதெல்லாம் மட்டுமில்லாமல், குணாபிவிருத்தி, ஆத்மாபிவிருத்திகளுக்குங்கூடப் பிரயோஜனப்படுவதாக இருக்கிறதோ அந்தத் தேனை வைத்துத்தான் 'மதுரம்' என்ற வார்த்தையே உண்டாயிருக்கிறது."

மதுரம் குறித்த மாஹாத்மியத்தை இப்படி சொல்லித் தலைக்கட்டினார் மஹா பெரியவாள்.

நாமும் இந்த விருந்துக்கு desert–ஆக ஒரு பழத்துடன் சொல்–சிந்தனைச் செல்வர் என்ற தலைப்பில் ஸ்ரீசரணரை தரிசனம் செய்வித்ததற்குத் தலைக்கட்டிவிட்டு அவரது வித வித மதுரங்களைச் சொல்லப் புகுந்த இத் தொடரில் அடுத்ததற்குச் செல்வோம்.

ஸ்ரீசரணரிடம் நெடுங்காலம் நெருங்கிப் பணிபுரியும் பேறு பெற்ற ஸ்ரீ பாலுவிடம் அவர் பணி தொடங்கிய ஆரம்ப காலத்தில் ஒரு நாள் ஸ்ரீசரணாள் ஆரஞ்சுப் பழத்திற்கு ஏன் அப்படிப் பேர் என்று கேட்டார்.

@Page 273

"தெரியவில்லை" என விடை வந்தது.

"சரி, இந்த ஆரஞ்சை உரி" என்று சொல்லித் தம் முன் ஸமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரு பழந்தை அவர் கையில் போட்டார் ஸ்ரீசரணர்.

சீடர் உரித்தார்.

"எத்தனை சுளை இருக்கு ? எண்ணிப் பார்" என்றார் ஸ்ரீசரணர்.

சீடர் எண்ணிப் பார்த்து, "பதினொண்ணு" என்றார்.

ஸ்ரீசரணவர், "எல்லா ஆரஞ்சிலும் இப்படித்தான் கணக்காப் பதினோரு சுளையிருக்கும். உரிச்ச பழத்தைக் கை போகிற போக்கில் ரெண்டாப் பிரிச்சா ஒரு

பாகத்துல ஆறு சுளை, இன்னொண்ணுல அஞ்சு சுளை–ன்னே பிரியும். ஆறு 'ப்ளஸ்' அஞ்சு–ங்கிறதை வெச்சுத்தான் 'ஆரஞ்சு'ன்னு பேர் ஏற்பட்டது" என்றார்.

ஆங்கில வார்த்தையான ஆரஞ்சு என்பதற்கு தமிழா மூலம்? பல ஆங்கில வார்த்தைகளுக்கு தமிழ் மூலம் காட்டி, ஆர்ய–த்ராவிட பாஷைகள் என்ற பெயரில் இன பேதம் செய்திருப்பது சரியில்லை என்று ஸ்ரீசரணாள் விளக்கியதுண்டு. அது அவரது அநேக மதுரங்களில் பல்கலையறிவைச் சொல்கையிலேயே இடம் பெறத் தக்கது. இங்கே நாம் 'டெஸ்ஸர்ட்' பழமாகப் பெற்ற ஆரஞ்சு விஷயமாக மாத்திரம் தொடர்வோம்.

பிறிதொரு சமயம் ஆங்கில 'ஆனர்ஸ்' படித்த ஒருவரிடம், "ஆறு ப்ளஸ்' அஞ்சுதான் ஆரஞ்சு ஆச்சுங்கிற அபிப்ராயம் ஸரியில்லைதானே?" என்று ஸ்ரீசரணர் கேட்டார்.

"ஆமாம்" என்றார், கேட்கப்பட்டவர்.

ஸ்ரீசரணர் உடனிருந்த எல்லோருக்கும் பொதுவாகக் கூறலானார். " 'நாரத்தை'ன்னு சொல்றோமே, அந்த

@Page 274

வார்த்தை 'நாரங்கி'–ங்கிற ஸம்ஸ்கிருத மூலத்திலேந்து வந்ததே. அந்த நாரத்தை ஜாதிதான் ஆரஞ்சு. அராபிய பாஷையில நம்ம நாரங்கி 'நாரஞ்ஜ்'–னு ஆயி இங்கிலீஷ் காராகிட்டப் போய்ச் சேர்ந்தது. அவாளும் அப்படியே உச்சரிச்சு, norange–னு ஸ்பெல்லிங் குடுத்து, ஒரு ஒத்தைப் பழத்தை 'a norange'–னு சொன்னா. போகப் போக என்ன ஆச்சுன்னா, vowel–ங்கிற உயிரெழுத்துக்கு முன்னால 'a'–ங்கிறது 'n' சேத்துண்டு 'an'–னு ஆயிடுமோன்னோ? Norange–ல மொத(ல்) எழுத்தா வர 'n'–னும் அப்படித்தானாக்கும்னு நெனச்சு அதை முந்திவர 'a'–யோட சேத்து, 'a norange'–ங்கிறதையே 'an orange'–னு ரெண்டு வார்த்தையாப் பிரிச்சுட்டா! ஸம்ஸ்க்ருத 'நாரங்கி'யேதான் இப்படி இங்கிலீஷ் 'ஆரஞ்ஜ்' ஆயிடுத்து!"

ஆங்கிலப் பட்டதாரியைப் பார்த்து, "இந்த மாதிரி ஒரு வார்த்தையோட கடைசி அக்ஷரத்தை அடுத்ததோட சேத்துப் புது வார்த்தை உண்டாறதுக்கு 'லிங்க்விஸ்டிக்'ஸில ஏதோ பேர் உண்டே, அது என்ன?" என்று கேட்டார்.

பட்டதாரிக்கு நினைவில்லை. "அப்புறமாப் பாத்துண்டு வா!" என்றார் ஸ்ரீசரணர்.

அவ்விஷயம் நாமும் 'அப்பறமா' ஸ்ரீ பெரியவாளைப் பல்கலையறிவினராகப் பார்க்கும்போது பார்க்கலாம்.

பெரியவாள் போடும் சாப்பாட்டு விருந்தை மருந்தளவேனும் காட்டிய திருப்தியுடன் முடிக்கிறோம். இலை போட்டு அதில் தானே விருந்தைப் படைப்பது? அந்த இலையைத் தரும் வாழை ஜாதி பற்றி அவர் வாய்மொழி கூறாது முடிக்கலாமா?

"மர ஜாதியில் வாழை ரொம்பச் சின்னதான ஒன்றுதான். ஆனால் பெரிய பெரிய மரங்களுக்கும் இலை



துளியளவே இருக்கும்போது, இதற்குத்தான் 'போட்டுக் கொண்டு சாப்பிடுகிற' அளவுக்குப் பெரிசாக இலை! அப்படி, தாய் மனஸோடு சாதம் போட்டுப் பார்க்கிறதாலேதான் வாழையை நம் ஸம்பிரதாயத்தில் உசத்தி வைத்திருக்கிறது.

"எத்தனையோ பழங்கள் நல்ல ருசியாக, தேஹாரோக்யம், புஷ்டி தருவதாக இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அதில் வாழை ஒன்றைத் தவிர எதையாவது அதையே முழுச் சாப்பாட்டுக்குப் பதிலாகச் சாப்பிட முடிகிறதோ? முப்பழங்களில் மீதி இருக்கிற மா, பலாப் பழங்களைக்கூட வயிறு ரொம்புகிற மாதிரிச் சாப்பிட முடிகிறதோ? ஒரு வேளை ஆப்பிள் அப்படி இருக்கலாம். ஆனால் அது பணம் படைத்தார்களுக்கு தான் கட்டுப்படியாகும். ஸர்வ ஜனங்களும் காசு கொடுத்து நாலு பழம் வாங்கிச் சாப்பிட்டு வயிறு தம்மென்று நிறையும்படி இருப்பது வாழைதான். அதுதான் (சிரித்து) 'பீபிள்ஸ் ஃப்ரூட்'!

"வாழைப்பழம் ஆஹாரம் என்றால் வாழைப் பூ மருந்து. பழமாகும் போது தித்திக்கிற அது பூவாக இருக்கும்போது துவர்க்கிறது. துவர்ப்புப் பண்டங்களே உடம்புக்கு ரொம்ப நல்லது. பூஞ்சைக் குடலுக்குக்கூட வாழைப்பூ ஏற்றது.

"மற்ற பூக்கள் வாஸனை. வாழைப் பூ மட்டும் அப்படியில்லை. வாஸனா ஸஹிதம், வாஸனா க்ஷயம் என்று வேதாந்தத்தில் சொல்கிறார்களே, அதைக்

காட்டுவதாக இது இருக்கிறது. இன்னும் வேதாந்தமாக ஒன்று : விதை போடாமல் முளைப்பது அது. கர்மா விதையிலேதான் ஜீவன் மறுபடி மறுபடி பிறந்து வினையைப் பிறவிதோறும் விதைத்துப் புனர்ஜன்மங்கள் எடுத்துக்கொண்டே இருப்பது. அந்த வித்து அடிபட்டுப் போன ஞானத்தை வாழை நினைவூட்டுகிறது.

@Page 276

"இப்படிச் சொன்னதால் அது வாழ்க்கைக்கு ஸம்பந்தப்படாதது என்று அர்த்தம் இல்லை. வாழ்கிற மட்டும் நல்லபடி வாழ்வதற்கும் அதுதான் பாடம் போதிப்பது.

" 'வாழ்வு' என்ற வார்த்தை ஸம்பந்தமானவே 'வாழை' நம்முடைய வாழ்க்கையில் கொஞ்சமும் வீண், வ்ருதா இல்லாமல் முழுக்கப் பிரயோஜனமாக இருக்க வேண்டுமென்பதுதானே 'ஐடியல்'? அந்த 'ஐடிய'லை ரூபித்துக் காட்டுவதாக இருப்பது வாழை. தண்டு, பட்டை, நார் உள்பட, இலை, பூ, காய், பழம் என்று அதன் ஸர்வாங்கமும் பிரயோஜனமுள்ளதாக இருக்கிறதல்லவா? ஆனபடியால் 'வாழ்க்கை', 'வாழ்வு' என்று அதற்கே பெயர் வைக்கிற அபிப்ராயத்தில்தான் 'வாழை' என்று பெயர் வைத்தது.

"அதை வாழை மரம் என்கிறோம். மரம் என்றால் அது சொர சொரவாக இருப்பதுதானே வழக்கம்? இது ஒன்று மாத்திரம் வழவழாவாக இருக்கிறது! கரட்டு முரட்டுத்தனமில்லாமல் மழமழவென்று எல்லாவித மநுஷ்யர்களுக்கும் ஸந்தர்ப்பங்களுக்கும் அநுகூலமாக நம்மைப் பண்ணிக் கொள்ள வேண்டும் என்பதை உபதேசிக்கிறதே அந்த வழவழ! வழவழப்பை வைத்தும் அதற்கு 'வாழை' என்று பெயர் கொடுத்திருக்கலாம்.

"விதையாகி வம்ச விருத்தி ஏற்படுத்திக் கொள்ளும் மா, ஆல், இன்னும் அநேக வ்ருக்ஷங்களில் கணக்கு வழக்கில்லாமல் விதைகள் தோன்றுகின்றன. அது ஒவ்வொன்றும் முளைத்தால் இந்தப் பூமியே ஒரு வ்ருக்ஷ ஜாதிக்குக் கூடப் போதாது. அப்படி நடக்காததால் அந்த விதைகளில் பெரும்பாலானவை முளைப்பதில்லை என்று தீர்மானமாகிறது. முளைத்திருப்பதிலும் எந்தக் கன்று எந்தத் தாய் மரத்தின் விதையிலிருந்து முளைத்திருப்பது என்பது

@Page 277

எவருக்கும் சொல்லத் தெரியாததாக இருக்கிறது. வாழையில்தான் தாய் மரத்தைச் சுற்றியே அதன் கன்றுகள் முளைப்பதால் இதிலிருந்து இது பிறந்தது என்று

தீர்மானமாகத் தெரிகிறது கன்று பிறந்ததோடு தாய் வாழ்க்கையை முடித்துக்கொண்டு விடுகிறது. ஸத்பிரஜை உண்டான அப்புறம் தாம்பத்யம் இல்லாமலிருந்து ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நமக்கு தர்ம சாஸ்திரம் சொல்கிறதென்றால், வாழையோ அதைவிட ஞானத்துடன் பெரிய ஸந்நியாஸமாகப் போயே போய்விடுகிறது. இங்கே வேதாந்தம். இதிலேயே வாழ்க்கைத் தத்துவமும்! நல்ல ப்ரயோஜனமுள்ள ஒரு வாழை, அதே ப்ரயோஜனத்துக்காக லோகத்திற்குத் தரும் ப்ரஜைகளான கன்றுகளை, இந்த ப்ரஜை இந்த அம்மாவுக்குப் பிறந்தது என்று நமக்கெல்லாம் காட்டும்படி இருக்கிறதல்லவா? வேறே எந்த மரத்தின் விஷயமாகவும் அப்படி இல்லையே! அதனால்தான் 'வாழையடி வாழையாக வாழ்' என்று வாழ்த்துவதாக இருக்கிறது. அந்த வாழ்த்துக்கு அடையாளமாகவே கல்யாணங்களிலும் மற்ற மங்கல வைபவம் எதிலுமே வாழை கட்டுவதாக ஏற்பட்டிருக்கிறது. வாழை மரம் மங்களச் சின்னம்."

இதோடு நாமும் ஸ்ரீசரணரின் போஜனப் படையலுக்கு மங்களம் பாடுவோம்.

சொல் விளையாடல் புரியும் ஸ்ரீ சரணர் பிறரது சொல் விளையாடல்களையும் ரசித்து மகிழ்ந்து, ரசிப்பு மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிரிந்துகொண்டு ருசிப்பவர். மர்மப் புதிராகச் சொல்விளையாடல் செய்துள்ள ஸித்தர்களின் பாடல்களை அழகுற 'அவிழ்த்து'க் கொடுத்தவர். அப்படி ஒன்று – மூன்றாம் அத்தியாயத்தில்* வைத்த 'ஸஸ்பென்'ஸையும் நீக்குவதாக.

---

*ப. 31–2.

@Page 278

இதில் பெரியவாளின் நாகரிக நயமும் வெளியானது ஒரு கூடுதல் சிறப்பு. அப்பாடற் பொருளைப் பொதுச் சபையில் பொத்தைப் பூசணிக்காயாக உடைத்துச்சொல்வது நாகரிகமாயிராது என்ற நுண்ணுணர்வுடன், புதிரை அவிழ்க்கத்தான் செய்தாரெனினும் 'அவிழ்ப்பி'லும் சிறிது உட்பொருளை ஒளித்து வைக்கத்தான் செய்தார் – ஓரளவு ஊக புத்தியுள்ளவரும் ஒளித்ததைக் கண்டு கொள்ளும் படியான மெருகுடன்! அவருக்குத்தான் ஊகு போல் எத்தனை கூரறிவு?

"மாங்காப் பாலுண்டு மலைமேல் இருப்போருக்கு!

தேங்காப் பால் ஏதுக்கடி! குதம்பாய்!
தேங்காப் பால் ஏதுக்கடி ?"

நாட்டுப் பண்ணில் மதுரமாகப் பாடியே காட்டிய பெரியவாள் தொடர்கிறார்.

"ஸித்தர் பாடல்களில் இது ஒன்று. பாட்டில் 'குதம்பை' என்று வருகிறது. பாட்டைப் பண்ணினவர் பேரும் குதும்பைச் சித்தர்தான். அதென்ன குதம்பை ?

"பெண்டுகள் காதில் போட்டுக்கொள்ளும் ஒரு நகைதான் அது. 'குதம்பாய்!' என்றால் 'குதம்பையைப் போட்டுக் கொண்டிருக்கிறவளே!' என்று கூப்பிடுவது.

"கவிகள் ரஸம் சேர்க்கிறதற்காக பாடல்களைக் குறிப்பாக ஒருவரை 'அட்ரஸ்' பண்ணி அவரிடம் சொல்கிறதாகக் கட்டுகிறதுண்டு. 'அடியே!' 'அடா!' என்றெல்லாம் பல பாட்டில் கேட்கிறோம் ; 'தோழீ!' 'ஸகியே!', 'அம்மா!' – இப்படியெல்லாமும்! 'கிளியே!' என்றும் அநேகம்! ஒவ்வொரு அடியிலும் அப்படிக் கிளியைக் கூப்பிடும் பாடல்வகைக்குக் 'கிளிக் கண்ணி' என்றே பெயர்.

" 'கண்ணி' என்றால் மாலை. பல அடிகளை மாலை மாதிரித் தொடுத்து ஒரே பாடலாக்குவதுதான் இந்த

@Page 279

இலக்கியக் கண்ணி. அதில் ஒவ்வொரு அடியிலும் மூன்று வரிதான் இருக்கும். அதிலே பலவற்றில் மூன்றாம் வரி இரண்டாவதை 'ரிபீட்' செய்வதாகவே இருக்கும்.

"அப்படித்தான் இப்போது சொன்ன பாட்டில் (இசை முனகலாக) "தேங்காப்பால் ஏதுக்கடி ?' என்கிற இரண்டாவது வரியே மூன்றாவதாகவும் வருகிறது. இரண்டாவதில், 'குதம்பாய்' என்று மட்டும் ஒன்று கூடுதலாக வருகிறது. எந்தக் கண்ணியானாலும் அது யாரை 'அட்ரஸ்' பண்ணுகிறதோ அவரைக் கூப்பிடுவது அநேகமாக இரண்டாவது வரி முடிவில்தான். இங்கே 'குதம்பாய்!' என்று இருக்கிறாற்போலவே கிளிக் கண்ணியானால் அதே இடத்தில் 'கிளியே!' என்று வரும்."

பாட்டு மன்னராக நாட்டுப் பண்ணில் மீண்டும் மதுரம் பிலிற்றுகிறார்.

"வள்ளிக் கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடீ! கிளியே!
ஊனும் உருகுதடீ!"

"மாங்காப் பாலில் அல்லவா இருந்தோம்? அது குதம்பைச் சித்தர் பண்ணினது என்றேன். ஸித்தர்கள் தங்கள் ஊர்–பேர் தெரிவித்துக்கொள்ளாமல், 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்றே வசனம் சொல்கிற மாதிரி விசித்ரமாக இருப்பார்கள்; செய்கிறதெல்லாம் – பாடல் செய்கிறதும்கூட – ஒன்றும் புரியாமல் விசித்ரமாகச் செய்வார்கள். அப்படி ஊரா, பேரா தெரியாமலேதான் இந்த ஸித்தர் இருந்திருக்கிறார். குதம்பை போட்டுக் கொண்டிருப்பவளைக் கூப்பிட்டு அவர் பாட்டுப் போட்டுக் கொடுத்தாரா? அதனால் ஜனங்கள் அவருக்குக் 'குதம்பைச் சித்தர்' என்கிற பெயர் கொடுத்து விட்டார்கள்!

"சரி! பாட்டுக்கு என்ன அர்த்தம்?"

@Page 280

"ரொம்ப உசந்த அர்த்தம். குண்டலிநீ யோகத்தில் முக்யமாகச் சொல்லியிருக்கிறதைத்தான் ஏதோ நாட்டுப் புறத்து வேடிக்கைப் பாட்டு மாதிரிப் பாடிக் கொடுத்திருக்கிறார். தேங்கா–மாங்கா என்று போட்டு!

"வெறும் இந்திரிய போகம் என்பதை அனுபவித்துக் கொண்டு, சிற்றின்பம் என்கிறதிலேயே ஆனந்தப்பட்டுக் கொண்டு இருக்கிறவர் ரொம்பவும் கீழ்நிலையில், யோக மார்க்கம் என்ற பெரிய மலைமேலே ஏறாமல் மலையடிவாரத்திலே போக மார்க்கத்திலேயே உழன்று கொண்டிருப்பவர்கள். அவர்கள் ஜீவஸத்தை சிற்றின்பத்தில் நஷ்டப்படுத்திக்கொள்கிறார்கள்.

"யோக மார்க்கத்தில் போகிறவர்கள் என்ன பண்ணுகிறார்கள்? தாங்கள் அப்யஸிக்கிற ஸாதனைகளால் ஜீவ ஸத்து நஷ்டப்படாமல் அதை ரக்ஷித்து, அதையே அவர்கள் முடிவிலே காண்கிற பேரின்ப ஸத்தாக மாற்றிக் கொள்கிறார்கள். சிற்றின்பம் காண்கிறவர் கீழ் மட்டத்தில் இருக்கிறாற்போலவே அப்போது ஜீவ ஸத்தும் – அந்த ரஸமும் – முதுகெலும்பில கீழேயே இருக்கிறது. அங்கேயும் சர்ச்வதமாகத் தேங்கியில்லாமல் அநுபோகத்தில் நஷ்டமாகிவிடுகிறது. அதனால் தேஹ பலம், புத்தி பலம், ஆத்ம பலம் எல்லாமே நஷ்டமாகிறது. யோகம் பண்ணப் பண்ண என்ன ஆகிறது என்றால் அந்த ரஸம் அடியிலேயிருந்து தண்டுவடத்திற்குள்

(முதுகெலும்புக்குள் உள்ள) பத்மங்கள் வழியாக – அதிலே சக்கரம், சக்கரமாக இருக்கிற ஸூக்ஷ்மமான அவயவங்களைப் பத்மம் என்றும் சொல்கிறது ; அவற்றின் வழியாக – மேலே ஏறிக்கொண்டே போகும். யோகம் பண்ணுகிறவர்களின் தேஹ பல, புத்தி பல, ஆத்ம பலங்களும் அதற்கேற்ப மேலே மேலே உசந்து கொண்டே போகும். முடிவாக அவர்கள் பேரின்பமாகிற லக்ஷ்யத்தை அடைகிறபோது, அந்த ஜீவ ரஸமும்

@Page 281

உச்சந்தலைக்குப் போய் அங்கேயுள்ள பத்மத்தை அடையும். அப்போது, வற்றாத அம்ருதரஸமாகவே அது மாறி அங்கேயிருந்து அத்தனை நாடிகளிலும் குளு குளுவென்று கொட்டி ஹ்ருதயம் பூராவையும் மாதுர்யத்தால் ரொப்பிவிடும். நம்முடைய அஞ்ஞான தசையிலும், நமக்குத் தெரிந்த அளவில் ரொம்பவும் இன்பமாக ஒருத்தர் நமக்கு ஒன்று செய்து விட்டால் 'உச்சி குளுந்து போச்சு!' என்கிறோம், 'ஐஸ் வைக்கிறது' என்கிறோமே, அது அந்த உச்சந்தலைப் பத்மத்திலிருந்து குளிரக் குளிர அம்ருதம் பெருகுவதை வைத்து ஏற்பட்ட வார்த்தைதான்! தாமரையிலிருந்து தேன் பெருகுகிற மாதிரி இந்தப் பத்மத்திலிருந்து இந்தத் தேன்! 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்று ஈச்வரானுக்ரஹத்தை மனஸ் உருகிப் பாடின மாணிக்க வாசகர் அந்தப் பாட்டிலே, 'ஆனந்தமாயத் தேனினைச் சொரிந்து' என்பது இந்த அம்ருதத்தைத்தான்! 'ஆனந்தமாய' என்கிறதை, 'ஆனந்த', 'மாய' – 'ஆனந்தமான', அதோடு 'மாயமான' – என்று பிரித்து அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. 'ஆனந்தமாகிய' என்பதைத்தான் அப்படி ('ஆனந்தமாய' என்று) சொல்லியிருக்கிறது. அது மாயைக்கு நேர் 'ஆப்பஸிட்' ஸமாசாரம்!

அந்த அம்ருதத் தேன் நாடிகளிலெல்லாம் ஸதா காலமும் பாய்ந்து கொண்டிருந்தாலும், குறையாமல் அக்ஷயமாக ஊற்றெடுத்துக்கொண்டேயிருக்கும். அதனுடைய சக்தியும் எத்தனை காலமானாலும் குறையாது. அதாவது அது எப்போதும் மங்காத சோபையுடனேயே இருக்கும்படியான சுத்த ஸத்வமான வெள்ளை ரஸம். அதைத்தான் – அந்த மங்காத சைதன்ய ரஸத்தைத்தான் – பாட்டை ஆரம்பிக்கும்போதே 'மாங்காப் பால்' என்று சொல்லியிருக்கிறார். 'மங்காப் பால் என்பதையே Poetic

@Page 282

licence–ல் நீட்டி 'மாங்காப் பால்' என்று போட்டு நம்மைக் குழப்பி வேடிக்கை பார்த்திருக்கிறார்! 'நிழல்' என்கிறதை 'நீழல்' என்று ; 'நடத்தி' என்பதை 'நடாத்தி' என்று சொல்கிறமாதிரி, 'மங்கா–மாங்கா'.

" 'மங்காப் பால் உண்டு மலைமேல் இருப்போருக்கு' என்கிறதில் 'மலைமேல் இருக்கிறவர்'தான் யோக மார்க்க மலையின் உச்சிக்குப் போனவர் ; கீழ் மட்டத்திலுள்ள போக பூமியாகிற இந்த வெளகிகமான மலையடிவாரத்திலிருந்து உசரக் கிளம்பிப் போகிற யோக பூமியின் சிகரத்தில் இருக்கிற ஸித்தர்கள்.

"அவர்களுக்கு என்றைக்கும் மங்காத அந்த அம்ருத ரஸாஸ்வாத அனுபவம் இருக்கும்போது – பேரின்ப அனுபவமே இருக்கும்போது – சிற்றின்ப அநுபவம் எதள்காக ? 'ஏதுக்கடி ?' கேட்கிறாரே, குதம்பாயைக் கூப்பிட்டுக் கேட்கிறாரே, அப்படி, எதுக்கு வேண்டுமாம் ?"

'ஏதுக்கடி' என்ற ஒரே சொல்லைச் சரியாக அதற்கான மெட்டில் ஜாடை காட்டியே பெரியவாள் கூறியது / பாடியது அவரது கவியுள்ள மதுரத்தில் ஒரு சொட்டு!

"சிற்றின்ப அனுபவத்தைத்தான் தேங்காப் பால் என்கிறார். அப்போது ஜீவ ஸத்து – ரஸம் – விரஸமாகத்தானே நஷ்டமாகிறது ? ஜீவனிடம் தேங்கியில்லாமல் நஷ்டமாகிப் போகிறது ? அதைத்தான் 'தேங்காய்ப் பால்' என்றது.

"அதுவும் 'சுக்ரம்' என்றே பெயர் பெறும்படி இருப்பதால் அதையும் 'பால்' என்றார். 'ர'வும், 'ல'வும் ஒன்றுக்கொன்று மாறும். 'சுக்ரம்' என்றாலும் 'சுக்லம்' என்றாலும் ஒன்றுதான். அப்படி அது சுக்லமாக இருப்பதாலேயே 'பால்' என்றாலும், இது சுத்த ஸத்வ

@Page 283

வெள்ளையில்லை. அசுத்த அஸத்வம்தான். ஆனாலும் ஈச்வர ஸ்ருஷ்டியில் கரியும் வைரமாகிறாற்போல இதுவேதான் அந்த சுத்த ஸத்வ அம்ருத ரஸமாக மாறுவது. அதனால் 'தேங்காப் பால்' என்றே போட்டார்!

"எல்லாருக்கும் தெரிந்தது தேங்காப்பால் தான். மாங்காப் பால் தெரியாது. ஆனாலும் தெரிந்ததை வைத்து, இதைப் பற்றிய அடிப்படை உண்மையை 'அப்ளை' பண்ணிப் பார்த்தாலே தெரியாததையும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். 'பேரின்பம் ஒரு உணர்ச்சி. அது அப்படி அம்ருதம் என்கிற ஸ்தூல வஸ்துவாக முடியும் ?' என்று குதர்க்கம் பண்ணாமல், ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். தெரிந்ததைப் பற்றிய உண்மை என்ன ? இங்கேயும் ஒரு உணர்ச்சிதானே ஸ்தூலமான அந்தத் 'தெரிந்த' வெள்ளைக்குக் காரணமாக இருக்கிறது. சிற்றின்பத்தில் இப்படி என்றால்,

இதேபோலப் பேரின்பத்தில் ஏன் அப்படி மாங்காப்பால் உண்டாகக் கூடாது?

"எதையும் மேல்—கீழ் என்று உசத்தி கொண்டாடியும், மட்டம் தட்டியும் பேதகம் பண்ண வேண்டாம் என்றும் நமக்குக் கற்பிக்கிறமாதிரியே அந்த ஸித்தர், 'ஏதுக்கடி' என்று சொல்லித் தள்ள வேண்டிய ஒன்றையும், எதைத்தான் லக்ஷ்யமாக அடைய வேண்டுமோ அதையும் ஒரே போலப் 'பால்' என்று சொல்லியிருக்கிறார்!"

ஸித்தர் அப்படி நினைத்துச் சொன்னாரோ, இல்லையோ, எல்லாவற்றையும் பேதமில்லாமல் நம் பாலான தூய நெஞ்சிலே ஒன்றாக அணைத்துக் கொண்ட நமது மஹா மஹானுக்கு அப்படிப் பொருள் தெரிந்திருக்கிறது!

தம்மை வளவள வம்பளப்பராக வர்ணித்துக் கொண்ட மஹா பெரியவாள் உண்மையில் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் அதி ஸமர்த்தர்தாம்.

@Page 284

இதுவரை இதற்குப் பல சான்றுகள் ஆங்காங்கே கண்டிருப்பீர்கள். 'ஆங்காங்கே'—யாக இல்லாமல் அப்படிப் பட்ட சில சுடர் வாசகங்களை இங்கே ஸ்வச்சமாகவே தருகிறோம்.

விண்டு கூறி விளக்க வேண்டிய தேவையில்லாமலே விஷயங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களிடம்தான் அவர் இவ்வாறு சொற் செல்வத்தைச் சிக்கனமாகக் கையாள்வது.

'நீண்ட காலம் வேதாந்த நூல்களைக் கரைத்துக் குடித்துக் கரை கண்டதாகப் பெயரெடுத்த வித்வத்சிம்மங்களில் சிலரும் அவ் வேதாந்த சத்யத்தில் அநுபவம் காணாமல் ஏனைய அஞ்ஞானியர் போலவே வாழ்ந்து ஆயுளையும் முடித்துக்கொண்டு போய் விடுகிறார்களே! மக்களைப் பொதுவாகக் கவரும் ஏனைய துறைகளை விட்டு வேதாந்தத்தைத் தேர்ந்தெடுத்து, அதில் ஆராய்ச்சிக்கே ஆயுளை அர்ப்பித்த இத்தகைய பண்டிதர்களும் அஞ்ஞானத்திற்கு ஆளாவதைப் பார்த்துக் கொண்டு இறைவன் ஏன் வாளாவிருக்கிறான்? அந்நூல்களைச் செய்த அநுபூதியாளர்களின் அநுபவ கனமும் ஏன் இவர்களைத் தொடவில்லை!' என்பதில் வேதனையுற்ற ஓர் அடியார் தம் மனத்திலிருந்த ஆதங்கத்தை ஸ்ரீசரணரிடம் திறந்து காட்டினார்.

கடைசி வரையும் அந்த வித்வான்கள் இப்படியே இருந்து விட்டு

போய்விடுவதைப் பார்த்தால் அனுபவிகளின் சொல்லுக்குள்ள ஆற்றல், இறைவனின் அருள் ஆகியவற்றிலேயே நம்பிக்கைத் தளர்ந்து விடும் போலல்லவா இருக்கிறது என்று கேட்டு வேதனையுடன் முடித்தார்.

அனைவருடனும் அநுதபிக்கும் பெரியவாள் நெகிழ்ந்து போய் இதய விருந்து படைத்து, நெடுநேரம்

@Page 285

ஆற்றிக் கொடுத்து, ஐயத்தை அகற்றி அறிவு விருந்தும் படைப்பார் என்று அவர் எதிர்பார்த்தார்.

பெரியவாளோ சகஜமாக, "கடைசி வரை–ன்னு நீ சொன்னது இந்த ஜன்மா(வுடைய) கடைசிதானே?" என்று கேட்டுவிட்டு தண்டத்தை ஊன்றிக்கொண்டு எழுந்துவிட்டார்!

எத்தனை பெரிய விஷயத்தை 'நாலே' வார்த்தையில் சுருக்கிச் சொல்லிவிட்டார்!

மிக நீண்டி காலம் என நாம் நினைக்கும் ஓர் ஆயுட்காலமும் பிறப்பிறப்புச் சகடத்தில் யுகயுகாந்தரம் பற்பல பிறவிகள் காணும் ஒரு ஜீவனின் ஒட்டுமொத்த வாழ்க்கையில் ஒரு துணுக்குத்தானே? அந்த ஜீவன் வாரிப் பூசிக் கொண்ட அழுக்குத் தடிப்பைக் கழுபவும் ஜன்ம ஜன்மங்கள் பிடிக்கத்தானே செய்யும்? அப்போது ஒரு ஜன்மாயுட் காலம் என்பது? ஆண்டவனிடமும், அனுபவ வாக்கின் கனத்திலும் நாம் குறைப்பட்டுக் கொள்ளவும், நம்பிக்கை குன்றி மனத்தளர்ச்சி அடையவும் இடமளிக்காத சிறிய காலம்தானே?

வெளியுலகில் காணும் பரிணாமத்தில் ஒவ்வொரு மில்லி மீட்டர் முன்னேறவும் எத்தனை ஆயிரமாண்டுகள் ஆகியிருக்கிறது? இதில் ஆண்டவன் காட்டும் 'பொறுமை'க்காக அவனை டாகூர் போன்றவர்கள் சிலாகிக்கக் கூடச் செய்கின்றனரே! உள்ளுலகப் பரிணாமத்திற்கும் இதை ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்? அதையொட்டி பெரியவாள் பலமுறை கூறியிருப்பதை ஒப்பத்தானேவேண்டும்? என்ன கூறியிருக்கிறார்?

"நாம் எத்தனையோ கஷ்டப்படுகிறோம், எத்தனையோ காலமாகக் கஷ்டப்படுகிறோம். ஸ்வாமி கருணையே காட்டவில்லை! அவர் கருணாமூர்த்தியே

@Page 286

இல்லை, கடினச் சித்தர்தான் என்று நமக்குக் கோபம் கோபமாக வருகிறது. வாஸ்தவத்தில் நாம் பண்ணியிருப்பது நமக்குத் தெரியாது. நமக்குத் தெரிந்தது இந்த ஜன்மாதான். முந்தி, பிந்தி தெரியாது. அநாதி காலமாக நாம் பண்ணியிருப்பது நமக்குத் தெரியாது. அது தெரிந்தால் 'நாம் இத்தனைக் கஷ்டப்படுவதும் போதவே போதாது. இன்னும் எத்தனையோ கஷ்டம் இன்னும் எத்தனையோ காலம் பட்டால்தான் நாம் பண்ணிச் சேர்த்துக் கொண்டிருக்கும் மூட்டை கரையும். நம்மை இந்த மட்டோடு அவன் விட்டிருக்கிறானென்றால், நாம் பட வேண்டியதை அவன் எவ்வளவோ குறைத்தே அநுக்ரஹித்துக் கொண்டிருக்கும் கருணா மூர்த்தியேதான் என்று தெரியும்."

இன்று மஹாவித்வான்களாகப் பெயர் கொண்டவர்களிலும் பெரிதாக மூட்டை கட்டிக் கொண்டவர்கள் இருக்கலாம்தானே? அது கரைய அவர்கள் இன்னும் பல பிறவிகள் காண வேண்டியிருக்கலாம் தானே? அந்தப் 'பல'வை ஆண்டவனும், அநுபூதி வாக்கும் ஓரளவேனும் குறைக்கலாமும்தானே? இவ்வுண்மையை எண்ணிப் பாராமல் நிகழ்பிறவி முடியுமுன்பே அவர்கள் மோக்ஷத்திற்கு அருகர்களாகி விடவேண்டுமென வாதிப்பதில் என்ன பொருள்?

பாடகரான ஒரு பக்தல் 'கஞ்ஜதளாயதாக்ஷி' என்ற தீக்ஷிதர் கிருதி பாடி முடித்தார்.

"சரணத்துல 'ஸ்ரீ காஞ்சன வஸனே'–ன்னு பாடினயே, அது 'ஸ்ரீ காஞ்சி நிவஸனே'–ன்னே இருக்கணும். மொதல்ல, 'ஸ்ரீ' போட்டிருக்கறதால, தீக்ஷிதர் அப்படித்தான் பாடியிருக்கணும்" என்றார் மஹா பெரியவாள்.

'காஞ்சன வஸனே' என்றால் 'பொன்னாடை பூண்டவளே!' 'காஞ்சி நிவஸனே' என்றால் 'கச்சியம்பதியில் சிறப்புடன் வசிப்பவளே!'

@Page 287

'ஸ்ரீ காஞ்சன வஸனே' என்ற பாடத்தைக் கொண்டால், கஞ்சி காமாக்ஷி குறித்த இப்பாடலில் அக்கஞ்சியைப் பற்றியே குறிப்பேயில்லாமல்தானிருக்கிறது.

ஸ்ரீசரணர் கூறிய மாற்றம் அக்குறையை நிவர்த்திக்கிறது.

இது தாம் ஏற்படுத்திய மாற்றமல்ல. ஸாஹித்ய கர்த்தரே அவ்வாறுதான் இயற்றியிருக்கவேண்டும் என்று காட்டுவதற்காக, ஸ்ரீசரணர் முதலில் வரும் 'ஸ்ரீ'யைக் குறிப்பிட்டு அதை விளக்காமல் விட்ட சொற்செட்டைக் கவனித்தீர்களா ?

'காஞ்சன வஸணம்' என்பது பொன்னாடை எனக்கண்டோம். பொன்னாடைக்கு எதற்குப் பூஜிதமான 'ஸ்ரீ' என்ற அடைமொழி சேர்க்க வேண்டும் ? அதே போதில் காஞ்சி போன்ற மஹா க்ஷேத்ரங்களுக்கு 'ஸ்ரீ' சேர்ப்பதோ வழக்கிலிருக்கும் ஒன்றுதானே ?

"பகவானுக்கு வஸ்திர–பூஷணங்கள் போட்டு அழகு பாக்கறதும் பகவத் ப்ரீதிக்காக சாஸ்த்ரப்படி நாம் சுத்தமாத் தோச்ச வஸ்திரம் நன்னாப் பட்டை போட்டு (பஞ்சகச்சமாக) உடுத்திக்கிண்டு, பளிச்சுனு விபூதி – குங்குமமோ திருமண்ணோ இட்டுண்டு, ஜபமாலைகள் போட்டுண்டும் இருக்கறதுதான் நெஜமான அலங்காரம். நாம் அழகாத் தெரியணும், பெறத்தியாரை வசீகரிக்கணும்னு பண்ணிக்கிறது அலங்காரமில்லே ; அஹங்காரந்தான். இதை 'அலம்'காரம் பண்ணிடணும். மெதலில் சொன்ன நெஜ அலங்காரத்தை பகவானுக்கும் சரி, சமக்கும் சரி, (ஸ்ரீசரணர் தம்மைத் தாமே தடவிக் கொண்டு தொடருகிறார்:) 'அங்கீ'காரம் பண்ணிடணும்."

இது அறிவாளியான சில வித்வான்களிடம் ஸ்ரீசரணர் கூறியது. எனவே 'அலம்', 'அங்கீ' என்பனவற்றில் ஒருவிதமான ஒலி நயம் கொடுத்து, 'அங்கீ' சொல்கையில்

@Page 288

தமது திருமேனியைத் தடவிக்கொண்டதற்கு அதிகமாக அவர் விளக்கம் தரவில்லை.

வித்வான்கள் புரிந்துகொண்டு ஆஹாகாரம் செய்தார்கள்.

'அலம்' என்றால் போதுமென நிறுத்திவிடுவது. தனக்கே தான் ஒப்படை செய்துகொள்வதற்குப் 'போதும்' சொல்லி முடிப்பதே 'அலம்–காரம்'!

வஸ்திர பூஷணங்களை அங்கங்களில்தானே அணிகிளோம் ? எனவே பகவானது அங்கங்களில் அவ்வாறு சேர்ப்பதும், அவனது ஆணையேயான ஆசார

மரபுப்படி நமது அங்கங்களில் சேர்த்துக் கொள்வதும் 'அங்கீகாரம்'!

ஆன்மியப் பெரியார் ஒருவர் கூறும் ஸாதனா மார்க்கம் பற்றி ஸ்ரீசரணாள் ஸந்நிதியில் தத்துவ இயல் அறிவாளிகளிடை பேச்சு நடந்தது. அதனிடையே உலகை இயற்றி இயக்கும் மகா மனமான இறைவனின் சக்தியை இழுத்து மாந்தருக்கு ஊட்டும் தவம் குறித்து அவர் கூறியிருப்பதை ஒருவர் பிரஸ்தாவித்தார். வேறொருவர் 'இறைவனின் சக்தியை இழுப்பது என்றால் அதை அவ்விறைவனையும் விட அதிக சக்தி பெற்ற ஒருவர் தானே செய்ய இயலும்? அப்படியொருவர் இருக்கமுடியாது என்பது ஒன்று. இரண்டாவதாக, அப்படியும் ஒருவர் இருப்பின் அவர் தம்மிலும் சக்தி குறைந்த இறைவனைக் குறித்துத் தவமிராமல், தாமே தமது அச்சக்தியைப் பாருக்கு ஊட்டலாமே! இறைவனிமிருந்து எவ்விதமான ஓர் அருளைப் பெற விரும்பினாலும் அதற்கு அவனை அருள்புரியக் கோரி எளிமையுடன் சரணாகதி செய்வதுதான் வழியே தவிர அவன் சக்தியை இழுப்பது என்பது சரி வராது' என்றார். அதற்கு முதலாமவர், அந்தப் பெரியாரும் தமது மார்க்கத்தில் முதல் கட்டமாக

@Page 289

சரணாகதியைத்தான் சொல்லியிருக்கிறார் என்று எடுத்துக் காட்டினார்.

அப்போது மஹா பெரியவாள், "மொத(ல்) கட்டம்—னா?" என்ற இரண்டே சொற்களை வினாவாகப் போட்டுவிட்டு, அதோடு விட்டு விட்டார்!

அவர்கள் அறிவாளிகள் அல்லவா? எனவே புரிந்து கொண்டு விட்டனர், 'வபை'யை நேராகச் சுருக்கென்று பிடித்துவிட்ட பெரியவாளை வியந்தனர்.

சரணாகதி என்பது யாவும் இறைவன் வசமே என்று சகலத்தையும் அவன்பால் விட்டுவிட்டுக் கிடப்பது. அதை ஒருவர் செய்கிறாரெனில் அதற்கப்புறம் அவர் செய்ய என்ன இருக்கிறது? முதல், இடை, முடிவு என்ற கட்டங்கள் இன்றி, உதிக்கும்போதே முழுச் சாதனையும் ஆகி விடுவதல்லவா சரணாகதி?

இந்தியா என்பது பிற நாட்டினர் நம் நாட்டுக்கு இட்ட பெயர். பரதக் கண்டம், பாரதம் என்பனதான் நம் முன்னோர்கள் இட்ட நாமம். எனவே நாம் பிற நாட்டினரிடமிருந்து சுதந்திரம் பெற்றபின் பாரதம் என்றே இதன் பெயரைத் திருத்தவேண்டும் என்று சுதந்திர இயக்கத் தலைவர்கள் கருதினர். ஆயினும் உலக நாடுகள் யாவற்றிலும், நம் நாட்டிலுமே, வெகு காலமாய் இந்தியா என்ற பெயர் நிலைபெற்று விட்டதை அவர்கள் கவனித்து, அந்தப் பெயரையும் தாற்காலிகமாக

வைத்துக்கொண்டு பாரதம் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம், இவ்வாறாக 'பாரத'ப் பெயரும் வழங்கப் பழக்கித் தந்து உரிய காலத்தில் ஸ்வதேசத்தில் மட்டுமாயினும் அப்பெயரே நிலைக்குமாறு செய்யலாம் என்று முடிவு செய்தார்கள். அதன்படிதான் நம்முடைய அரசியல் நிர்ணய சாஸன தொடக்கத்தில் India that is Bharat – 'இந்தியா என்பதான பாரதம்' என்று

@Page 290

கூறப்பட்டிருக்கிறது – இவ்விஷயங்கள் பெரியவாள் திருமுன் உரையாடலுக்கு வந்தன.

பெரியவாளின் திருவுளத்தை நன்கறிந்தவரும், நமது தேசிய சமயாசார கலாசாரங்களில் பற்று மிக்கவருமான ஒருவர் அப்போது, 'பெயரில் பாரதம் என்று சொல்லி என்ன பிரயோஜனம்? மக்கள் முற்றிலும் மேல் நாட்டு வாழ்முறைகளையே மேற்கொண்டு விட்டநிலையில் அதை மாற்றி பாரதீயமாக்க எந்த முயற்சியும் செய்யாமல் அதிலேயேதானே அரசு அவர்களை மேலும் ஊக்கி வருகிறது?' என்று கேட்டார்.

அப்போது ஸ்ரீசரணாள், "ஒன்று செய்யலாம். 'கான்ஸ்டிட்யூஷ'னுக்குத்தான் தினம் ஒரு 'அமென்ட்மென்ட்' கொண்டு வந்திண்டிருக்காளே, அப்படி இன்னொரு அமென்ட் பண்ணிப்பிடலாம் : 'India that ia anything but Bharat–னு' என்று போடு போட்டார்!

'பாரதமாக இன்றி வேறெதுவாகவும் இருக்கும் இந்தியா' என்பதே அவர் 'யோஜனை' கூறிய அந்தச் சுடர் மாற்றம்!

"எல்லா விஷயத்திலேயும் 'ஈக்வாலிடி'ன்னு கண்ணை மூடிண்டு போய் 'க்பாலிடி' போயிடறாப்பல பண்ணிடக் கூடாது" – ரத்தினச் சுருக்கமாக ஸ்ரீசரணர் கூறிய சிந்தனையைத் தூண்டும் இக் கருத்துடன் இந்தப் பிரிவைப் பூர்த்தி செய்கிறோம்.

'ரத்தினச் சுருக்கம்' என்பதையே பற்றி! ஆயின் இது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் சேராது. பெரியவாள் 'வளவள'வாகச் சொல்லிக்கொண்ட அவரது சிந்தனை வளமைக்கே இது உதாஹரணம்.

"ரத்தினத்தை வாரி இறைப்பாளா? பொத்திப் பொத்தி ஜாக்ரதையாத்தானே

காப்பாத்துவா ? அதைச்

@Page 291

செலவு செய்யறதுன்னா எவ்வளவு யோஜிப்பா ? செலவழிக்கிறது மட்டுமில்லே. தினப்படிக்கு ரத்தினா பரணங்களான வைர வளை, முத்துமாலை மொதலானதை பெண்டுகள் போட்டுக்கக்கூட மாட்டா! கல்யாணம் கார்த்தி—ன்னாதான் அதுகளை வெளில எடுக்கறதே! அப்படி அருமையாகக் காப்பாத்துவா. ரொம்பக் கொஞ்சமா 'மினிம'மா தான் 'யூஸ்' பண்ணுவா. அந்த மினிமம்தான் 'ரத்னச் சுருக்கம்'னு ஒரு அர்த்தம் சொல்லலாம். வார்த்தையையும் அப்படி ஜாக்கரதையாப் பாத்துப் பாத்து ரொம்பக் கொஞ்சமாவே 'யூஸ்' பண்ணனும்கிறதுதான் 'ரத்னச் சுருக்கமா சொல்றது'ன்னு வெச்சுக்கலாம்.

"செல்வம் என்றால் பணம்—காசுன்னு வெச்சு அதைச் சிக்கனமா செலவழிக்கிறது மாதிரிதான் வார்த்தையையும் செலவழிக்கணும் ; அதனால்தான் சொல்செல்வம் என்கிற பொய் வந்தது—ன்னு சொல்கிற அபிப்ராயத்துக்கே இன்னும் அழுத்தம் குடுத்தே, பணம்—காசு என்கிறதைவிட ரத்தினத்தைச் செல்வமாகச் சொல்லி இந்த வார்த்தை – ரத்தினச் சுருக்கம்—கிறது – ஏற்பட்டிருக்கு. ஏன்னா, பணம், நோட்டா இருந்தா ஒரு கத்தை. 'காயி'னா இருந்தா ஒரு பை குடுத்தாத்தானே ரவையத்தனை அளவான, ஒரு சின்ன ரத்தினம் – வைரம், நல்முத்து, மரகதம் மாதிரியான ஒண்ணு – வாங்கமுடியறது ? அத்தனை பணச் செல்வத்தை இந்த சின்ன ரத்தினச் செல்வம் தனக்குள்ளே சுருக்கிண்டிருந்ததால இதுதான் 'செல்வம்'னா 'டாப்' எடம் குடுத்துச் சொல்ல வேண்டியது. அவ்வளவு பணத்தைத் தனக்குள்ளே ரத்தினம் சுருக்கிண்டிருக்கற மாதிரி ரொம்ப அர்த்தத்தை 'மினிமம்' வார்த்தைகளுக்குள்ளே சுருக்கித் தெரிவிப்பதுதான் 'ரத்தினச் சுருக்க'மாகச் சொல்றது—ன்னும் சொல்லலாம். திருவள்ளுவர் (ரஸித்து மகிழ்ந்து ஸ்ரீசரணர்

@Page 292

சொல்கிறார் :) ரத்தினச் சுருக்கமா "யா காவாராயினும் நா காக்க!"—ன்னாரே அந்த ஸமாசாதம்!

"இப்படி ஒரு சின்ன ரத்தினமே பணமாப் பெரிய தொகையைச் சுருக்கி தனக்குள்ளே அடைச்சிண்டிருக்கற மாதிரி, பிரகாசத்தையும் சுருக்கி அடைச்சு வெச்சிண்டிருக்கு. 'ரத்தினச் சுருக்கம்'—கிறதுக்கு இதையும் காரணமாக் காட்டலாம்.

ஒரு கப்பலுக்குக் காணற அத்தனை கரிக்கட்டையைச் சுருக்கி இறுக்கியே விளையற ஒரு சின்ன வைரக் கல்லு எத்தனை 'ஜிலே'யைக் கொட்டறது ? நவமணியில ஒண்ணொன்னும் அப்படியே ரவை மாத்திரமா இருந்துண்டே அததுக்கான பிரகாசத்தை அள்ளிக் கொட்டறது. கடைஞ்செடுத்த ஒரு மாணிக்கக் கல்லு ஒரு கொளத்து அடியில கிடந்து கொளமே செக்கச் செவேன்னு ஆயிடுத்துன்னு கதைகூட இருக்கு. 'கடைஞ்செடுத்த'ன்னா 'இங்கே எதைக் கடைஞ்ச ?'—ன்னு கேள்வி வரது. பெரிசா இருக்கற மூல தாதுப்பாளத்தை நன்னா வெட்டி—கிட்டி, தேச்சு—கீச்சு, மூலை மூலையாச் சீவிச் சீவிப் போட்டுப் பட்டை தீத்துத்தான் துளிப்போர மணியா ஆக்கறது. இதுக்குக் 'கடைசல் பிடிக்கிறது'—ன்னு பேர். அதைத்தான் 'கடைஞ்செடுத்த'ன்னு இப்படி சொன்னது. இந்த 'ப்ராஸஸ்'லேந்தும் எத்தனையோ பெரிசா இருந்ததை சின்னது பண்ணிச் சுருக்கிக் குடுத்ததுதான் நாம பாக்கற ரத்தினம்—ன்னு தெரியறது. இதுவும் 'ரத்னச் சுருக்கம்'தானே ?

"ப்ரகாசத்தை வெச்சுச் 'சுருக்கம்' சொன்னாப்பலயே 'வெயிட்'டுலயும் சுருக்கம். மூல தாதுவைப் பாத்தா ரத்தினமே தெரியாம மங்கி மழுங்கி ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். அதோட கர்ப்பம் மாதிரி உள்ள அது இறுகிக் குறுகி இருக்கிறதுதான் ரத்தின மணியா இருக்கறது. இங்கே 'எடை' என்கிறதிலேயும் லேசா, ஆனா பெரிசா இருக்கிற

@Page 293

ஒண்ணு கனமா, ஆனா சுருங்கியிருக்குன்னு தெரியறது. இதுவும் ஒரு வித 'ரத்தினச் சுருக்கம்.'

"ஒரு ரவையளவா இருக்கற ரத்தினத்தோட ஒளிக் கீத்து, எவ்வளவு தூரம் பாயறது ? அந்த மாதிரி வார்த்தை சுருக்கமா இருந்தாலும், 'அறிவொறி'ங்கிற புத்தி ப்ரகாசம் உண்டாக்கறதா அதோட அர்த்தம் ரொம்ப விஷயத்தை வியாபிச்சுண்டு இருக்கணும்.

"கடைசல் பிடிச்சு கருக்கறாப்பலவே, அநாவசியத்தை எல்லாம் வெட்டிப் போட்டு, புத்தியிலே நன்னா சாணை பிடிச்சே சொல்லை ரத்தினமாக்கணும்.

"ஒரு பாறை தாதுவை ஒரு மணி தனக்குள்ளே சுருக்கிண்டிருக்காப்பல, விஸ்தாரமா அர்த்தம் பண்ணும்படியா அவ்வளவு 'ஐடியா'வை ஒரு வார்த்தை ரெண்டு வார்த்தையில அடக்கிப் பேசணும் ; எழுதணும்.

"வஜ்ரம் மாதிரி உறுதி–ன்னே சொல்கிறோம். வைரம் மட்டுமில்லே ; எல்லா மணியுமே அதை எடுக்கற மூலமான mass–ஓட (ஒப்பிட்டு) பார்க்கிறப்ப, எத்தனை உறுதி, அதாவது எவ்வளவு வெய்ட்–னு தெரியும். Choral reef–னு இருக்கற பெரிய பவழப் பாளத்திலேந்துதான் பொச பொசன்னு உறுதியில்லாம இருக்கற பாகத்தையெல்லாம் தள்ளிட்டு கெட்டியா இருக்கறதை நாம பாக்கற பவழ மணியா எழைச்சுக் குடுக்கறா. அப்படி சொல்லுலேயும் உறுதி, 'வெய்ட்' இருக்கணும். அப்பதான் கேக்கறவாளுக்குள்ளே போய் 'இம்ப்ரெஸ்' பண்ணும். (சிரித்து) 'ப்ரெஸ்' பண்ணனும்னா 'வெய்ட்டா' இருக்கிற ஒண்ணு அழுத்தினாத்தானே முடியும் ?

"இப்படி பல தினுஸுல 'ரத்னச் சுருக்கம்'னும் அதைப் பேச்சோட ஸம்பந்தப்படுத்திச் சொல்றதாவும் ஏற்பட்டிருக்கு."

@Page 294

தன்னையே 'கோட்டா' செய்து கொண்டு ரஸிக்கும் அழகுச் சிறு நகையுடன் முடிக்கிறார். "சொற் சுருக்கம் பத்தியே இத்தனை 'வளவள' பண்ணியாயிடுத்து!"

சொற்செல்வர் – சிந்தனைச் செல்வராக ஸ்ரீ பெரியவாள் ஊட்டிய மதுரத்திற்கு இதோடு ஒரு விதத்தில் தலைக்கட்டி வேறொரு விதமான மதுரக் கோணத்தில் தரிசனம் செய்வோம். 'ஒரு விதத்தில் தலைக்கட்டி' என்றதற்குக் காரணம், வேறு அநேக இனங்களில் அவரது மதுரத்தைப் பருகும்போதும் இச்சொற் சிறப்பை, சிந்தனைச் சிறப்பை ஊடே ஊடே நாம் காணத்தான் செய்வோம். ஆயின் இதுவரை அவரைத் தேர்ந்த உரையாளராகவே முக்கியமாகக் கொண்டு, ஒன்றோடொன்று இணைந்ததான சிந்தனை – சொல் என்ற இரண்டின் சிறப்பிலேயே மையப்படுத்தித் தரிசித்ததுபோல அங்கெல்லாம் இல்லாமல் அவை ஊடே ஊடேதான் பிரகாசிக்கும்.

அடுத்ததாக எந்தத் துறை ?

அத்தனை துறைகளிலும் ஓடுவது ஒரே ஆறுதானே ?

பெரியவாளின் சரித நதியில் நாம் பல வேறு துறைகளைக் கண்டாலும் அவற்றிற்கெல்லாம் ஓடும் அந்த சரித நதியைச் சரித்திரப் புகழ் வாய்ந்த நதியாக்குவது அவரது மாகருணைதான். பேரருள்தான். கச்சி வரதனைப் 'பேரருளாளப் பெருமாள்' என்பார்கள். அதே கச்சியில் வரதனாய் விளங்கிய நம் மஹா பெரியவாளும் பேரருளாளர்தான். அதிசயமான ஆழ, அகல, நீளங்கள் கொண்ட கருணை ப்ரவாஹமாகவே அவரது சரிதை விரிந்தது. அதைக் காட்டும் நிகழ்ச்சிகள்

எண்ணிலடங்கா எனில் வாஸ்தவமாகவே எண்ணிலடங்காதான்! அவற்றிலும் வடித்து இறுக்கிச் சாரமாக எடுத்த சில உண்டு – பாலே திரட்டுப்பாலாக ஆனது போல! நம்மை 'அசத்தி'

@Page 295

விடும் அபார அருள் அது! அம்மாதிரியானவையே நூறு நூறு உண்டு. இந்நூலாசிரியரின் கண்ணுக்கு, காதுக்கு எட்டாததாக மேலும் ஆயிரமாயிரமிருக்கும்! ஆசிரியருக்குத் தெரிந்தவற்றையும் பிறருக்குத் தெரிவிக்க ஓர் ஆயுசுக் காலம் பற்றாது! எனவே பல துறை, பல வித, பல இன மதுரங்களில் ஒரு சிலவற்றைச் சொல்கையில் ஒன்றிலிருந்து மற்றதற்குச் செல்லுமுன் துறை, விதம், இனம் என்பதில் சேராமல் அவை யாவற்றுக்கும் ஆதார மூலமாகவுள்ள அவ்வதிசயக் கருணையாகிய மருதச் சாற்றுக்கு சிறு ஸாம்பிள்களாக ஓரிரு கிண்ணங்கள் வழங்க உத்தேசம்.

ஷீர்டி ஸாயிபாபாவுக்கான அஷ்டோத்தர சத நாமாவளியில் 'பக்தானுக்ரஹகாதரர்' என்று அவ்வருட் தாத்தாவுக்கு ஒரு திருப்பெர் உள்ளது. 'பக்த அநுக்ரஹம்' என்பது எவருக்கும் புரியும். 'காதரர்' என்றால்? 'காதலர்' தான் என ஒரு விதத்தில் சொல்லலாம். அடியாருக்குள்ள பக்திக் காதல் போல ஆண்டவனுக்குள்ள அருட்காதல்! எப்பேர்ப்பட்ட காதல்? அருள்புரியவேண்டும் என்ற தீவிரத்தில் அப் பிரசாந்த பகவந்தனும் நிலை குலைந்து தீனன் போலத் தவித்து, அவ்வருளைப் பெற வேண்டிய அடியானுக்காகத் தவிக்கிற காதல்! தீனனாகக் குழம்பித் தவிப்பதே 'காதர்யம்'. அது உள்ளவன்தான் 'காதரன்'. அவ்வாறு பக்தானுக்ரஹம் புரியத் தவித்துத் கொண்டிருப்பவராக அப்பேரருள் ஷீர்டி மூர்த்தியை நாமம் காட்டுகிறது.

தாயின் வாத்ஸல்யக் காதலாக அதைச் சொல்வது மிகப் பொருத்தம். மடியிலே பால் முட்ட, தாய்ப்பசு கன்று ஊட்ட வராதா, வராதா என்று தவிப்பதுபோலவே அருள் பெற வேண்டிய அடியவனுக்கு அவ் அருளைச் சுரப்பதற்காக ஓர் அருளாளர் தவிப்பது!

தமது அனந்த மஹிமைகளையும் அடக்கமாகவே பொத்தி வைத்த மஹா பெரியவாள் தமது கடலினும்

@Page 296

பெரிய அடியாரன்பையும் அடக்கியே வெளியிட்டார். ஆயின் அவரும் அவ்வாறு அடக்கவொண்ணாது அநுக்ரஹ காதரராகத் தவித்த ஒரு சில ஸந்தர்ப்பங்கள் உண்டு.

இதோ ஒன்று.

1966 பிற்பகுதியிலோ, 1969 முற்பகுதியிலோ ஆந்திர தேசத்தின் தெற்கு மாவட்டங்களில் நமது ஆசார்ய ஸ்வாமி ஸஞ்சாரம் செய்து வந்தபோது ஓர் ஊரில் கண்ட நிகழ்ச்சி. நெஞ்சில் பசுமரத்தாணியாய்ப் பதிந்த நிகழ்ச்சி.

அன்று அல்ப த்வாதசி. அதாவது ஸூர்யோதயத்திற்குப் பின் சொற்பக் காலமே துவாதசித் திதி. அச்சொற்பக் காலத்திற்குள்ளேயே, முந்நாள் ஏகாதசி விரதமிருந்தவர்கள் 'பாரணை' என்பதாகப் பூஜை முடித்துப் பிரஸாதமாக உணவும் அருந்திவிட வேண்டும். உலகுக்கு ஸகல தர்மங்களையும் இண்டு இணுக்கு விடாது அநுஷ்டித்துக் காட்டிய பெரியவாள் இவ்விதியையும் வழுவாது நடத்தியவர்.

வழக்கம்போல் அன்று பின்மாலை மூன்று மணிக்கே அவர் விழித்தெழுந்திருந்த போதிலும், காலை எட்டு மணியளவில் துவாதசித் திதி முடிந்து விடுவதால் அவசரமாகவே ஸ்ரீ சந்திமௌலீச்வர பூஜை செய்யப் போக வேண்டியிருந்தது.

அப்போது அநுக்ரஹம் பெறுவதற்காகப் பெரும் தவிப்புடன் ஒரு 'காதர' பக்தர் – சற்று வயஸான, ஏழையாகத் தோன்றிய ஒரு ஆந்திர ப்ராம்மணர் – ஓடோடி வந்து ஸேவித்தார். ஏதோ சொல்வதற்காக அவர் தவியாய்த் தவித்தது ஸர்வாங்கங்களிலும் பிரதிபலித்தது!

ஸ்ரீசரணாள் சற்று நின்றார்.

உடனிருந்த பாரிஷதர்களுக்குப் பரபரப்பு! அவசர வேளையில் இந்த மனுஷன் இடைமறிக்கிறானே என்ற எரிச்சல்! அவர்களிலொருவர் அவரிடம் பூஜைக்கப்புறம்



தரிசிக்கலாம் என்று சற்று காட்டமாகவே கூறி, நகரச் சொன்னார்.

ஸ்ரீசரணாள் அவர்களைக் கையமர்த்திவிட்டு, அருள் முட்டும் தமது பெரிய பெரிய காந்து – சாந்த நயனங்களால் – கண் புரைக்குப் பின் கண்ணாடி போட்டுக் கொண்ட அவரிடம் பிற்கால பக்தர்கள் காணக் கொடுத்து வைக்காத அந்த முழுமலர்ச்சி கொண்ட திவ்ய நேத்ரங்களால் – காதர பக்தரைத் தலையோடு கால்

தடவிக் கொடுத்து, அவரது ப்ரச்னையை 'பஹு ஸம்க்ஷேபமாக' (வெகு சுருக்கமாக)ச் சொல்லுமாறு ஸம்ஸ்க்ருதத்தில் கூறினார். அவர் தேவவாணியில் மாத்திரமே உரையாடும் இடைக்காலம் அது.

நல்லவேளையாக, தனித் தெலுங்கு என்று சொல்லிக் கொண்டு தேவ பாஷையை அடித்துத் துரத்தாத ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவராக அவ்வடியார் இருந்ததால் அவர் 'பஹு ஸம்க்ஷேப'த்தைப் புரிந்து கொண்டார்.

ஆனால், பாவம், தம் ப்ரச்னையை அப்படிச் சுருக்கிச் சொல்ல அவருக்குத் தெரியவில்லை!

ரொம்பவும் பணிவுக் குணத்தரெனத் தெரிந்தது! பெரியவாளை அதற்கு மேலே தொந்தரை செய்ய வேண்டாமென்றே இருக்க வேண்டும், அந்த நெருக்கடியில் தமக்கு என்ன சொல்ல வேண்டுமென்ற முறைப்படுத்திச் சொல்லவரவில்லை என்றும், தாம் ஊருக்கு எவ்வளவு சீக்கிரம் திரும்ப முடியுமோ அவ்வளவில் திரும்ப வேண்டும் என்றும் மாத்திரம் கூறிவிட்டு, 'ஸ்ரீவாரு'வின் க்ருபைதான் தம்மை ரக்ஷிக்க வேண்டும் என்று கண்ணும் கண்ணீருமாக விண்ணப்பித்துவிட்டு, நகர்ந்துகொண்டு வழி விட்டு விட்டார்.

ஆனால் பெரியவாள் அவரை எந்த ஊர் என்று கேட்டுத் தெரிந்துகொண்டே மேலே நடந்தார்.

@Page 298

அதுதான் பிற்பாடு எப்படிக் கைகொடுத்து உதவியது ?

ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜை நடந்தது. அந்த இளங்காலையின் சாந்தத்திலும் குளுமையிலும் பூஜை அன்று அலாதியானதொரு தாப சமனத்தை அளித்தது.

பூஜை முடித்த பின் ஸ்ரீசரணர் பிக்ஷா வந்தனத்திற்காக வந்து நின்றார்.

அப்படித்தானா ? பிக்ஷாவந்தனத்திற்காக அவர் வந்து நின்றதாகவே தோன்றிற்று ? இல்லவேயில்லை!

அன்று பிக்ஷை செய்ய இருந்து, அதைத் தெரிவித்து வந்தனம் செய்து கொள்ள வந்திருந்தோர் சென்னையைச் சேர்ந்த படே படேக்களான ஒரு பெரும் தொழிலக நிறுவனரும் அவர் குடும்பத்தினருமாவர். மண்டபம் கொள்ளாமல் பிக்ஷா வந்தனச் சரக்குகள் அவர்களைத் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தன.

ஆயின் ஸ்ரீசரணரின் விசால நேத்ரங்களிலோ அந்த வந்தனக்காரர்களோ, அவர்களது பெரும் காணிக்கைகளோ பட்டதாகவே தெரியவில்லை!

அவை நிலையில்லாமல் மண்டபம் முழுதிலும் தேடித் தேடி அலைந்தன. பெரியவாளின் சரீரம் நின்றவிடத்தில்தான் நின்றதெனினும் சித்தம் நிலை கொள்ளாமல் எதையோ நாடுவது நன்கு புரிந்தது.

பிரசாந்த பகவந்தனின் 'அநுக்ரஹ காதர்யம்' தான்!

த்வாதசி முடியுமுன்பே தீர்த்த ப்ரஸாதமளித்து பிக்ஷை கொள்ள அவசரமான அவசர சமயம்! அப்போது ஏன் பிக்ஷா வந்தனத்தை ஏற்காது இப்படி தம் ஆசாரக் காவலரே காக்க வைக்கிறார்?

பூஜைக்கு வரும் வழியில் காதரராக வந்து பிரார்த்தித்தாரே அவரைக் காக்க வேண்டுமென்பதற்காகத்

@Page 299

தான்! இவருக்கு ஏற்பட்டுள்ள பக்தாநுக்ரஹ காதர்யத்தினால்தான்!

அப் பக்தர் மடத்து முகாமுக்குள் எங்கேயிருந்தாலும், அக்கம்பக்கம் போயிருந்தாலும் உடனே தேடிக் கண்டு பிடித்து அழைத்து வருமாறு ஸ்ரீசரணரின் ஆஜ்ஞை பிறக்கிறது.

ஆஜ்ஞை செய்தபின்னரே பிக்ஷா வந்தனத்தை ஏற்க வருகிறார். அதன்போது பண்பு மறவாது. பிக்ஷை செய்யும் பெரும் முக்யஸ்தர்களான அன்பர்களை மிக்க ஆதரவுடன் க்ஷேமலாபங்கள் விசாரிக்கத்தான் செய்கிறாரென்றாலும் அப்போதும் அந்த முக்யத்துவமில்லாத அநாமதேய ஆந்திர ப்ராம்மணரைப் பற்றிய விசாரமே அவர் சித்தத்தில் அதிகமாக இருந்து, அவரைத் தேடி வரத் தாம் அனுப்பியோரை எதிர்பார்த்து முகத்தைத் தூக்கித் தூக்கிப் பார்த்த வண்ணம்தான் இருக்கிறார்! நவ கண்டத்தில் யாரே காட்டுவார் அப்படியோர் அக்கறை?

அல்ப த்வாதசியை முன்னிட்டு எமர்ஜென்ஸி ஸ்பீடில் நடந்து முடியவிருந்த அந்த பிக்ஷா வந்தனத்தின் போதே, நாலு மூலைக்கும் பறந்த பாரிஷதர்கள் வந்து, சல்லடை போட்டுப் பார்த்ததில் அந்நபர் எங்கும் தென்படவில்லையென்று தெரிவிக்கின்றனர்.

அப்போது பெரியவாள் அவரது ஊரின் பெயர் கேட்டுத் தெரிந்துகொண்டதுதான் கைகொடுத்தது!

அவர் சொன்ன ஊரைப் பெரியவர் சொல்லி அந்த ஊருக்கு அப்போது மடம் முகாமிட்டிருந்த ஊரிலிருந்து எத்தனை மணிக்கு பஸ் என்று விசாரிக்கிறார். அது ரயில் நிலையமில்லாத ஊர் என்று அவருக்குத் தெரிந்திருக்கிறது.

அவருக்குக் கிடைத்த பதிலிலிருந்து சுமார் அரை மணியில் பஸ் என்று தெரிகிறது.

@Page 300

வெகு அவசர உணர்வுடன் ஸ்ரீசரணர் கட்டளை பிறப்பிக்கிறார், தெலுங்கு தெரிந்த காரிய சமர்த்தரான ஒரு சிஷ்யரிடம்! பிக்ஷா வந்தனக்காரர்கள் வந்திருக்கும் கார்களில் ஒன்றில் உடனே அவர் பஸ் நிலையத்திற்குப் போக வேண்டுமெனச் சொல்கிறார். "ப்ரஸாதம் தரேன். எடுத்துண்டு போ. அந்த ப்ராம்மணரைக் கண்டுபிடிச்சு அதைக் குடு. நான் அம்பாளை அவருக்காக நன்னா ப்ரார்த்தனை பண்ணிண்டிருக்கேன். அவரும் பரிபூர்ண நம்பிக்கையோட ப்ரார்த்திச்சுண்டா கஷ்டமெல்லாம் தீர்ந்து ஸௌக்...யமா இருப்பார்–னு அவருக்கு மனஸு நன்னா ஆறுகிற மாதிரி சொல்லு. இல்லாட்டா, பஸ் ட்ரைவர், கண்டக்டரைக் கேட்டுக்கிண்டு அவா அஞ்சு, பத்து நிமிஷம் அந்த ப்ராமணருக்காக காத்துண்டிருப்பான்னா அவரையே இங்கே அழைச்சுண்டு வந்துடு. நானே பார்த்துப் பேசி அனுப்பி வைக்கிறேன்" என்கிறார்.

"அதுக்குள்ளே பெரியவா எப்படி தீர்த்தம் குடுத்துட்டு பிக்ஷை பண்ணமுடியும்? அவர் வந்துட்டு போன, அப்புறம்–னாலோ த்வாதசியே முடிஞ்சு போயிடுமே!" என்கிறார் காரிய சமர்த்தர். த்வாதசி முடிந்துவிட்டால் அப்புறம் அன்று போஜனம்

கொள்ளக்கூடாது என வழக்கு. மறுதினமும் ஏதோ விரதமானதால் அன்றும் மாலை பூஜை முடிந்தபின்தான் மஹா பெரியவாள் பிக்ஷை கொள்வார். அதாவது 'ஏகாதசி'யே துவாதசியன்றும். அதற்கு மறுதினமும் பெரும் பாகத்திலும்கூட நீடித்துவிடும்! அதனால்தான் பணிவிடையாளர் அப்படிப் பதை பதைத்துக் கேட்டார். தீனர்களுக்காகவே வாழ்ந்த தியாக மூர்த்தியோ அப்படிப் பட்டினி கிடப்பதைப் பொருட்படுத்தவில்லை.

"அதை நான் பாத்துக்கறேன். நீ சொன்னதைப் பத்தி சந்தோஷம். இப்ப சட்னு நான் சொன்னதைச் செய்" என்று

@Page 301

கூறிய ஸ்ரீசரணர் விபூதி, குங்குமம், அக்ஷதை, கற்கண்டு, திராக்ஷை ப்ரஸாதத்தை, அக் குங்குமத்தில் அரை நிமிஷமே ஆயினும் கரை காணா ஆழியளவு கருணையுடன் தியானத்தில் மூடிய கண்ணுடன் திரு விரல் பதித்து காதர பக்தருக்காகக் காரிய சமர்த்தரிடம் கொடுக்கிறார். அம்பாளுக்கு 'நன்னா' ப்ரார்த்தித்துக் கொண்டு கொடுக்கிற மஹா ப்ரஸாதம்! அவர் அப்படி வெளியிட்டுச் சொன்னதே அதிசயம்! அவரது 'காதர்யம்'தான் அவ்வதிசயத்தைச் செய்வித்தது.

அல்ப த்வாதசியில் அந்த அநாமதேய ப்ராமணரின் பாரணைக்காக, படே படேக்கள் கொண்டு வந்திருந்த கனிவர்க்கத்திலிருந்து ஒரு மூங்கில் தட்டு நிறைய ஸ்ரீசரணாயே வேகவேகமாக எடுத்துப் போட்டு அதையும் கொண்டு போய்க் கொடுக்கப் பணிக்கிறார். காரிய சமர்த்தருக்காகவும் அதே விரைவுடன் இன்னொரு தமுக்கைப் பழங்களால் நிரப்பித் தருகிறார்.

சமர்த்தர் கண்களில் நீர் முட்ட அவற்றை எடுத்துப் போகிறார். நீர் முட்டியதற்குக் காரணம், அவருக்கு நன்றாக உறுதிப்பட்டு விட்டது, அன்று ஸ்ரீசரணர் துளஸிதள தீர்த்தம் அருந்தினாலே பாரணைப் போஜனம் செய்ததற்கு ஸமானம் என்ற சாஸ்திரப்படி அப்படித்தான் செய்யப் போகிறார் என்று!

'தாயினும் சாலப் பரிந்து' யாரோ பக்தருக்காகக் கனிந்து கனி வர்க்கங்கள் அனுப்புகிறார்!

தாமொருவர் வெறும் துளஸி தீர்த்தத்துடனேயே போஜனத்தை முடித்துக்கொண்டு, அது அந்தரங்கமானவர் தவிர எவருக்கும் தெரியாமல் மறைத்து, மடத்தில் குழுமியுள்ள பக்தகோடிகள் அறுசுவை உணவு, அகத்திக்கீரை, சுண்டை,

நெல்லி முள்ளி, பாயஸத்துடன் உண்டு வயிறு நிறையச் செய்கிறார்!

@Page 302

'கார்ய சமர்த்தர்' பத்துப் பனிரண்டு நிமிஷத்திலேயே நாம் கொடுத்த அப் பட்டத்திற்கேற்ப ஆந்திர ப்ராமணரை அழைத்தே வந்துவிட்டார்!

அப்போது அந்த அடியார் பெற்ற நிறைவு அதிகமா, இந்த ஆண்டவர் பெற்ற நிறைவு அதிகமா, யாரே எடை போட்டுச் சொல்ல முடியும் ?

அருள் பெற வேண்டும், பெறவேண்டும் என்று அவரது தவிப்பும் அடங்கிற்று. அருள் சுரக்கவேண்டும், சுரக்க வேண்டுமென்ற இவரது தவிப்பும் அடங்கிற்று என்பது மட்டும் நிதர்சனமாகத் தெரிந்தது!

எவரோ ஓர் அநாமதேய நபருக்காக இப்படி இதய ஆழத்திலிருந்து தவித்துத் துடித்து அருள் சொரியும் அப்படிப்பட்டதொரு காருண்ய வள்ளலை எங்கே காண ?

சொல்லின் செல்வரை அருட் செல்வராகத் தரிசனம் செய்த மதுரத்துடன் இப்போதைக்கு விடை கொள்கிறோம். இடையே சொல், மௌனம் இரண்டிற்கும் இடைப்பட்ட அபிநயத்திலும் அவரைச் செல்வராகக் கண்டு ஓர் அலாதி மதுரம் பருகினோம். எல்லாச் சொல்லும் செயலும் சென்றடங்கி நிறையும் மௌனமோ மதுரம் கடந்த மதுரம்! அதிலும் மஹா பெரியவாளை செல்வராகத் தரிசிக்கும் தொடக்கத்துடன் அடுத்த பகுதியில் மீண்டும் சந்திப்போம்!

ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர!